

இன்றைய பேச்சு

ஆதாரக் கல்வி

ஆசாரிய கிருபலானி

இன்றைய பேச்சு

ஆதாரக் கல்வி

ஆசாரிய கிருபலானி

எழுதியது

தமிழ்நாட்டு ஆதாரக் கல்விச் சங்கக் காரியதரிசி

மு. அருணசலம்

மொழிபெயர்த்தது

தமிழ் நூலகம்

திருச்சிற்றம்பலம் : : மரத்துறை தபால்

குத்தாலம் வழி

முதல் தமிழ்ப் பதிப்பு
விலை ரூபா இரண்டு

இந்தியக் குடியரசு தின வெளியீடு
26 - 1 - 1950

சாது அச்சுக்கூடம்
இராயப்பேட்டை - சென்னை

மொழிபெயர்ப்பின் முகவுரை

ஆசாரிய கிருபலானியை அறியாதோர் இந்திய நாட்டில் யாரும் இருக்கமாட்டார்கள். அவர் அகில இந்தியக் காங்கிரசின் காரியதரிசியாக நெடுங்காலம் இருந்து பின்னர் தலைவராகவும் இருந்தவர். சர்வகலாசாலைப் பேராசிரியராக இருந்தவர். தம் பதவியையெல்லாம் துறந்து தேசத் தொண்டில் இறங்கி, காந்தியடிகளுடன் பலகாலம் உழைத்தவர். காந்தியடிகளின் கருத்துக்களை எடுத்து வியாக்கியானம் செய்வதில் அவருக்கு வேறெவரும் இணையில்லை என்ற புகழ் வாங்கியவர்.

1937ஆம் வருஷம் அக்டோபர் மாதம் 22, 23 தேதிகளில் மத்தியமாகாணத்திலுள்ள வர்தா நகரில் அகில இந்திய தேசியக் கல்வி மகாநாடொன்று கூடிற்று. மகாத்மா காந்தி அம்மகாநாட்டுக்குத் தலைமை வகித்து, கல்விபற்றிய தம் புதுக் கருத்துக்களை அங்கு சுருக்கமாக எடுத்துக் கூறி, ஆதாரக்கல்வி என்று இன்று வழங்குகிற புதுக்கல்வி உருவடைய வழிகோலினர். இக்கல்வியை நாட்டில் நடத்தும் பொருட்டு, 'ஹிந்துஸ்தானி தாலிமி சங்கம்' என்ற பெயருடைய அகில இந்தியக் கல்விச் சங்கமொன்று அங்கு தோற்றுவிக்கப்பெற்றது. இச்சங்கத்தாருக்காக ஆசாரிய கிருபலானி எழுதியதே இச் சிறு புத்தகம்.

காந்தியடிகளுடைய கல்வித்திட்டம் மிகவும் புரட்சிகரமானது. பிரிட்டிஷ் ஆதிக்கத்தின்கீழ் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கென்றே ஏற்பட்டிருந்த இந்தியநாட்டுக் கல்விமுறையை வேரறுத்து, அதன் உயிர்நாடியான எட்டுப் படிப்புமுறையை

அடியோடு தகர்த்தெறிந்து, வாழ்க்கைக்கான பயனுள்ள ஒரு தொழில் மூலம்தான் கல்வி புகட்டவேண்டும் என்ற கொள்கையை அவர் நிலைநாட்டினார்.

அன்றைய நிலைமைக்கும் இன்றைய நிலைமைக்கும் அளவற்ற வேறுபாடு ஏற்பட்டிருக்கிறது. அன்று காந்தியடிகளின் மனக்கண்ணில்தான் இக்கல்வி முறை இருந்தது. இன்றோ, பத்து வருஷமானபின், சேவாகிராமத்திலும் பீகார் மகாணத்திலும் நடைபெற்ற பாடசாலைகளின் வேலையாலும், பிற பாடசாலைகளின் வேலையாலும், ஆதாரக்கல்வி வெறும் பேச்சன்று, உண்மையாகவே எல்லோரும் கடைப்பிடிக்கக்கூடியது, பயின்று பயனடையக்கூடியது என்று யாரும் நிதர்சனமாகக் காணக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அனேக மாகாணங்களில் ஆதாரக் கல்வியை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆதாரக்கல்வி என்று சொல்லுவதே நாகரிகமாகிவிட்டது என்றாலும் பொருந்தும். தவிர, அன்று அடிமையாயிருந்த இந்திய நாடு இன்று சுதந்திர நாடாயிருக்கிறது. பிரிட்டிஷாரையே இனியும் குறைகூறிக் கொண்டிருப்பது அறிவுடைமையாகாது. நம் கதியை நிர்ணயிக்க வேண்டியவர்கள் நாமே. மேலும், அன்று நம்மிடையே வாழ்ந்து இந்தியாவுக்கு எல்லாத் துறையிலும் வழிகாட்டிய காந்தியடிகள் இன்று நம்மிடையே இல்லை.

பத்து வருஷங்களுக்குமுன் ஆசாரிய கிருபலானி எழுதிய கருத்துக்களை இப்போது நாம் பார்க்கும்போது, இந்த மாறுபட்ட நிலைமைகளை ஞாபகம் வைத்திருக்கவேண்டும். அன்றியும், ஏட்டுக் கல்வியை ஒழித்து வாழ்க்கைக்கான தொழில்மூலம் கல்விவேண்டும் என்று 1937 இல் சொன்ன காந்தியடிகள், பின்னெல்லாம் "ஆதாரக் கல்வி என்றால் வாழ்க்கைக்கான கல்வி, வாழ்க்கை மூலம் பயிலும் கல்வி" என்று அதையே விரித்துச் சொல்லிவந்தார். எனவே,

இதிலுள்ள சிறு வேறுபாட்டையும் இப்போது எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஏழுவருஷ ஆதாரக்கல்வி என்பதைத் தாலிமி சங்கத்தார் எட்டு வருஷக் கல்வி என்று ஆக்கிக்கொண்டிருப்பதையும் இங்குக் குறிப்பிட வேண்டும். அன்றியும், ஏழு வயதுக்கு முந்திய குழந்தைப் பருவக் கல்விக்கும், பதினறு வயதுக்குப் பிற்பட்ட பருவக் கல்விக்கும், வயது வந்தோர் கல்விக்கும், ஆதாரக் கல்வித் துறையில் இப்போது திட்டங்கள் ஏற்பட்டுள்ளன.

ஆசாரிய கிருபலானி எந்தப் பொருளேயும் மிகவும் காரசாரமாக எடுத்துப் பேசுபவர். நயமான சொற்களால் கடுமையாகத் தாக்குவதில் அவருக்கு ஈடு யாரும் இல்லே. நகைச்சுவையும் கடுமையும் கலந்த அவருடைய ஆங்கில நடையைத் தமிழில் சொல்வது எளிதன்று. புத்தகத்துக்கு அவர் வைத்த பெயரே விசித்திரமானது: "இன்றைய புதுப் பைத்தியம்: ஆதாரக்கல்வி"! புதுப் பைத்தியம் என்றதன் கருத்தை முதல் அத்தியாயத்தில் விளக்கியிருக்கிருர். தமிழ் மட்டுமே அறிந்தவர்கள் ஆசிரியரின் கருத்துக்களே நன்ருய்ப் புரிந்துகொள்ள வேண்டும் என்ற நினேவோடு இதை எளிய தமிழில் மொழிபெயர்த்திருக்கிறேன். ஆதாரக் கல்வித்துறையில் ஆர்வத்தோடு ஈடுபட்டு உழைப்போர் அனேவருக்கும் இது அரிய விருந்தாக அமையும்.

கீழமூங்கிலடியில் என்னிடம் பயின்ற ஆசிரிய மாணவர்கள் பலர் இதை எழுதும்போது பலவகையில் எனக்கு உதவி செய்தார்கள். அவர்களுக்கு என் நன்றி.

திருச்சிற்றம்பலம்
26-1-1950

மு. அருணசலம்

பொருள் அடக்கம்

காந்தியடிகளின்
முன்னுரை

இச்சிறு புத்தகத்தை முதலி லிருந்து கடைசிவரை படித்துப் பார்த்தேன். இத்தகையதொரு புத்தகம் இன்று பெரிதும் தேவை. எனக்கு ஏற்பட்ட "புதிய பைத்தியம்", அதுவும் கல்வித் துறையில் ஏற்பட்டது என்று பலர் சொல்லுகிற ஆதாரக்கல்வி பற்றி அனேகர் மனத்தில் எழுந்துள்ள பல சந்தேகங்களை இது போக்க முயல்கிறது. ஆசாரிய கிருபலானி அவர்கள் கல்வித் துறையில் நெடுங்காலம் ஈடுபட்டிருந்திருக்கிறார். திட்டமான அடிப்படையின் மீதுதான் இந்த எனது "பைத்தியம்" பிறந்திருக்கிறது என்று இந்நூலில் விளக்க அவர் முயன்றிருக்கிறார்.

ரயிலில்
போகும்போது
6-7-1939

மோ. க. காந்தி

முன்னுரை

தாலிமி சங்கத்தார் வெளியிடுகிற நயீ தாலீம் என்ற பத்திரிகைக்கு நான் ஒரு கட்டுரை எழுத வேண்டி வந்தது; அதிலிருந்து வளர்ந்ததே இச் சிறு புத்தகம். எனக்குள்ள வேலைகளோ அதிகம்; நான் எழுத்தாளனு மல்லன்; என் சொந்த மாகாணமும் அதன் பாஷையும் வேறு; நான் தங்கி வேலை செய்கிற இந்த மாகாணத்தின் பாஷையை நான் கற்றுக் கொள்ளவுமில்லை. ஆதலால், எந்த அன்னியமொழியில் நான் கல்வி பயின்றிருக்கிறேனே அந்த அன்னிய மொழியில்தான் இதையும் எழுத நேர்ந்திருக்கிறது. நான் இலக்கியம் பயின்றவனும் அல்லன்; ஆங்கில மொழியை அதற்குரிய இயற்கைச் சூழ்நிலையில் கற்றவனுமல்லன். ஆதலால், திறமையோடு ஆங்கில மொழியை உபயோகிக்கும் ஆற்றல் எனக்கில்லை.

மற்றும் ஒரு கஷ்டம். நான் இங்கு எழுதுவது என் கருத்துக்களின் விளக்கமல்ல. காந்தியடிகளின் கருத்தை நான் விளக்கிக் கூற வேண்டியிருக்கிறது. வேறொருவர் கருத்தை எடுத்து விளக்கிச் சொல்வது எப்போதுமே கஷ்டமான காரியம்; அதுவும், அவர் உயிரோடிருக்கும் போது இது அதிகக் கஷ்டமானது; அவர் எழுச்சியும் வளர்ச்சியும் பொருந்தியவரா யிருக்கும்போது, இந்த வேலை இன்னும் அதிகக் கஷ்டமாகிறது. கருத்துக்களை அவற்றின் புற உருவத்திலும் உடையிலும் தான் எடுத்துக் கூறமுடியும். இதனால், கருத்துக்களை எடுத்துச் சொல்கிற முறையும் சொற்களும், கருத்தின் நுட்பமான பொருட் சாயல் களைப் போக்கி விடுகின்றன. எனினும், இயற்கையில்

ஒருவர் சுயமான சிந்தனையாளராக ஆகாத போதிலும், இதற்கடுத்தபடியாக அவர் செய்யக் கூடியது, பிறருடைய உயர்ந்த கருத்துக்களை உணர்ந்து போற்றுதல். இந்த இரண்டு பண்புகளும் பொருந்தா விட்டால் அந்த நிலை இரு மடங்கு துரதிர்ஷ்டமான நிலை. இவற்றில் பிந்திய பண்பாகிய பிறரை உணர்ந்து போற்றுதலும் பின்பற்றுதலும் என்னிடம் அமைந்துள்ளனவென நான் கருதுகிறேன்; சுயமான சிந்தனைப் பெருமை இல்லையே என்ற வெட்கமும் எனக்கில்லை. இக்காரணத்தால், மேற்கூறிய பலவகைக் குறைபாடுகள் எனக்கிருந்த போதிலும், தாலிமி சங்க உதவிக் காரியதரிசியான ஸ்ரீமதி ஆசாதேவி யவர்கள் கேட்டதற் கிணங்கி, ஆதாரக்கல்வி பற்றிய கருத்துக்களை இங்கு எடுத்துக்கூற முன்வந்தேன். ஆசாதேவியும் என் மனைவி சுசேதா தேவியும் இதைப் படித்துப் பொருத்தமான யோசனைகளைக் கூறியிருக்கிறார்கள்.

ஆதாரக் கல்வி என்ற கல்வித்திட்டத்தை எடுத்துச் சொன்னது முதல், நம் சர்வ கலாசாலைகளின் தலைவர்களான அதிகம் படித்த வைஸ்சான்ஸலர்கள் அனேகருடைய தாக்குதலுக்கு அது இலக்காக இருந்து வந்திருக்கிறது. அவர்கள் தூற்றுதலுக்கு நான் இங்கு விடையளிக்க முயலவே இல்லை. இந்தப் பெரியவர்கள், போன தலைமுறைக்குரிய அபூர்வ பிரகிருதிகள். இவர்களுடைய மூளை, புண்ணியவதி விக்டோரியா அரசியின் காலத்தில் உறங்கிப் போனது, இதுவரை விழிக்கவேயில்லை; ஆனால் இப்போது, நாம் வாழும் இக்கால உலகின் கொந்தளிப்புக்கள் இவர்களைத் தூக்கத்திலிருந்து திடீரென்று புரட்டி உருட்டி விட்டன; இதனால் பெரிதும் மாறியிருக்கிற காலப் போக்குக்கு ஏற்ப நடக்க அறியாமல் இவர்கள் கோபங் கொள்ளுகிறார்கள். பழமையின் இடிபாடுகளுக் கிடையில் அழுந்திப்

புதையுண்டு கிடக்கும் இவர்களுடைய மூளையை வெளிப் படுத்திச் சோதித்து ஆராய்வது என் வேலையன்று. ஆதலால், இப்புத்தகத்தில் குணதோஷ விமர்சனம் செய்த போதிலுங் கூட, இன்று வழக்கிலுள்ள அபிப்பிராயங்களை மட்டுமே நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

எனினும், உயர்தரக்கல்வி பற்றி காந்தியடிகள் தம் கருத்தை இன்னும் எடுத்துரைக்க வில்லை என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். ஒன்று மட்டும் அவர் சொல்லி யிருக்கிறார் : அதாவது, உயர்தரக்கல்வி என்று சொல்லுகிற ஆடம்பரம் வேண்டுபவர்கள் அதற்கான செலவை ஏற்க வேண்டும், அரைவயிற்றுக் கஞ்சியோடு உடல் வருந்தி உழைக்கும் மக்கள் தலையில் அச்செலவைச் சுமத்தக்கூடாது என்பதாகும். சர்வஜன ஆதாரக்கல்விக்கான ஒரு திட்டத்தை மட்டுமே அவர் சொல்லியிருக்கிறார். அப்படி யிருக்க, நம் வைஸ்சான்ஸலர்கள் ஏன் ஆத்திரப்பட வேண்டும் ? அவர்களுடைய காணியாட்சியாகிய சர்வ கலா சாலைக் கல்விக்கு மதிப்பு என்னவா யிருந்தாலும் சரி, அதற்கு ஓர் ஆபத்தும் வரவில்லையே ? எந்தச் சர்வகலா சாலைக்குள்ளும் - இந்திய சர்வ கலாசாலையோ அயல்நாட்டுச் சர்வ கலாசாலையோ எதிலும் - புகுந்து பட்டம் பெறும் பாக்கியம் காந்தியடிகளுக்குக் கிட்டவில்லை ; சர்வகலாசாலை விஷயத்தில், வைஸ்சான்ஸலர்கள், தங்கள் தொழில் காரணமாக, நிபுணர்கள் என்று கருதப்பட வேண்டியவர்கள். ஆகவே, சர்வகலாசாலைக் கல்விபற்றி அவர் ஏதேனும் யோசனை கூற வந்தால், அப்போதுதான் அவர்கள் அவரைக் கண்டனம் செய்யச் சந்தர்ப்பம் ஏற்படும்.

காந்தியடிகளின் இந்தக் கல்வித் திட்டத்தை ஆராய் கையில், கல்வியைப் பற்றி மாத்திரம் நான் பேசி நிறுத்த வில்லை. அவருடைய பூரணமான வாழ்க்கை வேதாந்தத்

தோடு அதை இணைத்தே நான் ஆராய்ந்திருக்கிறேன். எந்தக் கல்வி முறையும், அது என்ன கருத்துக்களையும் லக்ஷ்யங்களையும்கொண்டிருக்கிறதோ அவற்றுடன்தொடர்பு படுத்தி ஆராய்ந்தாலன்றி, அதைத் தகுந்தபடி மதிப்பிடவோ போற்றவோ முடியாது. உதாரணமாக, சோவியத்துக் கல்வி முறையை நன்றாக அறிந்து கொள்ள வேண்டு மானால், சோவியத்துப் புரட்சியுடனும் சோவியத்துச் சமூக அமைப்புடனும் அதை இணைத்தே பார்க்க வேண்டும். அது போல, காந்தியடிகளின் கல்வித் திட்டத்தையும், அவருடைய மற்றக் கருத்துக்கள் வாழ்க்கைத் தத்துவம் ஆகியவற்றோடு அதற்குள்ள தொடர்புடன் சேர்த்துப் பார்த்தால் தான் செவ்வையாக உணர்ந்துகொள்ள முடியும். ஆதலால், இப்புத்தகத்தின் கடைசி அத்தியாயத்தில் காந்தியடிகளின் சமூக அரசியல் கருத்துக்களை ஏன் கூறியிருக்கிறேன் என்பதற்கோ, அவ்வத்தியாயம் மிகவும் நீண்டு போயிருக்கிறது என்பதற்கோ, நான் சமாதானம் எதுவும் சொல்லவேண்டியதில்லை.

சுயராஜ்யபவனம்
அலகபாத,
8 - 10 - 1938

கிருபலானி

இரண்டாம் பதிப்பின் முன்னுரை

இப்புத்தகம் எழுதி ஏழு வருஷங்கள் ஆகின்றன. காந்தியடிகள் சொல்லிய புதிய சர்வஜன ஆதாரக்கல்விக்கு அடிப்படையான தத்துவங்களானவை, கல்வியுலகத்தில் பெரும்பான்மையும் ஒப்புக் கொள்ளப்பெற்றதும், மிகவும் புதியதும், அறிவியல்ரீதியானதுமான கருத்துடன் ஒத்திருக்கின்றன, அவை செம்மையானவை என்று காட்ட முயல்வதே இதன் நோக்கமாயிருந்தது. இப்புத்தகம் எழுதியபின், இப்புதுக் கல்விமுறைபற்றிய சோதனைகள் சில மாகாணங்களிலும் சமஸ்தானங்களிலும் நடந்தேறியிருக்கின்றன. கல்வியின் முழுக்காலமாகிய ஏழுவருஷமும்* எங்கும் பூரணமாக நடத்திப் பார்த்தாகவில்லை; ஆயினும், இப்புதுக் கல்வித்திட்டத்தால் என்ன சாதிக்கமுடியும் என்று பொதுமக்கள் கொஞ்சம் தெரிந்துகொள்ளக் கூடிய வகையில், மிகவும் கஷ்டமான காலத்திலும் சங்கடமான அரசியல் சந்தர்ப்பங்களிலும் இது சம்பந்தமான வேலை நடந்திருக்கிறது.

காங்கிரஸ் மந்திரிசபைகள் தாங்கள் அதிகாரம் வகித்த மாகாணங்களில் இப்புதுக் கல்வித்திட்டத்தை ஒரு சோதனை என்ற அளவில் 1939இல் நடத்த ஆரம்பித்தன. பிரிட்டிஷாரின் யுத்தக்கொள்கையை ஆட்சேபித்துக் காங்கிரஸ் சீக்கிரத்தில் பதவியை விட்டு விலகவேண்டி வந்தது. சோதனை என்ற அளவிலேனும் இத்திட்டம் நடப்பதற்கு

---

* இப்போது சேவாகிராமம் முதலான பல இடங்களில் பூரணமாக இதை நடத்திப் பார்த்தாயிற்று.

இது இடையூருயிற்று. காங்கிரஸ் பதவிவிட்டபின் ஏற்பட்ட பிரிட்டிஷ் யுத்தகால ஆட்சியில் காந்தியடிகளுக்கும் காங்கிரசுக்கும் சம்பந்தப்பட்ட ஒரு கல்வி முறைக்கு ஆதரிப்பை எதிர்பார்க்க முடியாது. எனினும், அதை அடியோடு அவர்கள் ஒழித்துவிடவில்லை ; ஏனென்ருல், இந்திய அரசாங்கத்தார் ஏற்படுத்திய கல்விபற்றிய மத்திய ஆலோசனைச் சபையார் இப்புதுக் கல்வித்திட்டத்தின் பொதுப் படையான தத்துவங்களை ஒப்புக்கொண்டிருந்தார்கள். அன்றியும், சில மாகாண அரசாங்கங்கள் உத்தியோக பூர்வமாக இதை நடத்திப்பார்க்க முன்னமே ஏற்பாடெல்லாம் நிறைவேறிவிட்டது. இக்கல்வித்திட்டம், ஒரு புதிய சோதனை ; முன்னமே செய்துபார்க்காதது ; இதன் அடிப் படையான தத்துவங்களைப் பொதுவாக அனேகர் புரிந்து கொள்ளவுமில்லை, ஒப்புக்கொள்ளவுமில்லை ; எனவே, வெற்றிகரமாக இதை நடத்துவதற்கு இன்றியமையாதனவாகிய ஊக்கமும் செயல்திறனும் கொண்டு அப்போது இதை நடத்துவதற்கில்லை. புதிய திட்டம் மெல்லிய பூங்கொடி போன்றது. காரியரூபமான எதிர்ப்பு என்ற வெப்பக் காற்றும், பராமுகம் என்ற வாடையும் தாக்காதபடி கவனமாய் இதைக் காப்பாற்ற வேண்டும். அரசாங்கத்தில் ஏற்பட்ட எதிர்ப்பையும் பராமுகத்தையும் பொருட்படுத்தாமல் இக்கல்விச் சோதனை மெல்ல முன்னேறிக் கொண்டு வந்தது. உண்மையாக நடத்திய இடங்களில், இது சுதந்திர இந்தியாவில் மேற்கொள்ளத்தக்கது என்பதற்கான நல்ல பலனைக் காட்டியிருக்கிறது.

ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தார் 1944ஆம் வருஷ அறிக்கையில் பீகார் மாகாணத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிருர்கள் : “ அரசாங்க எதிர்ப்பு இருந்துங்கூட, இங்கு இக் கல்வியின் எல்லா அம்சங்களையும் பாடத்திட்டத்தில்

குறிப்பிட்டபடி நடத்த முயற்சி நடந்திருக்கிறது. ஏழு வருஷ காலத்திட்டம் போட்டிருக்கிறார்கள். கொள்கையில் கவனமும் சந்தேகமும் மாற்றமும் இல்லாமல் இதை நம்பிக்கையுடன் நடத்திவருகிறார்கள்." இதன் பலன் என்ன? நடந்த வேலையைப் பரீட்சித்துப் பார்க்க பீகார் மாகாண சர்க்கார், 1942 மார்ச்சுமாதம் நியமித்த இன்ஸ்பெக்டர்களின் போர்டார் பின்வருமாறு எழுதுகிறார்கள் :

" பிள்ளைகளின் துப்புரவை முதலில் நாங்கள் கவனித்தோம். முந்திய வருஷங்களைவிட இவ்வருஷம் பிள்ளைகளின் உடல் துப்புரவு மிகவும் அபிவிருத்தி யடைந்திருந்ததைக் காண எங்களுக்கு மிக்க மகிழ்ச்சி யுண்டாயிற்று. நாங்கள் பார்க்க வருகிறோம் என்ற காரணத்தால் விசேஷத் துப்புரவு ஒருவேளை நடந்திருக்கலாம். இருந்தாலும், பொதுவாக, பாடத்திட்டத்தில் உடல்துப்புரவு முக்கியமான பகுதி என்ற எண்ணத்தோடு இந்த அம்சம் நன்றாய்க் கவனிக்கப்பட்டு வருவது தெளிவாய்த் தெரிந்தது. ஆதாரப் பாடசாலையில் பயிலும் குழந்தையின் முதல் யோக்கிய தாம்சம் துப்புரவாயிருப்பது என்று எல்லோரும் அங்கீகரித்திருக்கிறார்கள்.

" அடுத்தபடியாக, குழந்தையின் பொதுவான உடல் வளர்ச்சியை நாங்கள் கவனித்தோம். ஆதாரக்கல்விச் சோதனை நடத்த இங்கு தேர்ந்தெடுத்த பிரதேசமானது, மக்களுடைய சோம்பேறித்தனத்துக்குப் பெயர்போனது; பாடசாலையில் கொடுக்கும் நற்பழக்கங்களுக்கு உதவியாகக் கூடியது அங்கு எதுவும் இல்லை; வீட்டிலும் ஊர்களிலும் அப்பழக்கங்களுக்கும் பயிற்சிக்கும் நேர்மாறான கெடுதி தான் உண்டு. இத்தனையும் கவனித்தால், ஆதாரக்கல்விப் பயிற்சியின் பயனாக பிள்ளைகளின் உடல் வளர்ச்சியிலும் பழக்கவழக்கங்களிலும் திட்டமான நல்ல முன்னேற்றம்

ஏற்பட்டிருக்கிறதென்று நாங்கள் நிச்சயமாய்ச் சொல்ல முடியும். பிள்ளைகள் விழிப்புடையவர்களாய், ஊக்கமும் உடையவர்களாய் இருக்கிறார்கள். வேலையிலும் விளையாட்டிலும், அழகாகவும் ஒற்றுமையாகவும் பயனுள்ள முறையிலும் ஈடுபடுகிறார்கள். மற்றப் பிள்ளைகள் கவனமற்றுத் திரிவதைப் பார்க்க, இவர்கள் துப்புரவாகத் துணி உடுத்துகிறார்கள், நிமிர்ந்த நடையோடிருக்கிறார்கள்......

"இதன்பின், ஆதாரக்கல்விப் பயிற்சியால், இவர்களுடைய புத்தி வளர்ச்சி எப்படியிருக்கிறது என்று நாங்கள் ஆராய்ந்தோம். இரண்டு அம்சங்களில் இவ்வாராய்ச்சியைச் செய்தோம்; ஒன்று, பாடத்திட்டத்தின் வெவ்வேறு அங்கங்களிலும் பாடத்திட்ட முழுமையிலும் அவர்களுக்கு என்ன திறமை வந்துள்ளது என்ற ஆராய்ச்சி. மற்றது, மனப்போக்கும் பழக்கவழக்கங்களும் எவ்விதம் உள்ளன என்ற ஆராய்ச்சி. முதல் அம்சம் சம்பந்தமாக, இப்பிள்ளைகளிடம் சுறுசுறுப்பும் விழிப்பும், வேலையை முறையாகச் செய்யும் பழக்கமும் அமையப்பட்டன. புலன்களை உபயோகித்துக் கூர்ந்து நோக்கும் ஆற்றல் இவர்களிடம் வளர்ச்சியடைந்திருந்தது. எனினும், ஆராயும் உள்ளம் இவர்களிடம் போதுமான தூண்டுதல் பெற்றதாகத் தெரியவில்லை. இரண்டு ஆதாரப்பாடசாலைகளைச் சேர்ந்த இரண்டு தொகுதிப் பிள்ளைகளுக்கு, சுயநோக்க முயற்சி முறை என்ற கல்வித்துறையில் கூட்டுறவுள்ள தொழில் வேலையைச் செய்யுமாறு கொடுத்தோம். பிள்ளைகளின் வயதையும் தேர்ச்சியையும் பார்க்கையில், அவர்கள் இதற்குப் போட்ட திட்டமும் அத்திட்ட நிறைவேற்றமும் மிக்க திருப்திகரமாயிருந்தன. 4ஆவது கிரேடு படித்த 30 பிள்ளைகளுக்கும் பொதுவாகப் பெரிய அளவில் மற்றொரு சோதனை நடத்தினோம். இதன் முடிவை அப்பிள்ளைகளே நிர்ணயித்தார்கள்; தங்கள்

திட்டத்தில் 57 அம்சம் நிறைவேறியிருப்பதாக அவர்கள் கணக்கிட்டுச் சொன்னார்கள்.

"இரண்டாவது அம்சம், மனப்போக்கும் பழக்க வழக்கங்களும். தொழிலை மையமாகவுடைய கல்வி முறையில் இயல்பாக விளையும் பயனாக அவர்களிடம் அமையும் மனப் போக்கும் பழக்கவழக்கங்களும் யாவை என்பது மிகவும் நுட்பமான விஷயம்.

"பிள்ளைகளிடையே யோக்கியப் பொறுப்புக் கிரமமாக மேம்பட்டுவந்த தென்பதில் சந்தேகமில்லை. அவரவருக்குரிய சொத்து என்பதை மற்றவர்கள் மதித்தார்கள்; அன்றியும், ஓர் ஆதாரப்பாடசாலையில் காணாமற்போன பொருள்கள் மற்ற ஆதாரப்பாடசாலையில் கிடைத்தபோது, அவற்றைத் திருப்பிக் கொடுக்கவும் செய்தார்கள். ஏழைமை மிகுந்த அந்தப் பிரதேசத்தில் இப்படிக் கொடுக்கும் பழக்கம் பிள்ளைகளுக்கு ஏற்பட்டது குறிப்பிடத் தகுந்தது."

அந்த இன்ஸ்பெக்டர்கள் மேலும் எழுதுகிறார்கள்:

"பாடசாலை வாழ்க்கை சம்பந்தப்பட்டவரையில், பிள்ளைகளும் உபாத்தியாயர்களும் வேலைசெய்வதைக் கவனிக்கும் சந்தர்ப்பங்கள் பல எங்களுக்குக் கிடைத்தன. பிள்ளைகளுக்கு வேலையில் கூட்டுறவும் பொறுப்பைப் பங்கிட்டுக் கொள்ளும் தன்மையும் வருவதற்கான பயிற்சி கிடைக்கக்கூடிய விதத்தில் பாடசாலை வேலைமுறை அமைக் கப் பெற்றிருக்கிறதென்று நாங்கள் நன்றாய்த் தெரிந்து கொண்டோம்."

பீகாரில் நடந்த கல்வி வேலைபற்றிப் பிறரும் இதே அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள். பாட்னா பெண்கள் கல்லூரியின் தலைவியான கிளாரிஸ்ஸா அம்மையார் எழுதுகிறார்: "சம்பாரான் ஜில்லா ஆதாரக்கல்விப் பிரதேசத்தை நான் பார்வையிட்டேன். பார்த்தவை என் மனத்தை மிகவும்

கவர்ந்திருக்கின்றன. பிள்ளைகள் தங்கள் வேலையிலும் உழைப்பிலும் தாங்களாகவே காட்டிய ஆர்வம் எனக்குப் போராச்சரியத்தைத் தந்தது. புலன்களின் பயிற்சி மூலமாகப் பிள்ளைகளின் திறன்கள் அனைத்தையும் ஒருங்கே வளர்ப்பது என்ற முயற்சி இங்கு மிகவும் வெற்றி பெற்றிருக்கிறது. தன்னம்பிக்கை, தன் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துதல், மாறுகிற சந்தர்ப்பங்களுக்கு ஏற்பத் தானும் ஒத்தியங்குதல் ஆகிய தன்மைகள் இப்பயிற்சியின் முக்கிய அம்சங்களில் சிலவாகும். எழுத்து, படிப்பு, கணக்கு என்ற மூன்றையும் கூடப் பிள்ளைகள் நன்ருய்க் கற்றுத் தேர்ந்திருக்கிருர்கள். நாங்கள் சென்றபோது எங்களைக் கண்டு அஞ்சுவதாகிய பயமோ, போலியான வெட்கமோ, அவர்களிடம் காணப்படவில்லை. இவற்றுக்கு மாருக, எல்லாவகையான வேலையிலும் உழைப்பிலும் மிகுந்த மகிழ்ச்சியும், உடல்வருந்தி உழைப்பதில் நியாயமான ஒரு தற்பெருமையும் காணப்பட்டன. ஒத்துழைப்பதும், உடனுைத்த தோழனைத் தலைவனுகக் கொண்டு அவன் கருத்துக்கும் கட்டளைக்கும் இணங்கி வேலை செய்வதும் ஆகிய பண்புகள் சிறப்பானவை. இந்தியக் கிராமங்களுக்கு விமோசனமும் பாமர மக்களின் எழுத்தறிவும் ஆதாரக்கல்வியால்தான் நடைபெற முடியும் என்று மனப்பூர்வமாக நம்புகிறேன். இப்படிப்பட்ட ஒரு பாடசாலை கிராமந்தோறும் இருக்கும் பட்சத்தில், சில வருஷங்களில் ஏற்படும் நற்பலனே இக்கல்வி முறையின் சிறப்பை எடுத்துக் காட்டும்.”

சம்பரான் கல்வியைப் பற்றிய இப்படிப்பட்ட சான்றுகள் மிகப் பல.

காஷ்மீர் சமஸ்தானத்தின் கல்வியிலாகாத் தலைவரான போராசிரியர் கே. ஜி. சையிதீன் அவர்களின் கீழ் ஆதாரக் கல்விச் சோதனை நடந்துவந்தது. அவரும் ஆர்வம் மிகுந்த

கல்வி நிபுணர். 1938-43 ஆகிய ஐந்துவருஷ வேலைபற்றிய அறிக்கையில், பல குறிப்புக்களிடையே பின்வரும் பகுதியையும் அவர் எழுதியிருக்கிறார் : "ஆதாரப்பாடசாலைகளில் எங்கும், நிர்ணயித்த இணைப்புப் பாடத்திட்டத்தை ஆசிரியர்கள் பொதுவாகத் திறமையுடன் நடத்தி முடித்திருக்கிறார்கள். தொழிலிலும் பொதுப்பாட அறிவிலும் பிள்ளைகள் பெற்றுள்ள தேர்ச்சியானது இக்கல்வி பற்றி நமக்கு ஊக்கமளிக்கிறது. பாடசாலையைப் பார்வையிட்ட கல்வியாளரும் ஏனைய பெரியோரும், இந்த முறையில் கல்வி போதிக்கப்பெற்ற பிள்ளைகள் மற்றப் பாடசாலைகளில் படித்த பிள்ளைகளைவிட அதிகமான சுறுசுறுப்பும் விழிப்பும் உடையவர்களென்றும் கல்வி பற்றிய கவனமும் உடையவர்களென்றும் தெரிவிக்கிறார்கள். சில இடங்களில், வழிக்கு வராத பிள்ளைகள் சாதாரண அளவு திறமையைவிட அதிகமான அளவு திறமை பெற்றிருக்கிறார்கள். பொதுவாக பேச்சிலும் கணக்கிலும் இவர்கள் மற்றப் பாடசாலைப் பிள்ளைகளைவிட அதிகம் மேம்பட்டிருக்கிறார்கள். தொழில் என்பதை ஆதாரப் பாடசாலைகளில் சுருங்கிய பொருளில் கருதுவதில்லை. தொழிலானது வெறும் புத்தகப் படிப்பு நடைபெறும் இடத்தில் நடைபெறுவதைவிட இங்கு பிள்ளைகளின் ஆர்வத்தை மிகவும் அதிகமாகத் தூண்டி விட்டிருக்கிறது. உழைப்பு வாரம் என்று நாங்கள் நடத்திய ஒரு வாரத்தில், ஆதாரப் பாடசாலைப் பிள்ளைகள் புதிய சாலைகள் அமைத்தார்கள். பழைய சாலைகளைப் பழுது பார்த்தார்கள். கிணறுகளைத் தூர்வாறிச் சுத்தம் செய்தார்கள். ஊற்றெடுத்தார்கள். மழைத் தண்ணீர் சாக்கடைத் தண்ணீர் முதலியன ஓடி வடிவதற்கான புதுக்கால்வாய்களும் வெட்டினார்கள்.

"இனி ஆதாரப் பாடசாலையில் வேலை செய்யும் ஆசிரியர்கள் சம்பந்தப்பட்டவரையில், இந்தப் புதிய கல்வி முறை

யானது உபாத்திமைத் தொழில் பற்றி அவர்கள் கொண்டிருக்கும் மனப் போக்கை ஆரோக்கியகரமான முறையில் மாற்றியிருக்கிறது. அவர்கள் பொதுவாக முன்னிலும் சுறுசுறுப்புடையவர்களாயும் சிந்தனையை உபயோகிப்பவர்களாயும் கலந்து பழகுபவர்களாயும் தங்கள் பொறுப்புக்களை முன்னிலும் அதிகமாய் உணர்பவர்களாயும் ஆகியிருக்கிறார்கள். அவர்கள் கல்வியை வாழ்க்கையோடும் பிள்ளைகளின் விருப்பத்தோடும் இன்னும் நெருங்கிய தொடர்புடையதாய் இருக்கும்படிச் செய்ய முயல்கிறார்கள். உபாத்திமைத் தொழில் என்ற அளவில் பேசும்போது, முன்னிலும் சிறந்த தகுதியை அவர்கள் பெற்று வருகிறார்கள். சமீபத்தில் ஆதாரப் பாடசாலைகளுக்கு அனேக கேள்விகளைக் கேட்டு நீண்ட அறிக்கையொன்று விடுத்தோம். அதற்குக் கிடைத்த பதிலிலிருந்து, ஆசிரியர்கள் பொதுவாகவும் சிறப்பான துறைகளிலும் இப்போது அதிகம் படித்திருக்கிறார்களென்றும், பிள்ளைகள் படிக்கும் பொருட்டுத் தங்களுக்குச் சாத்தியமான அளவு புத்தகங்கள் தயாரித்திருக்கிறார்களென்றும் தெரியவருகிறது.

"பொது மக்கள் இந்தப் புதிய கல்விச் சோதனை பற்றி முன்னம் கொண்டிருந்த பகைமை உணர்ச்சி மாறி, இக்கல்வி விவாதத்துக்கிடமான விஷயம் என்ற நிலையை இது எவ்வித அபாயமுமில்லாமல் கடந்து வந்துவிட்டது. அனேக இடங்களிலிருந்து, தங்கள் பாடசாலைகளைப் புதிய ஆதாரப் பாடசாலைகளாக மாற்ற வேண்டுமென்று கோருகிற விண்ணப்பங்கள் எங்கள் கல்வி இலாகாவிற்கு வந்துகொண்டிருக்கின்றன."

ஆசிரியர் சையிதீன் அவர்கள் 1944இல் எழுதிய வேறொரு கட்டுரையில் பின் வருமாறு கூறுகிறார்: "ஆதாரக் கல்விச் சோதனையின் பயனாய் விளைந்த ஒரு நல்ல பலன்

என்ன வென்றால், வேலை மூலம் கல்வி, சமூக நோக்கோடு கல்வி போதித்தல், தொழில் நடத்துதல் என்ற கருத்துக்கள் சாமானியமான அனேக ஆரம்பப் பாடசாலைகளில் இப்போது இடம் பெற்றமையாகும். அப்படிப்பட்ட அனேக ஆரம்பப் பாடசாலைகளை நான் பார்வையிட்டேன். ஒவ்வொன்றிலும் சுமார் 100 பிள்ளைகள் இருந்தார்கள். ஆசிரியர்கள் இரண்டு பேர். அவர்களுடைய படிப்பும் கொஞ்சம். ஆனால் அவர்களுக்கு இயல்பாகவே போதிக்கும் திறமை இருந்தது. புதுக் கருத்துக்களில் அவர்கள் ஊறியிருந்தார்கள். அவர்களுடைய சுறுசுறுப்பையும் விழிப்பையும் காண மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று. சுலபமான தொழில் செய்தல், பாடசாலைத் தோட்டவேலை செய்தல், சிறு நாடகம் நடித்தல், சிறு பிரசங்கம் செய்தல், தங்கள் சண்டைகளைத் தீர்க்க நியாயசபை நடத்துதல், பொதுப் பிரசினைகளை முடிவு செய்தல் ஆகிய வேலைகளை அவர்கள் செய்து வந்தார்கள். பார்க்க வருபவர்களைப் பிள்ளைகளில் சிலர் தாங்களே அழைத்துச்சென்று தாங்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்பதை விளக்கிச் சொல்கிறார்கள். மரியாதையாக உபாத்தியாயரை ஒரு புறம் ஒதுக்கிவிடுகிறார்கள். நான் பார்த்த பள்ளிக்கூடங்களில் இந்த வேலைகள் உண்மையாகவே நடைபெற்றன ; வருபவருக்குக் காண்பிப்பதற்காக ஜோடித்து வைத்தவை அல்ல. பிள்ளைகள் இந்தப் பாடசாலைகளில் இவ்விதமாக வேலை செய்துவருவதைப் பெற்றோரும் கிராமத்தோரும் மிகுந்த ஆர்வத்தோடும் பெருமையோடும் பக்கத்தில் நின்று பார்த்துக்கொண்டிருந்தார்கள். கிராம வாழ்க்கையே பாடசாலை மயமாகி விட்டது. பெற்றோருக்கு உபாத்தியாயர் நம்பிக்கைக்குரிய நியாயமான தலைவராகி விட்டார். மிகச் சில பாடசாலைகளில் தான் இவ்விதம் நடக்கிறதென்பது வாஸ்தவம். ஆனால், பாடசாலை

வேறு சமூகம் வேறு, கல்வி வேறு வாழ்க்கை வேறு என்ற சம்பிரதாயமாக இருந்த வேற்றுமை நீங்கி, இப்போது இந்தப் புதிய சக்தி தெரிந்த பல வழிகளிலும் தெரியாத பல வழிகளிலும் வேலை செய்ய ஆரம்பித்திருப்பது பெரிய காரியம். ”

இப்படிப்பட்ட நல்ல பலனுக்கு, ஆதாரக் கல்வியின் தத்துவமும் போதனு முறையுமே முக்கிய காரணங்கள். இதை காந்தியடிகளின் புதிய பித்தம் என்றோ, சோதனை யாகக் கருதிப் பொறுத்துக் கொள்ள வேண்டுமென்றோ, சொல்வது இனி அவசியமில்லை. ஆதாரக் கல்வி நிலைத்து விட்டது; இதுவே இந்திய நாட்டுப் பாமர மக்களின் எதிர் கால வாழ்வை மேம்படுத்தப் போகிறது. இவ்வாசிரியர் கருத்தை மற்றெல்லா நிபுணர்களும் உறுதி செய்கிறார்கள்; கல்வித் துறையில் இச்சோதனை வெற்றி பெற்றுவிட்டது.

புதிய கல்விமுறையில் செலவைச் சரிக்கட்டுவதென்பது மகாத்மா காந்தியடிகளின் தத்துவங்களில முக்கியமானது. இந்தத் துறையின் பயன் என்ன ஆகியிருக்கிறதென்பதைச் சற்றுப் பார்க்கலாம். தொழில் தேர்ந்த ஆசிரியர் பார்வை யில் கவனமாக எங்கு தொழிற் பயிற்சி நடந்ததோ அங்கு தான் இதை நாம் கவனிக்கவேண்டும். காந்தியடிகளின் கருத்துப்படி செலவைச் சரிக்கட்டுவதென்றால், பிள்ளைகள் பாடசாலையில் செய்யும் தொழிலில் கிடைக்கும் வருவாயைக் கொண்டு உபாத்தியாயர் சம்பளத்துக்கேனும் ஈடுசெய்வது என்று பொருள்படும்.

பின்னே தரப்பட்ட புள்ளிவிவரங்கள் தாலிமி சங்கத் தாரின் 1944ஆம் வருஷ அறிக்கையில் உள்ளவை சேவாகிராம ஆதாரப்பாடசாலையைச் சங்கத்தாரே நேரில் நடத்துகிறார்கள். அங்கு திட்டமான கணக்கு விவரங்கள் வைக்கப்பெற்றுள்ளன. ஐந்து வகுப்புக்களில் ஒவ்வொன்

றிலும் ஒவ்வொரு பிள்ளையும் சராசரியாகச் சம்பாதித்த வருவாய் பின்வருவதாகும்.

காலம் - 1943 ஜூலை முதல் 1944 ஏப்ரல்வரையில்; வேலை நடந்த நாட்கள் 220.

வகுப்பு		வேலை நேரம்	சராசரி வருவாய்			அதிக வருவாய்		
கிரேடு	1	2 மணி	ரூ. 2	1	0	2	14	0
,,	2	2-30 ,,	3	7	0	6	10	0
,,	3	2-30 ,,	5	8	0	8	12	0
,,	4	3 ,,	14	12	0	16	4	0
,,	5	3 ,,	15	1	0	18	9	0

வகுப்பு ஒன்றில் 30 பிள்ளைகள் வீதம் ஐந்து வகுப்புக்களும் பூர்த்தியாகவுள்ள ஒரு பாடசாலையில் இவ்வருவாய் என்ன தரும் என்பதை இப்போது திட்டமாக உணரலாம். அங்கு தொழில் மூலம் வரும் மொத்த வருவாய் பத்து மாதத்தில் ரூ. 1218-12-0. இது சராசரி மாதம் ரூ. 121-14-0 ஆகும். ஆதாரக்கல்வி ஆசிரியர் சம்பளம் மாதம் ரூ. 25* என்று கொண்டால், இது ஏறக்குறைய ஐந்து ஆசிரியர் சம்பளமாகிறது; செலவைச் சரிக்கட்டுதல் என்பதை அனேகமாய்ப் பூர்த்தி செய்கிறது; வர்தா ஆதாரக்கல்வி மகாநாட்டின் தீர்மானம் செயல் முறையில் சாத்தியம் என்பதை இதிலிருந்து கண்டுகொள்ளலாம்.

இவ்வாறாக, திட்டமான இவ்விவரங்கள், கல்வித் துறையிலும் செலவைச் சரிக்கட்டுதல் என்ற துறையிலும் இக்கல்வி திருப்தியானதுதான் என்று நிரூபிக்கின்றன. காந்தியடிகளும் அவருடைய அன்பர்களும் எதிர்பார்த்ததை

---

*இவ்விவரங்களும் சம்பளவீதமும் காலத்தால் பெரிதும் மாறும்.

இக்கல்வித் திட்டம் நிறைவேற்றியிருந்தது. அவருடைய புதிய பைத்தியம், வெறும் பைத்தியமன்று; அறிவியல் ரீதியாக நடத்திப் பார்க்கக் கூடியதும், இன்றைய நாட்டின் செல்வநிலைக்குப் பெரிதும் ஏற்றதுமான தேசிய சர்வ ஜனக் கல்வியேயாகும். நாடெங்கும் இக்காந்திய ஆதாரக் கல்வியை அமுல் நடத்துவது சுதந்திர இந்தியாவில்தான் நடைபெறும்.†

ஜனவரி 1946

---

†சுதந்திர இந்தியா உதயமாகி இரண்டு வருஷங்களுக்கு மேலாகிறத. காந்திய ஆதாரக்கல்வி நடைபெறுகிறதா ?

இன்றைய பேச்சு

ஆதாரக்கல்வி

ஆதாரக்கல்வியின் தோற்றுவாய்

காந்தியடிகள் செய்கிற காரியங்கள் நாட்டுக்கு அடிக்கடித் திகைப்பை யுண்டாக்குகின்றன. புதிய புதிய திட்டங்களை முன்பின் சோதித்துப் பார்க்காமல் அவர் வெளியிடுகிறார். அவர் கூறும் கருத்துக்கள் எல்லோருக்கும் ஆச்சரியத்தை விளைவிக்கின்றன; அவை பண்டை அனுபவத்துக்கு மாறாக இருப்பதோடு, மக்களின் எண்ணமும் செயலும் வழக்கமாய் எந்த வழியில் செல்லுகின்றனவோ அவ்வழிக்கு ஒத்திருப்பதும் இல்லை. இந்தப் புதுமை, படித்தவர்களையே அதிகம் கலக்குகிறது. ஏட்டுப் படிப்பு, கலாசாலைப் பட்டங்கள் முதலியன இவர்களுக்கு அதிக மாதலால், புதிய திட்டங்கள் பற்றித் தெரிய வேண்டியதெல்லாம் தங்களுக்குத் தெரியுமென்று இவர்கள் எண்ணுகிறார்கள். முக்கியமாக, நிபுணர்கள் என்று சொல்பவர்களே அதிகக் கலக்கம் அடைகிறார்கள். தாங்கள் நிபுணத்துவம் அடைந்திருக்கிற விஷயங்களை இந்தக் கிழவர், இப்படி நூதனமான முறையில், அலட்சியமாக முடிவு செய்துவிடுகிறார்; ஆனால், தாங்கள் இவற்றில் நிபுணர்களாதலால், மற்றவர்களுக்கு அதிகம் தெரியாத போதிலுங்கூட, தங்களுக்கேனும் நன்றாய்த் தெரிந்திருக்க வேண்டும் என்று இவர்கள் எண்ணுகிறார்கள். புரட்சி

கரமான கருத்துடையவர்கள் என்று தங்களை எண்ணி யிருப்பவர்களுங்கூடக் குழம்பிப்போகிருர்கள்.

ஆனல், இவர்கள் கொண்டுள்ள புரட்சிகரமான கருத் துக்கள், இவர்களுடைய சொந்த அறிவுத் திறமையாலோ சொந்த அனுபவத்தின்மேலோ எழுந்தவையல்ல; இவர்கள் அறிவெல்லாம்புத்தகத்திலிருந்துவந்தது; அதைப்போலவே, இக்கருத்துக்களும் புத்தகத்திலிருந்தே வந்தவை. புதுத் திட்டங்களைத் தாங்களாகவே சிந்தித்து வெளியிடவும், தொடங்கி வைக்கவும், இவர்களுக்குப் பழக்கமில்லாத படியால், உவமை மூலமாகவே இவர்கள் திட்டம் வகுக்கப் பார்க்கிருர்கள். ஆதலால், தாங்கள் புத்தகமூலம் பெற்ற அறிவுடன் மற்ருென்று பொருந்தாதபோது, அதைச் சற்றே இழித்துக்கூறி ஒதுக்கிவிடுகிருர்கள். இத்தகைய ஆராய்ச்சியாளர் காந்தியடிகளின் கருத்துக்களை ஆராயும் போது, அவற்றுக்கும் இதே கதிதான் நேர்கிறது; அக் கருத்துக்களைப் பிற்போக்கு, புரட்சிக்கு மாறு, கர்நாடகம், செயல்முறைக்கு ஒவ்வாத ஏட்டுச்சுரைக்காய், பைத் தியம், பரமார்த்தநெறி என்றெல்லாம் பெயர் சூட்டிவிடு கிருர்கள்.

படித்தவர்கள் ஏன் இந்த மாதிரி காந்தியடிகளின் திட்டங்களைப் புரிந்துகொள்வதில்லை? அவை புதியவை அல்லது செயல்முறைக்குக் கஷ்டமானவை என்பதாலா? அவை மற்றவர்களுக்குக் கலக்கமும் கோபமும் ஊட்டு வதற்குக் காரணம், அவற்றை அவர் சொல்லும் முறையும் வெளியிடும் முறையும் நூதனமாயிருப்பதா? என்னைப் பொறுத்த வரையில், அவருடைய திட்டங்களை மற்றவர் கள் புரிந்துகொள்ளாததற்கும் எதிர்ப்பதற்கும் காரணம், திட்டங்களின் விஷயமன்று, திட்டங்களை அவர் வெளி யிடும் புது முறைதான் என்று நினைக்கிறேன். பொதுவாக காந்தியடிகள், தம்முடைய திட்டங்களைப் போதுமானபடி

விவரித்துச் சொல்வதில்லை. தமக்குப் புலனான முடிவுகளை அவர் திடீரென்று சொல்லுகிறார்; இதுவே அவர் தம் திட்டங்களை வெளியிடத் தொடங்குவதற்கு அடையாளம். தர்க்க ரீதியாக அவர் எப்படி இந்த முடிவுக்கு வந்தார் என்பது மற்றவர்களுக்கு எளிதில் விளங்குவதில்லை. தாம் சொல்லும் பொருள்கள் பற்றி, எந்தப் புத்தகத்தையும் அவர் ஆதாரங் காட்டுவதில்லை. விளக்கவுரை எதுவும் அவர் எழுதுவதில்லை. ஒன்றை நிரூபித்துக் காட்டவேண்டும் என்று அவர் முயல்வதே இல்லை. எந்த எதிர்ப்புக்கும் அவர் பிரதிவாதம் சொல்வதில்லை; தாமாக ஓர் எதிர்ப்பைக் கற்பித்துக்கொண்டு அதற்குச் சமாதானம் சொல்லிக்கொண்டிருப்பதுமில்லை. வாஸ்தவச் செய்திகளையோ புள்ளி விவரங்களையோ அவர் காட்டுவதும் அபூர்வம். பேராசிரியர்கள் கூற்றை எடுத்து அவர் சான்று காட்டுவதுமில்லை. தற்போதைக்குத் தாம் எந்தப் பொருள் பற்றிப் பேசுகிறாரோ, அந்தப் பொருளை இதுவரையில் வேறு யாருமே எடுத்துப் பேசியதில்லை என்ற மாதிரி அவர் ஆரம்பிக்கிறார்; தாம் பேசாமல் அல்லது தலையிடாமல் எந்தப் பொருளையும் அவர் பாக்கி வைக்கவுமில்லை.

ஓவியம் சிற்பம் நாடகம் முதலிய விஷயங்களில், ஓவியர் வரைவதையோ, சிற்பி செதுக்குவதையோ நடிகர் வேடம் பூணுவதையோ பொதுமக்கள் பார்க்க வேண்டுமென்று கேட்பது வழக்கமில்லை; இவற்றின் பூர்வாங்க வேலைகள் முடிந்து, கலைத்திறம் பொருந்திய படமாகவோ, சிலையாகவோ, நடனமாகவோ, பூரண வடிவத்தோடு இவற்றை மக்களுக்குப் பின்னர் காட்டுவதுதான் பொருத்தமாகும். ஆனால், இந்த வழக்கம் எல்லாவற்றுக்கும் பொருந்தாது. மக்கள் வாழ்க்கையைப் பாதிக்கும் துறைகளில் சீர்திருத்தங்களைப் புதிதாகப் புகுத்துவதென்றால், இது சரியாகாது. சீர்திருத்தத்தின் சாரத்தை நன்றாய் உணர்ந்து,

அவை பயன்படும் விதத்தில் மனப்பூர்வமாய்க் கலந்து ஒத்துழைக்கவேண்டும். ஆதலால், இவற்றில் முடிவை மட்டும் மக்களுக்குத் திடீரென்று தெரிவித்தால் போதாது; பூர்வாங்கக் கருத்துக்களையும் படிப்படியாகச் சொல்லியாக வேண்டும்.

தத்துவ சாஸ்திர ஆசிரியர்கள் ஏதேனும் சீர்திருத்தம் செய்ய விரும்பினால், அப்போது வேறொரு முறையை அனுஷ்டிக்கிறார்கள். தங்கள் கருத்துக்களைப் பொது மக்களுக்குத் திட்டமாய் முதலில் அறிவித்து விடுகிறார்கள். தாங்கள் கொண்ட முடிவுகள் தர்க்கரீதியாக எவ்வாறு எழுந்தன என்பதைச் சுருக்கமாகவேனும் மக்களுக்கு அறிவிக்கிறார்கள். குறித்த முடிவுக்கு வரும் வழியையெல்லாம் மக்கள் நன்றாகப் புரிந்துகொள்வதற்கு அவகாசம் அளிக்கிறார்கள்; மக்கள் அவ்வழியை நன்றாய்ப் புரிந்துகொள்வதன்மூலம், சில சமயம் தங்களுக்குப் பிடிக்காத முடிவுக்கு வரும்படியும் செய்யமுடிகிறது. சாமர்த்தியமாகவும் மனோதத்துவ ரீதியாகவும், இவ்வாறு புரிந்து கொள்ளும்படிச் செய்யும் முறையினால், அந்த மக்கள், குறித்த ஒரு முடிவானது தாங்களே கண்டதென்றும், மற்றவர்களால் தூண்டப்பட்டுப் பின் தாங்கள் அடைந்ததல்லவென்றும் மெல்லமெல்ல நம்பும்படிச் செய்கிறார்கள்.

ஆனால், காந்தியடிகள் சொல்லும் விதம், இத்தனைக்கும் நேர்மாறாயுள்ளது. இது, தம்மை எல்லோரும் பூரணமாய் நம்பும்படி அவர் சொல்வதுபோல் இருக்கிறது. ஞானதிருஷ்டியும் பக்தியும் வாழ்க்கையில் ஓங்கியிருந்த பண்டைக்காலத்தில் இந்த நம்பிக்கை பொருத்தமாயிருக்கலாம்; ஆனால், அறிவே பிரதானமென்று கருதிக் குண தோஷ ஆராய்ச்சி செய்கிற இந்தக் காலத்தில், இதற்கு எதிர்ப்புத்தான் ஏற்படுகிறது.

மிகவும் புரட்சிகரமான கருத்துக்களையும் திட்டங்களையும் அவர் வெளியிடுகிறார்; நூற்றுக்கணக்கான நிபுணர்களும் தத்துவ ஆராய்ச்சியாளரும் இதே துறையில் வேலை செய்து பெரிய புத்தகங்கள் எழுதியிருக்கிறார்கள். ஆனால் அவரோ, விரிவான பீடிகைகூடச் சொல்லாமலே தம் கருத்தை எழுதி வெளிப்படுத்துகிறார். பீடிகை இருந்தாலும்கூட, அது அவருடைய கருத்துக்களையும் பொருளையும், விளக்குவதற்குப்பதிலாக மறைத்து வைப்பதுபோலத்தான் தோற்றுகிறது. அவருடைய கருத்து வெளிவந்தவுடனே, அவருக்கு வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் எல்லோருமே, அது பிடிக்கவில்லை என்று கூறுகிறார்கள். அவரிடம் நம்பிக்கையுடையோர் சிலர்மட்டுமே, அவர் இன்னும் கொஞ்சம் விளக்கம் கூறட்டும் என்று பொறுமையாய்க் காத்திருக்கிறார்கள். காலக்கிரமத்தில் அவர் மேலும் விளக்கம் கூறுவது உண்மை. ஆனால், இதற்கிடையில் அவர் தம் கருத்தை வெளியிட்டதோடு அமையாமல், அதைச் செயலில் நடத்துவதற்கு வேண்டுவனவற்றையும் ஆரம்பித்திருக்கிறார்; எப்போதுமே அவர் காரியத்திலேயே கண்ணாய் அவசரப்படுவது வழக்கம். மக்களுக்குத் தம் கருத்துக்களில் நம்பிக்கையூட்டி அவர்கள் மனத்தைமாற்றுவதுதான் அவர் நோக்கம்; ஆனால், இதற்கு அவர் வாதங்களையோ அதிகார பூர்வமான நூல்களையோ பண்டிதர்களையோ எதிர்பார்த்துக்கொண்டிருப்பதில்லை; காரியத்தையே நம்பியிருக்கிறார். காந்தியடிகள் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார் என்றால், காங்கிரஸே கொண்டு வந்தது என்று பொருளாகிவிடுகிறது; ஆகவே, நாடு முழுமையும் இதைக் கடைப்பிடித்தே ஆகவேண்டியிருக்கிறது.

நாட்டு மக்களின் பொது வாழ்க்கை, விவகாரம் என்பன பற்றிய முக்கியமான ஏதேனுமொரு துறையில்

பெருநன்மையோ தீமையோ விளைவிக்க வல்ல பிரசினை களைக் காந்தியடிகள் இவ்விதம் மிகவும் சுருக்கமாகவே தீர்த்துவிடுகிருர் ; பார்ப்பவர்களுக்கு இது அகம்பாவம் என்று தோன்றுகிறது; எரிச்சலாயும் இருக்கிறது. பொது வாய் அவர்களுக்கு இது பிடிப்பதில்லை. ஆனுல், அவரோ, சிறிதும் சஞ்சலமடையாமல், தம் நோக்கமே குறியாக வேலை செய்துகொண்டு போகிருர். இதற்கிடையில், அவர் கூறுகிற ரத்னச் சுருக்கமான விளக்க வுரைகள் மெல்லச் சிலருடைய மூளையிலேனும் படுகின்றன ; யார் தங்க ளுடைய அறிவுக்குத் தடித்த உறைபோட்டு மூடிவைக்கா மல் இருக்கிருர்களோ அவர்களுடைய அறிவைத் தூண்டி, அங்கே கொஞ்சம் நம்பிக்கை எழச் செய்கின்றன ; இவர் களில் சிலர் அவருக்குத் துணை வருகிருர்கள்; வந்து, சம்பிர தாயமான எந்தப் போர்வையில் போர்த்திஞல் அவ ருடைய கருத்துக்களை மற்றவர்கள் புரிந்துகொண்டு போற்றுவார்களோ, அந்தப் போர்வையில் அவற்றைப் போர்த்திச் சரியான உருவம் அல்லது தோற்றம் கொடுக் கிருர்கள். அவற்றையொத்த பிறவற்றையும் அவற்றுக்கு அனுகுணமாயுள்ளவற்றையும் இவர்கள் தேடித் தொகுத் துச் சொல்கிருர்கள். புதுமையும் புரட்சிகரமும் பொருந் திய அவருடைய திட்டங்கள் நியாயமானவை என்று சாஸ்திரோக்தமான வாதங்கள் மூலம் ஸ்தாபித்து, தங் கள் ஆதரவையும் தருகிருர்கள். சாஸ்திரோக்தமான மறுப்புக்கள் வரும்போது, நன்ருய்த் தெரிந்து எல்லோரா லும் ஒப்புக்கொள்ளப்பெற்ற புத்தகங்களையும் பண்டிதர் கருத்துக்களையும் எடுத்துக் காட்டி, அவற்றுக்குத் தக்க விடை கூறுகிருர்கள். எந்தப் புதுவழியைக் காந்தியடிகள் காட்டியிருக்கிருரோ அந்த வழியில் திறமை வாய்ந்த அறி வாளிகள் சோதனை நடத்திப் பார்க்கிருர்கள் ; நடை முறை வேலைத் திட்டமொன்றும் தயாரித்துக்கொள்கிருர் கள். எதிர்கால வேலைக்கு நம்பிக்கை யளிக்கக்கூடிய

திட்டவட்டமான முடிபுகள் சிலவற்றையும் காட்டுகிறார்கள்.

'வர்தாத்திட்டம்' என்றும் 'ஆதாரக்கல்வி' என்றும் வழங்கிய புதுமுறைக் கல்வித் திட்டமானது இப்படிப்பட்ட திட்டங்களில் ஒன்று. காந்தியடிகள் வழக்கமாய்த் தாம் சொல்லும் முறையிலேயே இதை வெளியிட்டார்; பண்டிதர்களெல்லாம் மிக்க தீவிரமாய் இதை எதிர்த்தார்கள். எதிர்ப்புக்கும் ஆதரவுக்குமிடையே இப்போது இந்தக் கல்வித்திட்டம் மக்கள் மனத்தில் புதிதாய்க் குடியேற ஆரம்பித்திருக்கிறது.* இந்தத் திட்டத்தை அவர் தமது "ஹரிஜன்" பத்திரிகையில் ஒன்றரைப்பத்தி முன்னுரையாக எழுதி, முன்னறிவிப்பு இல்லாமலே திடீரென்று வெளியிட்டார். ஆகவே, இதற்கு முதலில் மறுப்பும் எதிர்ப்புமே ஏற்பட்டன என்பது சொல்லவேண்டியதில்லை. பொதுவாக, காந்தியடிகளின் திட்டங்கள் எல்லாமே செயல்முறைக்கு ஒவ்வாதவை, அவற்றுள் இது மிகவும் ஒவ்வாதது என்று எல்லோரும் சொன்னார்கள். பண்டிதர்கள் இதைக் கண்ணெடுத்துப் பார்க்கவும் மறுத்தார்கள். சமதர்ம வாதிகள்கூட, ருஷ்ய நாட்டார் பரிசோதித்துப் பார்த்துவரும் திட்டத்துக்கும் இந்தத் திட்டத்துக்கும் பங்காளி பாத்தியம் இருக்கிறது என்பதைக்கூட மறந்துவிட்டார்கள்! புத்திசாலிகள், ஓர் ஏளனச் சிரிப்புச் சிரித்தோ அல்லது கண்சிமிட்டியோ, இதை அடியோடு தொலைத்துவிட்டதாக எண்ணிக்கொண்டார்கள். பிறகு காந்தியடிகள் இதை விவரித்துச் சொல்ல நேர்ந்தது: இதன்மூலம் அவருக்கு ஆதரவாகச் சிலர் சேர்ந்தார்கள். அல்லது, தம் திட்டத்தை வெளியிடுவதற்கு முந்தி, அவர் ரகசியமாகவே சில ஆதரவாளரை ஒருவேளை தேடிக்கொண்டிருந்தாலும் இருக்கலாம்! இந்தக் கிழவர் தந்திர

---

* இந்த நிலை 1938இல்; அதைக்கடந்து வெகுநாளாகிறது.

மிகுந்த 'பனியா' செட்டியாரல்லவா? எப்படியோ பண்டிதர்கள் மகாநாடு ஒன்று ஏற்பாடாயிற்று. மிகவும் புத்திசாலித்தனமாக, கல்வி விஷயத்தில் அக்கறையுடையவர்கள் மட்டும் இதில் கூடுவதென்று வரையறை செய்தார்கள். (ஒருவேளை, நாகரிகமாகத் தோற்றுவதற்காகவும் இப்படிச் செய்திருக்கலாம்!) மாகாணங்களில் பதவி வகித்த கல்வி மந்திரிகளுக்கெல்லாம் அழைப்பு விட்டார்கள். தங்கள் பதவி காரணமாக, இவர்களுக்குக் கல்வியில் ஆர்வம் இருக்கவேண்டுமல்லவா? சிலர் மட்டும் மகாநாடு கூடுவதென்ற இந்த ஏற்பாடு மிகுந்த வெற்றி தந்தது. இந்த மகாநாடு நடந்த வர்தா பட்டணத்தில் சௌகரியமாக எத்தனை பேர் அடங்கலாமோ, அதைவிட அதிகம் பேர் இதைப் பார்க்க அங்கு ஆவலுடன் வந்திருந்தார்கள்.

காந்தியடிகளே இந்த மகாநாட்டுக்குத் தலைமைவகித்தார். நடவடிக்கைகள் இந்துஸ்தானி மொழியில் கணக்காக நடந்தன. மகாநாடு இரண்டு நாளில் முடிந்தது. பொதுவான கருத்துக்களை மட்டும் இதில் நிர்ணயம் செய்தார்கள். பொதுவான கருத்துக்கள் என்றால், விசேஷ பொருள் உடையனவாயும் இருக்கலாம். அல்லது பொருளே இல்லாமலும் போகலாம். கருத்துக்களின் வாசகம் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய பாஷையில் இருந்தது. இவற்றை ஆலோசிப்பதற்காக, பண்டிதர் கழகமொன்று நியமனமாயிற்று. இந்தக் கழகத்துக்கு, கல்வித்துறையில் ஆர்வமுடையவரும் அதில் எல்லோருடைய மரியாதைக்கும் பாத்திரமானவருமான ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்தார்கள். இந்தப் பதவிக்கு, டில்லி நகரத்தில் உள்ள ஜமியா மில்லியா இஸ்லாமியா என்ற தேசிய முஸ்லிம் சர்வகலாசாலையின் தலைவரான டாக்டர் ஜாகிர் ஹுசேன் என்பவரைத் தவிர, தகுதிவாய்ந்தவர் வேறு இல்லை. இவர், ஒரு நல்ல பயனும் விளையமுடியாத இட

மாகிய டில்லி நகரத்தில் தம்முடைய ஓயாத அலுப்பில்லாத முயற்சியினாலும் தம் தோழர்களுடைய இடைவிடாத உழைப்பினாலும் அரிய காரியத்தைச் சாதித்திருக்கிறார்; அடக்கமும் உறுதியும் நிரம்பப் பெற்றவர்.

இவ்விதம் கூடிய கழகத்திற்கு 'ஜாகிர் ஹுசேன் கமிட்டி' என்று பெயர். இந்தக் கமிட்டியார், கற்றவர்கள் புரிந்துகொண்டு பாராட்டத்தக்க பாஷையில், ஓரளவுக்குத் திருப்திகரமான அறிக்கை ஒன்றை வெளியிட்டார்கள். இந்த அறிக்கையை ஆதாரமாக வைத்து, அகில இந்திய காங்கிரசும், கல்வி சம்பந்தமான தன் கொள்கையை வெளியிட்டது. காந்தியடிகள் குறிப்பிட்ட இக் கல்வி மகாநாட்டால் ஒப்புக்கொள்ளப்பெற்று, பார்வைக்கு மிகவும் சாமானியமாகத் தோற்றிய இந்தக் கொள்கைகளைக் காங்கிரஸ் ஒரு தீர்மானத்தின்மூலம் ஆமோதித்தது. ஆசாரிய நரேந்திரதேவர் இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபித்து, பொதுக்கொள்கைகளை ஆதரித்துப் பேசினார். இதற்கிடையில் இந்தத் திட்டம் சமதர்மவாதிகளுக்குச் சிறிது விளங்கிற்று. 'கல்வியில் உடல் உழைப்பு வேண்டும்' என்ற தத்துவமானது, அறிவியல் ரீதியாகப் பொருந்துவது என்றும், பொதுவுடைமைக் கொள்கைக்கு ஏற்றது என்றும் அவர்கள் உணர்ந்தார்கள். ஆனால் அவர்கள் முழுமையும் உணர்ந்துவிடவில்லை; இந்தப் புதிய திட்டம் வெற்றி பெறவேண்டுமானால், கல்விக்கு, வருவாய் தரக்கூடிய ஆக்கவேலை வேண்டுமென்ற கருத்தும் ஏற்கவேண்டியதே என்பதை அவர்கள் இனித்தான் அறிய வேண்டும். நரேந்திரதேவர் காந்தியடிகளின் திட்டமுழுமையும் அப்படியே ஏற்றுக் கொள்ளாத போதிலும்கூட, பொதுவாக அதை ஆதரித்தார். அந்தத் தீர்மானத்தை ஆமோதிக்கிற பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இது சம்பந்தமான செய்திகளையும்

புள்ளி விவரங்களையும் எனக்கு டாக்டர் ஜாகிர் ஹுசேன் அவர்களே முன்னதாகக் கற்பித்திருந்தார். ஆயினும் அந்தக் கூட்டத்தில், நரேந்திரதேவர் பேசிய பேச்சு மிக்க வாக்குத் திறமை பொருந்தியதா யிருந்தது; அவருடைய சொற்ப அபிப்பிராய பேதங்கூட மிகவும் மறைபொருளாகவே புலப்பட்டது; அவருடைய பேச்சு, பொதுவாக, மகாநாட்டில் இருந்தோர் மனத்தை மிகவும் கவர்ந்திருந்தது. ஆதலால், நான் அவரைவிடக் குறைவான திறமையோடு ஹிந்தி பாஷையில் பேசி முன்னமே ஏற்பட்டிருந்த கவர்ச்சியைக் கெடுக்க எண்ணவில்லை. எனவே, அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசி என்ற முறையில், எத்தனையோ தீர்மானங்களை நான் ஆமோதித்துப் பேசும் வழக்கம் இருப்பது போல, இதையும் ஆமோதித்தேன். தீர்மானம் ஏகமனதாக நிறைவேறிற்று. இவ்விதமாக, புதிய கல்வித் திட்டத்துக்குக் காங்கிரஸ் மகா சபையின் அங்கீகார முத்திரை போட்டாயிற்று.

இத்தீர்மானத்தின்படி, டாக்டர் ஜாகிர் ஹுசேன் அவர்களும் அரிய நாயகம் அவர்களும், காந்தியடிகளின் ஆலோசனையைக் கேட்டு அவர் காட்டுகிற வழியில் ஒரு கல்விச் சபை ஏற்படுத்த வேண்டியவர்கள். இந்தச் சபை தேசிய ஆதாரக் கல்விக்கான ஒருவேலைத் திட்டத்தைத் தொகுப்பான முறையில் தயாரிக்கவேண்டும். அரசாங்கக் கல்வித் துறையிலும் தனிப்பட்ட கல்வித் துறையிலும் நிர்வாகப் பொறுப்பும் வழிகாட்டும் பொறுப்பும் உடையவர்கள் ஏற்கத்தக்க விதத்தில் அக் கல்வித் திட்டத்தை வெளியிட வேண்டும்; சபையின் அமைப்புச் சம்பந்தமாய்த் தேவையான விதிகள் முதலியன, இந்தச் சபையே நிர்ணயம் செய்துகொள்ளும்.

குறித்த காலத்தில், காந்தியடிகள் ஆலோசனையின் பிரகாரம், கல்வி நிபுணர் சபையொன்று நியமனமாயிற்று.

அச்சபையில் உள்ளவர்களில் நரேந்திர தேவரும் நானுமே, அரசியல்வாதிகள் என்று பெயர் சூட்டத் தக்கவர்கள்; மற்றெல்லோரும் கல்வித் துறையில் தகுதியும் கண்ணியமும் வாய்ந்தவர்கள். பல்வேறு வித அபிப்பிராயம் கொண்டவர்களும் பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்களும் அந்தச் சபையில் இடம் பெற்றார்கள். முஸ்லிம் லீகர் முதலான எவ்வித அரசியல்வாதிக்கும் கிளர்ச்சிக்காரருக்கும், அந்தச் சபை விஷயத்தில் குறைகாண இடமில்லை. 1938 ஏப்ரல் மாதம் இந்தச் சபை கூடி, கல்வித்துறையில் ஒவ்வொரு பிரிவிலும் பயன்படும் வகையில் நிபுணர்கள் அடங்கிய உப கழகங்களை நியமித்து, வரவு செலவுத் திட்டம் போட்டதோடு, மற்றும் உபயோகமான அனேக சில்லறை வேலைகளையும் கவனித்தது.

இவ்விதமாக, திடீரென்று எவ்வித எச்சரிக்கையுமில்லாமல், மக்கள் கலக்கமடையும்படியாக காந்தியடிகள் வெளியிட்ட திட்டமானது, இப்போது செயல் முறைக்கு வந்து நிறைவேறிப் பயன் அடையும் தறுவாயிலிருக்கிறது. இந்தவிதமாகத்தான்காந்தியடிகள் தம் காரியத்தை நடத்தி வெற்றி பெறுகிறார். அவருடைய கருத்துக்கள் மிகவும் புதுமையாகத் தோற்றலாம்; ஆனால், கூர்ந்து பரிசீலனை செய்து ஆராய்ந்தால், ஆரம்பத்தில் தோற்றியது போல அவை மிகவும் புதியவையுமல்ல, புரட்சிகரமானவையுமல்ல; அவற்றை அவர் வெளியிடும் முறைதான் நம்மைத் திகைக்கச் செய்கிறது.

இக்கல்வித் திட்டத்தின் பொருள்

இந்தத் திட்டத்தின் முக்கியமான தத்துவங்கள் யாவை? (1) கல்வி முழுமையும் ஒரு தொழிலை மையமாக வைத்தே நடைபெற வேண்டும். (2) தொழில்மூலம் பாடசாலை பெறும் வருவாயானது, கல்விப் பயிற்சிக்கு ஆகும் வருஷவாரிச் செலவுக்குச் சரிக்கட்ட வேண்டும்; வருஷவாரிச் செலவு என்றால், குறைந்த பட்சம், உபாத்தியாயர் சம்பளம். இத்திட்டத்தை காந்தியடிகள் முதன்முதல் வெளியிட்டபோது, இந்த இரண்டு கருத்துக்களும் புதியவையாகத் தோற்றியதோடு, செயல்முறைக்கு ஒவ்வாதவை என்றும் தோற்றின; உண்மை இப்படித்தானா என்பதை இங்கு ஆராய்வோம்.

இந்தியாவில் இன்று வழங்கும் கல்விமுறை மிகவும் கேடான தென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். இதிலுள்ள குறைபாடுகள் அனந்தம். அறிவியல் ரீதியான நல்ல கல்வி முறைக்குரிய தத்துவங்கள் என்று எவற்றை நாம் எண்ணுகிறோமோ, அவை யனைத்துக்கும் இது மாறாயிருக்கிறது. உபாத்திமை, மனோதத்துவ சாஸ்திரம், மக்கட் சுகாதாரம் ஆகியவற்றின் பொது நியதிகளுக்கு இது முரணாயுள்ளது. எனினும், இக் கல்விமுறை முழுமையுமோ அல்லது அதிலுள்ள பல்லாயிரம் குறைகளையோ எடுத்துப் பேசுவது இங்கு நம்முடைய நோக்கமன்று. பட்டவர்த்தனமாய்த் தெரிகிற சில குறைகளை மட்டுமே இங்கு ஆராய்வோம்.

இக்கல்வி முறை வெறும் ஏட்டளவா யிருப்பதால், வாழ்க்கைக்குச் சம்பந்தமே இல்லாமலிருக்கிறது; மூளைக்கு மட்டும் கல்வி தருவதாயிருக்கிறது. கிரமமான வாழ்க்கையில் வஸ்துக்களும் அவற்றுக்குரிய அடையாளங்களும் அமைந்திருக்கின்றன; இக்கல்வி முறையானது, வஸ்துவை

விட்டு அதற்குள்ள அடையாளத்தை மட்டும் பிடித்துக் கொண்டிருக்கிறது. வஸ்துவைச் சொல்லால் விவரிக்கிறுர்கள். இவ்விவரத்துக்கு ஆதாரமாயுள்ள வஸ்துவை யாரும் காட்டுவதோ காண்பதோ இல்லை. போதனைக்கு இங்கு கருவியாயிருப்பது, எழுத்துருபமாயுள்ள சொல்; இதற்கு முக்கிய சாதனம், ஞாபகசக்தி அல்லது மனப்பாடம். யதார்த்தமான செய்திகளுக்கும் அனுபவத்தால் வரும் ஞானத்துக்கும், இக்கல்விக்கும் சம்பந்தமே இல்லை. அறிவியற் சோதனை, சோதனைச்சாலை ஆராய்ச்சி என்பன இங்கு பூஜ்யம். இக்கல்வி, தான் தேடாமல், வருவதை ஏற்பது; வெறும் விவர ரூபமாயுள்ளது; வெறும் கருத்தறிவாயுள்ளதே யொழிய, திட்டவட்டமாயில்லை. ஆதலால், இதில் கவனித்தறிவதும் அனுமானித்தறிவதும் பூஜ்யம். உடல் இயக்கம் சம்பந்தப்பட்ட வரையில், இது ஜீவனற்றது. வளர்கிற குழந்தைக்கு ஆரோக்கியகரமான உடற் பிரயாசை எதுவும் இது தரவில்லை. வகுப்பு அறையில் குழந்தையை அடைத்து, அவனுடைய கை கால்களை முடக்கிப் போடுகிறது: இது தரும் சொற்பக் கல்வியிலும் கூட, ஐக்கியத் தன்மையோ, ஒருமைப்பாடோ இல்லை. அவன் மனப்பண்புகள் அனைத்தையும், முக்கியமாக அவனுடைய சித்த சக்தியை, இக்கல்வி வளர்க்க முடியவில்லை; ஆகவே, அவனுக்குரிய தனியான குணச் சிறப்பு உருவடைவதை இது கெடுத்து விடுகிறது. அறிவு வளர்ச்சி என்ற பகட்டான உருவம் இது அறிந்து கொண்டபோதிலும், தப்பான வைதிக வுணர்ச்சியை இது வளர்க்கத்தான் செய்கிறது.

இவற்றுல் விளைவது என்ன வென்றுல், இப்படிப்பு முறையில் தேறி வெளிவருபவர்கள் வெறும் பிதற்றலில் வல்லவர்களா யிருக்கிறுர்கள். வகுப்பில் இவர்கள் மிகவும் கெட்டிக்காரர் என்று பெயர் வாங்கி யிருக்கலாம்; ஆனுல்,

நேர்முகமாய் வாழ்க்கையில் ஈடுபடும்போது, இந்தக் கெட்டிக்காரத்தனம் சிறிதும் காண்பதற்கில்லை. பள்ளிக்கூடத்தில் புத்தகமே படிக்காமல், பயனில்லை என்று உபாத்தியாயரால் ஒதுக்கப்பட்ட பிள்ளைகள், பெரும்பாலும் வாழ்க்கையில் அதிகத் திறமையைக் காட்டுகிறார்கள். புத்தகத்தை அதிகம் படிக்காமல் விட்டதால், இவர்களிடம் தன்னம்பிக்கை பெருகி, சொந்த முயற்சியால் ஒன்றைச் சாதிக்கும் திறன் ஓங்கி யிருக்கிறதென்று தோற்றுகிறது. இவர்கள் மூளையில் ஒரு பகுதி வளர்வதோடு, மற்றப் பண்புகளும் வளர்கின்றன. வகுப்பில் நல்ல பெயர் வாங்கியவர்கள் வாழ்க்கையில் தோல்வியுறும் இடங்களில், இப்பிள்ளைகள் வெற்றி பெறுகிறார்கள். ஆதலால், இவ்விரு வித நிலைமையையும் சரிசெய்ய வேண்டும் என்ற உணர்ச்சி நெடுங்காலமாய் ஏற்பட்டிருக்கிறது.

இந்தக் கல்வி முறையில் வெறும் ஏட்டுப்படிப்புக்கே முதன்மை கொடுத்திருப்பதற்கு ஏதேனும் மாற்றுத்தேட வேண்டுமென்ற முயற்சியானது, ஆங்காங்கு தனிப்பட்டோருக்குச் சொந்தமான பாடசாலைகளிலும் தனிப்பட்டோர் நடத்தி வந்த பாடசாலைகளிலும் தனித்தனியாக நடைபெற்றுவந்திருக்கிறது. வகுப்புப் பாடத்துடன் கூடச் சில கைத்தொழில்களைச் சேர்த்துக்கொள்வது என்ற அளவோடு இந்த முயற்சிகள் நின்றன. படிக்கும் பையன், வெறும் ஏட்டுச் சுரைக்காயாக இராமல், கொஞ்சமேனும் கிரியாம்சையில் செய்யத் தெரிந்தவனாயிருக்கும்படியும், உடலுழைப்புச் சம்பந்தப் பட்டவரையில், இது தாழ்வு என்பதாக அவனுக்குச் சாதாரணமாய் இருந்து வந்த மனப்பான்மை சிறிது மாறும்படியும் செய்வதே இம் முயற்சிகளின் கருத்து. எழுத்துப் பயிற்சி சொற்பம் இருந்தாலுங்கூட, பிள்ளைகள் உடற்பிரயாசை வரும்படி உழைப்பது தாழ்வு என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது.

இதை வாழ்க்கையிலிருந்து நன்ருய் அறியலாம். விவசாய வேலை அல்லது வியாபாரம் என்ருல் கொஞ்சம் கௌரவக் குறைவு; கிராமப் பாடசாலை ஆசிரியர் என்ருலும், பட்டணத்தில் குமாஸ்தா என்ருலும், கௌரவம் அதிகம். இந்த அபிப்பிராயம் ஏறக்குறைய இன்று வரை இருந்து வருகிறது. ஆயினும், பள்ளிக்கூடத்தில் கைத்தொழில் என்ற பெயரோடு உடற்பிரயாசை பொருந்திய ஏதேனும் ஒரு வேலையை இப்போதெல்லாம் கற்பித்து வருகிருர்கள்; எவ்வளவுதான் திறமைக் குறைவாக இதை ஆசிரியர் கற்பித்த போதிலும், மாணவர் கற்ற போதிலும். இது உடலுழைப்புக்கு ஏற்பட்டிருந்த தாழ்வைச் சிறிதளவேனும் போக்கி யிருக்கிறதென்பது உண்மை. இதன் பயனுய், உடற்பிரயாசை என்ருலே இழிவு என்று முன்னமிருந்த எண்ணம் காலக் கிரமத்தில் குறைந்து போயிருக்கிறது.

ஆயினும், ஆங்காங்கே மட்டும் நடைபெற்ற இந்தச் சிற்சில கைத்தொழில் வகுப்புக்கள் உடலுழைப்புக்கிருந்த தாழ்வை முழுமையும் போக்க முடியவில்லை; நம் படிப்பு முறையால், படித்த உழைப்பாளிகள் அளவின்றிப் பெருகப் பெருக, இத் தாழ்வுணர்ச்சி ஒருவாறு குறைந்திருக்கிறது. கல்வி பயின்ருேர் அளவின்றிப் பெருகியதால், வேலையில்லாத் திண்டாட்டமும் பொருளாதார மந்தமும் பெருகின. வேலை தேடுவோர் தொகையை நம் பாடசாலைகளும் கல்லூரிகளும் வருஷந் தவருமல் பெருக்கி வந்தன. எனினும், இங்குள்ள விசித்திரமான அரசியல் நிலைமையின் பயனுய், அவர்களைப் பயன்படுத்தக்கூடிய வேலைகள் பெருகவில்லை. இது காரணமாக வெறும் ஏட்டுப்படிப்புக் கற்பிப்பதோடுகூட, பண வருவாய் தரத்தக்க கைத்தொழில் ஏதேனும் கற்பிக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் பாடசாலைக்கு உண்டாயிற்று. தனியான தொழிற்

பாடசாலைகளும் தேவையாயின. இப்படியாக, இருவித மாகவும் தொழிற்கல்வி வளர்ச்சிக்கு ஆவன நடை பெற்றன. இருப்பினும், வேலையில்லாத் திண்டாட்டத் தில் ஒரு பகுதியைக்கூட இவை போக்கவில்லை, போக்க வும் முடியாது என்பது வெளிப்படை. பள்ளிக்கூடம் போய் அங்கு தினசரி ஒரு மணிநேரம் அல்லது இரண்டு மணிநேரம் ஏதேனுமொரு கைத்தொழிலைக் கற்றுத் தேர்ந்த பையன், பரம்பரையாக அத்தொழிலைத் தன் வீட்டில் பெற்றோரிடமும் பிற உறவினரிடமும் குழந்தைப் பருவத்திலிருந்து கற்ற தொழிலாளிக்கு ஒருகாலும் ஈடாக மாட்டான். இத்தொழிலாளி அதிகமாய்ச் செய்வான்; உயர்ந்த தரமாகச் செய்வான்; முந்தியவனைவிட இவ னுக்குக் கூலி அல்லது வருவாய் குறைவாக இருந்தாலும் போதும். பள்ளிக்கூடத்திலோ, வீட்டிலோ, ஆடம்பரப் பழக்க வழக்கமெதுவும் இவன் கற்றதில்லை. இவ்வாறு இவன் திறமை பெருகித் தேவை குறைந்திருந்தும், இவனு டைய கஷ்டம் நீங்கியபாடில்லை. அன்னிய நாட்டில் உற் பத்தியான சாமான்கள் இங்கு இறக்குமதியாவது நாளடை வில் பெருகிவந்திருக்கிறது; இந்தியாவிலேயே தொழிற்சாலை உற்பத்தி என்பது ஓரளவுக்கு அபிவிருத்தியடைந்து வந்தி ருக்கிறது. இவ்விரண்டினாலும், இந்நாட்டிலுள்ள பரம் பரைத் தொழிலாளிகளின் பொருள் வருவாய் மிக்க கஷ்ட நிலைக்கு வந்துவிட்டது. தங்கள் ஜீவன நிமித்தம் இவர் கள் அயலிடங்கள் தேடிப்போக நேர்ந்திருக்கிறது; அல்லது பட்டணங்களில் சென்று கூலி வேலைக்காரர் களாக இவர்கள் வாழவேண்டியிருக்கிறது. இவ்விதமாக, கைத்தொழிலுக்கான இடம் நாளுக்குநாள் குறுகி வரும் போது, கலாசாலையில் கைத்தொழிற் கல்வி கற்றவனுக்கு எங்கிருந்து இடம் கிடைக்கும்? கிடைக்காது. ஆதலால், வேலையில்லாத் திண்டாட்டமும் பொருளாதாரக் கஷ்ட மும் எப்போதும்போல் நீங்காமலே இருந்து வருகின்றன.

இத்தகையதொரு சூழ்நிலையில் தான் காந்தியடிகள் தம்முடைய புதுமுறைக் கல்வித் திட்டத்தை எடுத்துரைத்திருக்கிறார். உடலுழைப்பையும் பிரயாசையையும் கண்ணியமுள்ளவைகளாக்குவதும், ஜீவனத்துக்காக வேண்டியந்திர வேலைபோல ஏதேனுமொரு தொழிலைக் கற்றுத் தருவதும் மட்டும் இத்திட்டத்தின் நோக்கமன்று. தொழிலுக்கு இருந்த தாழ்வைப் போக்குவது என்ற விஷயத்தில், இந்தக் காலத்தில் வேறு எவரும் அல்லது எந்த இயக்கமும் செய்திருப்பதைவிட, காந்தியடிகளும் அவருடைய சத்தியாக்கிரக இயக்கமும் செய்திருப்பது மிகவும் அதிகம். அவர் புத்துயிர் அளித்த ராட்டை, அதன்மூலம் உண்டாக்கிய கதர்த்துணி, தன்னலமறுப்பு எளிமை என்ற பண்புகளுக்கு அவர் அளித்திருந்த முதன்மை, தரித்திர நாராயணனுடன் அவர் கொண்டிருந்த ஐக்கிய வுணர்ச்சி, சுகாதாரம், உடல் துப்புரவு, வேலையாளும் குப்பைக்காரனும் வண்ணானும் இல்லாமல் அவர் நடத்திய வாழ்க்கை ஆகியவற்றால், காந்தியடிகள் உடலுழைப்புக்கு உரிய ஏற்றமும் கௌரவமும் அளித்திருக்கிறார்; பள்ளிக்கூடத்தில் நடத்தும் எந்தக் கைத்தொழில் வகுப்பும் இவ்வளவு ஏற்றமோ கௌரவமோ தரமுடியும் என்று கனவு காண்பதற்குமில்லை. ஆதலால், நோக்கம் இதுதான் என்றால், அவரைப் பொறுத்த வரையில், இதற்கு எந்தக் கல்வித் திட்டமும் தேவையில்லை.

அன்றியும், அவர் குறிப்பிடும் புதுக்கல்வி முறையின் நோக்கம், பிள்ளைகளுக்கு ஏதேனுமொரு கைத்தொழிலை யந்திரம்போலவும் அரைகுறையாகவும் கற்பித்து அதன் மூலம் அவர்கள் தங்கள் ஜீவனத்துக்குக் கவலையில்லாதவர்களாகும்படிச் செய்வது அன்று. அவர் கூறுவது இதனிலும் பெரிதும் வேறானது; இன்னும் புரட்சிகரமானது; இது உழைப்புக்கு உரிய கௌரவத்தைத்

தந்து, உழைப்பவன் ஜீவனத்துக்குச் சுமாரான அளவில் ஒழுங்கான ஏற்பாடு செய்து தருவது உண்மை; இதனோடு, இதுவரை யாருமே பின்பற்ற முயலாத இன்னும் மேலான தத்துவத்தை இது நிலைநாட்ட முயல்கிறது. அதாவது, கல்வி போதனைக்குரிய கருவியையே மாற்றுவதுதான் அவருடைய உத்தேசமாகும். கல்வி போதிப்பதற்கும் கற்பதற்கும் கருவியாகவுள்ள பாஷையையும் அதன் எழுத்துக்களையுமே அவர் மாற்றப் பார்க்கிறார். இது, பாடவகையில் அல்லது கற்பிக்கும் பாடங்களில் மட்டும் செய்கிற மாற்றமன்று; பாடம் கற்பிக்கும் போதனை முறையிலேயே மாற்றம். அவருடைய திட்டத்தில், உழைப்பு என்றால், வெறும் தன் முயற்சி அல்லது பள்ளிக்கூட வேலை மட்டுமன்று. உழைப்பு, அனைத்தையும் ஒருமைப்படுத்தும் ஓர் அரிய சாதனம், பையனுடைய புத்தி, கலையுணர்ச்சி, அறிவியல் தத்துவம், உடல் தத்துவம் ஆகிய அனைத்தையும் இது ஒன்றுபடுத்த உதவுகிறது. இதில் எழுத்துப் படிப்போ புத்தகமோ வேண்டாம் என்பதில்லை; ஆனால், மாணவர்கள், தாங்களாகவும் ஆசிரியருடன் கலந்தும், புத்தக விஷயமனைத்தையும் சிந்தித்துப் பார்த்து, புதிதாய்க் கண்டறிந்து, புதிதாய் எழுதியறியவேண்டும். இவ்விதம் ஏற்படுகிற புதுச் சிந்தனையையும் ஆராய்ச்சியையும் படைப்பையும் எழுத்தையுமே காந்தியடிகள் உண்மையான கல்வி என்கிறார். இவ்விதம் ஏற்படுவதானால், இது தனி மனிதனும் மனித சமூகமும் எவ்வாறு வளர்ந்து வந்தார்களோ அந்த நெறியையே பின்பற்றிச் செல்வதாகும். இதுவே சகல ஞானத்துக்கும் கலைக்கும் அறிவியலுக்கும் தத்துவ சாஸ்திரத்துக்கும் சமயத்துக்கும் இயல்பான வளர்ச்சியாகும்.

நாகரிக வளர்ச்சியும் ஆதாரக்கல்வியும்

மக்களினத்தின் சரித்திர ஆரம்ப காலத்தில், மனிதன் ஒன்றுமே தெரியாமல் இருந்தவன் எல்லாவற்றையும் எப்படிக் கற்றுக்கொண்டான்? தவழ்கிற குழந்தை தலை தூக்கி நிமிர்ந்து நிற்கக் கற்றது. மற்றப் பிராணிகளிடமிருந்து, அவனைத் தனியே இனம் பிரித்துக் காட்டுகிற விசேஷப் பண்புகளை மெல்ல மெல்ல அவன் எவ்வாறு அடைந்தான்? இவற்றை ஆராய்ந்தால் இரண்டு வழிகள் புலப்படும்; ஒன்று, அவன் தன் கவனத்தைச் செலுத்திக் கூர்ந்து அறிந்தது; மற்றொன்று அவன் செய்து பார்த்துச் சோதித்துக் கற்றது. முதலாவதாக, அவன் இயற்கையைக் கூர்ந்து கவனித்தான்; பிறகு, தானே அதைச் செய்து பார்த்தான். இயற்கையின் வழியை நன்றாய்ப் பயின்ற பின், பொருள்களைத் தானே அமைக்கத் தொடங்கினான். தன் புலன்களையெல்லாம் பயன்படுத்தினான். சிறப்பாக, மிக்க திறமையோடும் நுட்பமாயும் பொருள்களை அமைக்க வல்ல தன் கைகளை உபயோகித்தான். தன் உள்ளுணர்வு, கற்பனைத்திறன், பகுத்தறிவு ஆகியவற்றைப் பயன்படுத்திக்கொண்டான். தன் வேலைக்காகச் சில புதிய சாதனங்களையும் செய்துகொண்டான்; இவற்றின் துணையால் தனக்கேற்பட்ட கஷ்டங்களையும் தடைகளையும் அவன் நிவர்த்தி செய்துகொள்ள முடிந்தது. பிரகிருதியில் வழங்கும் அடிப்படையான பொது நியதிகளையும் தன் வேலைக்குரிய கிரமத்தையும் படிப்படியாக அறிந்துகொண்டான். சயன்ஸ் என்று சொல்லுகிற அறிவியற் கலைகளுக்கு இவையே அஸ்திவாரம். யந்திரம்போல் உழைப்பவனாக இருந்தது போய், அவன் அறிவியல் ரீதியாக உழைப்பவனாக ஆனான். தன் கையின் துணையாலும், தான் செய்துகொண்ட முரட்டுக் கருவிகள் சாதனங்கள் இவற்றின் துணையாலும், அவன் உழைத்து வருகையில் கண்டு

உணர்ந்த பொது நியதிகளுக்கு மீண்டும் பொது உருவம் கொடுத்தபோது, தத்துவ சாஸ்திரம் உதயமாயிற்று இந்த நிலையில் பிரபஞ்சத்தில் மறைபொருளாய் இருந்த ரகசியங்கள் யாவும் அவனுக்குப் புலனாயின.

ஆதியில் பிரகிருதியானது, மனிதன் வசப்படாமல், எந்த ஒழுங்குக்கும் உட்படாமல் இருந்தது. இதை வசப் படுத்தி, ஒழுங்குக்குள் வைத்த பிறகு அவன் தன்னைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தான். பிராணி இனத்திலேயே மனிதன் ஒருவன்தான் ஒன்றை உருவங்கொடுத்து அமைக்க வும், புதிதாய் ஒன்றை ஆக்கவும் வல்லவன். அவனைச் சூழ்ந்துள்ள சேதனப்பொருள் அசேதனப்பொருள் ஆகிய இரண்டிலிருந்தும் அவன் எந்த விதத்தில் வேறுபட்ட வன்? இதை ஆராயத் தொடங்கி, தன் சிந்தனையை உள்முகமாகத் திருப்பி, தன் உடலை இயக்குவிக்கும் பொது நியதிகளை அறிந்தான்; இந்த நிலையில் மனோதத்துவ சாஸ்தி ரம் பிறந்தது; இது அவன் ஆன்மாவையும் சமயத்தையும் ஒட்டிய அறிவியற்கலையாகும். அன்றியும், பிரகிருதியில் அவன் தனியாக உழைக்கவேண்டி யிருந்தமையால் தான் ஒருவனாகவே தன் சூழ்நிலையை வெற்றிகொள்ள முடியாது என்று கண்டான். ஆதலால், அதே துறையில் தன்னைப் போல் உழைத்தவர்கள் அனைவருடைய கூட்டுறவையும் அவன் தேடவேண்டியதாயிற்று. மெல்ல மெல்ல, வமிசம் சாதி, வகுப்பு, சமுதாயம் என்றெல்லாம் ஏற்படுத்திக் கொண்டான்; இதிலிருந்து சமூக வாழ்க்கையும் ஆட்சி முறையும் பிறந்தன. மற்றவர்களோடு சிநேகபாவத் துடனும் கூட்டுறவுடனும் வாழவிரும்பியபடியால், கலந்து வாழும் நிலைமைக்கு ஏற்ற விதிகளையும் வகுத்துக்கொண் டான். பிரகிருதியின்மீது தனக்குள்ள உரிமைகளைப் பெறவேண்டிய காரணத்தால், தன்னைப்போலவே மற்ற வர்களுக்கிருந்த உரிமைகளில் குறுக்கிடாமலும் சண்டை

போடாமலும் இருக்கும்படி தன் உரிமைகளைச் சிறிது மாற்றிக்கொள்ள வேண்டியிருந்தது. இவ்விதமாக அவன் தன் சமூக உரிமைகளையும் அரசியற் கடமைகளையும் சார்புகளையும் ஏற்படுத்திக்கொண்டான். இதிலிருந்து, அவனுடைய சொந்த வாழ்க்கையிலும் சமூகத்தின் வாழ்க்கையிலும், நீதி சட்டம் அரசியல் என்பவை கொள்கையளவிலும் செயல்முறையிலும் இடம் பெற்றன.

காட்டில் வசித்த புராதன மனிதன், நாகரிக மற்ற முரடனாக, ஏறக்குறைய மிருகம் போலவே, இருந்தான். அவன் மேற்கூறிய முறையில் தன்னைப் பழக்கி வளர்ச்சி பெற்றுப் படிப்படியாக நாகரிகமடைந்தான். இப்படிப் பல படிகள் ஏறிவந்த தைரியத்தால், இவ்வாறு நாகரிகம் பெறுவதற்கு ஏறிவந்த படிகளாகிய ஏணியை அவன் மறந்துவிட்டான். தன் வேலை முடிந்துவிட்டது என்று எண்ணி, தான் ஏறிவந்த ஏணியையே தள்ளிவிட முயன்றிருக்கிறான். ஆனால், அவன் வேலை வாஸ்தவமாகவே பூர்த்தியாயிற்றா? தான் பெற்ற லாபத்தையெல்லாம் எப்போதாயினும் ஒரு சேரத் திரட்டி வைத்துக்கொண்டு புது வெற்றி தேட வேண்டாமா? தேட வேண்டுமானால், அவனுடைய முயற்சிகள் மீண்டும் மீண்டும் பழைய முறைகளிலேயே செல்லவேண்டும்; செல்லாவிட்டால் க்ஷீணம் வரக்கூடும்; வெறும் சொல்லையும் வெளியுருவத்தையும் வைத்து மகிழ்வதும், ஆக்கத்திறன் படைத்த சிந்தனையும் செயலும் குன்றிப்போவதும், க்ஷீணத்தின் அறிகுறிகள். பண்டைச் சரித்திரங்களைப் புரட்டிப்பார்த்தால், புராதன நாகரிகங்கள் சீர்குலைந்து வீழ்ச்சி அடைந்ததற்கு இப்படிப் பட்ட க்ஷீணமே முதற்படி என்பதைக் காண்போம்.

குழந்தையானவன், தன் புலன்கள் தொழிற்படத் தொடங்கும் நிலையில், நாகரிகமில்லாத பண்டைக் காட்டு மிராண்டியை ஒத்தவன் என்று சொல்லலாம். கல்வி

மூலந்தான் அவன் வளர்ச்சி பெற்று நாகரிகம் அடைய வேண்டியவன். ஆனால், இப்போதுள்ள கல்வி முறையானது, மனிதனைக் கேவலம் ஒரு மிருகம் என்றே கருதி மிருகமாகவே அவனை நடத்துகிறது. அவனுக்குக் கல்விப் பயிற்சியளிப்பவர்கள் அவனைக் கிளிபோலச் சொல்லச் செய்கிறார்கள்; அவனும் கற்பித்தவற்றைத் திருப்பித் திருப்பிச் சொல்லிப் பழகி, இப்படித் திருப்பித் திருப்பிச் சொல்வதில் சீக்கிரத்தில் கெட்டிக்காரன் ஆகிவிடுகிறான். கொஞ்ச காலத்துக்கு ஒருமுறை, நண்பர் முன்னிலையிலும் அயலவர் முன்னிலையிலும், தான் கற்றவற்றையும் சொற்களை உபயோகிக்கத்தான் பெற்றுள்ள திறமையையும், ஒரு சிறு பிராணிபோல அவனைக் காட்டச் செய்கிறார்கள். வெற்றிகரமாக ஒருவன் காட்டினால் அவனுக்குப் பரிசும் பட்டமும் அத்தாட்சிப் பத்திரமும் கொடுக்கிறார்கள்.

அன்றியும், நாய்க்குட்டிக்கும் குரங்குக்கும் கற்பித்திருப்பதைப்போல, இவனுக்கும் சில வித்தைகள் கற்பித்திருக்கிறார்கள். அவன் இவற்றின் முறையையோ, இவற்றில் பொதிந்து கிடக்கும் பொருளையோ, உணர்ந்துகொள்ளாமல், யந்திரம்போல் இவ்வித்தைகளைச் செய்கிறான். இந்த முறைக்குத்தான் ‘ கல்வி ’ யென்று தவறாகப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கல்வி முறையானது, அவனை மூச்சுத்திணற அடிக்க எவ்வளவுதான் முயன்ற போதிலும்கூட, அவன் திணறிப் போகவில்லை. இதன் காரணம் என்னவென்றால், அவன் கேவலம் ஒரு மிருகமல்ல, மனிதன் என்பதுதான். அவனுடைய வளர்ச்சிக் கிடையூறாகக் கல்வித்துறையில் வைத்துள்ள தடைகளையெல்லாம் அவன் எப்படியோ தாண்டி விடுகிறான். தாண்டி, கல்வி முறை இடையூறு செய்தபோதிலும்கூட, கொஞ்ச அறிவையும் பெற்றுவிடுகிறான். தனி மனிதனும்

மக்கள் இனமும் இயற்கையான எந்த முறையில் வளர்ச்சி பெற்ருர்களோ, அந்த முறையிலேயே அவனுடைய கல்வியும் சென்றிருக்குமாளுல், அவன் இன்னும் மேலான கல்வி இன்னும் சீக்கிரத்திலேயே அடைந்திருப்பான் என்பது திண்ணம். அந்த முறையில் அவனுடைய மூளை மட்டுமன்றி அவனுடைய திறன்கள் யாவும் பயிற்சி பெற்றிருக்கும். பயிற்சியின் பயனுய், வளர்ச்சியும் விரிவும் வலிமையும் பெற்றிருக்கும்; கண், கை, கால், காது, மனம் எல்லாம் பயிற்சி பெற்றிருக்கும்; இவை எப்போதும் விழிப்போடு இருக்கும். அவனுடைய கற்பனைத் திறனும் ஆக்கத்திறனும் பயனுள்ள வேலையாக மலர்ச்சியடையும். படித்த பையனுக்கு இன்று தவருன உணர்ச்சிகள் பல உள்ளன; பல உணர்ச்சிகளை அவன் அடக்கிவைக்கிருன். மேலே நாம் குறிப்பிட்டபடி பழகிய பையனுக்கு இவை ஒன்றும் இரா. குறிப்பிட்ட திட்டத்தோடு உழைப்பதன் மூலம் அவனுக்குச் சித்தசக்தி வளரும்; அவனுடைய குணச்சிறப்புக்கள் யாவும் ஒருமித்து வளர்ந்து, பெருமித நடையுள்ள மனிதனுக அவன் விளங்குவான்.

வளர்கிற குழந்தைக்கு இந்தக் கல்விப்பயிற்சி மனோதத்துவ ரீதியாகவும் அவசியமானது. குழந்தையின் தன்மைகள் வெளிப்பட்டு விளக்கம் பெறுவதற்கு உடற்பிரயாசை தாராளமாக வேண்டும். வேலையும் விளையாட்டும் இருந்தால்தான் அவனுடைய மூளை சுறுசுறுப்பாக இருக்கமுடியும். பழைய முறைப் பள்ளிக்கூடங்களில், குழந்தையினிடம் அமைந்து ததும்பிக்கொண்டிருக்கிற அளவற்ற உற்சாகமானது வெளிப்படுவதற்குப் பொருத்தமான பயனுள்ள துறை எதுவுமில்லை. ஆக்கத்துறை ஒன்றுமில்லாமல் போகவே, இது அழித்தல் துறையில் திரும்பி, விஷமம் காலித்தனம் முதலிய ரூபத்தில் வெளிப்படுகிறது. அங்கு அவனுடைய ஆக்கத்திறனுக்குப்

பயிற்சி கொடுத்துச் சரியான வழியில் செலுத்துவதற்குப் பதிலாகத் தண்டனை கொடுத்து அதை அடக்குகிறார்கள். ஆகவே, அத்தனையும் வீண் போகிறது; வீண் போகும் படிச் செய்கிறார்கள். பாடசாலையில் பயிலும் பிள்ளைகள் எல்லோரும் தாங்களாக ஒன்றை முனைந்து செய்யும் இயல்புடையவர்களாய் இருப்பதில்லை. கிரகிக்கிற தன்மையும் சொன்னதைச் செய்யும் தன்மையும் மட்டும் இவர்களிடம் இருக்கும். பழைய முறையில் படித்துவிட்டுப் போட்டி நிறைந்த கருணை இல்லாத உலகத்தில் வாழ்க்கை நடத்த முற்படும்போது, இவர்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். புதுமுறையில், இப்படிப்பட்ட பிள்ளைகளுக்கு, தங்கள் ஞாபகசக்தியையும் மூளையையும் உபயோகிப்பதோடுகூட, தங்களுடைய மற்றப் பண்புகளை உபயோகிப்பதில் ஊக்கமும் பயிற்சியும் கிடைக்கும். பள்ளிக்கூடத்தில் சுறுசுறுப்பாகவும் உற்சாகமாகவும் இருப்பவர்கள், அடங்காதவர்கள் என்றும், விஷமக்காரர் தொந்தரவு செய்வோர் என்றும் பேர் வாங்குகிறார்கள்; படிக்கும் பிள்ளைகளில் இவர்களே மேடானவர்கள் என்று ஆசிரியர் எண்ணுகிறார்; வசவும் பிரம்படியும் இவர்களுக்குத்தான்; இப்படிப்பட்ட பிள்ளைகள், புதிய திட்டத்தின்படி தங்கள் ஊக்கமெல்லாம் நன்முறையில் செலவாவதற்கு வழிகாணுகிறார்கள்; தங்களுக்கென்று அமைந்துள்ள தனிப் பண்புகளால் சமூகத்துக்கே பெரும் பயன் தருகிறார்கள். கல்வி போதனைக்கு ஒரு தொழிலே போதனுமுறையும் கருவியும் பாஷையுமாகுமானால், குழந்தையின் பண்புகள் யாவும் வெளிப்படுவதோடுகூட, தன்வேலையிலும் பாடசாலையிலும், தோழரிடத்தும் ஆசிரியரிடத்தும், தனக்கு முன்னமே இல்லாத இன்பத்தை அவன் இப்போது காண்பான். முன்னமே இருந்ததுபோல, ஆசிரியர் கஷ்டப்படுத்தி வேலை வாங்குபவர் என்றில்லாமல், இனி அவர் விளையாட்டுத்

தோழராகவும், நண்பராகவும், வழிகாட்டியாகவும், தலைவராகவும் விளங்குவார்.

ஆயினும் பொதுவாக, மக்கள் கல்வியும் அதன் மூலம் வளர்ச்சியும் பெற்ற வழி, மெல்லச் செல்வதாகவும் சுற்றுவழியாகவுமே இருந்திருக்கிறது. செய்து பார்த்து, பிழை என்று தெரிந்ததன்மேல், அதைத் திருத்தி வேறொன்று செய்தல் என்ற முறையில் தான் அறிவு ஏற்பட்டிருக்கிறது. இந்த முறையினால் வெற்றி சில சமயம் அபூர்வமாக வந்ததே தவிர, நிச்சயமாக ஒவ்வொரு தடவையும் வந்து விடவில்லை. இவ்விதம் செய்து பார்ப்பதும் தவறு என்று கண்டு திருத்திக்கொள்வதுமாகிய வழி, மெதுவான கோணல் வழி ; இந்த வழியில் தான் கல்விப் பயிற்சியில் குழந்தைகள் செல்லவேண்டுமா ? தொடர்பாக அனேகந்தடவை தோல்வி அடைந்து அதன் பயனாகத்தான் முடிவில் வெற்றி கிடைக்க வேண்டுமா ? சிறு பையன் ஒருவன் வாழ்க்கைப் போராட்டத்தில் புகுந்து, தனக்கென்று ஒரு தொழிலையும் வேலையையும் தேர்ந்து கொள்வதற்குக் கிடைத்துள்ள காலம் மிகவும் சொற்பம் ; இந்தச் சொற்பகாலத்தில் மேற்குறிப்பிட்ட வழியாக அவன் எவ்வளவு கற்கமுடியும் ? நெடுங்காலமாக மக்களினம் பெற்று வந்திருக்கிற அனுபவத்தையும் ஞானத்தையும் அவன் பயன் படுத்திக்கொள்ள வேண்டாமா ? புதிய திட்டத்தின்படி, குழந்தைக்குப் புத்தகங்களோ உபாத்தியாயர்களோ இல்லாமற்போகவில்லை. அவன் அறிவைச் சம்பாதிப்பதில் மேலும் மேலும் வளர்ச்சி ஏற்பட வழிகாட்டுபவர்களாகவும் துணைசெய்பவர்களாகவும் வளர்ச்சியை ஒழுங்குபடுத்துபவர்களாகவும் துரிதப்படுத்துபவர்களாகவுமே அவர்கள் இருக்கிறார்கள். கல்வி வளர்ச்சி யென்பது, மெதுவாகவும் சுற்றுவழியிலும் வரவேண்டியதில்லை; புதிய திட்டத்தின்படி, வளர்ச்சியின்

வேகம் அதிகமாகவே இருக்கும். வளர்ச்சியின் ஒவ்வொரு படியும், குழந்தையின் சொந்த அனுபவத்தோடு இயைபு கொண்டதாயும் ஒன்றுவதாயும் இருக்கும்; அனுபவம் பெறுவதற்கு அவனே பிரதான பாத்திரமாய் இருப்பான். அவன் பெறும் அறிவு, பிறர் ஆய்ந்து கண்ட முடிவு தான் என்று இராது. எந்த வழிகளில் விஷயங்கள் தெரிய வருகின்றனவோ, அறிவு வருகிறதோ, அந்த வழிகளையும் அவன் கற்பான்; கற்பதில் ஒவ்வொரு படியிலும், இந்த நோக்கத்தை மறக்காதபடி தெரிந்து திட்டமாய்க் கற்கிறான். இவ்விதமாக, விஷயங்களை மட்டும் கண்டறியும் படி முந்திய கல்வித் திட்டத்தில் பழகியது போல் இல்லாமல், அதனோடுகூட, ஆராய்ச்சிக்கும் சிந்தனைக்கும் உரிய விதிகளைத் தானாகவே கண்டு உணரும்படி அவனுக்குப் பயிற்சி வருகிறது. இவ்வாறு அவன் பெறும் அனுபவ அறிவு அவனுக்குச் சொந்தமாக, அபின்னமாக, ஆகிறது. இப்படியாக, அறிவியல் ரீதியாகச் சிந்தனை செய்யும் பழக்கத்தை அவன் தானே பெறுகிறான்.

உதாரணமாக, துணி உண்டாக்கும் தொழில் ஆதாரத் தொழிலாக இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். துணி செய்வதற்கு வேண்டிய பொருள், பருத்தி, பருத்தி தெரியவந்த வரலாறு, பருத்திச் சாகுபடி, பிறநாடுகளுக்கு அது பரவுதல், உலகத்தில் பருத்தி பயிராகிற முக்கிய இடங்கள் என்பவற்றை அவன் தெரிந்து கொள்வான். தான் கற்பவற்றில் எதையும் குருட்டு மனப்பாடம் செய்ய வேண்டிய அவசியமிராது. அடுத்தபடி, பஞ்சடிக்கக் கற்கும்போது, பருத்தியைச் சுத்தம் செய்யவும் அரைக்கவும் ஆதிகாலம் முதல் மக்கள் என்னென்ன சாதனங்களைக் கையாண்டார்கள் என்று அறிகிறான். இதன் பிறகு அவன் நூற்கும்போது, எடுத்தலளவை, காலஅளவை, நீட்டலளவை முதலிய அளவையுணர்ச்சி ஏற்படுகிறது.

நூல் நூற்பதற்கு மக்கள் இதுவரை அமைத்துக்கொண்ட கருவிகளையும் யந்திரங்களையும் தெரிந்துகொள்கிறான். தான் உபயோகிக்கும் கருவிகளில் அமைந்துள்ள யந்திர நுணுக்கத்தைக் கற்கிறான். பிறகு நெசவு. தறியின் வரலாற்றையும், அதில் அமைந்துள்ள யந்திர நுணுக்கத்தையும் இப்போது கற்கிறான். ஒவ்வொரு புதிய படியிலும் அவனுடைய விஷய அறிவு பெருகுகிறது; பெருகி அனுபவத்துடன் ஒன்றுகிறது. இவ்விதம் பெற்ற அறிவு முழுமையும் அவனுடைய குணச்சிறப்பில் அங்கமாகி விடுகிறது. இந்த அறிவு வளர, அவனுடைய தொழில் திறமையும் சித்த சக்தியும் சேர்ந்து வளர்கின்றன.

பழைய சோதனைகள்—க

காந்தியடிகள் சம்பந்தப்பட்ட வரையில், உட லுழைப்பு அல்லது கைத்தொழில்மூலம் கல்வி கற்றல் என் பது ஒரு புதிய கருத்து. முன்னமே இத்துறையில் உழைத் துச் சிந்தித்தவர்களுடைய முடிவை அறியாமல் அவர் தாமாகவே இந்த முடிவுக்கு வந்தார் ; இப்படி அவர் கண் டது, எவ்வளவு தூரம் அவர் மண்ணோடு, அதாவது இயற் கையோடு, ஒட்டியே வாழ்கிறார் என்பதைக் காட்டும். ஆயி னும், கல்வியின் சரித்திரத்தில் அவருடைய கருத்து புதி யது மன்று, புரட்சிகரமானது மன்று ; புரட்சியாளரான நம் நண்பர்களில் சிலர் முதலில் எண்ணியதுபோல, அது பிற்போக்கானது மன்று. அடிக்கடி பல பேர் அதைச் சொல்லி யிருக்கிறார்கள். அதைச் செயலில் நடத்த, குறிப் பிடத் தக்க முறையில் பலர் முயன்று மிருக்கிறார்கள்.

14 - 15 வயது வரையில் குழந்தையானவன் தனக்குப் புலனாகும் விஷயங்களைக் கிரகித்துக்கொள்ள அபார திறமை பெற்றிருக்கிறானென்பது மனோதத்துவ சாஸ்திரப் படி எல்லோரும் ஒப்புக்கொண்டது. வெறும் கருத்தள வில் உள்ளவற்றையும் பொது நியதிகளையும் அவன் சொல்வதானாலும் உணர்வதானாலும், அவை பிரத்தியட்ச உண்மைகளோடு நெருங்கிய சம்பந்தம் பெற்றிருக்க வேண் டும். ஆதலால், அவன் பிரத்தியட்சத்தை வைத்தே கற்க வேண்டி யிருக்கிறது. இப்படி இல்லாத வெறும் கருத்துக் களையும் நியதிகளையும் புத்தக மூலமாகவும் பாடமூல மாகவும் அவன் மூளையில் திணிக்க முயல்வதானது, குழந்தையின் இயல்பும் குழந்தை மனோதத்துவமும் குழந்தையின் கல்விக்கு என்ன கிரமம் வகுக்கின்றனவோ அதற்கு நேர்மாறாகும். இது அவனை முடமாக்குவதை ஒத்தது. இதை எண்ணிப் பலர், குழந்தை யுள்ளத்துக்கும்,

மனோதத்துவ சாஸ்திரத்துக்கும் பொருத்தமாய், கல்வியைப் பிரத்தியட்சரூபமாக ஆக்க முயன்றிருக்கிறார்கள்.

இது உபாத்திமைத் தொழிலுக்கே முக்கியமான ஒரு பெரிய தத்துவம். ஆனால் காந்தியடிகள் இதை எடுத்துச் சொன்னபோது, இந்தியாவிலுள்ள கல்வித்துறையாளர் எவரும் அங்கீகரிக்கவில்லை. எந்தத் துறையில் அவர்களை நிபுணர்கள் என்று நாம் எண்ணியிருக்கிறோமோ அந்தத் துறையில் அவர்கள் கொண்டுள்ள சொல்லளவான அறிவுகூடப் பிழைபட்டது என்றுதான் இதிலிருந்து தெரிகிறது. ஆதலால், அவர்கள் மறந்துபோன விஷயத்தை இங்கே ஞாபகப் படுத்துவது குற்றமாகாது.

புராதன காலத்தில், கூர்ந்து கவனிப்பதனாலும் உடலை வருத்தி உழைப்பதனாலுமே எல்லாக் கல்விப் பயிற்சியும் ஏற்பட்டது. வாழ்க்கைக்கே உழைப்புத் தேவை, அதுவும் உடல் உழைப்புத் தேவை. மேல் வகுப்பினரும் பார்ப்பனரும், அரசரும், செல்வரும், உடலுழைப்பின் மூலந்தான் தங்கள் அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். முற்காலத்தில் வேட்டையாடுதல், மீன் பிடித்தல், பயிர் செய்தல் ஆகிய தொழில்களை ஜீவன உழைப்பாய்க் கொண்ட நாகரிகம் ஒவ்வொரு சமயம் ஒவ்வொருநாட்டில் வழங்கிற்று; அக் காலத்தில் அச்சிட்ட புத்தகம் மட்டுமல்ல, எந்தப் புத்தகமுமே இல்லாதிருந்தது. அப்போது மக்களிடையே இருந்த அறிவெல்லாம் உடல் வருந்தி உழைத்து வந்த அனுபவத்தால் விளைந்த அறிவாகும். அக்காலத்தில் கல்வி கற்ற சிறுவர்கள் இக்காலத்துக் கருத்துப்படி தொழிற் பயிற்சியாளர் என்று கருதலாம். மடங்களும், ஆசிரமங்களும் அமைத்துக் கொண்டு அவர்கள் தங்கள் ஆசிரியரோடு குருகுலவாசம் செய்தார்கள். ஆசிரியருக்கும் ஆசிரமத்துக்கும் வேண்டிய எல்லா வேலைகளையும் அவர்களே செய்தார்கள். இதன்

பயனும் அவர்களுடைய அறிவெல்லாம், வாஸ்தவமான பிரத்தியட்ச விஷயங்களிலேயே தோய்ந்திருந்தது. அந்த அறிவு, எவ்வளவுதான் உயர்ந்த நிலைக்குச் சென்றிருந்த போதிலும்கூட, பூமியின் தொடர்பும் மணமும் கொண்டிருந்தது. நுட்பமான கருத்துலகில் இன்று சஞ்சாரம் செய்கின்ற சமயதத்துவமுங்கூட, அன்று ஸ்தூல விஷயங்களை ஒட்டியதாகவே இருந்தது. சமயச் சடங்குகள் சம்பிரதாயங்கள் யாவும், நடைமுறை விவகாரங்களை யொட்டியே இருந்தன. அக்காலத்து யோகங்கூடக் கர்ம யோகந்தான்.

ஆனால் இடைக்காலத்தில், இவ்வளவும் மாறிவிட்டது. அதற்குள் சமயமானது ஸ்தூல விஷயங்களை விட்டு நீங்கி, கருத்தளவான விஷயங்களைப் பற்றிநிற்க ஆரம்பித்தது. புரோகித வகுப்பார் ஒரு தனிச் சாதியாகிவிட்டார்கள்; சமயத்தின் தத்துவங்களை வைத்துக் காப்பாற்றுபவர்களாக மட்டும் இல்லாமல், அந்த வகுப்பார் எல்லா அறிவுக்குமே பாதுகாப்பாளராகி விட்டார்கள். எவ்வகைக் கல்வியும் அவர்கள் வசமிருந்தது. இந்தக் கல்வியெல்லாம் வெறும் ஏட்டுக் கல்வி யாதலால், இது சொல்லளவிலும் கருத்தளவிலும் மட்டுமே இருந்தது. இது இயல்பே; இக்கல்வியின் நோக்கம், சமயசாஸ்திரம் வல்ல புரோகிதர்களைத் தயாரிப்பதாகும். உபாத்தியாயர், புரோகிதர், வைத்தியர், நியாயவாதி ஆகியோருடைய வேலையையும், பிற்பட்டு அரசியல்வாதியின் வேலையையும், பிராமணரே செய்து வந்தார்கள்; அதாவது, கல்வித் திறமையோடு செய்யவேண்டியதெல்லாம் அவர்களே செய்தார்கள். புரோகிதர்கள் கற்பிக்கும் கல்வியானது, கீழைநாடானாலும் சரி, மேலைநாடானாலும்சரி, கருத்தளவிலும் ஏட்டளவிலுந்தான் இருக்க முடியும். சமயமானது மக்கள் மனத்திலெழும் சிந்தனையில் உதிக்கிற உன்னதமான

முடிவான கருத்துக்களை ஆராய்கிறது. அன்றியும், சன்னியாச ஆசிரமத்திலும் சமயாசாரியரின் கீழும் உள்ள ஆன்மிக வாழ்க்கையில் யதார்த்தமான விஷயங்களுக்குக் கொடுத்துள்ள நிலை மிகவும் தாழ்ந்த நிலை. வாழ்க்கையைத் துறந்து ஆத்மசோதனை செய்கிற வாழ்க்கைதான் உன்னதமானது என்ற எண்ணமும், பிற வாழ்க்கையிலெல்லாம் மண்ணோடொட்டியது, இகத்தைக் கருதியது, தாழ்வானது என்ற எண்ணமும் அங்கே ஏற்படுகின்றன. உழவன், தொழில் வினைஞன், உழைப்பாளி ஆகியோர் பிரகிருதியோடு கலந்து உழைத்துச் சாமானிய வாழ்க்கை வாழ்கிறார்கள். ஆதலால், அவர்கள் வாழும் வாழ்க்கை இழிவானது, தாழ்ந்தது. ஆத்மசோதனை செய்கிற வாழ்க்கை யொன்றே உயர்வானது. கௌரவத்தில் இதற்கு அடுத்த படியிலுள்ளது. போர் வீரன் வாழ்க்கை. நாகரிகம் குறைந்து ஆபத்தும் போரும் மலிந்திருந்த அக்காலத்தில், இந்நிலைமை இயல்பே யாகும். அப்போதுங் கூட, தங்களுக்குத் தான் ஆதிக்கம் வேண்டும் என்ற போட்டி பிராமணர்களுக்கும் க்ஷத்திரியர்களுக்கு மிடையில் இருந்தது. கீழை நாட்டிலும் போட்டி, மேலை நாட்டிலும் போட்டி ; ஆனால், கீழை நாட்டில் பிராமணன் இப்போட்டியில் வெற்றி பெற்றான் ; மேலை நாட்டில் வெற்றி க்ஷத்திரியனுக்கு.

பிராமணனுடைய வழியில் நடைபெறும் கல்வியானது கருத்தையே அதிகம் ஆராயுமாதலால், அது வஸ்துக்களையும் ஸ்தூலமான விஷயங்களையும் விட்டுப் பெரும்பாலும் ஏட்டளவோடு தான் இருக்கும். உலக வாழ்க்கையில் உள்ள இன்பத்தையும் அதிலுள்ள கவலையையும் வெறுத்து ஒதுக்குவது காரணமாக, அக்கல்வி முறை கஷ்டமுடையதாகவும் உற்சாகம் குறைந்ததாகவும் ஆவது இயற்கை. இது உண்மைதான் என்பதைப் பிராமண வகுப்பார்

செய்த நூல்களின் பொதுவான போக்கும், அக்காலத்துப் பண்டிதர்களின் கூட்டத்தில் நடந்த வாதங்களின் போக்கும் தெளிவாய்க் காட்டும். அன்று எதையும் சொல்லால் தான் நிரூபிக்க வேண்டியிருந்தது, அல்லது மறுக்கவேண்டி யிருந்தது. ஆனால் உண்மையில், விஷயத்தையோ இயற்கையையோ நேரே பார்த்தால் விவாதம் எளிதில் முடிந்து போய் விடும். அப்படியின்றி நேரே பார்ப்பது அவ்விவாதங்களில் வழக்கமில்லை; ஒருவர் தம் கோட்பாட்டை விளக்கவுரைகளாலும் அனுமான தர்க்கத்தாலும் நிரூபிக்க வேண்டியிருந்தது. சில சமயம், அந்த விவாதங்களை நாம் கவனிக்கும் போது, அவை பொருளற்றன வாயும் அற்பமாயும் சிறுபிள்ளை விளையாட்டாயும் தோன்றுகின்றன. அவற்றில், சொற்களைப் பிரயோகிப்பதிலும் திரித்துப் பொருள் பண்ணுவதிலும் மிக்க சாமர்த்தியம் காணப்படுகிறது; ஆனால் அறிவியல் ரீதியாகவும் கிரியாபூர்வமாகவும் பழகிய மனத்துக்கு, விவாதம் முழுமையும் பொருளற்றது என்றே தோற்றும். அதிலுள்ள முயற்சி யெல்லாம் தப்பான நியாயத்தைச் சரியான நியாயம் என்று தோற்றச் செய்வதே யாகும்.

சிந்தனைக்கு ஆதாரமாயிருப்பவை யதார்த்த விஷயங்கள். இவற்றிலிருந்து சிந்தனையானது சம்பந்தமில்லாமல் தனியே நிற்கும் போது, வெறும் தர்க்க ரீதியாக மெய்யல்லாத எந்தக் கோட்பாட்டையும் நிரூபிப்பதும் மறுப்பதும் எளிதே.

முயலும் ஆமையும் பந்தயங் கட்டி ஓட ஆரம்பித்தால், ஆமையைச் சற்று முன்னதாக ஓடச் செய்து விடும் பட்சத்தில், முயல் ஆமையைப் பிடிக்கவே முடியாது என்பது ஒரு வாதம். நிமித்தமோ காலமோ இடமோ பொருளோ புற விஷயமோ இருக்க முடியாது என்பது மற்றொன்று. நாம் பார்ப்பதெல்லாம் மாயை;

நம் அகத்திலிருந்து எழும் எண்ணந்தான் இப்படித் தோற்றுகிறது; புறத்தே வஸ்துவே இல்லை; பொருள் என்பதே புத்திக்கு அப்பாற்பட்டது; லக்ஷ்யம் ஒன்று தான் உண்மையானது. கடவுள் உருவமும் அருவமும் ஆனவர்; கிறிஸ்துவின் உயிர்த்தெழுகை என்றால், உடலோடு உயிர்த்தெழுகை தான்; பிரசாத வினியோகத்தில் கொடுக்கும் ரொட்டியும் சாராயமும் உண்மையாகவே ரத்தமும் சதையுமாக மாறுகின்றன. ஹிந்து மதத்திலும் கிறிஸ்தவத்திலும், மும்மை என்பதெல்லாம் மூன்றல்ல, ஒன்றே தான்.

இப்படிப்பட்ட அனேக விஷயங்களை வெறும் தர்க்கத்தை வைத்தே 'ஆம்' என்றும் 'அன்று' என்றும் நிரூபித்து வருகிறார்கள். இதன் மூலம், ஞானமானது, புறத்தில் அதற்கு ஆதாரமாயுள்ள விஷயத்தை விட்டு நீங்கி, அகத்தே மட்டும் உதிப்பதாகி விடுகிறது. சில பொதுக் கோட்பாடுகளும் அனுமித தர்க்கத்தின் விதிகளும் சேர்ந்து, ஒருவர் மிகவும் கெட்டிக்காரர் என்கிற தோற்றம் தரலாம்; ஆனால் இவை அறிவிலிருந்து அதற்கு உள்ளுறையான பொருள் முழுமையையும் போக்கிவிடுகின்றன. முடிவாக இந்த முறையானது, வறட்டுப் பாண்டியத்தில் கொண்டுபோய் விடுகிறது. பண்டைக் காலமும் தற்காலமும் அல்லாத இடைக்காலத்தில் இப்படிப்பட்ட பாண்டித்தியமானது, நம் நாட்டிலும் மற்ற நாடுகளிலும், சுயேச்சையான சிந்தனையையும் செயலையும் நசுக்கி விட்டது. ஆயினும், ஞானம் கிரமமாக வளர்ச்சிபெற்று வரவேண்டுமானால், அதில் அனுமிதமும் அகவுணர்ச்சியும் குறைவாக இருக்க வேண்டு மென்றும், அனுமானமும் புற ஆராய்ச்சியும் அதிகமாயிருக்க வேண்டுமென்றும் சீக்கிரத்தில் தெரிய வந்தது.

இடைக் காலத்தில் இருந்த கருத்துருவமான சன்னியாச ஆசிரமத்தோடொட்டிய கல்வியானது, புற விஷயங்களிலிருந்து பூர்த்தியாகப் பிரிந்துவிடவில்லை; ஏனெனில், கைத்தொழிலையொட்டிய நம் நாட்டுப்புற நாகரிகத்தில், சிறப்பாக ஆங்காங்கு தங்கள் ஒழுங்கையும் தேவையையும் தாங்களே நிர்ணயித்துக்கொண்டு வந்த மடங்கள் முதலிய மத ஸ்தாபனங்களில், இயற்கையோடு தொடர்பு மிகுதியாக இருந்தது. அந்த ஸ்தாபனங்களில் தினசரி வாழ்க்கை சம்பந்தமான பல்வேறு கிரியைகளில், உடலுழைப்பு தாராளமாக இருந்தது. இந்தக் கிரியைகள், ஓரளவுக்குக் கல்வியைப் பாதித்து மாற்றின. மூளைக்கு மட்டும் கருத்தளவில் தரும் பயிற்சியால் வரும் கேட்டை இவை ஓரளவுக்குத் தவிர்த்தன. அன்றியும், கல்வியானது சமயத்தையே நோக்கமாய்க் கொண்டிருந்த போது, மனோபாவம், உணர்வெழுச்சிகள், கலைப்பண்புகள், சித்தசக்தி ஆகியவற்றை நிச்சயம் அது வளர்க்கவே செய்யும்; எனினும், கல்வியானது முக்கியாம்சத்தில் கருத்துருவத்திலும் மூளையைப் பற்றிய விஷயமாகவுமே இருந்தது; ஆதலால், அதில் ஆக்கமே இல்லாமல், பலனும் குன்றி யிருந்தது.

புராதன கிரேக்க நாட்டிலும், அதன் வளர்ச்சியில் குறித்த ஒரு பருவத்தில் மூளையின் கொடுங் கோன்மையின் கீழ் அறிவு அகப்பட்டு நசுங்கலாயிற்று. அறிவு என்றாலே வாதம், விவாதம், சொற் போர் என்றிருந்தது. அங்கிருந்த தத்துவ சாஸ்திரிகள் சில இலக்கண வரையறையிலிருந்தும் பொது வாதத்திலிருந்தும் எல்லா ஞானத்தையும் அனுமிக்க முடியும் என்ற கொள்கையுடையவர்கள்; ஆதலால், அந்த நாட்டில் தர்க்கசாஸ்திரம் ஒன்றுதான் அறிவின் மற்றெல்லாத் துறைகளையும் விட அதிகக் கவனத்தோடு போற்றி வளர்க்கப்பட்டது. இதை

சாக்கிரடீஸ் என்ற ஞானி திருத்த முயன்றார். பிரகிருதியையும் யதார்த்தத்தையும் கவனிக்க வேண்டுமென்பது அவர் உபதேசம்; ஆனால், அவருடைய சிஷ்யர்கள் எழுதி வைத்திருப்பதைப் பார்க்கும்போது, அவர் தர்க்கத்தில் நிபுணர்என்றும் சாஸ்திரிகளுக்கெல்லாம் பெரிய சாஸ்திரி என்றுமே நமக்குத் தோன்றும். ஆயினும், அவருடைய திறமையெல்லாம், யதார்த்தத்தையே பிரதானமாய் அவர் குறிப்பிட்டதனாலும், அனுமான பூர்வமாய்ப் பேசியதனாலுமே வந்தது என்பது வெளிப்படை.

ஐரோப்பாக் கண்டத்தில் 'ரினையசான்ஸ்' என்று வழங்குகிற நாகரிக மறுமலர்ச்சி ஏற்பட்டபோது, இப்படி ஏட்டளவில் இருந்த வெறும் கருத்துருவமான அறிவு கூடாது என்ற எதிர்ப்பு ஏற்பட்டது. யதார்த்த விஷயங்களுக்கு அதிகப் பலம் ஏற்பட்டு வந்தது. அனுமிதம் ஒன்றையே நம்பி யிருந்த நிலை மாறி, அனுமானமும் சோதனையும் ஆராய்ச்சியும் வேண்டும் என்ற கருத்து உரமடைந்தது. இன்றைய சிந்தனை யுலகத்துக்கு வழிகாட்டிகளாய் இருந்தோர் அனைவரும், வெளியுலகத்துக்கு முதன்மை கொடுத்து, அதன் போக்கைக் கவனமாய்ப் பொறுமையோடு அறிந்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தி யிருக்கிறார்கள். அறிவைப் புற விஷயத்தோடு இயைத்து, ஆராய்ச்சி முடிவை யதார்த்தத்தோடு ஒப்பிட்டுப் பார்த்ததனால் பிறந்தவைகளே இன்றைய அறிவியலும் தத்துவ சாஸ்திரமும். ஆயினும், முற்காலத்திலும் இடைக்காலத்திலும் இருந்தவர்கள் அனுமிதஞானம் ஒன்றை மட்டுமே நம்பினார்கள் என்று எண்ணுவது சரியன்று; அனுமானத்தையும் அவர்கள் கைக்கொண்டார்கள். முக்கியமாக, அவர்களுடைய நாகரிக வளர்ச்சியில் ஆக்கவேலை நிறைந்திருந்த ஆரம்பகாலத்தில் அனுமான ஞானமும் அவர்களுக்குத் துணையாயிருந்தது.

கேள்வியெல்லாம், எது பிரதானம் என்பதுதான். அப்போது அனுமிதம் பிரதானம், இப்போது அனுமானம் பிரதானம்.

பேக்கன், மாண்டேயின், லாக்ஸ் என்போர், பொருளகராதி எழுதினேர் தொடங்கி, இன்றைய தத்துவ சாஸ்திரிகள் கல்வியாளர் வரையில், நெடுகிலும் எல்லோரும், வறட்டுப் பாண்டித்தியத்தையும், இயற்கை யதார்த்தம் ஆகியவற்றைவிட்டு அது ஒதுங்கியிருப்பதையும் கண்டித்தே வந்திருக்கிறார்கள். முதல் எதிர்ப்பு, தத்துவ சாஸ்திரம் - அறிவியல் என்ற துறையில் ஏற்பட்டது. கல்வியில் நெடுங்காலம் எந்தப் புரட்சியும் ஏற்படவில்லை. ஆயினும், அறிவியல் என்ற போக்கிலிருந்து அதுவும் தப்பமுடியவில்லை. உபாத்திமை என்ற தற்கால சாஸ்திரத்தைத் தோற்றுவித்தவர் என்று கருதத் தக்கவரான ரூஸோ என்ற பிரஞ்சு அறிஞர், தாம் எழுதிய எமிலி என்ற புத்தகத்தில், புதுக்கல்வி முறைக்கான அடிப்படைக் கருத்துக்களைத் தெரிவித்தார். அவருடைய கருத்துக்களைத் தழுவி ஐரோப்பாக்கண்டத்தில் பல ஸ்தாபனங்கள் ஆரம்பமாகி நடந்தன. அவரும் அவரைப் பின்பற்றிய அறிஞர்களும் கூறிய வழியில் அனேகம் சோதனைகள் அந்நாட்டிலும் அமெரிக்காவிலும் இன்றுவரையில் நடைபெற்றிருக்கின்றன.

இயற்கையைப் பின்பற்றவேண்டும். குழந்தையைக் குழந்தையாகப் பாவிக்கவேண்டுமே யல்லது பெரிய மனிதனுகப் பாவிக்கலாகாது. "சொல்வதற்கும் எண்ணுவதற்கும் உணர்வதற்கும் குழந்தைக்குத் தனியான வழிகள் உள்ளன. அவ்வழிகளை நீக்கி நம் வழிகளைக் காட்டுவது கொஞ்சமும் நியாயமாகாது" என்று அவர் சொல்லுகிறார். குழந்தையின் வழி அல்லது போக்காவது என்ன? "குழந்தைகள் முதலில் அளவற்ற துடிதுடிப்போடு

இருக்கிறார்கள் ; அடுத்தபடி, புதியது எதையும் அறிவதில் அவாக் கொண்டிருக்கிறார்கள்" என்றே அவர் பதில் சொல்லுகிறார். இயற்கையானது அவர்களிடம் துடி துடிப்பை வைத்திருக்குமானால், இதற்கு ஒரு நோக்க மிருக்கவேண்டும். இந்த நோக்கம், குழந்தை வளர்வது தான் என்பது வெளிப்படை. ஆகவே, பலர் குழந்தைகளை நிறைத்துக் காற்றோட்டம் குறைவான வகுப்பறையில் சந்தடியின்றி உட்காரவைத்துத் தினந்தோறும் சில மணி நேரம் கிராம உபாத்தியாயர் சொல்லுகிற வறட்டுச்சொற் களை, பிரம்பின்மேல் கண்ணை வைத்தபடியே கவனித்துக் கொண்டிருக்கும்படி செய்வது, குழந்தையிடம் அடங்கி யுள்ள திறமைகளையெல்லாம் வெளிப்படச் செய்வதற் கான வழியன்று. இது உண்மையான பயனுள்ள அறிவை அவனுக்குப் புகட்டும் வழியன்று ; உடல் சம்பந்தப்பட்ட வரையில், இது ஆரோக்கியமானதுமன்று. இதனால் அவன் மூளையில் ஒருபாரிச வளர்ச்சி ஏற்படக்கூடும். ஆனால், இதனோடு கூடவே, அவனுடைய திறன்களில் பெரும்பகுதியை மரத்துப்போகச் செய்வதற்கு, இதற் கீடான வழி வேறில்லை. பாரிச வளர்ச்சி என்று ஏன் சொல்லுகிறோம் என்றால், குழந்தையிடம் மற்றத் திறன் கள் வளராமல் மூளைமட்டும் வளரமுடியாது. மற்றப் பண்புகளும் ஒரே சமயத்தில் பயிற்சி பெற்றாலொழிய, மூளையின் வளர்ச்சி ஆரோக்கியமாகவோ பூரணமாகவோ இருக்கமுடியாது.

ரூஸ்ஸோ மேலும் சொல்லுகிறார் : "பல வேறு பாடங்களைக் குழந்தைகளுக்குச் சொல்லி ஹிம்சை பண்ணு கிறீர்கள். அவற்றில் அவனுக்குச் சுவையுண்டாகும்படி செய்து, அவற்றைக் கற்கும் வழியை மட்டும் காட்டினால் போதும். நீங்கள் கற்பித்தீர்கள் என்ற காரணத்தால் அவன் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டாம் ; தானாகக்

கற்றுத்தான் எதுவும் அவன் அறியவேண்டும். கலைகளைக் கற்பிக்கவேண்டியதில்லை; குழந்தை தானே கற்கவேண்டும். அவன் உள்ளத்தில் பகுத்தறிவை நீக்கி அதிகாரத்தைப் புகுத்தினால், பிறகு ஒருபோதும் பகுத்தறிவே அங்கு இராது; மற்றவர்களுடைய அபிப்பிராயத்தை எடுத்துக் கிளிப்பிள்ளைபோல் சொல்பவனாகவே இருப்பான்."

பழைய கல்வி முறையிலும் புதிய கல்வி முறையிலும் உள்ள சௌகரிய அசௌகரியங்கள் யாவை என்பதை அவரே பின்வருமாறு கூறுகிறார்: "புத்தகங்களையே உருப்போடும்படி செய்வதற்குப் பதிலாக, ஏதேனும் ஒரு வேலையை அவன் செய்துவரும்படி பழக்கினால், அவனுடைய கைகள் வேலையைச் செய்ய, மனம் அதனால் பலனடையும். தான் தொழில் செய்பவன் என்று எண்ணிக் கொண்டிருக்கும்போதே, உண்மையில் அவன் தத்துவ ஞானியாவான். ஒவ்வொரு வேலைச்சாலையாக அவனுக்குக் காட்டிக்கொண்டு செல்லும்போது, எந்த வேலையைக் கண்டாலும் தானும் கொஞ்சம் செய்து பார்க்கும்படி அவனைப் பழக்கவேண்டும். நடப்பது எதைப்பார்த்தாலும், எதை அவன் கவனித்தாலும், அதற்குரிய காரணத்தைப் பூர்த்தியாக அவன் உணரும்படி கற்பிக்கவேண்டும். அவன் கைகால்களின் உபயோகமும், மூளையின் உபயோகமும் ஏதேனும் ஒரு கைத்தொழில் செய்யும்போது ஒன்று சேரும்படியாக அவனுக்குப் பயிற்சி அளிக்கவேண்டும். அவனுடைய திறமைகள் எவ்வளவோ அந்த அளவுக்குத் தான் அவனுடைய வளர்ச்சியும் ஏற்படமுடியும். உள்ளமோ அல்லது உடலோ எவ்வளவு ஏற்கமுடியுமோ அவ்வளவுக்கு மேல் ஏற்றுச் சுமக்கமாட்டாது. அவனுடைய மூளையில் ஞாபகம் என்ற ரூபத்தில் விஷயங்களைத் திணித்து வைப்பதற்கு முன்னே, அவனுடைய அறிவு அவற்றைப் புரிந்து ஏற்றுக்கொள்ளுமானால், அதிலிருந்து பிறகு அவன்

கிரகிப்பதெல்லாம் சொந்த அனுபவமாயும் சொந்த அறிவாயும் இருக்கும். சரியாகப் புரிந்துகொள்ளாதபடி மூளையில் பல விஷயங்களைப் புகுத்திக்கொண்டால், அவன் தனக்குப் பயனுள்ளது எதையும் அதிலிருந்து வெளிப்படுத்தி உபயோகிக்க முடியாது.'' சுருங்கச் சொன்னால், கல்வித்துறையில், சுபாவமான தன்மை (இயற்கையாக இருத்தல்) எளிமை என்ற இரண்டும் வேண்டுமென்று ரூஸ்ஸோ சொல்லுகிறார். கல்வி முறைக்கு முக்கியமான கருவியாய் இருப்பது குழந்தைதான். குழந்தையைப் பிரம்பு வைத்தோ மனத்தில் பயமூட்டியோ நிர்ப்பந்தம் செய்யக்கூடாது என்கிறார். வாழ்க்கையிலிருந்தும் வாழ்வதற்கான வேலைகளிலிருந்துமே குழந்தை கற்கவேண்டும்; கல்வியானது வாழ்க்கைக்கு அவனை ஆயத்தம் செய்விக்க வேண்டும்.

ரூஸ்ஸோவுக்குப் பிறகு, பெஸ்டலோஸி, ஹெர்பெர்ட், புரோபெல் முதல் ஜான் டியூயி வரையிலுள்ள அனேகக் கல்விச் சீர்திருத்தக்காரர்களும் உபாத்தியாயர்களும், ருஷ்யாவில் உள்ள இன்றைய பொதுவுடைமைச் சீர்திருத்தக்காரர்களும், பொதுவாக ஏதேனுமொரு வகையில் ஒரு கருத்தை விடாமல் சொல்லி வந்திருக்கிறார்கள். அதாவது, பாடசாலையில் பையன் செய்து பழகுகிற தொழில் மூலமாகத்தான் அவனுக்குக் கல்வி போதனையும் புத்தகப் படிப்பும் ஊட்டமுடியும் என்பதும், இவற்றைத் தொழில் மூலந்தான் அவன் கிரகிக்கமுடியும் என்பதும், இதுவே குழந்தையின் திறன்களெல்லாம் பூரண வளர்ச்சி பெறுவதற்குச் சிறந்த வழி என்பதுமாகும்.

குழந்தையின் உள்ளம் ஒழுக்கம் உடல் ஆகிய மூன்றிலும் ஒருமித்த வளர்ச்சியே கல்வி என்று பெஸ்டலோஸி கூறுகிறார். ஏதேனும் உழைக்க வேண்டுமென்று பொது

வாக உள்ள ஆசையால் விளைந்த வேலைகளினாலும், அவற்றின்மூலம் விளைந்த அனுபவத்தாலும், இந்த வளர்ச்சி வருகிறது. ஆதலால், குழந்தையின் கல்வி வளர்ச்சிக்கு அடிப்படை, விஷயமாய் இருக்கவேண்டுமே ஒழிய, வார்த்தையாக இருக்கமுடியாது; புலனறிவு இந்த அடிப்படை ஆகுமேயொழிய, ஞாபகசக்தி, அடிப்படை ஆகாது. கல்வி போதனையானது, குழந்தையிடம் அமைந்துள்ள தனிப் பண்புகளும் விசேஷ குணச்சிறப்புக்களும் வளரச் செய்வதை நோக்கமாய்க் கொள்ளவேண்டுமேயொழிய, ஏதேனும் அபிப்பிராயத்தைப் போதிப்பதை நோக்கமாய்க் கொள்ளமுடியாது. "மக்கட்குலத்தில் அமைந்துள்ள எல்லா ஆற்றல்களையும் வேலையில் ஈடுபடுத்துவதன் மூலமாக அவற்றை இயற்கை வளர்க்கிறது. ஈடுபடப்பட அவை பெருகுகின்றன. மனிதனுடைய பண்புகளையும் திறமைகளையும் வேலையில் ஈடுபடுத்துவது பயனுடையதாய் இருக்கவேண்டுமானால், மக்களினத்தின் மேம்பாட்டுக்கு இயற்கை என்ன வழியை நிர்ணயித்திருக்கிறதோ, அந்த வழியைப் பின்பற்ற வேண்டும். இதனால்தான், எவனொருவன் தன் ஆற்றல்களையும் திறன்களையும் ஒழுங்காகவும் அமைதியாகவும் உறுதியாகவும் எளிதாக வஞ்சனையில்லாத முறையிலும் வேலையில் ஈடுபடுத்துகிறானோ அவனே உண்மையான மனித இயல்பை ஒட்டி வாழ்பவனாகிறான். ஆனால், எவன் இயற்கையின் ஒழுங்கைக் குலைத்து அறிவின் பல்வேறு துறைகளுக்கிடையுள்ள தொடர்பைக் கெடுத்து விடுகிறானோ, அவன் அறிவு பிறப்பதற்குரிய உண்மையான ஆதாரத்தையே தன்னுள் அழிப்பதோடல்லாமல், அந்த ஆதாரத்தின் நோக்கத்தையும் அழிக்கிறான்; சத்தியத்தால் வரும் நன்மையை உணர்வதுகூட அவனுக்குக் கஷ்டமாகிவிடுகிறது" என்று பெஸ்டலோஸி கூறுகிறார்.

இளம்பிராயத்திலுள்ள குழந்தைகளைப் பற்றி அவர் பின்வருமாறு எழுதுகிறார் : "குழந்தைகளின் ஆற்றலும் அனுபவமும் இந்த வயதில் மிகவும் அதிகம். இந்த ஆற்றலையும் அனுபவத்தையும் இயற்கையே அவர்களிடத்தில் தோற்றுவித்திருக்கிறது. ஆனால், நம்முடைய பள்ளிக்கூடங்கள் இன்று மனோதத்துவ ரீதியாய்க் கல்வி கற்பிக்கும் நோக்கம் கொண்டிராமையால், சாராம்சத்தில் இவை, இவ்வாற்றலாலும் அனுபவத்தாலும் வரும் பயனையெல்லாம் அழித்துவிடுகிற செயற்கையான மூச்சடைப்பு யந்திரங்களாகவே யிருக்கின்றன. ஐந்து வயது வரையில் குழந்தைகள் இயற்கையைப் பூரணமாய் அனுபவிக்கிறார்கள். பிரகிருதியின் வேகம் அவர்களிடம் நன்றாய்ப் பதியவிடுகிறோம். தங்கள் ஆற்றலை அவர்கள் நன்றாய் உணர்கிறார்கள். தளையில்லாத சுதந்திரத்தினால் வரும் பூரண இன்பத்தையும் அவர்கள் இதற்குள் நன்றாய் அறிவார்கள். அழகும் இன்பமும் பொருந்தி இயற்கையாக வாழ்வதெதுவும் சுயேச்சையான தன் போக்கிலேயே வளர்ச்சி பெறுகிறது. இக்குழந்தைகளைப் பொறுத்த வரையில், இதற்குள் இப்போக்கு திட்டமான ஒரு திசையில் செல்ல ஆரம்பிக்கிறது. ஐந்து வருஷ காலம் பூரணமான இந்த அழகிய இன்பவாழ்க்கை வாழ்ந்த பிறகு, குழந்தையின் திருஷ்டியிலிருந்து பிரகிருதி முழுமையும் நாம் மறைத்துவிடுகிறோம். கட்டில்லாத குழந்தையின் ஆனந்தமான சுயேச்சைப் போக்கைக் கொடுமையாகத் தடை செய்கிறோம். ஆடு மாடுகளை அடைப்பதுபோல் அடைத்துவைக்கிறோம். துர்நாற்றம் வீசும் அறைகளில் அவர்களை மந்தையாகக் கூட்டிவைக்கிறோம். இயற்கைக்குப் பொருத்தமில்லாத, மனத்துக்குக் கவர்ச்சியில்லாத வரிவடிவங்களையே பார்க்கும்படியும் எண்ணும்படியும், மணிக்கணக்காக நாள் கணக்காக வாரக்கணக்காக மாதக்கணக்காக வருஷக் கணக்காக இரக்கமற்று விலங்கிட்டு வைக்கிறோம் ; அவர்

களுடைய முந்திய நிலையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இது அறிவு கலங்கிப் பைத்தியம் வரச் செய்வதற்கான வழியாகும்."

புறப்பொருளை வைத்தே கல்வி கற்பிக்கவேண்டு மென்ற தத்துவத்தை பெஸ்டலோஸிக்குப் பிறகு, புரோ பேல் மேலும் வளர்த்தார். குழந்தையின் மனோதத்துவம் என்ற கருத்தையும் அவனுக்கு வேலை செய்வதே இயற்கை என்ற கருத்தையும் இவர் விரிவாக்கினார். கல்வி தொடங்க வேண்டிய இடம் இவைகளே என்பது இவர் கருத்து. புல னறிவு, சாமானிய ஆக்கவேலை, விளையாட்டுக் கல்வி, இயற்கைப் பாடம் என்பன மூலமாய்க் கல்வி கற்பிப்பது தான் சிறந்தது என்ற கருத்தை இவர் பெரிதும் வளர்த் தார். இக்காலக் கல்வி நிபுணர்கள் இத்தத்துவங்களை யெல்லாம் இப்போது அங்கீகரித்திருக்கிறார்கள். ஆனால், இந்தியாவிலோ, ஏட்டளவில்தான் இவற்றுக்கு மரி யாதையே தவிர, செயலில் இவை வரவில்லை.

இங்கு நாம் ஆக்கவேலையைப் பற்றிப் பேசுகிறோம். இதுபற்றி புரோபேல் பின்வருமாறு கூறுகிறார்: "உருவம் அற்றதில் மனிதனுடைய ஆன்மா ஈடுபட்டு அதை இயக்கி, உருவமும் வடிவமும், தனக்கென்று தனியான ஜீவனும் வாழ்வும், அது பெறுமாறு செய்யவேண்டும். உழைப்புக் கும் தொழிலுக்கும், உற்பத்தி வேலைக்கும் சிருஷ்டி வேலைக்கும் உள்ள ஆழ்ந்த பெருநோக்கம் இதுவேயாகும். நாம் உழைப்பதனாலும் முயற்சியோடு வேலை செய்வதனா லும், நம் அகத்தைப் புறத்தில் வெளிப்படுத்துகிறோம் என்ற தெளிவான எண்ணமாவது அல்லது சொற்ப உணர்ச்சியாவது நம் உழைப்பில் வரவேண்டும். உடலற்ற ஜீவனுக்கு நாம் உடல் கொடுக்கிறோம்; உருவமற்ற சிந்தனைக்கு உருவம் கொடுக்கிறோம்; காட்சிக்கு எட்டாத தைக் கட்புலனாகும்படி செய்கிறோம் என்ற தெளிவான

திருஷ்டி; நாம் உழைக்கும்போது நமக்கு இருக்கவேண்டும் அல்லது சொற்பமாவது இந்த உணர்ச்சி இருக்கவேண்டும். இருந்து, முயற்சி குன்றாமல் உழைப்பில் ஈடுபடும் போதுதான் நாம் தெய்வத்தன்மை பெறுகிறோம்.”

மேலும் அவர் சொல்லுகிறார். “உழைப்பு அனைத்தையும் சுதந்திரமான தொழிற்பாடு என்று இனியேனும் நாம் கருதவேண்டும். அதாவது, உழைப்பை அறிவு பொருந்திய வேலையாகக் கொள்ளவேண்டும். எந்த ஒரு நியதியின்படி வளர்ச்சிக்கான எல்லா வேலையும் பிறந்து நடைபெறுகிறதோ, அந்த நியதியை இதுவரை புத்தி பூர்வமாக நாம் ஏற்றுக்கொண்டதில்லை. அதை நாம் உணர்ந்து புத்திபூர்வமாக ஏற்றுக்கொண்டால்தான் இது கைகூடும். நான் கூறும் முறையில் வரும் வேலையானது, குழந்தை தன்னை யறியாமலே இந்த நியதியைப் பிரயோகித்துக் கலைத்திறன் அடைவதற்கான வழியைத் தருகிறது; பிரயோகத்தின்மூலம், இந்நியதியைக் குழந்தையானது மெல்ல மெல்ல உணர்ந்து, தனக்கு இது வழிகாட்டி யென்றும், தன் வாழ்க்கையின் அமைப்பனைத்தையும் இது ஒழுங்குபடுத்துவதென்றும் காண்கிறது. வேறெந்த வழியிலும் மக்கள் செய்யும் வேலையைச் சுயேச்சையான தொழிற்பாடாக மாற்றிக்கொள்ள வியலாது. கைக்குத் தரும் வேலையானது மனத்துக்கும் தரும் வேலையாக ஆனால் தான், யந்திரம்போன்ற வழக்கமான வேலையாயிருந்தது அறிவு நிறைந்த வேலை ஆகமுடியும். தற்காலத்தில், ஓவியம் சிற்பம் முதலான கலைகளை மட்டுமே சுயேச்சையான தொழிற்பாடு என்று சொல்லமுடியும். ஆயினும், மக்கள் செய்யும் வேலை ஒவ்வொன்றும் ஓரளவுக்குச் சிருஷ்டி வேலையை ஒத்ததுதான்; தெய்வச்சிற்பியான பிரமன் தன்னையே சிறிய அளவில் மனிதனுகப் படைத்தான் என்றால், அதற்கு இது அவசியமாகும்.”

இவ்வாறு புலனறிவின் மூலமும் ஆக்கவேலையின் மூலமுமே கல்வி பயிற்றவேண்டும் என்ற கருத்துக்கள், கல்விப் பயிற்சியை அறிவியல் ரீதியாகவும் பயனுள்ளதாக வும் இருக்கும்படி செய்தன; இதனோடு, இதுவரை முன்னமே செய்துபார்க்காத ஒரு துறையில் கல்விப்பயிற்சி சாத்தியமாகும்படியும் செய்தன; அதாவது அங்கவீனர் களான குருடு, செவிடு, ஊமை என்போருக்கும் கல்வி தருவது சாத்தியமாகச் செய்தன. இவர்களுக்குத் தொழிற் பயிற்சியின்மூலம் சுமாரான வருவாய்க்கு வழிகிடைத்தது; இது தன்னம்பிக்கையையும் தன் மதிப்பையும் அவர்களுக்கு ஊட்டிற்று. குற்ற நடத்தையில் ஈடுபட்டிருந்த இளம் பிள்ளைகளைக் கல்வியின்மூலம் நல்வாழ்க்கைக்குத் திருப் பும் வழியையும் இது காட்டிற்று.

பழைய சோதனைகள் - உ

தத்துவ சாஸ்திரிகள் போல் கல்வித்துறையில் சீர் திருத்தம் செய்தவர்கள், கல்வி சம்பந்தமான கோட்பாடு களை மட்டும் ஆராய்ந்து கொண்டிருந்து விடவில்லை. சமூகச் சீர்திருத்தம், அரசியல் சீர்திருத்தம் என்ற கருத் தோடு அவர்களிற் பலர் கல்வியைப் பற்றி எண்ணி, இதற் கென்று கல்விச்சாலைகளை ஏற்படுத்தி நடத்தியும் வந் திருக்கிறார்கள். இச்சீர்திருத்தக்காரர்கள், வெவ்வேறு லக்ஷயங்களைக் கொண்டு, வெவ்வேறு கொள்கைகளைக் கடைப்பிடித்திருந்தவர்கள். தனி மனிதனும் மனித குல மும் ஆன்மார்த்தத் துறையில் முடிவில் எந்நிலையடையப் போகிறார்கள் என்ற நோக்கத்தோடு கல்வியை ஆராய்ந் தவர்கள் சிலர். சிலர் உலகாயத நெறியிலும் சமதர்ம நெறியிலும் சென்றவர்கள். பாமரமக்களுக்குக் கல்வி என்ன பயன் தரும், புரட்சியின் மூலம் வகுப்பு வேற்றுமை யற்ற மனித சமூகத்தைச் சிருஷ்டிப்ப தெப்படி என்ற எண்ணத்தோடு கல்வியை ஆராய்ந்தவர்கள் வேறு சிலர். மற்றும் சிலர், குறித்த எந்தத் தத்துவத்தையும் கொள்ள வில்லை; இன்றைய சமூக அமைப்பைப் புரட்சிகரமாக மாற்றி யமைக்கும் எண்ணம் கொள்ளவில்லை; ஆயினும், கல்வியானது அறிவியல்ரீதியாகவும் குழந்தை இளம் பிள்ளை ஆகியோரின் இயல்பையும் மனோதத்துவத்தையும் பொறுத்த நியதிகளின்படியும் இருக்கவேண்டுமென்று அபிப்பிராயப் பட்டவர்கள். அறிவைப் பெறுதல், பரப் புதல், வளர்த்தல் ஆகிய மூன்றும், இப்போதிருப்பதை விட இன்னும் அதிகமாக இயற்கையோடொட்டிய முறை யிலும், பயன்படும் முறையிலும், திறம்படவும் நடைபெற வேண்டும் என்பதே இவர்கள் நோக்கம்.

இப்படியாக, கல்விச் சீர்திருத்த வாதிகள் எவ்விதமான கருத்தையோ தத்துவத்தையோ கொண்

டிருந்தாலும், கல்வியானது வெறும் சொல்லளவிலும் கருத்தளவிலும் இல்லாமல், இன்னும் கொஞ்சம் யதார்த்த விஷயங்களை ஒட்டியதாக இருக்கவேண்டும் என்றே அவர்கள் எல்லோரும் எண்ணுகிறார்கள். சோதனை செய்து பார்ப்பதற்கான முறைகளை எல்லோரும் சொல்லுகிறார்கள், சோதனைச்சாலையிலேனும் தொழிற் சாலையிலேனும் ஆக்க வேலையும் செயலும் வேண்டு மென்றே அவர்கள் வற்புறுத்திச் சொல்லுகிறார்கள்.

ஆன்மார்த்த நெறியில் கல்வியை அதிகமும் பயனு டையதாகச் செய்யும் நோக்கத்தோடு ஜெர்மனியில் இருந்த ரோமன் கத்தோலிக்க ஆசிரியர் ஒருவர் பின் வரு மாறு எழுதுகிறார்: "தொழிற் பாடசாலை என்பது எத் தகையது என்று நாள் செல்லச் செல்ல நாம் தெளிவாக உணரும்போது, இந்தச் சீர்திருத்தத்தை எதிர்ப்பது முட் டாள்தனம் என்று உணர வேண்டும். ஒவ்வொரு கால மும் நாகரிகத்துக்குரிய அங்கங்களைப் புதுப்புது அமைப் புடையதாகப் பாகுபடுத்தி வைக்கிறது. இந்தக் கால மானது, சமயம் வாழ்க்கையோடு ஒட்டியிருக்க வேண்டு மென்றும், சமயம் தொழிலோடு ஒட்டி யிருக்க வேண்டு மென்றும், சமயம் தாய் நாட்டு ஆராய்ச்சியோடு ஒட்டி யிருக்க வேண்டு மென்றும் சொல்கிறது. நம் சோதனை யினால், தொழில் மூலம் கல்வி வருவதோடு, நாட்டுப் புறத்துப் பள்ளிக்கூடங்களி லெல்லாம் கல்வி பெருக வேண்டும்." கத்தோலிக்க ஆசிரியர்கள் தற்கால ஐரோப் பாத் தேசத்தில் இன்றுள்ள வாழ்க்கையின் முக்கியத் தேவையாயுள்ள எந்த அம்சங்களைப் புறக்கணித்து வந் திருக்கிறார்களோ அந்த அம்சங்களில் சிலவற்றை இங்கே நாம் காண்கிறோம். இவைகளே உழைப்பு - தாய் நாட்டு உணர்ச்சி என்பனவாகும். கத்தோலிக்க மதமென்பது, இடம் என்ற எல்லையைக் கடந்தது; ஆதலால், இது

தேச எல்லைகளைப் புறக்கணிக்கவே முயன்று வந்திருக்கிறது. இந்த ஆசிரியர் கூறுகிறபடி, குறித்த நாட்டினிடத்தில் மட்டும் பக்தி, உழைப்புக்கும் உடற் பிரயாசைக்கும் மரியாதை என்ற அம்சங்கள், கத்தோலிக்கக் கல்வி முறையில் உள்ள தடைகள் ஆகும். புதிய யந்திர யுகத்தில், கல்வியானது வாழ்க்கையின் தேவைகளுக்கு ஒத்தியங்க வேண்டுமானுல், இத்தடைகளை நீக்கியாக வேண்டும். தற்காலப் போக்குக்கு ஒத்தியங்குவது தான் பிள்ளைகளைத் தெய்வ சிந்தனை உடையவர்களாக்கும் வழி என்பது இவர் அபிப்பிராயம்.

ஜெர்மனியிலுள்ள மியூனிச் நகரத்தில் மக்களின் கல்வியை நிர்வகித்து வந்த குஷன்ஸ்டீனீ என்பவர் வேறு விதமாகச் சொல்லுகிருர். சமய உணர்ச்சி இவருக்குச் சிறிதும் உடன்பாடு இல்லை. ஜெர்மானிய தத்துவ சாஸ்திரிகள் எல்லோரையும் போல இவரும், பொதுஜன சமூக வாழ்க்கை - அரசு என்பவற்றை வைத்தே எண்ணுகிருர். ஆரம்பப் பாடசாலையில் படிக்கும் வயதில் குழந்தையின் போக்கில் மிகவும் முக்கியமானது உடற்பிரயாசை என்பது அவர் கருத்து. "ஆதலால், தொழிற் கல்வியானது கவனத்தோடு நேர்மையாகவும் திருத்தமாகவும் முழுமனத்துடனும் செய்யவேண்டிய உடற்பிரயாசையை வலியுறுத்த வேண்டும். இதற்கு ஏதேனும் ஒரு சமூகக் கூட்டுறவும் கூட்டமைப்பும் வேண்டும். இது இயல்பாக நீதிதருமத்தையும் பொதுவாழ்க்கையின் தத்துவங்களையும் கற்பிக்கும்" என்பது அவர் கூற்று. மேலும் அவர், "தொழிற்பாடசாலையின் முக்கியம் என்ன வென்ருல், பொது லக்ஷயத்துக்கான சேவையில் உழைப்பதன் மூலம் சொற்பக்கருவிகளையும் சாதனங்களையும் வைத்து அதிகமான திறமையையும் அறிவையும் இன்பத்தையும் அடையலாம் என்பதை நிரூபிப்பதாகும்" என்கிருர்.

லே என்பவர், குறித்த எந்தக் கருத்தையும் பின் பற்ருதபடி, கல்வித்துறையாளர் என்ற முறையில் பொது வாக எழுதுகிருர். 'புதுக்கல்வி முறையை அமைத்தல்' என்ற புத்தகத்தில் அவர் தம்மைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிருர். "ஓர் எண்ணத்தை மனத்தில் ஏற்றல், அதை மனத்தில் வைத்து ஆராய்தல், பின் அதைச் செயலில் வெளிப்படுத்தல் ஆகிய மூன்றும் வேறு பிரிக்க முடியாத ஒரே முழு நிகழ்ச்சிதான். சூழ்நிலையைப் பிரதிபலிப்பதற்குப் புற விஷயத்தை மனத்தில் ஏற்பதும் ஏற்று ஆராய்ந்து கொள்வதும் வெறும் கருவிகளே என்றும், மனத்திலிருந்து புறத்தே பல்வேறு தோற்றங்களோடு வெளிப்படுவது எல்லாம் புது உலகத்தின் நிலைமைகளுக்கு ஏற்ற மாதிரி தன்னை அமைத்துக் கொள்வதுதான் என்றும் ஆகிற முறையில், மேற்கூறிய மூன்றையும் ஒழுக்கரீதியாகவும் ஆசிரியத் தொழில் ரீதியாகவும் உணர்ந்து நடத்த வேண்டும்." அவரே மற்ருேரிடத்தில் பின்வருமாறு சொல்கிருர்: "இங்கே மூன்று தத்துவங்கள் இருக்கின்றன. கூர்ந்து நோக்குதல், மனத்தின் தொழிற்பாடு, புறச் செயல் என்பன. பயனுள்ள கல்வி முறையில் இம் மூன்றும் ஒன்ருய்ச் சேர்ந்திருக்கவேண்டும். இவ்விதம் கல்வியானது ஜீவசக்தி பொருந்தியதாக ஆகி, தன்முயற்சியின்றி வருவதை ஏற்றுக் கொள்ளுதல் என்ற பழங்கல்வி முறையாகிய கேட்டை ஒழிக்கமுடியும்."

இன்னும் சமீப காலத்தில், ஜான் டியூயி என்பவர் அமெரிக்காவில் வாழ்ந்தவர். இவர் ஒரு தத்துவஞானி; ஆசிரியத்தொழில் பற்றி நூல்களும் எழுதியிருக்கிருர். அன்றியும், கல்வித் தத்துவம் என்ற துறையில் பெருஞ் சேவை செய்திருக்கிருர். இவர் சமதர்மவாதி. இன்றைய பாடசாலை அமைப்பானது சமூக அமைப்புக்கும் காலத்தின் தேவைக்கும் ஏற்றபடி இல்லை யென்பது இவருடைய

கருத்து. "எந்தக் காலத்தில் தொழிலாளி வகுப்பினர் அனைவரையும்விடத் தொழில் செய்யாமல் சோம்பியிருக்கும் வகுப்பினர் மிகவும் உயர்ந்தவர்கள் என்ற கருத்து சாமானியமாக ஒப்புக்கொள்ளப் பெற்றிருந்ததோ, அந்தக் காலத்தில்தான், நாகரிகம், நாகரிகம் பற்றிய கல்வி என்ற இவை சம்பந்தப்பட்ட எல்லாக் கருத்துக்களும் எழுந்தவையாகும்" என்று இவர் கூறுகிறார்.

பின்வரும் மூன்று தத்துவங்களையும் சொல்லி, அவர் கல்விச் சீர்திருத்தம் பற்றிய தம் கருத்துக்களைத் தொகுத்து முடிக்கிறார்:

"முதலாவதாக, தனி மனிதர் ஒவ்வொருவரும், சுயமரியாதையும் சுயதேவைப்பூர்த்தியும் புத்திக்கூர்மையும் பொருந்திய தொழில் செய்யும் தகுதியுடையவராய் இருத்தல் வேண்டும்; ஒவ்வொருவரும் தம் ஜீவனத்துக்கும் தம்மைச் சார்ந்திருப்பவர்களுடைய ஜீவனத்துக்கும் ஏற்ற உபாயத்தைத் தேடியாக வேண்டும்; தேடும்போது, தாம் செய்வதை அறிவோடு தெரிந்து தாம் செய்யும் வேலையை நன்றாய்ச் செய்வதில் அறிவும் ஆர்வமும் காட்ட வேண்டும்; இது முன்னெல்லாம் எப்படி இருந்தபோதிலும், இன்றைய உலகத்தில் மிகவும் முக்கியமானது.

"இரண்டாவதாக, தனி மனிதரொருவர் செய்யும் வேலையானது, முன் எக்காலத்தையும் விட இக்காலத்தில் தான், மிகவும் விரிவான அளவில் மற்றவர்களுடைய நலத்தைப் பாதிக்கிறது.

"மூன்றாவதாக, கைத்தொழில் முறைகள், முன் எக்காலத்தையும் விட இக்காலத்தில் பிரகிருதி சாஸ்திர உண்மைகளையும் விதிகளையும் சமூக சாஸ்திர உண்மைகளையும் விதிகளையும் பெரிதும் பொறுத்திருக்கிறது. நம் ரயில்வே, நீராவிக்கப்பல், தொழிற்சாலை, விவசாயப் பண்ணை முதலியவைகளும், வீட்டில் சாமானியமாய்

உபயோகமாகும் சாதனங்களும், இன்று இருந்து நடை பெற வேண்டுமானால், இதற்கு நுட்பமான கணக்கறிவும் பௌதிக அறிவும் இரசாயன அறிவும் உயிர் நூல் அறிவும் வேண்டியிருக்கின்றன. சமூக வாழ்வின் செய்திகளையும் தொடர்புகளையும் நன்றாய் அறிந்தால்தான், இவை தம் முடைய முடிவான சிறந்த பலனைத் தரமுடியும். உழைப் பாளிகளில் பெரும் பகுதியினர், கேவலம் தாங்கள் உபயோகிக்கும் கருவிகளின் பல்லுச்சக்கரமும் பல்லும் போல இருந்துவிடட்டும் என்று கருதினாலொழிய, அவர் கள் தாங்கள் கையாளும் கருவிகளுக்குப் பின்னும் அவற் றுக்கு அப்பாலுமுள்ள பௌதிகச் செய்திகளையும் சமூகச் செய்திகளையும் உணர்தல் வேண்டும்."

அவர் மேலும் சொல்கிறார்: "மரவேலை, உலோக வேலை, தையல், நெசவு, சமையல் முதலான வேலைகளை நாம் செய்யும்போது, தனியான பாடம் என்று இவற்றைக் கற்காமல், வாழ்க்கைக்கும் கல்விப் பயிற்சிக்குமான முறைகளென்றே செய்யவேண்டும். இந்த மாதிரி வேலை முறைகளால் தான் சமூகம் இன்று நடந்து வருகிறது; இவைகளே சமூகப் பொதுவாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளிற் சிலவற்றையேனும் குழந்தைக்கு உணர்த்து கின்றன; அன்றியும், மனிதன் நாளுக்குநாள் பெருகிவந்த தன்னுடைய புத்திக்கூர்மையாலும் நுண்ணறிவாலும் அத்தேவைகளை எந்தெந்த வழிகளில் பூர்த்திசெய்து கொண்டானோ அந்தவழிகளே இவ்வேலைகள்; இவ்வாறு இவ்வேலைகள் சமூகத்தில் என்ன பயன் தருகின்றனவோ அந்தப் பயன் உருவத்திலேயே இவற்றை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். சுருங்கச் சொன்னால், அவன் கருவி யாக இருந்து, பள்ளிக்கூடம் என்பது, பாடங்களைப் டிப்பதற்காக ஏற்பட்ட இடம் என்று மட்டும் கொள் ளாமல், ஜீவன் நிறைந்த சமூக வாழ்க்கையின் துறைகளில் ஒன்று என்று ஆக்க வேண்டும்."

செம்மையான எல்லாக் கல்வி முறைக்கும் அடிப் படையா யுள்ளவை தொழிலும் உழைப்புமே என்பதைப் பலவகைப்பட்ட சமதர்மவாதிகளும் ஆரம்பகாலம் முதலே அங்கீகரித்திருக்கிறார்கள்.

கார்ல் மார்க்ஸ் எழுதுகிறார் : "நம்மைப் பொறுத்த வரையில், கல்வி என்றால் அதன் பொருள் பின்வருவன வாகும் : 1. அறிவு வளர்ச்சி, 2. உடல் வளர்ச்சி, 3. பல தொழிற் கல்வி; இது உற்பத்தி முறைகள் அனைத்துக்கும் பொதுவான அறிவியல் தத்துவங்களைப் போதிப்பதோடு, பல்வேறு உற்பத்தித் துறைகள் அனைத்துக்கும் உரிய சாமானியக் கருவிகளை உபயோகிக்கும் பழக்கத்தைச் சிறுவருக்கும் இளைஞருக்கும் தரவேண்டும்." பாடசாலை களில் எவ்விதமான பலதொழிற் கல்வி அளிக்க வேண்டு மென்று மார்க்ஸ் கருதுகிறார் என்பதை வாசகர் இங்கு கவனிக்க வேண்டும். இக் கல்வி, பெரிய ஆலையிலோ தொழிற்சாலையிலோ பயிலும் வேலையன்று: சாமானியக் கருவிகளை உபயோகிப்பதில் பயிற்சியாகும். கற்க வேண் டியது, இங்கே, குறிப்பிட்ட ஒரு தொழில் அன்று; "உற் பத்தித் துறைகள் அனைத்துக்குமுரிய சாமானியக் கருவி களை உபயோகிக்கும் பழக்கம்."

இன்னும் அவர், 'சொத்துடைமை' என்ற பிரசித்தி பெற்ற தம் புத்தகத்தின் முதற் பாகத்தில் சொல்லு கிறார் : "தொழிற்சாலைச் சட்டத்தில், கல்வி சம்பந் தப்பட்ட நிபந்தனைகள் சாதிப்பது மிகவும் குறைவு. எனினும், சிறுவரை வேலைக்கு அமர்த்திக்கொண்டால், அவர்களுக்கு ஆரம்பக்கல்வி அளிப்பது அவசியம் என்ற திட்டம் சம்பந்தப்பட்ட வரையில், அச்சட்டம் வெற்றி பெற்றது; இது உடலுழைப்புடன் கல்விப் பயிற்சியையும் உடற்பயிற்சியையும் இணைக்க முடியும் என்பதை முதன்முதலாக நிரூபித்தது. தொழிற்

சாலைகளைப் பார்வையிட்ட அதிகாரிகள், பிள்ளைகளைப் பற்றி இங்கிருந்த பாடசாலை உபாத்தியாயர்களை விசாரித்தார்கள்; அதன்மேல், இங்கு வேலை செய்த சிறுவர்கள், கிரமமாய் வந்து பகல் முழுதும் கல்வி பயிலும் பிள்ளைகள் பெறும் பயிற்சியில் பாதியளவுதான் பெற்றபோதிலும் கூட, அப்பிள்ளைகள் கற்ற அளவுக்குக் குறையாமலும், சில சமயம் அதிகமாகவும் கற்றுர்களென்று கண்டார்கள். பாடசாலையில் பாதி நேரம் மட்டுமே இவர்கள் இருப்பதனுல், எந்நேரமும் சோர்வில்லாமல் இருப்பதோடு, போதிப்பதைக் கிரகிக்க எந்நேரமும் தயாராகவும் ஆர்வத்தோடும் இருக்கிருர்கள் என்பதே இந்த நிலைமைக்குக் காரணமாகும். இவர்கள் வேலை செய்கிற இந்த ஏற்பாடு, பாதி உடலுழைப்பாகவும் பாதி பாடப் படிப்பாகவும் அமைகிறது. ஆதலால், இவ்விரண்டில் ஒன்றில் மட்டும் குழந்தையை ஈடுபடுத்துவதைவிட, இரண்டிலும் சேர்த்து ஈடுபடுத்துவது அவனுக்கு மிகவும் ஏற்றதாயிருக்கிறது.''

குரோபாட்கின் பிரபு என்பவர் மிகவும் புரட்சிகரமான ருஷ்ய எழுத்தாளர். தம் காலத்திலிருந்த கல்விபோதனை முறைகள் மாறவேண்டும் என்று அவர் பின்வருமாறு எழுதுகிருர்: "புத்தியைக் கொண்டு உழைப்போர் என்றும், உடல்வருந்தி உழைப்போர் என்றும், சமூகத்தை இரு பிரிவாய்ப் பிரிக்கிருர்கள். இது கேடானது; இதற்குப் பதிலாக, இருவகை உழைப்பையும் ஒன்று சேர்க்க வேண்டும் என்று நாம் கூறுகிறோம். இன்று தொழிற்கல்விப் பயிற்சி என்றுல், உடலுழைப்புக்கும் மூளை யுழைப்புக்குமுள்ள பேதத்தை அப்படியே ஏற்றுவருவது என்று பொருளாகிறது. இதற்குப் பதிலாக, இந்தப் பேதத்தை நீக்கிய பூரணக் கல்வி அல்லது ஒருமித்த கல்வி வேண்டுமென்று நாம் சொல்லுகிறோம். தெளிவாய்ச் சொன்னுல் இம் முறையிலுள்ள பாடசாலையின் நோக்கம் பின் வருவ

தாயிருக்க வேண்டும்: பாடசாலைப் படிப்பு முடித்து 18 - 20 வயதில் வெளிவரும் பிள்ளைகள் பெண்கள் எல்லோரும் அறிவியற்கலையில் (சயன்ஸ்) பூரண அறிவு பெறத் தக்கபடி நாம் கல்வி போதிக்க வேண்டும்; இவ்வறிவு, அறிவியல் துறையில் பயனுள்ள வேலை செய்பவர்களாக அவர்களை ஆக்க வேண்டும்; அல்லது, போதிப்பதோடுகூட, தொழிற்கல்விப் பயிற்சிக்கு அடிப்படையானவற்றில் போதுமான பொது அறிவையும், குறித்த தொழிலொன்றில் சிறப்பான திறமையையும், தரவேண்டும்; இத்திறமையின் துணையால் அவர்கள் உழைப்பின்மூலம் செல்வத்தை உற்பத்தி செய்வதென்ற புதிய பரந்த உலகத்தில் தாமும் ஒரு ஸ்தானம் பெறத்தக்கவர்கள் ஆக வேண்டும்.''

ருஷ்ய நாட்டுச் சோதனை

ஷூல்ஜின் என்பவர், 'சமூகப் பயிற்சியாகிய அடிப் படையான பிரசினை' என்ற தம் புத்தகத்தில், ருஷ்யப் பொதுவுடைமைக் கட்சியின் நிலைமையைப் பின் வருமாறு கூறுகிறார்: "பாமரமக்களுடைய போராட்டத்தைக் குழந்தைகளும் புரிந்துகொண்டு அதில் கலக்கவேண்டும்; மக்கட்சமூகத்தின் வரலாற்றை உணர வேண்டும்; உழைத் தல் தொகுத்தமைத்தல் கூடிவாழ்தல் ஆகிய பழக்கங்களைப் பெறவேண்டும்; உழைப்பினால் விளையும் கட்டுப்பாட்டைத் தாங்களும் பெறும் நிலைமை யடையவேண்டும்: இத்தனை யும் வேண்டுமானால், உழைப்பு என்பது, நம்மைப் பொறுத்த வரையில், உலகத் தொழிலாளர் ஆகிய பெருங் குடும்பத்தைக் குழந்தைக்கு அறிமுகம் செய்து வைக்கும் கருவியாகும்."

ருஷ்ய முறையாகிய சோவியத்துக் கல்விமுறையை உத்தியோக பூர்வமாய் வரலாற்றொழுங்காக எழுதி வைத்த பிங்க்விட்ச் என்பவர், பழங்கல்வி முறையையும் புதுக் கல்வி முறையையும் அவற்றின் நோக்கங்களையும் பின்வருமாறு ஒப்பிட்டுக் காட்டுகிறார்: "அக்காலத்தில் தேவையா யிருந்தோர், சுயேச்சையாக ஒன்றைச் செய்யவல்ல வர்களல்ல; வேலையாள், குமாஸ்தா, அடிமை ஆகி யோரே அப்போது வேண்டி யிருந்தார்கள். சோவியத் துக் குடியரசின் தேவை இதற்கு மாறு. இங்கு, பெருந் திரளான பாமரமக்களை நாட்டின் பொருளாதாரச் சீரமைப்பிலும் நாகரிக நிருமாணத்திலும் ஈடுபடுத்துவ தென்பது, நாட்டின் வாழ்வையும் அழிவையும் பொறுத்த பெரிய பிரசினையாகும். ஆதலால், உழைப்பவர்களுக் கேற்ற அரசை எப்படி நிருமாணிப்பது என்பதைக் கருத் தளவிலும் செயலளவிலும் குழந்தையானவன், பாட சாலையில் படித்து முடித்து வெளிப்படுமுன், மிகவும்

திட்டமாக அறிந்து கொள்ளவேண்டியவன்..........."
"எனவே, கல்வி யனைத்தையும் ஒருமுகப் படுத்தியுள்ள பாடசாலையில், மக்களின் உழைப்பே அவர்கள் கல்விக்கு நடுநாயக ஸ்தானம் வகிக்கிறது. மேற்கூறிய அடிப்படைக் கருத்து, பாடசாலையின் வேலை முறையை எல்லா நிலையி லும் ஊடுருவி நிற்கிறது; தொழில் நிபுணத்துவம் பெற வேண்டும் என்ற நோக்கோடு உழைப்பை எண்ணுமல், புதுவாழ்வு நிருமாணிப்பது என்ற நோக்கோடு எண்ணு கிறுர்கள். புதுவாழ்வு நிருமாணிப்பவர், தம் தொழில் எதுவாயிருந்த போதிலும், பல்வேறு தொழிற் பிரிவுகளுக் கிடையுள்ள தொடர்பு யாது, இவை ஒன்றை யொன்று எவ்விதம் சார்ந்திருக்கின்றன என்பதைத் தெளிவாய் அறிந்திருக்க வேண்டியவர். இவ்வித அறிவைத்தான் கல்வி என்று சொல்லுகிறேம். பாடசாலையானது, தன் வேலையைப் பொறுத்த வரையில், யதார்த்த விஷயங் களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்க வேண்டும். பொருள் உற்பத்திக்கான உழைப்புக்கு இங்கு பிரதான ஸ்தானம் அளிக்கவேண்டும்." மேலும் அவர் சொல்லு கிறுர்: "பாடசாலையில் சமூகத்துறையிலும் அரசியல் துறையிலும் உழைப்புக்கு எவ்வளவு பெரும் பங்கு உண் டென்பதை வாசகர் இங்கு நினைவுகூரவேண்டும். நமக்கு உழைப்பு என்றுல், வெறும் உடற் பிரயாசை முறையன்று; சுய உதவி யன்று; பள்ளிக்கூட வேலையோ கடை வேலையோ அன்று; உழைப்பு என்றுல் பள்ளிக்கூட வாழ்வு முழுமைக்கும் இதுவே அச்சாணி என்று நாம் எண்ணுவோம்."

வாஸ்தவத்தில், மற்றெல்லா முறைகளையும் விட, சோவியத்துக் கல்விமுறைதான் காந்தியடிகளின் கருத் துக்கு மிகவும் ஒத்து வருகிறது. பார்க்க இது விசித்திரமாய்த் தோற்றலாம்; ஆனல் இது உண்மை.

சமதர்மவாதிகளும் பொதுவுடைமைவாதிகளும் கொண்டுள்ள கருத்துக்களிலும் அவர்கள் கடைப்பிடிக்கும் முறைகள் சிலவற்றிலும் அவருக்கு நம்பிக்கை இல்லாத போதிலும் கூட, தம்முடைய சீர்திருத்தத் திட்டங்கள் சம்பந்தப்பட்ட வரையில், அவர் அவர்களுடைய நோக்கத்துக்கு ஒத்தே வருகிருர். ஓர் உதாரணம் குறிப்பிடலாம். எங்கெங்கு உற்பத்தித் தொழில்களில் அவருக்கு அதிகாரம் இருக்கிறதோ, அவையனைத்திலும், வெறும் ஏட்டளவிலோ நாளைக் கென்றோ இல்லாமல், தொழில் செய்வோருக்குக் குறைந்த பட்சக் கூலி இன்றைக்கே கொடுத்தாக வேண்டுமென்ற கொள்கையைக் கட்டாயமாய் அவர் கடைப் பிடித்திருக்கிருர்; இந்த அளவுக்கு, அவர் செயலில் சமதர்ம வாதியாக உள்ளவர். இருந்தும், சமதர்மவாதிகளான நம் நண்பர்கள், குறைந்த பட்சக் கூலி பற்றிய அவருடைய கருத்தில் கூட ஏதேனும் குறை காணுகிருர்கள்; கொள்கை பற்றிக் குறை சொல்ல முடியாவிட்டால், அவர் கூறுகிற கூலி விகிதம் மிகவும் குறைவானது என்கிருர்கள். ஆனல், அவர்கள் வாஸ்தவமாக அறிவியற் கண்ணேடு அவருடைய கருத்துக்களையும் திட்டங்களையும் பார்த்தால், அவர்கள் முடிவு வேருயிருக்கும். நம் நாட்டுக் கிராமங்களில், வினைத்திறமை வேண்டியிராத உழைப்புக்குத் தினக்கூலி மூன்றணு அல்லது நான்கணு* என்று கொடுக்கும்போது, முன்னம் வழங்கிய கூலியை விட இது என்ன வீதம் அதிகமாகியிருக்கிறதென்று கணக்கிட்டால், இன்று ருஷ்ய நாட்டில் இதே நிலையில் கொடுக்கும் கூலியில் ஏற்பட்டிருக்கும் உயர்வை விட இவ்வீதம் அதிகம் என்று தெரிய வரும். அன்றியும், இப்போது நிர்ணயித்துள்ள குறைந்த பட்சக் கூலியானது என்றைக்கும் இப்

---

*இந்த நிலை 1938இல்; யுத்தத்துக்கு முன்.

படியே இருக்க ஏற்பட்டதன்று ; காலக்கிரமத்தில் இது உயர்ந்து கொண்டே வரலாம்.

அடுத்தபடியாக, காந்தியடிகள் தம் அதிகாரத்தின் கீழுள்ள கைத்தொழிலாகிய கதர்த் தொழிலில், 'தேசிய மாக்குதல்' என்ற கருத்தைச் செயல் முறையில் நடத்தி வந்திருக்கிறார். தனி நபர்கள் சமூகத்துக்கு எந்த அளவு உழைத்திருக்கிறார்களோ அதற்கு மேல் சமூகத்தால் அவர்கள் பயனடைய வேண்டியதில்லை என்பதுதான், சமதர்ம வாதம் என்பதற்குப் போர்த்துள்ள அலங்காரப் போர்வைகளை நீக்கிப் பார்த்தால், கிடைக்கும் பொருளாகும். ஒருவர் உழைப்பால் மற்றவர் பலனடைதலாகிய சுரண்டல் என்பது கூடாது. கதர் சம்பந்தப்பட்ட வரையில், இக்கருத்தை நிறைவேற்ற காந்தியடிகள் முயன்றிருக்கிறார். கதர் ஒரு தேசியக் கைத்தொழில். கதரை உபயோகிப்பவர், தம்மையொத்த இந்த நாட்டு மக்களின் பொருட்டு, சொற்பப் பணச் சுமையை ஏற்கிறார். சர்க்கா சங்க அத்தாட்சி பெற்ற கதர்தான் வேண்டும், மற்றவை வேண்டாம் என்று அவர் கூறும்போது, இந்தத் தேசியக் கைத் தொழிலைத் தனிப்பட்ட கதர் உற்பத்தியாளர் தங்கள் சொந்த நலத்துக்காகப் பயன்படுத்திக் கொள்வதைத் தடை செய்ய முயல்கிறார். கதர் வாங்குபவர் துணிக்கு அதிக விலை கொடுப்பது, சில சமூக லக்ஷ்யங்களை உத்தேசித்தே யொழிய, தனிப்பட்டவர் நன்மைக்காக அன்று. ஆதலால், கதர் உற்பத்தியாளருக்கோ, விற்பனைக்காரருக்கோ, அத்தாட்சிப் பத்திரம் வழங்குவதென்றால் சர்க்கா சங்கத்தார் மூலமாக இதன் பொருட்டு விதிக்கப் பெற்றுள்ள தேசியக் கட்டுப்பாடுகள் சிலவற்றை அவர் அனுசரித்து நடந்தாக வேண்டும். நிர்ணயித்துள்ள குறைந்த பட்ச விகிதக் கூலியைக் கொடுத்திருக்கிறார்கள் என்று நிச்சயமாய்த் தெரிந்து கொண்ட பிறகே, சர்க்கா

சங்கத்தார் அத்தாட்சிப் பத்திரம் வழங்குவார்கள். விலை இன்னதென்றும் லாபம் இவ்வளவென்றும் அவர்களே நிர்ணயிக்கிறார்கள். தொழிலாளர் உழைப்பையோ வாங்குபவர் பொருளையோ உற்பத்தியாளரும் வியாபாரியும் அநியாயமாய்த் தங்கள் சொந்த நலத்துக்குப் பயன்படுத்துவதைத் தடுக்க எல்லா முயற்சியும் இதில் செய்யப்பெறுகிறது. நம் நாட்டில், பொருள் வாங்குபவருக்கு ஏற்படுகிற தேசபக்தி யுணர்ச்சியை உற்பத்தியாளர் எத்தனையோ முறைகளில் தகாத வழியில் தங்கள் லாபத்துக்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இருந்தும், மேற் கூறிய வாறு அத்தாட்சிப் பத்திரம் கொடுப்பது மூலமாய், குறைந்தபட்ச விகிதக் கூலியையும் நியாய விலையையும் நிர்ணயம் செய்திருப்பதைப் புரட்சியாளரான நம் நண்பர் சிலர் ஆட்சேபிப்பது விநோதமாய்த்தான் இருக்கிறது.

நம்மவர்கள் வெறும் சொல்லில் மட்டும் மயங்காமல் இருப்பார்களானால், காந்தியடிகள் கிரியாம்சையில் காட்டுகிற பொருளாதாரத்துக்கும் அரசியலுக்கும், அவரைக் குறைகூறுகிற சமதர்மவாதிகளின் கருத்துக்கும் எவ்வித வேற்றுமையும் இல்லை என்பது விளங்கும். காந்தியடிகள் காட்டுகிற திசையும் வழியும் அவர்கள் காட்டுகிற திசையும் வழியும் வெவ்வேறு என்பது வாஸ்தவம்; ஆயினும், செயல் முறையில் சீர்திருத்தத்துக்காக இருவர் காட்டும் திட்டங்களும் அனேகமாய் ஒன்றே. பொருளாதாரத் துறையில் காந்தியடிகள் காட்டுகிற சமதர்மம் என்பது குடும்ப வாழ்க்கையை ஒட்டியது; இதன் பொருள், தனிப்பட்டோர் சொத்துடைமையை ஓர் எல்லைக்குள் நிறுத்துவதும், கைத்தொழில்களை ஆலை முறையை விட்டுக் குடிசை முறைக்குக் கொண்டுவருவது மாகும். ஆனால், வைதிக சமதர்மமானது, நீராவியுகத்தில்

உருக்கொண்டது; 19 ஆம் நூற்றுண்டின் போக்கானது, எவ்வித வரையறையுமின்றித் தனிப்பட்டோர் சுய நலத்தை மேற்கொண்டு ஒழுகலாம் என்ற நியதியை யுடையது; இதற்கு எதிர்ப்பாக எழுந்தது சமதர்மம்; பெரிய ஆலைத்தொழில்கள் தேவை என்ற கொள்கையோடு இது பிணைந்து கிடக்கிறது; இதன்படி, தனிப்பட்டோருக்குள்ள எவ்விதச் சொத்துரிமையும், அதற்கடிப்படையென்று பாவிக்கிற குடும்ப முறையும், ஒழிக்க வேண்டியவை என்பதே இதன் கருத்து.

கல்வித்துறையிலுங் கூட, ருஷ்யச் சோதனைகள் காந்தியத்திட்டத்துக்கு நெருங்கிய ஒற்றுமை யுடையன. லெனின் வலியுறுத்திய முதல் விஷயமானது, எவ்விதக் கல்வி முறையிலும், பல கைத்தொழில்களையும் கற்பிக்கும் திட்டம் வேண்டும் என்பதாகும். லெனினுடைய மனைவியார் ஒரு கல்வி மகாநாட்டில் பேசியபோது, கல்வியில் பல கைத்தொழில்களும் இடம் பெற வேண்டுமென்பதை அதிகமாய் வற்புறுத்திப் பேசவில்லை என்று ஒரு சமயம் லெனின் மிகவும் அதிருப்தி யடைந்தாராம்! இதை பியாட்ரிஸ் கிங் என்ற அம்மையார் 'சோவியத் கல்விமுறை' என்ற பெயரோடு தாம் எழுதிய புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார். "பல கைத்தொழிற் பயிற்சிக்கு ஏற்பாடு செய்வதென்பது, வெறும் கல்விப் பயிற்சியை மட்டும் பொறுத்த விஷயமன்று எனவும், பொதுவான அரசியல் விஷயம் எனவும் எல்லோரும் உணர்வது அவசியமென்பதை அவர் வலியுறுத்தி வந்தார். இது, வாழ்க்கையின் போக்கு முழுமையும் புரட்சிகரமாக மாற்றி யமைப்பதாகிய பிரசினை, உடலுழைப் பென்றும் மூளையுழைப் பென்றும் உழைப்பை இரண்டாகப் பிரித்து வைத்திருக்கும் பிரிவினையை ஒழிக்கும் பிரசினை" என்று அவர் எழுதுகிறார்.

கல்வியில் பல கைத்தொழிற் பயிற்சி என்று கூறும் போது, லெனின் கருத்து என்ன ? அவர் கூறுவது வெறும் தொழிற்கலைப் பயிற்சியன்று. ருஷ்யாவில் 15 - 16 வயதுக்குப் பிறகுதான் தொழிற்கலைப்பயிற்சி ஆரம்ப மாகிறது. அப்படியானால் அவர் கருத்து யாது? பியாட்ரிஸ் கிங் சொல்லுகிறார் : "பல கைத்தொழிற் பயிற்சி என்பது, அதுவே பயிற்சித்திட்டமும் பயிற்சி முறையுமாகும். பயிற்சித்திட்டம் என்ற அளவில், அது கல்வியை வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தும் சாதனமாயிருக் கிறது. பயிற்சி முறை என்ற அளவில், பிள்ளைகள் சமூகத்தில் திறமையும் அறிவும் வாய்ந்த உழைப்பாளரா யிருக்கும்படி செய்கிறது." உழைப்பாளி என்றால் ருஷ்யா வில் அதன் பொருள் என்ன ? " உழைப்பாளி என்பவன், பல அம்சங்களிலும் முழு அபிவிருத்தி பெற்றிருப்பவன். அறிவாளிகளான பழைய உயர்ந்த வகுப்பாரைப்போல, அவனும், அறிவும் கலையும் பொறுத்தவற்றில் ஆர்வ முடையவனாயிருப்பான். உண்மையில் அவனே புதிய அறிவாளர் வகுப்பாகப் பரிணமிக்க வேண்டியவன். இதன் பொருட்டு, வெறும் கைவினை அல்லது திறமை பெற்றிருப் பதற்கு மேலும் அவனிடம் ஆற்றல் அமையவேண்டியிருக் கிறது. கைத்திறமை மட்டும் இருந்தால் போதும் என்று இனி எண்ண முடியாது. தான் உபயோகிக்கும் ஒவ்வொரு வஸ்துவையும் செவ்வையாய் அறிந்திருப்பதோடு, தன் நாட்டுப் பொருளாதார அமைப்பில் தான் உற்பத்தி செய்கிற பொருளின் பலன் என்ன என்பதையும் நன்றாய் உணர்ந்திருக்க வேண்டும். மனிதனும் பிரகிருதியும் சார்ந்திருக்கும் இவ்வாழ்க்கையில், இருவருக்குமுள்ள தொடர்பு யாதென்று அவன் அறிய வேண்டியவன். உழைப்பாளி மூளையைத் தன் உழைப்பில் செலுத்தும் படியும், சமூக அமைப்பில் அவ்வுழைப்பின் பொருள் யாது, அதன் முக்கியம் என்ன என்பதை உணரும்படியும்,

கருத்தும் செயலும் உழைப்பைப் பொறுத்த வரையில் நெருங்கிய தொடர்பு பெற்றிருக்க வேண்டும்.''

லெனினுடைய தோழரான குருப்ஸ்காயா என்ற அம்மையார் ஒரு கல்வி மகாநாட்டில் பின்வருமாறு பேசினர்: "மிக்க அதிகமான திறமை வாய்ந்த தொழிலாளிக்கு எல்லா அம்சங்களிலும் பூர்த்தியான கல்விப் பயிற்சி யளித்து, தொழிலாளியாகவும் தொழில் நடத்தும் தலைவராகவும் அவர் ஆகச் செய்வதே பல கைத் தொழிற் பயிற்சியின் நோக்கமாகும். தொழில் தெரிந்த உழைப்பாளி என்றால், இதுவரையில் அவர், பல வருஷ அப்பியாசத்தின் பயனாய், மிகவும் சுருங்கிய எல்லைக்குள், திறமை வாய்ந்த தொழில் விஞ்ஞராயிருந்தார். பல சமயம், அவருக்குத் தம் தொழிலைத் தவிர வேறெந்த விஷயமும் தெரிந்ததில்லை. மிகவும் சுலபமான கணக்குப் போடவும் அவருக்குத் தெரியாது. சாதாரண கிராமக் கொத்தரைப் பாருங்கள். சாமானியமாய்க் கணக்கிட்டு ஒரு புள்ளி போடுவதென்றால் அவருக்கு முடியாது. க்ஷேத்திரகணித அறிவு அவர் தொழிலுக்கே மிகவும் அவசியமானது; இதில் சாமானிய அறிவுகூட அவருக்கு இல்லை. ஆகவே, நமக்கு வேண்டியது, முழுமையும் வேறான ஒரு கல்விப் பயிற்சியாகும்; அறிவியல் ரீதியான கல்விப் பயிற்சியைப் பொருள் உற்பத்தித் தொழிலுடன் இணைக்கிற கல்வியே நமக்கு வேண்டும்.'' பல தொழிற் பயிற்சியைக் கேவலம் ஒரு சாமானியத் தொழிற்பயிற்சி என்று எண்ணிக்கொள்வது மிகவும் கேடானது என்று அவர் அம்மகாநாட்டினருக்கு எச்சரிக்கை செய்தார்.

இந்த எச்சரிக்கை ருஷ்யாவைவிட இந்தியாவுக்குத் தான் அதிகம் தேவை. ஏனெனில், ருஷ்யாவில் மக்கள் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து, ஆகவேண்டியதை நிறைவேற்றுகிறார்கள்; நிர்ப்பந்தத்தினால் அவர்கள் இப்படிச்

செய்கிறார்கள் என்றாலும் சரி, அவர்கள் குணமே இது என்றாலும் சரி. ஆனால் நம்மிடையிலோ, நிலைமை வேறு. காந்தியடிகளின் கருத்தை நாம் முறையாக ஏற்றுக் கொண்ட போதிலும் கூட, எந்த விதத்தில் அதைச் செயலில் கடைப் பிடிக்க வேண்டுமென்று அவர் விரும்புவாரோ அந்த விதத்தில் நாம் கடைப்பிடிப்பதில்லை. அவருடைய கல்வித் திட்டம் சம்பந்தமாய் இது உண்மை என்பது எனக்குத் தெரியும்; காந்தியடிகள் கூறுகிற ஒருமைப்பாடுள்ள பூரணக் கல்வித் திட்டத்தை வெறும் தொழிற் பயிற்சி என்று எண்ணிப் பல இடங்களில் குழப்ப மேற்பட்டிருப்பதை நான் அறிவேன். வெறுந் தொழிற் கல்வி பற்றிய இவ்வகைத் திட்டங்கள் வெற்றி பெறுமற் போவது நிச்சயம். ஏனெனில், கல்விச் செலவு இவற்றால் அதிகமாகி, பலன் மிகவும் சொற்பமாவதால், மக்கள் ஏமாற்றமடைந்து இம்முறையைக் கைவிடுவார்கள். கைவிடும்போது, இத்திட்டங்களைத் தொடங்கியவர்கள், தங்கள் தோல்வியின்மூலம், காந்தியடிகளின் திட்டம் நிறைவேற்ற இயலாதது என்று குதூகலத்தோடு பழிக்கவும் செய்வார்கள். இவ்விதம் உள்ளிருந்தே உறவாடிக் கெடுக்கும் செயல், அரசாங்க விரோதிகளுக்கு மட்டுமே உரியது என்று எண்ணவேண்டாம்; கல்வியாளரும் இப்படிச் செய்யக்கூடும். மனத்தில் தெளிவும் உறுதியும் பிறக்காதபடி, அரசியல் காரணங்களை எண்ணியும் சந்தர்ப்பத்தை அனுசரித்தும், புதுத் திட்டத்துக்கு ஒத்து நடக்க முயல்வதால் வந்ததே இந்த விளைவு. 'தேசிய ஆதாரக்கல்வி' என்ற திட்டத்தைப் பல இடங்களில் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்; ஏனென்றால், பழங்கல்வி முறை கேடானது என்று எல்லோரும் ஒரு முகமாய் இழித்துக் கூறிவிட்டார்கள்; கல்விமுறையைத் திருத்தியமைக்க நியமித்த கமிட்டியார், இப்படி இழிக்கப் பட்ட திட்டத்துக்கு ஆதரவு தர வழியில்லை; ஆக்க

மளிக்கும் புதிய திட்டமொன்றும் அவர்கள் தாங்களாகச் செய்வதற்குமில்லை; காந்தியடிகளின் திட்டம் தயாராய்க் கைவசம் இருந்தபடியால், கைக்கொள்வதற்கு அது எளி தாய்ப் போயிற்று. அத்திட்டத்தின் உட்கோள் முழுமை யும் கல்வியாளர் உணர்ந்துகொள்ளவில்லை. அன்றியும், அதில் நம்பிக்கையில்லாதவர்களும், துணிந்து தாமாக ஒன் றைச் செய்யும் திறனற்றவர்களுமான அரசாங்க உத்தி யோகஸ்தர்களே அத்திட்டத்தை நடத்துகிறார்கள்.

எவ்வளவு உண்மையோடு ருஷ்யாவில் உத்தரவுகள் நிறைவேறுகின்றன என்பதை நாம் அறியவேண்டும். கல்விப்பயிற்சியைப் பல கைத்தொழிற் பயிற்சியாகத் திருத்தியமைக்க வேண்டும் என்ற பொது உத்தரவு பிறந்த வுடனே ஒரு கிராமத்தில் என்ன நடந்தது என்பது இதற்குத் தக்க உதாரணமாகும்: "ஒவ்வொரு பாடசாலை யும் ஏதேனும் ஒருவகை உற்பத்திச்சாலையுடன், அதாவது ஒரு தொழிற்சாலையுடனே, அரசாங்க விவசாயப்பண்ணை அல்லது கிராமக்கூட்டு விவசாயப்பண்ணையுடனே, இணைக் கப் பெறவேண்டும் என்பது உத்தரவு. தாட்ஜிகிஸ்தான் என்ற மாகாணத்திலுள்ள ஒரு கிராமத்துக்கு இந்த உத்தரவு கிடைத்தது. இக்கிராமத்தினருகே விவசாயப் பண்ணையோ தொழிற்சாலையோ எதுவும் இல்லை; ஆயினும் உத்தரவை நிறைவேற்றியாக வேண்டுமே! கல்விக்கழகத் தைச் சேர்ந்தவரொருவருக்கு, அங்கு ஒரு நாவிதர் கடை யிருந்தமை ஞாபகத்துக்கு வந்தது. மிகவும் சமீபத் திலுள்ள உற்பத்திச்சாலை அதுவே என்று துணிந்து, கிராமப் பாடசாலையை அதனுடன் இணைத்துக்கொண் டார்கள்!"

ருஷ்ய ஆசிரியர்கள் எழுதியதையும் ருஷ்யப் புத்தகங் களில் உள்ளதையும் இங்கு இன்னும் விரிவாய் எடுத்துக் காட்டினால் மிக்க சுவையாயிருக்கும்; ஆனால் இடமில்லை.

அப்படிக் காட்டினுல்தான், இந்திய மார்க்ஸியவாதிகளான நம் பொதுவுடைமைக் கொள்கையினருக்கு, அவர்களுடைய சொந்தசாஸ்திர அறிவு உண்டாகும்! ஆயினும், நட்பு முறையில் நான் சொல்வது குற்றமாகாது என்ருல், இங்குள்ள சமதர்மவாதிகள், எந்த மனேபாவத்தோடு காந்தியடிகள் தம் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்கிருரோ அந்த மனேபாவத்தோடு நடத்தலாம்; நடத்தினுல், சமதர்மம் என்பதைப் பற்றியுள்ள வெறும் கோஷங்களையும், மற்ற நாடுகளிலும் முற்றிலும் வேருன சந்தர்ப்பங்களிலும் அதற்கு ஏற்பட்டுள்ள பொது அபிப்பிராயங்களையும் விலக்கிவிட்டு, செயல் முறையில் சமதர்மம் என்ருல் என்ன என்னும் அறிவு அவர்கள் பெறமுடியும் என்பதைக் காண்பார்கள். தர்க்கரீதியாகப் பேசவேண்டும் என்ற கூக்குரல் பலரும் இப்போது போடுகிருர்கள்; இதுவே உண்மைத் தர்க்கரீதியான மனேபாவம். ஆனுல், எந்தச் சீர்திருத்தமாயினும் அது நவீனமாகத் தோற்றினுலன்றியும், மேலைநாட்டில் வழங்கும் நாகரிக பாஷையில் அதை சொன்னுலன்றியும், அதை நம் சமதர்மவாதிகளான நண்பர்கள் ஒப்புக்கொள்வார்களா?

பழைய சோதனைகளின் தோல்வி

கல்வித்துறையில் எத்தனையோ சீர்திருத்தக்காரரும் சிந்தனையாளரும் இதுவரையில் தோன்றியிருக்கிறார்கள்; இருந்தும், உபாத்திமைத் தொழிலுக்கு மிகவும் அவசியமான இந்தச் சீர்திருத்தம் யாரும் ஒப்புக்கொள்ளவுமில்லை; செயலில் நிறைவேறவுமில்லை. கல்விச்சோதனைக்காகப் புதுமுறையில் ஆரம்பித்த இந்த ஸ்தாபனங்களின் ஆயுள் ஏன் இப்படிக் குறைந்து போய்விட்டது? புதிதாகத் தோன்றிய இந்தக் கல்விமுறை, பழமைக்கும் பழமையானது, இயற்கையானது. வாஸ்தவத்தில் இது ஐரோப்பா கண்டம் முழுமையும் பரவியிருக்கும்: இயந்திரயுகம் என்ற புதுப்புரட்சி வந்து இது பரவுவதைத் தடுத்து விட்டது. இப்புரட்சி கிராமக் கைத்தொழிலையும் கை வினைகளையும் அழித்துவிட்டது. முன்னமேவாழ்க்கைக்கும் நாகரிகத்துக்கும் கிராமமும் சிறுபட்டணமுமே இடமாயிருந்தன; சிறு பட்டணத்தின் செல்வநிலைக்குத் துணையாயிருந்தவை, சிறு கைத்தொழில்களும் விவசாயமும். மேற்கூறிய இயந்திரப் புரட்சியானது இந்த நிலைமையைப் போக்கி, ஆலைத்தொழில் முறை ஓங்கியுள்ள பெரிய நகரங்களை வாழ்க்கைக்கும் நாகரிகத்துக்கும் இடமாக்கிவிட்டது. திறமைவாய்ந்த கைவினைஞனும் தொழிலாளியும் இப்போது தேவையில்லை. பெரிய மில்லுகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் வேண்டியதெல்லாம், கேவலம் தொழில் திறமை இல்லாத வெறும் ஆள் தொகைதான். இங்கு, தொழிலாளிகளைக் கஷ்டப்படுத்தி வேலைவாங்குவதில் கல்வி போதனைக்குச் சந்தர்ப்பம் எதுவும் ஏற்படாது. மேலும், ஆரம்பத்தில் இந்தத் தொழிலாளிகளின் வேலை, மிக்க கொடுமையான இரக்கமற்ற நிலைமையில் நடைபெற்று வந்தது; அந்த நிலையில், தொழிலை வைத்தே கல்வி போதிப்பது என்றால் வெறும் கேலிக்கூத்தாய்த்தான் இருந்திருக்கும்.

ஆகலால் அங்கு கல்வி போதனைக்கு எந்த முயற்சியும் இல்லை. கிராமத்தில் தொழில்கள் வீட்டில் நடைபெற்று வந்த காலத்தில், வீட்டில் இருந்த உழைப்பில் சிறு பிள்ளைக்கும் பங்கு இருந்தது; உழைப்பிலிருந்து அவன் அறிவு வளர்ச்சியும் அதிகம் பெற்றான். இயற்கையோடியைந்த வாழ்வு வாழ்ந்து, இயற்கைச் சூழ்நிலையிலிருந்தே மக்கள் தங்கள் கல்வியில் பெரும்பகுதியையும் சாமானியப் பகுத்தறிவையும் பெற்றார்கள்; இந்தச் சூழ்நிலையை விட்டு, தொழிற்சாலை முறையும் நகரவாழ்க்கையும், நாளுக்குநாள் அவர்களை அதிகமாகப்பிரித்துவிட்டது.

ஆகவே, கல்வித்துறையில் இயந்திரப் புரட்சியின் பலன் பிற்போக்குத்தான். பணம் படைத்தவர்களான நகரமக்களுக்குப் பெயரளவான கல்வி போதிப்பதற்கேற்ற செயற்கை வசதிகளை அது ஏராளமாய்ப் பெருக்கியது மட்டுமன்றி, கிராம மக்களுக்கும் நகரத்தில் வாழும் தொழில் திறமையற்ற ஏழைமக்களுக்கும் கல்வி விளைவதற்கான வசதிகளைப் பெரிதும் குறைத்து விட்டது. இதன் பயனாக, செல்வத்தில் மட்டுமல்ல, கல்வியிலும் நாகரிகத்திலும் நல்லுணர்விலும், நகரத்தில் வாழ்கிற செல்வம் படைத்த மேல்வகுப்பினருக்கும், கிராம மக்கள், நகரத்தில் வாழும் ஏழைமக்கள் ஆகிய மற்றையோருக்குமிடையில், நீக்கமுடியாத பெருத்த வேற்றுமை தோன்றிவிட்டது. இயந்திரயுகம் தோன்றுவதற்கு முன்னமே, கல்வியும் பண்பாடும், பணம் படைத்தவருக்கு மட்டு முரிய ஏகபோக உரிமையாயிருக்கவில்லை; உண்மையாகப் பார்த்தால், அப்போது புரோகித வகுப்பாரும் நடுத்தர வகுப்பாருமே கல்வியில் மேம்பட்ட நிலையில் இருந்தார்கள். மேம்பட்ட கல்வி நிலையுடைய இவர்கள் மண்ணிலே கால்கொண்டிருந்தார்கள்; அதாவது, இயற்கையோடியைந்து வாழ்ந்தார்கள்; பாமரமக்களோடு

இவர்களுக்கு எப்போதும் நெருக்கமான தொடர்பு இருந்தது. இதனால்தான் பண்டைக் காலத்திலும் இடைக் காலத்திலும், கல்வியானது பாமரமக்களுக்கும் ஓரளவு எட்ட முடிந்தது. ஆனால் தற்காலத்தில், புதிதாக வந்த கல்வியானது, நகரத்தில் வாழ்ந்த பணக்காரர்களுக் கென்றே ஏற்பட்ட காரணத்தால், முன்னமே மேல்வகுப் பாருக்கும் பாமரமக்களுக்கும் இருந்துவந்த இந்தத் தொடர்பை அறுத்துவிட்டது. பாமரமக்களுடைய வறுமை யோடு, அஞ்ஞானமும், ஒழுக்கக் குறைவாலும் செல்வக் குறைவாலும் ஏற்படும் தாழ்வும், சேர்ந்துகொண்டன. அடுத்து இவற்றின் விளைவாக, நகரத்து ஏழைமக்களும் கிராமத்து ஏழைமக்களுமான பெரும் சமூகம் தோன் றிற்று; இதில் எத்தனையோ சிக்கலான பிரசினை கள் எழுந்து, உள்நாட்டில் மட்டுமன்றி, பல்வேறு நாடு களிடையில்கூட, சமாதானம் நிலவாமல் பூசலில் முடியு மோ என்ற அச்சத்தில் கொண்டுபோய் விட்டிருக் கின்றன.*

வினைத்திறமை பொருந்திய உழைப்பும் கைத்தொழில் களும் க்ஷீணமடைந்து, அவற்றால் உற்பத்தியான வஸ்துக் களுக்குப் பண மதிப்பு அற்றுப்போனபோது, கல்வி போதனை அரசாங்கம் செய்யவேண்டிய வேலையாயிராத பட்சத்தில், அவ்வுழைப்பையும் தொழில்களையும் பள்ளிக் கூடத்தில் புகுத்தினால், கல்விக்குச் செலவு அதிகமாகிறது. இன்னும் பிற்காலத்தில், தற்கால அரசாங்கங்கள் புதுக் கல்வித்திட்டத்தை ஒருவேளை ஏற்றுக் கைக்கொண்டிருக்க லாம்; ஆனால், இப்போது கல்வி என்பது ஒரு பாடசாலை அல்லது இரண்டு பாடசாலையைப் பொறுத்த விஷய மன்று; நாடு முழுமையும் இலவசமாய்க் கல்வி கற்பிப்பது என்ற விஷயமாகிவிட்டது. அப்படியிருந்தும், கல்வி

பூசல்தான் சமீபத்தில் முடிந்த கொடிய யுத்தம்.

யானது தேச நிர்மாணத்துக்கான அடிப்படையான வேலை யாதலினாலே, இதற்காகும் செலவை அரசாங்கங்களே வகிக்க முயன்றிருக்கக்கூடும்; ஆனால், இதற்குப் பண மில்லாததால் இது நடக்கவில்லை; அரசுகளிடையே நாடு பிடித்தல் காரணமாகவும் அரசியல் செல்வநிலை காரண மாகவும் ஏற்பட்டுள்ள போட்டியின் பயனாக, நாளுக்கு நாள் யுத்த முஸ்தீப்புக்கள் விரிந்துகொண்டே போனபடி யால், கிடைக்கக்கூடிய பொருள் வசதி அவ்வளவையும் இவைகளே கபளீகரம் செய்துவிட்டன. கல்விக்குச் செலவு மிகவும் அதிகம் என்பது உண்மை; இது ஒருபுற மிருக்க, பள்ளிக்கூடத்தில் உற்பத்தியாகும் சாமானுக்குப் பணமதிப்பு பூஜ்யம் என்றுள்ள நிலைமையில், பாடத் திட்டத்தில் தொழிலைப்புகுத்துவது, இயற்கைக்கு மாறான, வேண்டாத காரியமாய் முடியும். தொழிலைக் கற்பிப் பதிலோ, பிள்ளைகள் கற்பதிலோ, இங்கு எவ்வித ஆர் வமோ ஊக்கமோ இராது. பயனில்லாத ஒரு தொழிலைப் பெயரளவில் போதிப்பது, தொழிலோடு பாடங்களை இயைத்துக் கல்வி போதிக்க இடந்தராது. இது பிள்ளை களிடம் வெளிப்படாமல் மறைந்துள்ள முழுத்திறனையும் வெளிப்படுத்த வியலாது. ஆதலால், கல்விச் சீர்திருத்தக் காரர்கள் கூறியன யாவும் செயல்முறையில் நடைபெறா மலே நின்றுவிட்டன.

கல்விச் சீர்திருத்தம் ஏன் நடைமுறையில் செய்து பார்க்க முடியவில்லை என்பதற்கு இதுவே பிரதான காரணமென்பது விளங்கும். தவிர, புதிய சமூக அமைப் பில் அரசியல்வாதிகள் பெற்றிருந்த ஸ்தானமும் அதற்கு ஒரு துணைக்காரணம்; ஆனால், இது மிகவும் முக்கியமான காரணம். ஜனநாயகம் வளர வளர, அரசியலானது உயர்ந்த வகுப்பாருக்கு மட்டுமுரிய தனிச்சொத்தாயில்லை. நடுத்தர வகுப்பார் கிரமமாகப் பொதுவாழ்க்கையில் பங்கு

கொண்டு, தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட ஆரம்பித்தார்கள். புதிய அரசியல் நிலைமையில் தலைவராக வருபவர்களுக்கு வாக்காளர் தொகுதியிலிருந்துதான் பலம் வந்ததே யொழிய, பிறப்பினுலோ சமூக அந்தஸ்தினுலோ வரவில்லை. அவர்கள் தங்கள் பதவியைப் பலப்படுத்துவதற்குத் தங்கள் தங்கள் வாக்காளர் தொகுதிக்கு ஆவன செய்யவேண்டியிருந்தது. வெற்றிகரமாக இதைச் செய்வதற்கு, அவர்கள் சொல்லால் கோட்டை கட்டுவதிலும் மக்களை மயக்குவதிலும் திறமையடைவதற்கான பயிற்சி பெறவேண்டியிருந்தது. அரசியல்வாதி பாமர மக்களைத் தன் வழியே திருப்பித் தன் வேலையில் வெற்றி பெறவேண்டுமானுல், கேட்டை நியாயமென்றும் நியாயத்தைக் கேடென்றும் நிரூபித்துக் காட்ட முயலவேண்டும். கூட்டத்தின் மனம் எப்படிப் போகுமோ அந்த வழியிலே பேசி மக்கள் மனத்தைக் கவரவேண்டும். இதற்கென்று சில சொற்றெடர்களையும் கோஷங்களையும் தயாராய் வைத்திருந்து உபயோகிக்க வேண்டும். தேர்தலில் தான்கொடுத்தவாக்கைக் காக்கமுயல்வதாய்க் காட்டிக்கொள்ளவேண்டும் தேர்தலில் கொடுத்த வாக்கு என்ருல், அந்தந்தச் சமயத்துக்கு ஏற்ருற்போல் பொதுப்படையாகச் சொல்லிய வார்த்தை ஆனபடியால், அந்த வாக்கை உண்மையில் நிறைவேற்றமுடியாது. இருந்த போதிலும், அரசியல்வாதியாயிருப்பவர், தாமும் தம் கட்சியாரும் செய்தது சரியென்று எப்படியோ நிரூபித்துக் காட்டவேண்டும். தாம் ஒன்றையுமே செய்ய முயலாமல் கூட இருந்திருக்கலாம்; ஆயினும், வெறும் பேச்சாலும் பிரசாரத்தாலும், அவர் தாம் எவவளவோ செய்துமுடித்து விட்டதாய்க் காட்டவேண்டும். அறிவுத்துறைகள் என்னென்ன உண்டோ அவை யனைத்திலும் தாம் கற்றுத் துறைபோன கல்விமானென்று பாமரமக்களுக்குக் காட்ட வேண்டும். அவர் படிப்பு, விஷய சம்பந்தமில்லாத வெறும் ஏட்டுப்படிப்பாயிருந்தால் தான் இது சாத்தியம். பண்

டைக் கிரேக்க நாட்டில் தர்க்க சாஸ்திரத்துக்கு எவ்வளவு மதிப்பிருந்ததோ, அதுபோலவே இந்த நவீன ஜனநாயகத்திலுங்கூட, தர்க்க அறிவுக்குத்தான் செயற்கையாக முதன்மை ஏற்பட்டிருக்கிறது. பொதுப் பாடசாலைகள் கலாசாலைகள் அனைத்திலும், பேச்சுக் கழகங்கள் பொதுச் சபைகள் முதலியன ஏற்பட்டிருக்கின்றன. இங்குதான் பிற்பட்டு வக்கீலாகவும் அரசியல்வாதியாகவும் வரப் போகிறவர் தம் எதிர்காலப் பதவிக்கு வேண்டியதைப் பயின்றுகொள்கிருர். இந்தக் கழகங்களில் நடைபெறும் வர்தங்கள் யாவும், யதார்த்தத்துக்கும் வாஸ்தவச் செய்திகளுக்கும் சம்பவங்களுக்கும் சம்பந்தமில்லாமலே இருப்பது இயற்கை. கிரமமாக, பயனுள்ள முறையில் ஆழ்ந்து சிந்திப்பதற்கு வேண்டிய அறிவும் அனுபவமும் மாணவனுக்கு இன்னும் ஏற்படவில்லை; ஏற்படாதபோதிலும், தன்னிடமில்லாததை அவன் ஏட்டளவான தர்க்கத்தாலும் வாக்குத்திறமையாலும் சமாளித்துக்கொள்கிருன். இந்த மாதிரிக் கலாசாலைப் பேச்சுப் போட்டியில் பரிசு பெறுகிற பையனே, ஜனநாயக ஆட்சிமுறையில் எதிர்காலத்தில் அரசியல் வாதியாக வளர்கிருன். உண்மையான அரசியல் நிபுணர்கள் இன்று போலியாகவும் கபடவேஷமாகவும் போகிற போக்குக்கும் இதுவே காரணம்.

ஆயினும், யதார்த்த விஷயங்களை ஒட்டியே கல்வி போதனை நடைபெறவேண்டும், கருத்தும் செயலும் ஒன்று சேர்ந்து இயங்கி வலிவடையவேண்டும் என்ற கொள்கை அடியோடு மறைந்துபோய் விடவில்லை. இதற்குப் பாடசாலையிலுள்ள அறிவியற்சோதனைச் சாலைகளிலும் பல - கைத்தொழிற் பயிற்சிச்சாலைகளிலும் அங்கீகாரம் இருந்தது. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் மிகவும் பிரபலமாய் நடைபெறுகிற பெரிய விஞ்ஞானக் கல்விச்சாலைகளும் தொழிற்கல்வி நிலையங்களும், ஏதேனு

மொரு தொழில் உற்பத்திச்சாலையுடன் இணைத்தே நடத்தப்பெறுகின்றன; முக்கியமாய் அமெரிக்காவில் இப்படி நடக்கிறது. விஞ்ஞான கலாசாலைகளும் எஞ்சினியரிங் கலாசாலைகளும் தொழிற்கலை நிலயங்களும், தொழிற்சாலைகளோடு இயைக்கப் பெருதபோதிலும்கூட, அங்குள்ள மாணவர் தங்கள் பயிற்சிக்காகவும் வேலையில் அப்பியாசத்துக்காகவும் கைத்தொழில் ஸ்தாபனங்களுக்குக் காலந்தோறும் கிரமமாய்ப் போகவேண்டியிருக்கிறது. பாடமும் அதற்குரிய தொழிலும் ஒன்ருேடு ஒன்று இணைந்தே நடைபெறவேண்டும் என்ற கொள்கையை இந்தத் துறைகளிலெல்லாம் அங்கீகரித்திருக்கிருர்கள். சரித்திரம் பொருளாதாரம் முதலான பாடங்களில் மட்டுமே இந்தக் கொள்கையைப் போதுமானபடி ஏற்றுக்கொள்ளவில்லை. மேலே விவரித்தபடி, இதற்குக் காரணம், தற்கால நாகரிகம் ஜனநாயக அரசியல்முறை ஆகியவற்றில் அமைந்துள்ள தனியான பொருளாதார நிலைமையும் கைத்தொழில் நிலைமையும் ஆகும். இங்குக்கூட, நல்ல பயன் விளைவித்த சோதனைப் பாடசாலைகள் போதுமான அளவு இல்லாமல் போகவில்லை.

எனினும், கூர்ந்து கவனித்துச் செய்வதன்மூலம் கல்வி பயிற்றுவது என்ற கொள்கை, செயல் முறையில் நிறைவேற்றப் பெருவிட்டாலும்கூட, தற்கால உபாத்திமைத்துறை அனைத்திலும் பூரணமாய் அங்கீகரிக்கப்பட்ட கொள்கையாய் இருக்கிறது. சிறு குழந்தைகளுக்கு என்று எங்கு பார்த்தாலும் கிண்டர்கார்டன் முறையும் மாண்டிசோரி முறையும் வழக்கத்தில் இருக்கின்றன. மேலும், சோதனை செய்து கற்பதை அடிப்படையாகக் கொண்ட டால்டன் திட்டமும் பிராஜெக்ட் முறை என்ற சுயநோக்க முயற்சிமுறையும் இருக்கின்றன. இந்தத் திட்டங்கள்முதலியன பிறநாடுகளில் கல்வித்துறையில் விசேஷ

மாக ஒன்றும் சாதித்துவிடவில்லை; அங்கெல்லாம் எப்படி யிருந்தபோதிலும், அவற்றை நம்நாட்டில் கடைப்பிடித்த தன் பயனாக, பிள்ளைகளுக்குக் கல்வி பயிற்றும் செலவு அளவுக்கு மிஞ்சிப் பெருகி, தனவந்தரும், நடுத்தர வகுப்பில் செல்வராயுள்ளவர்களும் மட்டுமே பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கமுடியும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பம்பாய் முதலான பெரிய நகரங்களில், ஒரு பிள்ளையின் பள்ளிக்கூடச் சம்பளம் மாதம் எட்டு ரூபா முதல் பதினைந்து ரூபா வரையில் ஆகிறது. வீட்டிலிருந்து பள்ளிக்கூடம் போவதற்கு ஆகும் வண்டிச்செலவையும் இத்தொகையுடன் கூட்டிக்கொள்ளவேண்டும். கிண்டர் கார்டன் முறைப் பள்ளிக்கூடத்தில் படிப்பதற்குச் செலவு இவ்வளவு ஆனால், பிராஜெக்ட் முறைப் படிப்புக்குப் பிடிக்கும் செலவோ, தனவந்தருக்குக்கூடக் கட்டி வராது. இந்த முறைகளுக்கு அடிப்படையான கல்வித் தத்துவங்கள் உத்தமமானவையே; ஆனால், இந்தியா போன்ற பரம ஏழை நாட்டுக்கு, அவ்வளவு செலவு ஒரு நாளும் பொருந்தாது. அதிகச் செலவு என்பது ஒருபுறம் இருக்க, இந்தக் கல்வித்திட்டங்களை நாம் முழுமையும் பயன்படுத்திக்கொள்ள முடியாது. ஆரம்பத்தில் சில வருஷங்கள் குழந்தையானவன் இந்தத் திட்டங்களின்படி கல்வி பயின்றபோதிலுங்கூட, அதன்பின் பழைய சம்பிரதாய முறைக் கல்வியையே அவன் பயிலவேண்டி யிருக்கிறது. கல்வியால் முதலில் அவனுக்கு என்ன நன்மை விளைந்திருந்தபோதிலும், வகுப்பறையில் பிற்பட்டு ஆர்வமின்றி, ஆக்க முயற்சியின்றி, மூளையை மட்டும் யந்திரம் போலப் பல வருஷம் செலவிடவேண்டி யிருப்பதால், அந்த நன்மை முழுமையும் அவன் இழந்துவிடுகிறான்.

காந்தியடிகள் தம்முடைய புதிய கல்வித்திட்டத்தால் இந்த நிலைமைக்கு விமோசனம் தருகிறார். இன்றுள்ள

நிலைமையில், வருவாய் தருவதும் உடல் உழைப்புப் பொருந்தியதுமான ஆக்கவேலை மூலமாய்க் கல்வி பயிற்று விப்பது சாத்தியமாகும்படிச் செய்வதும், செயல் முறையில் கல்வி பயிற்றுவிப்பதுமே அவருடைய திட்டமாகும். தற்காலக் கல்விமுறையை மேலே நாம் விரிவாய்க் குறிப்பிட்டோம். இதைச் சீர்திருத்தி, செலவில் இன்னும் குறைந்ததாக்கி, எல்லோருக்கும் கல்வி கிடைக்கும்படிச் செய்வதும், கல்வி போதிக்கும் வழிகளைச் சீர்திருத்துவதுமே அவருடைய உத்தேசம் என்று கூறலாம்; தற்போது வழக்கத்திலுள்ள கல்விபோதனை முறைகள் எல்லோரும் ஏற்றுக்கொள்கிற போதனைத் தத்துவங்களுக்கு ஒத்திருக்கும்படிச் செய்வதே அவருடைய நோக்கம். குழந்தைகளுக்கு வெறும் விளையாட்டுப் பொம்மைகளைக் கொடுத்துவிட்டதால் மட்டும் இந்த நோக்கம் நிறைவேறி விடாது; அதிக நேரத்தையும் அதிக வஸ்துக்களையும் பொருளையும் செலவழித்து, மேற்கொள்ளும் வேலையால் விளையும் பொருள் மதிப்பைக் கவனிக்காமலும் அதைக் கணக்கிட்டுப் பார்க்காமலும் ஏதோ வேலை செய்வதால் இது கைகூடாது. ஆனால், ஒரு தொழிலைக் கற்பித்துக் கவனத்துடன் திட்டவட்டமாய் அதை அறிந்து திறமையாகச் செய்யவேண்டும்; தொழில் திறமையையும் தொழிலறிவு வளர்ச்சியையும், அதனால் என்ன பண வருவாய் வரும் என்பதை வைத்து அடிக்கொரு தடவை கணித்துக் கொள்ளவேண்டும்; இத்தொழிலைக் கௌரவமான எளிய ஜீவனமாவது நடத்த வழிகாட்டுவது என்ற உத்தேசத்தோடு மட்டும் கற்காமல், பொதுவாய்க் கல்வியறிவு உண்டாவதற்கு இதுவே உபயோகமான அறிவியல்முறை என்று கருதிக் கற்கவேண்டும். இந்த அளவு கவனத்துடனும் திருத்தத்துடனும் செய்கிற உழைப்புத்தான் அறிவியல்ரீதியான உழைப்பாகும். உண்மையான கல்வி

யாவது, தனிப்பட்டவர் வளர்ச்சியும் சமூக முன்னேற்றமுமேயாகும். இந்தக் கருத்தின்படி பார்த்தால் காந்தியடிகளின் கல்வித்திட்டத்தால் விளையும் பயன் மிகவும் பெரியது என்று எவ்வளவு சொன்னாலும் தகும்.

வாழ்க்கைப் பிரசினைகளை ஆராய்தல்

முடிவாகச் சொன்னால், வாழ்க்கை வாழ்வதற்காகத் தான் கல்விப்பயிற்சி. ஆதலால், கல்விப்பயிற்சியானது வாழ்க்கைக்கும் வாழ்க்கையில் எழும் பிரசினைகளுக்கும் சம்பந்தமே இல்லாமல் இருக்கமுடியாது. வாழ்க்கை எங்கும் சிக்கலாயிருக்கிறதேயொழிய எளிமையாயில்லை; அதில் எழும் பிரசினைகளும் சிக்கலானவை. வாஸ்தவமாக உண்டாகும் கஷ்டங்களைத் தீர்ப்பதற்கும் சந்தர்ப்பங்களைச் சமாளிப்பதற்கும், அறிவுத்துறையில் விசேஷமான ஒரு பகுதியை மட்டும் கவனித்தால் போதாது. வாழ்க்கைப் பிரசினை ஒவ்வொன்றிலும், அனேக விஷயங்கள் சேர்ந்திருக்கின்றன. அதைத் தீர்ப்பது என்றால், நெருங்கிப் பின்னிக்கிடக்கும் அவ்வனேக விஷயங்களின் உதவி இருந்தால்தான் முடியும். உதாரணமாகப் பயிர்த்தொழிலைப் பாருங்கள். எத்தனையோ துறைகளில் இதைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. தாவரவியல், பௌதிகவியல், இரசாயனவியல் என்ற துறைகளில் பயிர்த்தொழிலை ஆராய வேண்டும்; இவை மட்டுமல்ல; பொருளாதாரம் அரசியல் என்ற துறையிலும் அதைப் பார்க்கவேண்டும். நம் பாடசாலைகளிலோ, பௌதிக சாஸ்திரம் பற்றிய பாடங்களுக்கும் பொருளாதாரம் அரசியல் பற்றிய பாடங்களுக்கும், வழக்கமாய் எவ்விதத் தொடர்புமே இல்லை. பௌதிக சாஸ்திரங்கள் நன்றாய்த் தெரிந்திருந்தால், ஒருவர் திறமையான விவசாயி ஆகலாம்; ஆனால், விளைபொருள் விற்பனைக்கு, வியாபார நுணுக்கங்களும் விலைவாசி நிலைமைகளும் அவருக்கு அப்போதைக்கப்போது செவ்வையாய்த் தெரிந்திருக்கவேண்டும்; அவசியமான சொற்பப் பொருளாதார அறிவும் அரசியலறிவும் அவருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்; இவை இருந்தால்தான், தம் சாஸ்திர அறிவை உபயோகித்துத் தாம் விளைவித்த அமோகமான மாசூல்

தம் களஞ்சியத்திலேயே கட்டிக்கிடக்காமல் அவர் விற்பனை செய்யமுடியும். இன்றைய கல்விமுறை இதற்கு வழி காட்டவில்லை; இது விவசாயிக்குக் கொஞ்சம் பௌதிக சாஸ்திர அறிவை ஊட்டிவிட்டு, பொருளாதார அறிவோ வியாபார அறிவோ தராமல் விட்டுவிடுகிறது; விவசாயி யானவர் தாமாகப் பார்த்தும் செய்தும் அநுபவித்து நஷ்டப்பட்டும்தான் இவ்வறிவு பெறவேண்டியிருக்கிறது.

ஆதலால், அக்கல்வி முறை வாழ்க்கைக்கு ஒத்த கல்வி முறையன்று; வாழ்க்கைக்கு ஒத்த கல்வி முறையானது, மேற்குறிப்பிட்டவாறு ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டுள்ள பாடங்கள் வாழ்க்கையில் எழும் பிரத்தியட்சமான பிரசினைகளில் எப்படிச் சம்பந்தப்பட்டிருக்கின்றனவோ அந்தச் சம்பந்தத்தோடு ஒரு தொகுதியாகக் கற்பிப்ப தாகும்; இதுவே சிறந்த கல்விமுறை. பிற்பட்ட நிலையில் வேண்டுமானால், அறிவுத்துறைகளையும் பலவகைப் பாடங்களையும் விசேஷ ஆராய்ச்சியோடு கற்பதன் பொருட்டு வெவ்வேறாய்ப் பிரித்துக்கொள்ளலாம். இந்தப் பிரிவினை கூட, சாமானியப் பிள்ளைகளுக்கு அவசியமில்லை; சிறப்பான திறமைபெற்ற பிள்ளைகளுக்கு மட்டும் இப்படிப் பிரிக்கலாம். இன்று பாடசாலையில் கற்பிக்கும் பாடங்களுக்கிடையில் எந்த இயைபையும் காண்பதற்கில்லை. வாழ்க்கையில் எவ்விதத்திலும் ஒன்றுக்கொன்று சம்பந்தமே இருக்கமுடியாத பாடங்கள், பாடசாலையின் பாட அமைப்பில் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன. கல்வி சம்பந்தமான வேலையில் ஒருமைப்பாடோ பரஸ்பரம் இணைப்போ ஒருபோதும் இருப்பதில்லை. பாடசாலையில் போதிக்கும் உபாத்தியாயர்கள் தங்கள் தங்கள் வேலைகளைத் தனித் தனியாகச் செய்துவருகிறார்கள்; தங்கள் பாடசாலையில் பிற பாடங்கள் கற்பிப்பவர்களும் பிற பாடசாலைகளில் போதிப்பவர்களும் என்ன செய்துவருகிறார்கள் என்பது இவர்

களுக்கு அறவே தெரியாது. இவ்விதமாக, வாழ்க்கையில் வாஸ்தவமாயுள்ள சிக்கல்களைப் பள்ளிக்கூடம் சம்பந்தப் பட்டவரையில் செயற்கையில் சுலபமாக்கி விடுகிறார்கள்! இது பிள்ளைக்கும் உபாத்தியாயருக்குமே கேடானது. வாழ்க்கை, அதைப் பொறுத்த விஷயங்கள் ஆகியவற்றுக் கும் கல்விக்கும் சம்பந்தம் அற்றுப்போகிறது; கல்வி வெறும் சொல்லளவிலும் ஏட்டளவிலும் உள்ள செயற் கையான பாடமாகிவிடுகிறது. இதற்கு மாறாக, ஒரு தொழில்மூலம் வரும் கல்வியில் இவ்விதச் செயற்கைப் பிரிவினை இல்லை; தொடர்பற்ற தனித்தனியான பாடங் கள் இல்லை. கல்விச்சாலைகளில் போதிக்கும் பல்வேறு ஆசிரியர்கள் செய்யும் வேலை, ஒன்றுக்கொன்று தொடர் புடையதாய், ஒன்றையொன்று தழுவி நடைபெறுகிறது. ஒரே கூட்டுக்கல்வி முயற்சியில் படிப்பவரும் படிப்பிப்ப வரும் ஆகிய கல்விச்சாலைச் சமூகம் முழுமையும் பங்குடை யவர்களாகிறார்கள். இதனால், அறிவு வளர்ச்சி ஏற்படுவ தோடுகூட, கல்வி நடைபெறும் காலத்திலேயும் பிரத்தி யட்சமான பலனைத் தருகிறது. இப்படிப்பட்ட கல்விதான் வாழ்க்கை வாழ்வதற்கும் அதில் எழும் பிரசினைகளைச் சமாளிப்பதற்கும் உரிய உண்மையான ஆயுதமாகும்.

சொற்களின் கொடுங்கோன்மை

வெறும் சொல்லளவிலும் ஏட்டளவிலும் உள்ள கல்வியைவிடச் செயல்மூலம் வரும் கல்வியில் மற்ருெரு சிறந்த அம்சம் இருக்கிறது. மாணவன் தான் ஒன்றைச் செய்து கற்பதால், வெறும் சொற்களின் கொடுங்கோன் மையிலிருந்து தப்புகிருன். உழைப்பவன் உபயோகிக்கின்ற சொல் ஒவ்வொன்றும், திட்டமாய் வாஸ்தவமாயுள்ளதொரு பொருளைக் காட்டுகிறது. சொற் பிரபஞ்சத்துக்கு அப்பாற்பட்டதான வெளி யுலகத்தில் சொல்லுக்குரிய பொருளோ, வஸ்துவோ, ஒன்று நிச்சயம் இருக்கிறது. ஏதேனும் ஒரு சொல் இப்படித் திட்டமான வஸ்துவைச் சுட்டாவிட்டால், உழைப்பவனுக்கு அச்சொல்லினிடம் சற்று ஐயந்தான். இவ்வையமும் நியாயமானதே. சொற்கள் வெறும் அடையாளங்களே என்பது அவனுக்குத் தெரியும். சொற்களுக்கென்று தனியான உரிமை எதுவும் இல்லை. அவை வஸ்துக்களையோ, பொருளையோ, தொடர்பையோ, முறையையோ குறிப்பிடுகிற வரையில், அவற்றுக்குப் பொருளும் உண்டு, மதிப்பும் உண்டு. ஆனல் சொற்கள் சுட்டும் பொருளும் சம்பந்தமும் புறவுலகில் இல்லாது போனலும் சரி, அல்லது அவை புறவுலகில் திட்டமின்றி வரையறையின்றி இருந்தாலும் சரி, அச்சொற்களின் மூலமும் அவற்றைத் துணைகொண்டும் பெறும் அறிவுக்கு என்ன மதிப்புக் கொடுப்பது என்பது அவனுக்குத் தெரியும். உழைப்பின் மூலம் கற்பவன், திட்டமான வஸ்துக்களைத் தன் கையால் எடுத்து உபயோகிக்கும்போதும், அவற்றுக்கும் அவற்றின் பெயருக்குமுள்ள தொடர்பைக் காணும்போதும், சொற்களின் பிறப்பை அறிய முடிகிறது; சொற்களுக்கு எவ்வாறு பொருள் அமைந்தது, சொற்கள் எப்படிப் பயன்படுகின்றன என்பதையும் அறியமுடிகிறது. அறிந்தபின், சொற்

களின் ஆற்றல் எவ்வளவு என்பதையும் அவன் வரையறை செய்துகொள்ள அறிகிறுன்.

சொற்கள் பொருளைச் சுட்டுவதற்கான வெறும் அடையாளங்களே என்பதைச் செவ்வையாக உணராததாலும், அவற்றைத் தவருக உபயோகித்துக்கொண்டதாலும், உலகத்தில் இன்று வரையில் அளவில்லாத வீண் சொற்போரும் விவாதமும் ஏற்பட்டிருக்கின்றன. உண்மையான பொருளை அல்லது விஷயத்தையே நேரில் பார்த்துவிட்டால், இத்தனைப் போர்களும் எளிதில் முடிந்திருக்கும். அப்படியின்றி, வெறும் எழுத்தளவிலும் ஏட்டளவிலும் உள்ள அறிவானது, எப்போதும் மூளையைக் குழப்பிவிடும் இயல்புடையது. இதன் பயனுய் வெறும் சொற்களை ஆதாரமாய் வைத்து மக்கள், ஆடவரும் பெண்டிரும், ஒருவரையொருவர் தாக்கவும் துன்புறுத்தவும் எப்போதும் தயாராயிருக்கிறுர்கள். பாஷையைக் கவனமில்லாமலும் ஆராயாமலும் உபயோகித்ததனுல், முக்கியமாக, கருத்துருபத்திலுள்ள பொதுவான வார்த்தைகளை உபயோகித்ததனுல், விளைந்த போருக்கும் ரணக்களரிக்கும் சமமாக வேறெதனுலும் போரோ ரணக்களரியோ விளைந்ததில்லை. சாமானிய மக்கள் இப்படியென்றுல், அறிவியல் நிபுணர்களும் சொற்களாகிய வலையில் சிக்காமல் தப்பியதில்லை. அனேக சமயங்களில், அவர்கள் தாங்கள் உபயோகிக்கும் பாஷை என்ற கருவிக்குத் தாங்களே அடிமையாகிவிடுகிறுர்கள். சயன்ஸ் அல்லது அறிவியற்கலை என்பது வாஸ்தவமான விஷயங்களோடு கவனமாய் ஒத்துப் பார்த்த அறிவு ஆகும். ஆனுல் பல சமயம், அனுபவத்தின் மூலம் ஆராய்ந்து இனி நிர்ணயிக்க வேண்டிய கோட்பாடு ஆகிய பொதுக் கருத்துக்களை இவர்கள், உண்மையென்று நிரூபிக்கப்பட்ட மெய்யான விஷயமாகக் கொண்டு, வாழ்க்கையின் தினசரி விவகாரங்களை ஆராய்கிறுர்கள்.

உதாரணமாக, உலகாயதம் என்பது வெறும் கோட்பாடு தான் ; அறிவியல் ரீதியாக ஆராய்ந்து வாஸ்தவமென்று இதை நிர்ணயித்தாகவில்லை. அறிவியல் சம்பந்தப்பட்ட வரையில் இது இன்னும் ஒரு கற்பனைக் கோட்பாடுதான். நேர்மையான அறிவுடையோர் ஒப்புக்கொள்ளக்கூடிய ஓர் அறிவியல் தத்துவந்தான் இது என்று சோதித்துச் சொல்லக்கூடிய நிலைமை இதற்குண்டா என்பது சந்தேகமே. ஆயினும், அனேக தத்துவ சாஸ்திரிகளும் பொருளாதார சாஸ்திரிகளும் சீர்திருத்தவாதிகளும், இது அறிவியல் ரீதியாக ஸ்தாபிக்கப்பட்ட விஷயமென்றே வைத்து, கிரியாம்சையில் தாங்கள் செய்யவிருக்கும் வேலைத்திட்டத்துக்கு இதையே அடிப்படையாகக் கொள்கிறார்கள். ஒரு தலைமுறைக்கு முன்னால் யந்திரத்தொழில் சம்பந்தமான உலகாயதமே முடிவான தத்துவமாய் இருந்தது. இன்று விவாத பூர்வமான உலகாயதமே முடிவான தத்துவமாயுள்ளது. ஆனால், இரண்டும் அறிவியல்வாதிகளின் வேலையைச் சுலபமாக்குவதற்காக ஏற்றுக்கொண்டுள்ள, நிரூபிக்கப்பெறாத கோட்பாடுகளேயாகும். எனினும், இவற்றை அவர்கள் அறிவியல் ரீதியாகச் சோதித்து நிலைநாட்டி உண்மை என்றே எண்ணுகிறார்கள்.

இப்படியாக உள்ள சொற்களின் கொடுங்கோன்மை பற்றி, பெஸ்டலோஸி பின் வருமாறு எழுதுகிறார்: "வெறும் சொற்கள், சொற்சுவை, அபிப்பிராயம் என்ற சுழலில் மக்கள் அகப்பட்டு, வாழ்க்கையிலுள்ள விஷயங்கள் பற்றிக் கிரமமாக வளரவேண்டிய அறிவு பெறாமல் சுழலும்போது அவர்களுடைய மனமானது, சொல் என்ற ஒன்றே ஆதாரமாய்க் கொண்டு வளரும்; வேறு எவ்வித வலிமையும் அதற்கு இருக்கமுடியாது." மற்றோரிடத்தில் அவர் இன்னும் சொல்லுகிறார்: "ஐரோப்பாவில் மக்களுடைய பண்பாடென்பது, வெறும் பிதற்றலாகிவிட்டது.

இது மெய்யறிவு பெறுவதற்கும் பக்தி பூண்பதற்கும் கேடானது. இது வெறும் சொற்களைப் போதிப்பதாக இருக்கிறது. இச்சொற்கள் சொற்ப மனக்கோட்டை கட்டவும் ஆடம்பரம் செய்யவுமே இடமளிக்கும். பக்தியினாலும், அன்பினாலும் விளையவல்ல சாந்தம் நிறைந்த ஞானம் இதனால் பிறக்காது. இதற்கு மாறாக, பக்தியின்மை, மூடநம்பிக்கை, சுயநலம், உணர்ச்சியற்ற தடித்தனம் என்பவற்றில் சொற்கள் மக்களைச் செலுத்துகின்றன. நம் பள்ளிக்கூடங்களிலுள்ள கல்விபோதனை முழுமையும், சொற்களின்மேலும் ஏட்டின்மேலுமுள்ள மோகம் போர்த்துவிட்டது. நாம் இப்போதுள்ள நிலையில் இனி நெடுங்காலம் இருக்க இயலாது என்ற அளவுக்கு இந்த மோகம் போயிருக்கிறதென்பதை யாரும் மறுக்கமுடியாது. சமூகப் பழக்கம் நல்லொழுக்கம் சமயம் ஆகிய துறைகளில் உணர்ச்சியற்ற செத்த நிலையில் நாம் நில்லாமல் நம்மை காத்துக்கொள்ள வேண்டுமானால், அதற்கு ஒரே வழிதான் உண்டு : அதாவது, நம் பள்ளிக்கூடங்களில் மேலெழுந்தவாரியாகவும் துண்டு துண்டாகவும் பாடங்களைக் கற்பிக்கும் போதனை முறையிலுள்ள மோகத்தை அடியோடு தவிர்த்து, உள்ளுணர்வு ஒன்றுதான் உண்மையான ஞானம் சுரக்கும் ஊற்று என்பதை ஒப்புக்கொள்வதே அந்த வழி. பலவற்றையும் ஆராய்ந்து இந்தத் திட்டமான அபிப்பிராயத்துக்கு நான் வந்திருக்கிறேன்." பயனற்ற, உற்சாகமில்லாத, ஆவல் ஊட்டாத புத்தகக் குவியல்களை நம் பிள்ளைகள் தலையில் சுமத்துகிறோம்; புத்தகத்திலடங்கிய பொருளின் பெருமை கருதியல்ல; சில ஆசிரியர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு; புத்தகம் விற்றால் இவர்களுக்கு லாபம் கிடைக்கும் என்ற எண்ணம்தான் இதற்குக் காரணம். மேலே பெஸ்டலோஸி குறிப்பிட்டதோடு இந்தப் புத்தகக் குவியல்களையும் சேர்த்துக்கொண்டால்,

இந்தியாவில் இன்றுள்ள கல்வியின் நிலைமையை உண்மையாகவும் பூர்த்தியாகவும் படம் போட்டுக் காட்டியது போலாகும்.

பொதுப்படையான சொற்களுக்கும் கருத்தைக் குறிக்கும் தொடர்களுக்கும் திட்டமான பொருள் எதுவும் இல்லை; வாஸ்தவ உலகத்தில் குறிப்பாகவும் திட்டமாகவும் அவை எதையும் உணர்த்தவில்லை. பௌதிக சாஸ்திரங்கள் யதார்த்த விஷயங்களைச் சொல்லுகின்றன. கோளாறு இல்லாத நேர்மையான அறிவுடைய மக்களிடையே இவ்விஷயங்கள் பற்றி எந்த அபிப்பிராய பேதமும் இருக்கமுடியாது. ஆனால், சமூக சாஸ்திரங்களோ, பொருளாதார சாஸ்திரத்தையும் அரசியலையும் ஒத்தவை. இவை பொதுவான கருத்துருவத்திலுள்ள சொற்களை வைத்தே விவகாரம் நடத்துகின்றன. இச்சொற்கள் உணர்த்தும் பொருள் திட்டமாக இல்லை. ஆதலால், இந்தச் சாஸ்திரங்களால் உண்டாகும் ஞானத்தைப்பற்றி, கோளாறில்லாத மிகவும் நேர்மையான புத்தியுடையவர்கள் கூட, மாறுபட்ட அபிப்பிராயங் கொள்ள இடமிருக்கிறது; அப்படியே பல சமயம் மாறுபட்ட அபிப்பிராயம் ஏற்படுகிறது. அறிவியல் ரீதியான சொற்களுக்கு நிலைத்த திட்டமான பொருள் உண்டு; இப்பொருள் எளிதில் மாறாது. ஆனால், மேற்கூறிய படியுள்ள பொதுப்படையான கருத்தை மட்டும் குறிக்கும் சொற்களுக்கு அப்படிப்பட்ட பொருள் இல்லை; ஒருகால் இருந்தாலும், அப் பொருள் சந்தேகத்துக் கிடமாகவேயுள்ளது. எனவே, இவ்விரண்டுக்கு மிடையில் ஏதேனும் வேற்றுமை இருந்தாகவேண்டும். வாஸ்தவ விஷயங்களிலிருந்து பிறந்த ஞானமும், சொல்லளவில் பிறந்த ஞானமும், இரண்டுமே அறிவியல் ரீதியான ஞானந்தான் என்று சொல்வது தர்க்க ரீதியாக மிகவும் பிழைபட்டதாகும்.

மேலும், பொதுப்படையான சொற்கள் என்பவை, சில விஷயங்களிலிருந்தும் யதார்த்தத்திலிருந்தும் அவற்றின் முக்கியமான தன்மைகளில் சிலவற்றை எடுத்துச் சொல்வன ஆகும். ஆனால், இப்படி எடுத்துச்சொன்ன பிறகு, வாழ்க்கையில் நேரும் மிகவும் முக்கியமான உண்மையான பிரசினைகளை முடிவு செய்ய இந்தப் புதுச் சொற்களைத் தாராளமாய் உபயோகிக்கிறார்கள். முதலாளித்துவம், பாஸிஸம், கம்யூனிஸம், காந்தியம் அல்லது வேறெந்தத் தத்துவமாயினும் சரி, இவை யாவும் யதார்த்தத்தை விட்டு நீங்கிய வெறும் சொற்களே யென்பதை அனேகர் உணர்வதில்லை. இந்தச் சொற்களுக்கு நேராகச் சொல்லும் பொருளானது, இவற்றுக்குப் பொருத்தமான திட்டமாயுள்ள எந்த யதார்த்த விஷயத்தோடும் ஒத்திராது; அவரவருடைய சொந்த அபிப்பிராயத்தையும், மனப்போக்கையும், அரசியல் கட்சி சமூகக் கட்சி அல்லது பொருளாதாரக் கட்சியையும் பொறுத்தே இருக்கும். இந்தச் சொற்களைச் சொன்ன மாத்திரத்திலே உலகத்தில் எத்தனை பேர் இன்று தங்கள் வார்த்தைகளை அடக்கிக் கொண்டு அமைதியாய் இருக்கக்கூடியவர்கள்? ஒரே வார்த்தையானது வெவ்வேறான பலர் மனத்தில் நேர் மாறான உணர்ச்சிகளைத் தோற்றுவிக்கும். பாஸிஸவாதி ஒருவருக்கு, கம்யூனிஸம் (பொதுவுடைமை) என்றாலே, உலகத்திலுள்ள அறியாமை கொடுமை மகாபாதகம் வஞ்சகம் எல்லாம் ஒன்றுதிரண்டது என்பது பொருள்படக் கூடும்; தெய்வ நிலையிலிருந்து இழிந்த சாத்தானையே இது குறிக்கும். ஆனால், மார்க்ஸியவாதிக்கு, கம்யூனிஸமென்றால், உத்தமமானது, அழகுடையது எல்லாம் ஒன்று திரண்டது என்று பொருள்படும்; அந்த லக்ஷ்யத்துக்காகவே வாழவேண்டும், அதற்காகவே உயிரையும் தரவேண்டும் என்று அவன் கூறுவான். அது மட்டுமா? அந்த லக்ஷ்யத்துக்காக, பழைய நண்பரென்றும் தோழ

ரென்றுங் கூடப் பார்க்காமல், உடனுெத்த மக்களையும் கொலை செய்வதுகூடப் பொருந்தும் என்று அவன் சொல்லுவான்!

மற்ருேர் உதாரணத்தைப் பாருங்கள். காந்தியம் என்ருலும் இப்படிப்பட்ட அபிப்பிராய பேதமிருக்கிறது. சிலர் மனத்தில் காந்தியம் என்ற மாத்திரத்தில், இன்றைய இந்தியாவில் மிகவும் பிற்போக்கானது, மூடநம்பிக்கையுடையது, குருட்டு வைதிகம், சுரண்டல் முறை என்ற எண்ணமே ஆகும். ஆனுல் வேறு சிலர் மனத்தில், ராம ராஜ்யம் - அந்த ராம ராஜ்யம் எதுவானுலும் சரியே - என்ற எண்ணமே உண்டாகும். சமீபத்தில் ஏற்பட்ட பீகார் பூகம்பத்தின் பிறகு, பூகம்பக் கஷ்ட நிவாரணத்துக்காக பாட்னுவில் நடந்த ஒரு கூட்டத்தில் காந்தியடிகள் தம்முடைய வினய பூர்வமான ஒத்துழைப்பைத் தரத் தயார் என்று சர்க்காரிடம் தெரிவித்துக்கொண்டார். ஆனுல் அவர் அப்படிச் சொன்ன நிமிஷமே, எதிலும் குற்றங் காண்கிற சுபாவமுடைய சிலர் மனத்தில், 'வினய பூர்வமான ஒத்துழைப்பு' என்ற சொற்கள், ஏகாதிபத்தியத்துக்கு அடிபணிதல், அடிமைப்புத்தி, அன்னியர் சுரண்டலுக்கு ஆதரவு என்ற நினைப்புக்களை எழுப்பிவிட்டன. ஆனுல், இச்சொற்களைச் சொன்னவர் சர்க்காரை அஞ்சாது எதிர்த்து வந்தவர் என்பதையோ, தாம் சர்க்காருக்குப் பணிந்து இவ்விதம் சொல்லவில்லை, தம் ஆற்றலின் வன்மையை நன்ருய் உணர்ந்தே இவ்விதம் சொன்னுர் என்பதையோ, அவர்கள் கவனிக்கவில்லை. அவருடைய ஒத்துழைப்பைச் சர்க்கார் பயன்படுத்திக் கொள்ளவில்லை யென்ருல், அவர் தாம் போகிற போக்கில் நிச்சயம் போகத்தான் போவார் என்பது எல்லோரும் நன்ருய் அறிந்த செய்தி. அவரைக் குறைகூறியவர்கள் இதை எண்ணிப் பார்க்கவில்லை; எந்தச் சந்தர்ப்பத்தில் அவர்

இப்படிச் சொன்னார் என்பதையும் பார்க்கவில்லை. அந்தச் சந்தர்ப்பமானது, அங்குள்ள கோடிக்கணக்கான ஏழையும் பணக்காரனும், உயர்ந்தவனும் தாழ்ந்தவனும், நெஞ்சைப் பிளக்கிற கொடுந்துன்பத்தில் சிக்கிக்கொண்டு பரிதவித்த சமயம்; அங்கிலையில் எல்லா வேற்றுமைகளும் மறைந்து போக வேண்டும். வயதும் பக்குவமும் நிரம்பியவரான காந்தியடிகள் கூறிய சொற்களில் எவ்வளவு வினயம் அடங்கியிருக்க வேண்டும் என்பதையும் அவர்கள் யோசிக்கவில்லை. 'அவர் உபயோகித்த சொற்களுக்கு ஒரே அர்த்தந்தானுண்டு; அந்த அர்த்தம் நாங்கள் சொன்ன அர்த்தமே' என்ற தோரணையில் அவர்கள் பேசினார்கள்.

இன்னுமோர் உதாரணம் பார்ப்போம். ஆதாரக் கல்வி என்பது சிறு பிள்ளைகளை உழைக்கும்படி செய்வது. உடனே, குறைகூறுபவர்கள் மனக்கண் முன் தோன்றும் காட்சி என்ன? போதுமான உடை கூட இல்லாத குழந்தைகளை அரை வயிற்றுக் கஞ்சி போட்டுக் கஷ்டப் படுத்தி வேலை வாங்கும் காட்சிதான். இப்படி எண்ணிக் கண்டனம் செய்யத் தலைப்படுபவர்கள், 'சிறு பிள்ளைகளை உழைக்கும்படி செய்வது' என்றால் என்ன என்று விசாரிப் பதேயில்லை. எந்தச் சந்தர்ப்பத்தில், என்ன நிலைமையில் உழைப்புக் கஷ்டமாகிற தென்றும், சுரண்டலாகிற தென்றும், அவர்கள் ஆராய்வதில்லை. குழந்தைக்குக் கொடுக்கும் வேலையானது அவனுக்கு அதிகச் சோர்வளிப் பதாயிருக்கிறது என்று குழந்தையின் உடல் தத்துவ ரீதியாகவும் மனோதத்துவ ரீதியாகவும் நிரூபிக்கவேண்டும், அல்லது, ஆதாரக்கல்வித் திட்டத்தின்படி, குழந்தைக்குத் தரப்படும் வேலையின் தன்மையும் நேரமும் அவனுடைய வளர்ச்சியைத் தடைசெய்து, அவனுடைய பண்புகளை மந்த மாக்குமென்று நிரூபித்தாகவேண்டும். இப்படி நிரூபித்தால்

தான் அவர்கள் கூறும் கண்டனம் பொருந்தக்கூடியதாகும். அன்றியும், குழந்தையின் கல்வித்துறையிலும் குழந்தையின் வாழ்க்கையிலும் உழைப்புக்கு இடமில்லாவிட்டால், குழந்தையின் திறன்களின் வளர்ச்சி குன்றிப்போய்விடும் என்று நாம் எடுத்துக்காட்டினாலும் கூட அவர்கள் கேட்பதில்லை. இன்று எந்தத் துறையிலும், அறிவியல் ரீதியான ஆராய்ச்சியே பெருகிவருகிறது ; ஆனால், இக்கருத்துக்களை ஆராய்வதற்கு அறிவியல் ஆராய்ச்சி அவசியமென்று மேற்குறித்த கண்டனக்காரர்கள் கருதுவதில்லை. ஆராய்ச்சியெல்லாம் நெடுங்காலத்துக்கு முன்னமேயே முடிந்து போய் விட்டதென்றும், குழந்தை யுழைப்பு, சுரண்டல் முதலிய பொதுவான தொடர்கள் அவ்வாராய்ச்சியில் எழுந்தவை யென்றும், இச்சொற்றொடர்களை வைத்தே, மிகவும் அவசியமான பயனுள்ள தொரு கல்விச் சீர்திருத்தத்தைக் கூடத் தடை செய்து அல்லது அழித்து விடலா மென்றும் கருதுகிறார்கள்.

சமத்துவம், பிரஜா சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், வேலை நிறுத்தம் செய்வதில் தொழிலாளருக்கு உரிமை என்பன முதலான பலவகைச் சொற்றொடர்கள் இன்று நம்மிடை வழக்கில் உள்ளன. இவற்றால் ஏற்படுவதெல்லாம், முடிவில்லாத வாக்குவாத மொன்றுதான். அதிகம் கற்றோரிடையே எழுகிற வெறும் விவாதங்கள் நடுத்தெருவுக்கும், கடைச்சந்திக்கும் வராமல் அவர்களோடு நின்றுவிட்டனவானால், உலகத்துக்கே பெருத்த க்ஷேமம். முற்காலத்தில் இவ்விவாதங்கள், கல்லாத மக்கள் வரை சென்ற காரணத்தால், பில்லி சூனியக்காரரென்று சிலரை உயிரோடு வைத்துக் கொளுத்தும் நிலைமையை ஏற்படுத்தின. ஆனால், தற்காலத்தில் இவை உள்நாட்டுப் பூசல்களையும் பலவேறு நாடுகளுக்குள் பெரும் போர்களையும் வகுப்புத் துவேஷத்தையும் வகுப்புச் சண்டையையும்

தோற்றுவிக்கின்றன. கலகக்காரர்களை அகற்றுவதற்கும் வேறு தனிச் சிறைகளில் இவர்களை அடைப்பதற்கும் அவசியம் எழுகிறது.

தான் கொண்டதே கோலம் என்ற பிடிவாதமும் தன் கொள்கையில் வெறியும், நாகரிகம் குறைந்து சமய வேகம் மிகுந்திருந்த புராதன காலத்தில்தான் மலிந்திருந்தன என்று சொல்வதற்கில்லை. வெவ்வேறு காலத்தில் இவை வெவ்வேறு வகையான மக்கள் மனத்திலும் எண்ணத்திலும், செய்கையிலும் வந்து பற்றிக் கொள்கின்றன. பண்டைக் காலத்தில் இந்த வெறி என்பது, சமயத் துறையிலும் சமயப் புரோகிதரிடமும் மட்டுமே குடி கொண்டிருந்தது. ஆனால் இன்றோ, துவேஷம் என்ற இவ்வரக்கனுடைய ஆட்சி, பொருளாதாரத் துறையிலும் அரசியல் துறையிலும் மட்டுமல்ல, சயன்ஸ் என்கிற அறிவியல் துறையிலும் கூடச் செல்லுகிறது. கல்வி முறையில் ஏற்பட வேண்டிய மாறுதலானது, சொற்களின் உபயோகத்தில், முக்கியமாக பண்புகளையும் கருத்தையும் குறிப்பிடுகிற பொதுவான சொற்றொடர்களின் ஆட்சியில், கண்டிப்பான வரையறையை ஏற்படுத்தியாக வேண்டும். அர்த்தமில்லாத கோஷங்களாலும், கவர்ச்சி மிகுந்த பயனற்ற சொற்கோளாறுகளாலும் வரும் கேட்டைச் சிறிதளவேனும் தவிர்க்க முடியுமென்றால், இது கல்வியினால் தான் முடியும். இதன்பொருட்டு, கல்வியானது திட்டமான வஸ்துபூர்வமாயும் சோதித்து அறியும் முறையை மேற்கொள்வதாயும் இருக்கவேண்டும்; அறிவைத் தேடுவதில், ஒவ்வொரு படியையும் காரிய ரூபமான சோதனை செய்து அதன் விளைவை நேர்முகமாய்க் கண்டறிந்து பலாபலனை நிர்ணயித்து, அதன்பின் அடுத்தபடியில் செல்லும் முறையும் உடையதா யிருக்கவேண்டும். குறித்த சில சொற்களையும் சொற்றொடர்களையும் கண்டால் இப்போது மக்களிற்

பெரும் பகுதியினர், கறுப்புத் துணியைக் கண்டு காளை வெருளுவதுபோல் வெருட்சியடைகிறார்கள் ; மேற்குறித்த கல்வி நிலவும் பட்சத்தில், இந்த வெருட்சி நீங்கும். இந்த அளவுக்கு, இவ்வுலக வாழ்க்கை ஆரோக்கியமும் இன்பமும் நிரம்பியதாக ஆகும்.

இக் கல்வித்திட்டத்தில் அடங்கியுள்ள சமூக நிலையும் நீதிதரும நிலையும்

ஐரோப்பாக் கண்டத்தில் கல்வித் துறையில் மேற் கொண்ட போதனு முறை என்பது, வாழ்க்கையின் போக்கை விட்டுத் தனியே ஒதுங்கியிருந்ததில்லை; நவீன நாகரிகத்தை எங்கெந்த மாறுதல்கள் தோற்றுவித் தனவோ, அவற்ருேடெல்லாம் கல்வி முறை மிக நெருங் கிய தொடர்பு பூண்டிருந்தது. ஐரோப்பியக் கல்வி இயக்க மானது, அங்குத் தோன்றிய இரு பேரியக்கங்களான கிறிஸ்து சமயப் புரட்சியாகிய ரெபர்மேஷன், கலாமறு மலர்ச்சியாகிய ரெனேஸான்ஸ் என்ற இயக்கங்களை அடி யொற்றி எழுந்த புதிய பொருளாதாரக் கருத்துக்களையும் அரசியற் கருத்துக்களையும் தொடர்ந்து வந்ததாகும். ஒரு புறம் சமயப் புரட்சியும் பொருளாதாரப் புரட்சியும் அரசியற் புரட்சியும் நடைபெற, மறுபுறம் பிரகிருதி சாஸ்திர ஆராய்ச்சியும் நடைபெற்று வந்தது. பிரகிருதி சாஸ்திர ஆராய்ச்சி என்பது, தனி மனிதன் வாழ்க்கையை முதன்மையாய்க் கருதுகிறது. ஆனல், சமூக சாஸ்திரங்க ளான பொருளாதாரம் அரசியல் என்பன, சமூக நலனை முதன்மையாய்க் கருதுகின்றன. எனினும், இரண்டு சாஸ் திரங்களிலும் கல்வியைக் கருதும்போது, இது வாழ்க் கைக்கு அல்லது செயல்முறைக்குப் பொருந்துமா, இத ஞல் பயனுண்டா என்றே அவை ஆராய்கின்றன. இன்று அறிவியல் ஸ்தாபனங்கள், இயந்திரத் தொழில் நிலையங் கள், வியாபாரச்சாலைகள் ஆகியவை பெருகியுள்ளன; இப்பெருக்கம் தற்காலத்திலுள்ள அறிவியல் உணர்ச்சி, சமூக வளர்ச்சி என்பவற்றின் நேரடியான விளைவே யாகும். கல்வியின் நோக்கம் என்ன என்பது பற்றி முன்னமே வெவ்வேறு கருத்துக்கள் வழங்கின. கல்வியின்

நோக்கமானது, சமூகத்தின் பொது வாழ்க்கையில், செல்வ நிலை சமூக நிலை அரசியல் நிலை என்ற நிலைகளில் தனி மனிதன் தனக்கு நியாயமாய் உரியதில் அங்கீகாரம் பெற்று வருகிறது. கல்வியின் நோக்கம், செத்தபின் சிவ லோகம் வைகுண்டம் என்பதல்ல, இந்த வாழ்க்கையி லேயே, அறிவு விளக்கம் பெற்ற, சமூக வாழ்க்கைக்கு உதவுகிற பிரஜையாக ஒருவனைப் பயிற்றுவது என்ற எண்ணம் இப்போது ஏற்பட்டிருக்கிறது.

இக்காலம் எழுந்துள்ள ஜனநாயக ஆட்சி முறைகள் கல்வித் துறையில் ஏற்பட்டிருக்கிற இந்தப் போக்கை வலி யுறுத்துகின்றன. மக்களுடைய சம்மதத்தோடு நடக்கிற ஆட்சி யென்றால், ஆட்சி நடத்துவோர், தங்கள் எஜமானர் களான மக்களுக்குக் கல்வி பயிற்றியாக வேண்டும். இக் கருத்து முதன்முதலில் இங்கிலாந்தில் தோன்றிற்று. அமெரிக்காவில் இதைச் சொன்னவர் ஜெவ்வர்சன்: "நம் சுதந்திரம் மக்களிடமே இருக்க வேண்டும்; அதுவும் ஓரளவு படிப்புள்ள மக்களிடமே இருந்தால்தான், அச் சுதந்திரம் ஆபத்தின்றி நீடிக்கவல்லதாகும். இது நடை பெறும்படி பொதுவான திட்டம் போட்டுச் செய்வது அரசாங்கத்தின் வேலை" என்று அவர் எழுதுகிறார். ஜன நாயக ஆட்சி சௌகரியமாக நடைபெற வேண்டுமானால், நாட்டின் மக்கள் அனைவரும் குறைந்தபட்ச அளவுள்ள ஒரு பொதுக் கல்வி பெற்றிருப்பது அவசியம். இது ஒரு புறமிருக்க, நாட்டில் இயந்திரத் தொழில்கள் கிரமமாகப் பெருகி வருகிற இன்றைய நிலையில், அவை செம்மையாக நடப்பதற்குத் திறமை வாய்ந்த தொழிலாளரும் ஊழிய ரும் வேண்டியிருக்கிறார்கள். ஆகவே, இவ்விரு வகையில் பார்த்தாலும் ஜனநாயகம் நடைபெறுவதற்காகவும் பொதுத் தேவைகளுக்காகவும் அரசாங்கம் பிரஜைகளுக் குக் கல்வி பயிற்றியே ஆகவேண்டும்.

பண்டைக்காலம் முதலே, கல்வி என்றால், நன்னடத்தை என்ற அளவுகோலை வைத்துக் கணக்கிடுவது சம்பிரதாயமாயிருந்தது. தற்காலத்தில் நடத்தை என்பதில் சமய வொழுக்கத்தை ஒதுக்கி விட்டு பொதுச் சமூக வாழ்க்கைக்கான ஒழுக்கத்தை முதன்மையாய்க் கருதுவதே முறையாயிருக்கிறது. இக் கருத்து, பிரஜா வொழுக்கம் என்பதற்கே புத்துருவம் அல்லது புதுத்தோற்றம் கொடுத்திருக்கிறது. ஒழுக்கம் அல்லது நடத்தைக்கு, இயற்கையாகவோ அல்லது இறைவன் ஆட்கொண்டதாலோ வந்த சமய அனுஷ்டானம் அல்லது வழிபாடே அடிப்படை என்றிருந்த நிலை மாறி, பொது நன்மைக்காக அனைவரும் கூட்டாக உழைத்தல், பரஸ்பரம் உதவுதல் என்ற அறிவியற் கருத்துக்களும் சமூகநெறி பற்றிய கருத்துக்களும் அடிப்படையாக அமையலாயின. ஆதலால், இக்காலத்தில் பிரஜாதத்துவப் பயிற்சியை வைத்தே கல்வி நடைபெற வேண்டும் என்ற எண்ணம் நிலவுகிறது. கல்வியானது, சமூக சேவைக்கு மனிதனைத் தகுதியுடையவனாக்குகிறது. சமூகத்தில் அவனும் அடங்குகிறான். அறிவு வளர்ச்சி யற்றவர்களையும் குற்ற நடத்தையுடையவர்களையும் கல்வி பயிற்றுவதென்ற இன்றைய கல்வி மனோதத்துவ எண்ணமும் இந்தக் கருத்திலிருந்தே எழுந்திருக்கிறது. தகுந்த கல்விப் பயிற்சி யில்லாவிட்டால், அறிவு வளர்ச்சி யற்றவர்கள் சமூகத்துக்கே பெரும் பாரமாகக் கூடும்; குற்ற நடத்தையுடையவர்களைக் திருத்தி நல்வழிப்படுத்தாமல் விட்டுக் கல்வியும் இல்லாது போனால், இவர்கள் சமூகத்துக்குப் பேராபத்து விளைவிப்பவர்களா யிருப்பார்கள்.

கல்விப் பயிற்சியின் மூலம் கைகூட வேண்டிய மற்றொரு கருத்தும் தற்காலச் சமூக நெறியில் உள்ளது. மக்களினத்தின் சாரமுழுமையும் தனிமனிதனிடம் காணக் கிடக்கும். மக்களினத்தின் நாகரிகத்திலும் முன்னேற்றத்

திலும் சிறப்பானவை யாவும் அவனிடம் பிரகாசிக்கின்றன. சமூகத்தின் பொது மனப்போக்கு அவனிடம் பிரதிபலிக்கிறது. பழமையின் சிறப்பெல்லாம் வழி வழி அவனிடம் வந்தடைகின்றன. இங்ஙனம் வழி வழி வந்த பழமைச் செல்வத்தை அவன் தன் பின் வருவோருக்கு விட்டுப் போவதோடன்றி, அச்செல்வம் தன்னால் பின்னும் பெருகியிருக்கவும், வளமுடையதா யிருக்கவும் அவன் செய்ய வேண்டியவன்.

இவ்வகையாக மக்களின் போக்குப் பல துறைகளில்-அறிவியல் துறை, சமூகம், பொருளாதாரம், அரசியல், நாகரிகம் ஆகிய துறைகளில்-செல்கிறது. இவை இக்காலத்துக் கல்விப் பயிற்சி பற்றிய கருத்தையும் பாதிக்கின்றன. கல்வியானது இப்புதிய அபிலாஷைகளையும் தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டுமானால், இதற்குப் பொருத்தமான முறை அதில் அமைதல் வேண்டும். இம்முறை மனோதத்துவ ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும் செயல் முறைக்கு ஏற்றதாகவும் இருத்தல் அவசியம். இது அறிவையும், கல்வி போதனையையும் ஏட்டளவில் மட்டும் கவனித்தால் போதாது; தொழில், வாழ்க்கையின் விவகாரம், சோதனை ஆகியவற்றையும் இது கவனித்தாக வேண்டும். முதலில் கல்வி பற்றி ஆராய்ந்த சித்தாந்திகளும் சீர்திருத்தக்காரர்களுமான ரூஸ்ஸோ, பெஸ்டலோஸி, ஹெர்பர்ட், புரோபெல் போன்றவர்கள், கல்வி போதிக்கும் முறை என்ற இந்தப் பிரசினையைச் செயலில் உதவக்கூடிய சமூக நெறி பற்றிய நோக்கத்துடனேயே ஆராய்ந்தார்கள் என்பதை முன்னமே நாம் கண்டோம். அவர்கள் கல்வித் துறையாளர் என்பது மட்டுமல்ல; சீர்திருத்தவாதிகள் என்றும் பரோபகாரிகள் என்றும் கூறுவது அதிகம் பொருத்தமுடையது. ஆதலால், அவர்கள் செயல்முறையில் சமூகச் சீர்திருத்தம் செய்பவர்கள் என்ற கருத்திலேயே போதனு

முறை என்ற பிரசினையைத் தீர்க்க முயன்றார்கள். அவர்களுக்குப் பின் வந்த கல்வித் துறையாளரும் இவ்வித முயற்சியையே மேற்கொண்டார்கள்.

ஆகவே, குழந்தையானவன் எதிர்காலத்தில் நாட்டின் பிரஜையாகிச் சமூகத்தில் தனக்குரிய ஸ்தானத்தைப் பெற்று வாழ்வதற்குக் கல்வி அவனைத் தகுதியுடையவனாக்க வேண்டும். இதன் பொருட்டு, கூடி வாழும் தன்மையை அவன் வளர்த்துக் கொள்ள வேண்டும். வருங்கால வாழ்க்கைக்கு அவன் பயிற்சி பெறவேண்டும். அரசியல் தருமத்தையும் குடிமையின் தருமத்தையும் அவன் கருத்தளவில் கற்றுக்கொண்டால் மட்டும் போதாது; அவற்றைத் தன் பாடசாலையில் பயிலும்போதே, தன் வாழ்க்கையில் கடைப்பிடிக்கவும் வேண்டும். ஜனநாயகம் வழங்கும் ஆட்சியில் அவன் தானும் ஓர் அங்கமாகச் சொற்ப அளவேனும் இருக்கவேண்டுமானால், தன்னொழுங்கு சுயாட்சி என்பவற்றை அவன் பயின்றுகொள்ள வேண்டும். சுதந்திரமான பிரஜை, தானே ஆள்பவனாகவும் ஆளப்பட்டவனாகவும் இருக்கிறான்; இந்த நிலைக்குப் பொருத்தமான கூட்டுறவு, தான் வகுத்த நியதிகளுக்குத் தான் அடங்கி நடத்தல், கட்டுப்பாடு ஆகிய பழக்கங்கள் மாணவனிடம் பொருந்த வேண்டும். விசால நோக்கும், சகிப்புத் தன்மையும் சிறந்த ஒப்புரவும் அவனிடம் வளர வேண்டும். நியாயமாய்த் தனக்குள்ள உரிமைகளை அவன் விடாமல் பெறுவான்; பெறும்போது, நாகரிகத்தோடு முன்னேறி வருகிற சமூகத்தினிட மிருந்து தான் அடையும் நன்மைகள் காரணமாய்த் தனக்குரிய எந்தக் கடமைகளை அவன் நிறைவேற்ற வேண்டுமோ அவற்றை உண்மையாக நிறைவேற்றவும் அவன் தயாராயிருக்க வேண்டும்.

மேலை நாடுகளிலெல்லாம், மாணவன் இயல்புகளில் அடங்கிய இந்த இயல்பை வளர்க்கப் பெரு முயற்சி செய்

கிறார்கள். பாடசாலையில் ஏதோ ஒருவிதமான கூட்டுச் சமூக வாழ்க்கையும் ஓரளவான சுயாட்சியும் நடைபெறுகின்றன. இந்த நிலையை ஐரோப்பாவில் இருப்பதைவிட அதிகமாக அமெரிக்காவில் வளர்த்திருக்கிறார்கள். பார்ஸ்டர் என்ற அறிஞர், 'அரசியல் நீதியும் அரசியல் உபாத்திமையும்' என்ற புத்தகமொன்று எழுதியிருக்கிறார்; அதில் அவர் பின் வருமாறு கூறுகிறார்: "வரையறையான சட்டதிட்டங்களின்படி நடைபெறும் ஆட்சி முறையில், இளைஞர்கள் தங்கள் பொறுப்புக்களைத் தாங்களே உணரும் பழக்கத்தை இளமையிலேயே ஏற்படுத்துவதனால் அவர்களிடம் அதிகமான அரசியல் விழிப்பும் அரசியல் ஒத்துழைப்பும் பிறக்கின்றன; இப்பொறுப்புக்கள் காரணமாகவே வாழ்க்கை சம்பந்தமாகத் தாங்களே ஏற்படுத்திய சில நிலைமைகளை மக்கள் வாழ்வில் அமைக்கவேண்டுமென்று இவர்கள் தாங்களே சுயேச்சையாக முயல்கிறார்கள்; இம்முயற்சியில் தாங்கள் தேர்ந்துகொண்ட தங்கள் பிரதிநிதிகளிடம் நம்பிக்கையும் மாறுசொல்லாத கீழ்ப்படிதலும் மேற்கூறிய பொறுப்புக்கள் காரணமாக எழவேண்டும்."

கல்விச்சாலைகளில் வரவேண்டிய தன்னடக்கமும் சுயாட்சியும் வெறும் சட்டதிட்டம் என்ற நிலைக்கு இழிந்து போகக்கூடாது; சட்டசபை அல்லது பொது மன்ற வேலை முறை என்ற கேலிக்கூத்தைக் கல்விச் சாலைகளிலும் நடிக்கிற நிலைமை ஏற்படக் கூடாது; இதற்கு, மாணவர்களுக்கு எதிர்ப்பட்டு அவர்கள் தீர்க்க வேண்டியனவாகிற பிரசினைகள் உண்மையாகவே எழ வேண்டும். கிரமமான அமைப்புப் பெற்ற சமூக வாழ்வு, பாடசாலை வாழ்க்கையிலேயே ஏற்பட்டிருக்கவேண்டும். பரஸ்பர உதவி, கூட்டுறவு என்ற பண்புகள் பொருள் பொதிந்தனவாக ஆகவேண்டுமென்றால், பள்ளிக்கூடச்

சமூகமும் ஏதேனுமொரு பயனுள்ள ஆக்கத் தொழிலில் ஈடுபட்டாக வேண்டும். பாடசாலையிலேயே ஒரு தொழில் அல்லது கைவினைக்கு ஏற்பாடு செய்தால் இந்த ஈடுபாடு விளையும். ஆக்கத்துறையில் செலவிடும் உழைப்பே சுயாட்சியின் தத்துவம் என்று கூறுவது மிகுந்த பொருளுடையது. இதில், சுயாட்சியைப் பிள்ளைகள் தலையில் மற்ருேர் சுமத்தவில்லை. தாங்களாக அவர்கள் இதுபற்றி அறிவின்றி மற்ருேரைப் பின்பற்றவு மில்லை; ஆனல், அவர்களுடைய தினசரி வாழ்க்கையையும் தேவையையும் பொறுத்தே சுயாட்சி பிறந்து வளர்கிறது. ஏதேனுமொரு தொழிலையோ கைவினையையோ பயன்படும் முறையில் பள்ளிக்கூடத்தில் செய்து வரவேண்டுமானல் இதற்கு, முன்னமே போட்ட நிர்மாணத் திட்டமும், நோக்கமும் வேண்டும். இவற்றுக்காக அப்பள்ளிக்கூடத்தின் பிள்ளைகள் தங்களுக்குள் ஓர் அமைப்பையும் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்திக்கொண் டிருக்கவேண்டும். விரும்புகிற பலன் வர வேண்டுமென்ருல், மாணவரும் ஆசிரியர்களும் அதற்கென்று ஒத்துழைக்க வேண்டும். இவ்விதமாக, பள்ளிக்கூடத்தில் வரவேண்டிய ஜனநாயக சுயாட்சிக்கு, உழைப்பும் தொழில் தத்துவமும் சேர்ந்து தேவையான ஊக்கமளிக்கின்றன. மேலும், ஆசிரியரின் தேர்ந்த தலைமையில், அரசியல் வாழ்க்கைக்கும் குடிமை வாழ்க்கைக்கும் வேண்டிய நல்ல பண்புகளை வளர்க்கவும் இவை தகுந்த சந்தர்ப்பம் தருகின்றன.

தனியான அரசியற் பண்புகளும் குடிமைப் பண்புகளும் ஒருபுறமிருக்க, உழைப்புப் பொருந்திய பள்ளிக்கூட வாழ்க்கையானது நல்லொழுக்கப் பண்புகளையும் வளர்க்கிறது. சமூகத்தின் ஒழுக்கமானது இன்று, சமயக் கோட்பாடுகளை, அதிலும் சிறப்பாக, தெய்வ அருள் பொருந்திய சமயக் கோட்பாடுகளை ஆதாரமாய்க் கொள்

ளாமலிருக்கலாம். ஆனால், சமூகத்தின் பலவேறு துறைகளிலும் வந்த அனுபவத்தில் விளைந்த அறிவு விளக்கத்தை அது ஆதாரமாய்க் கொண்டிருக்கவேண்டும். அவ்வொழுக்கத்துக்குப் புற உருவம் தந்து, ஸ்தாபன ரீதியாக வகுத்தமைக்கும்போது, அவ்விதம் அமைக்கப்பெறும் ஸ்தாபனங்கள், விஞ்ஞானத்துறையின் முடிவுகளுக்கும் பொருளாதாரத்துறை, சமூகத்துறை, அரசியல் துறை ஆகிய துறைகளில் வழங்கும் இன்றைய கருத்துக்களுக்கும் லக்ஷ்யங்களுக்கும் ஒத்திருக்கவேண்டும். ஒழுக்கம் என்பது, சிக்கல் நிறைந்த இன்றைய உலக வாழ்வின் திரண்ட வாழ்க்கை என்னவோ அதிலிருந்து தனியே பிரிந்திருக்க முடியாது. மக்களறிவு முன்னேற ஏற, அந்த ஒழுக்கமும் கிரமமாக மாறிக்கொண்டே போகவேண்டும். உதாரணமாக, நம் சமூக வாழ்வுக்கு ஆணிவேர் என்று சொல்லத்தக்க அடிப்படைத் தத்துவங்களாகிய சத்தியம் தருமம் அஹிம்சை என்பன மாறுமல்தான் இருக்கும்; இவையின்றி முறையான வாழ்க்கை சாத்தியமில்லை. ஆனால், வாழ்க்கை முறைகளிலும் ஸ்தாபனங்களிலும் இந்தத் தத்துவங்களைப் புதிய உருவத்தில் புகுத்த வேண்டும். புராதன காலத்தில் இருந்த ஸ்தாபனங்களை ஒட்டிய மார்க்கத்தில் நாம் ஒழுக்கத்தை இன்று அமைக்கவேண்டியதில்லை. 'கடவுள் உலகனைத்துக்கும் தந்தையாவார்; அவருடைய உண்மையான கட்டளைகள் இன்னவை, அல்லது அவர் விதித்ததாகச் சொல்லுகிற கட்டளைகள் இன்னவை' என்று எடுத்துச் சொல்லி, மேற் கூறிய ஒழுக்க முறைக்கு நாம் ஆதரவு தேடவேண்டியதில்லை. ஆனால், 'மக்கள் அனைவரும் சகோதரர்; எனவே, அவர்களிடையில் சமத்துவமும் சுதந்திரமும் உண்டு' என்ற உண்மையின்மீதே நல்லொழுக்கத்தை இன்று நிருமாணிக்கவேண்டும். 'பரமண்டலத்திலுள்ள என் பிதாவின் கட்டளை என்ன?' என்பதன்றி, 'பிறர் உனக்கு என்ன

செய்யவேண்டும் என்று விரும்புகிருயோ அதையே நீ பிறருக்குச் செய்வாயாக' என்ற உத்தமமான விதியே இன்று சாதாரண ஆடவன் வாழ்க்கையையும் பெண்ணின் வாழ்க்கையையும் நடத்தவேண்டும்.

சாதிகள் பல, அல்லது சில சாதிகளுக்குத்தான் ஆதிக்கம் உண்டு என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்தப் புதிய ஒழுக்கத்தை நிருமாணிக்க முடியாது. கஷ்டப்பட்டு உழைக்கிற கோடிக்கணக்கான பாமரமக்கள் வேறு, சோம்பியிருக்கிற நாகரிக வகுப்பு வேறு என்ற கொள்கையால் இதை நிருமாணிக்க முடியாது. மக்கள் கூட்டுறவோடு உழைக்கவேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்த ஒழுக்கம் பிறக்கவேண்டும். பிறப்பினுலும் சமயசம்பந்தமான ஆசாரத்தினுலும் இன்று சிலர் விசேஷ வசதிகள் பெறுகிருர்கள். இவ் வசதிகள் பெறும் ஆசையை அவ்வுழைப்பு போக்கவேண்டும். கூட்டுறவான உழைப்பு என்ற தன்மையானது, சத்தியம், அன்பு, தருமம், சாந்தி, கட்டுப்பாடு ஆகிய தத்துவங்களை நிச்சயம் தோற்றுவித்து வளர்க்குமென்று முன்னமே குறிப்பிட்டிருக்கிறோம். ஒத்துழைக்கிற தனி அங்கங்களிடையே இந்த நல்ல பண்புகள் பொருந்தாவிட்டால், கூட்டுறவான எந்த முயற்சியும் நடைபெருது. அன்பும் அஹிம்சையும் இல்லாவிட்டால், ஆதரவோடு ஒன்று சேர்க்கிற அமைப்பும் கிரமமான பயனுள்ள கூட்டுறவும் அந்த முயற்சியில் அமைய மாட்டா. ஒரு நோக்கத்தோடு செய்கிற வேலையில், அதுவும் கூட்டான பொது நன்மைக்குச் செய்கிற வேலையில், ஒவ்வொருவரிடமும் செயல்முறையில் உதவவல்ல அனேக நற்பண்புகள் விளைவது நிச்சயம். வேலையின் மூலம் விளைகிற மக்களின் சேர்க்கையும் நாட்டுப் பற்றும், சுரண்டலையோ நாடுபிடிக்கும் ஆசையையோ அடிப்படையாய்க் கொண்டிருக்க

மாட்டா. அவை, சிக்கலான அமைப்புடைய ஒரு சமூகத்தின் வாழ்க்கையில்வரும் பலவேறு துறைகளிலும் ஈடுபட்டு உழைக்கிற உழைப்பாளிகளின் ஒருமைப்பாடாக மலர்ச்சியடையும். உழைப்பாளிகள் திரண்ட ஒரு சமூகமானது மற்றோர் உழைப்பாளிகள் சமூகத்தைச் சுரண்ட இச்சை கொள்ளாது. மேற்சொன்ன பண்புகளால், விவேகம் நிறைந்த, அறிவு விளக்கம் பெற்ற புதிய நல்லொழுக்கம் உதயமாகும்; இது, கொடிய பழக்க வழக்கம், வெறும் சமயக் கோட்பாடு என்ற மூட நம்பிக்கைகளின் பிடிப்பிலிருந்து விடுபட்டிருக்கும்.

மகாத்மா காந்தியின் கல்வித் திட்டமானது, உழைப்பின் மூலமும் ஆசிரியருடைய சொந்த வாழ்க்கைமூலமும் ஒழுக்கப் பயிற்சி வரவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது; ஆனால், குறித்த சமயங்களைப் போதிப்பதற்கு இதில் ஏற்பாடு செய்யவில்லை; மேற்கூறியவற்றால் இது பொருத்தந்தான் என்பது விளங்கும். இக்கல்வித்திட்டம் சமய விரோதமானதன்று; அல்லது ருஷ்யாவில் உள்ளது போல நாஸ்திகமும் அன்று; ஆயினும் இது, பிள்ளைகளுக்கும் அவர்களின் பெற்றோருக்கும் சமய விஷயங்களில் பூரண சுயேச்சை யளிக்கிறது. பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு எந்த விதமான சமயக்கல்வி போதிக்க வேண்டுமென்று எண்ணுகிறார்களோ அதை அவர்கள் தாராளமாய்ப் போதிக்கலாம். அரசாங்கமானது குறித்தவொரு சமயத்துக்குச் சொந்தமன்று, அது எல்லாச் சமயங்களுக்கும் சொந்தம். அன்றியும், சமயம் என்பது பெரிதும் சிக்கலானது, அவரவர் மனத்தையும் உணர்ச்சியையும் பொறுத்த சொந்த விஷயம். ஆதலால், இதை அவரவர் சுயேச்சையாய்க் கவனித்துக்கொள்ளும்படி அரசாங்கம் விட்டுவிடுகிறது. இதன் பயனாக, தனிப்பட்டவருடைய ஆன்ம சுதந்திரம் பிறக்கும். பரஸ்பரம்

இருக்கவேண்டிய நல்லெண்ணம் சமயப்பொறை ஆகிய பண்புகளுக்கு இது உறுதி தரும். சமய வெறிக்கு இங்கு இடமிராது. சமயம் என்பது தனிப்பட்ட ஒவ்வொருவருடைய சொந்தப் பொறுப்புமாகும். எவரும், தம்மைப் படைத்த ஆண்டவன் ஒருவன் இருக்கிறுன் என்று எண்ணும் பட்சத்தில், அந்த ஆண்டவனிடம் தமக்குள்ள தொடர்பையும், தமக்கும் தம் அந்தராத்மாவுக்கும் இருக்கவேண்டிய தொடர்பையும், தாமே நிர்ணயித்துக் கொள்ளும் உரிமையுடையவராவார்.

சுயதேவைப் பூர்த்தி என்ற தத்துவம்

முந்திய அதிகாரம் ஒன்றில், காந்தியடிகளுடைய புதிய கல்வித் திட்டத்தின் அடிப்படையான இரண்டு தத்துவங்களைக் குறிப்பிட்டோம். இதுவரையில், ஆதாரக் கல்வியானது ஒரு தொழில் மூலம் நடைபெறும் கல்வி என்ற ஒரு தத்துவத்தை மட்டும் எடுத்து விளக்கினோம். இப்போது, அக்கல்வித் திட்டத்தின் இரண்டாவது தத்துவத்தை ஆராய்வோம். அதாவது, தேர்ந்தெடுத்த தொழிலைப் பையன் பயில்வது மூலமாய், பாடசாலையில் அவன் உற்பத்தி செய்யும் பொருளானது பாடசாலையில் அவனுக்குப் பாடம் போதிக்க ஆகும் செலவுக்கு ஈடு செய்யக்கூடிய பணமதிப்பு உடையதா யிருக்கவேண்டும் என்பதாகும்.

பொதுவாக இந்த இரண்டு தத்துவங்களையும், கல்வியாளர் ஆரம்பத்தில் ஆட்சேபித்து வந்தார்கள். பாடசாலையில் இன்று கற்பிக்கிற இலக்கிய அறிவு பாடத் திட்டம் ஆகியவை முழுமையும் ஒரு கைத்தொழிலோடு பொருத்திக் கற்பிக்கமுடியாதென்றும், கல்விபோதனைக்கு ஆகும் வருஷவாரிச் செலவுக்கு ஈடுசெய்யும் அளவுக்குக் கைத்தொழிலிலிருந்து வருவாய் பெறமுடியாதென்றும் அவர்கள் உறுதியாக எண்ணினார்கள். அப்படியே போதுமான வருவாய் பெற முடிந்தாலும்கூட, அதனால் குழந்தைக்கு வரவேண்டிய மூளைப் பயிற்சி குன்றும் என்றும், குழந்தையைக் கஷ்டப்படுத்தி வேலை வாங்குவதாக அது முடியும் என்றும் அவர்கள் நினைத்தார்கள். ஆயினும், காலம் செல்லச் செல்ல, மேற்குறித்த முதல் தத்துவமானது, எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தத்துவம் என்றும் தற்காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கல்வி மனோதத்துவங்களுக்கும் விஞ்ஞான

தத்துவங்களுக்கும் ஒத்திருக்கிறது என்றும், கல்வி நிபுணர்கள் ஒருவகையாக அறிந்துகொண்டார்கள். ஆனால், இரண்டாவது தத்துவமாகிய பண வரவு அல்லது சுயதேவைப் பூர்த்தி என்பது செயல்முறைக்கு ஒவ்வாதது, தீமையானது என்று அவர்கள் எண்ணினார்கள், எண்ணியும் வருகிறார்கள். ஹரிபுரா காங்கிரஸ் மகாநாட்டில் ஆதாரக்கல்வித் தீர்மானத்தைப் பிரேரேபித்த ஆசாரிய நரேந்திர தேவரவர்கள் காங்கிரசின் விஷயாலோசனைக் கமிட்டிக்கூட்டத்திலும், காங்கிரசின் பொதுக்கூட்டத்திலும், சுயதேவைப் பூர்த்தி என்ற அம்சம் சம்பந்தமாக அனேக சந்தேகங்களை எழுப்பினார். முதல் தத்துவத்தை அவர் மனப்பூர்வமாக ஆதரித்தார். ஆனால், இரண்டாவது தத்துவத்தின் விஷயத்தில் அவர் எச்சரிக்கையோடிருந்தது மட்டுமல்லாமல், அவநம்பிக்கையையும் வெளிப்படுத்தினார். அவர் கூறிய அபிப்பிராயத்தை அனுசரித்து, காந்தியடிகளின் திட்டத்தை ஆமோதிப்பவர்கள்கூடக் கொஞ்சம் தயக்கத்தோடுதான் இந்தத் தத்துவத்தை ஆமோதித்திருக்கிறார்கள். 'தொழில்மூலம் வரும் வருமானம் செலவுக்கு ஈடுசெய்ய வேண்டும்' என்று திட்டமாகச் சொல்வதை அவர்கள் மாற்றிக்கொண்டார்கள்; கல்வி போதனைக்கு ஆகும் செலவு முழுமையும் அத்தொழில் வருவாய் ஈடுசெய்வது அவசியமில்லை என்று கூறியதோடு, பாடசாலையில் நடைபெறும் தொழிலுக்குப் பணமதிப்பு இருக்கும்படி பார்த்துக்கொள்ள முயற்சி செய்யவேண்டும் என்று மட்டுமே சொன்னார்கள். ஆனால், பாடசாலையில் கவனமாகவும் விஞ்ஞான ரீதியாகவும் தொழிலைச் செய்வதானால் இந்த முயற்சி வேண்டுமென்பது தெளிவு. இதுவே பிள்ளைகளிடமும் ஆசிரியரிடமும் திறமையை வளர்க்கவல்லது. உற்பத்தி செய்த பொருளுக்குப் பணமதிப்பு வேண்டுமென்ற தமது கருத்தை மாற்றிக்கொள்வதில் காந்தியடிகளுக்குக்கூட ஆட்சேபம் இல்லை. வகுப்பில் செய்யும் தொழிலுக்குப்

பணமதிப்பு வேண்டும் என்ற தத்துவத்தை ஏற்றுக்கொண்டால்; மற்ற விஷயங்கள் ஆசிரியரையும் பாடசாலை நிர்வாகத்தாரையும் பொறுத்தவை என்றே அவர் கருதுகிருர்.

இப்படிச் சொல்வதில் குற்றமில்லை. ஆனல், இந்த நிலைமையில் சில அபாயங்கள் உள்ளன. இவற்றைப் போக்க ஏற்பாடு செய்யாவிட்டால், காந்தியடிகளுடைய திட்டமும், முற்காலத்தில் அதைப்போல் வகுக்கப்பெற்ற திட்டங்கள் பயனற்றுப் போனமைபோலவே, செயல் முறையில் சாத்தியமில்லாததாகிவிடும். இப்படிப்பட்ட ஓர் அபாய நிலைமை இந்தியாவில் இருப்பது வாஸ்தவம். கைத்தொழில்மூலம் கல்வி கற்பிக்க வேண்டுமென்ற தத்துவத்தைச் சமீபகாலத்தில் நடந்த எல்லா மாகாணக் கல்வி மகாநாடுகளும் அகில இந்தியக் கல்வி மகாநாடுகளும் ஏற்றுக்கொண்டு சிபாரிசு செய்திருக்கின்றன. ஆனல், இந்தத் தத்துவத்துக்கும் செலவைச் சரிக்கட்டுதல் என்ற தத்துவத்துக்கும் ஏதேனும் வேற்றுமையிருக்குமானல், கல்வித்திட்டம் தோல்வியடைவது நிச்சயம்; பாடசாலையில் பிள்ளைகள் உற்பத்தி செய்யும் பொருளுக்குப் பண மதிப்பு என்ற பேச்சே அடியோடு மறைந்துவிடும். அது மறையவே, பாடசாலை வேலையென்பது பலன் இல்லாத ஒரு கைத்தொழிலைத் திறமையில்லாமல் செய்வதாக வந்து முடியும். அதாவது, கைத்தொழில் நடந்தாலும், அது திருத்தமான அறிவும், போதுமான கவனமும் சேர்ந்து செய்ததாயிராது. இதனல் கைத்தொழிலின் தரம் கெடுவதோடு மட்டுமல்ல; அதன்மூலம் கற்பிக்கும் கல்வியின் தரமும் கெடும். மேலும் இது, முன்னமே நாம் குறிப்பிட்டதுபோல, கல்விக்காகும் செலவைப் பெரிதும் அதிகப்படுத்தும். இவ்விதம் அதிகமாகிற செலவை இந்த நாடு வகிக்கச் சக்தி உடையதாய் இராது. காலக்கிரமத்தில், ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் கல்விச்சோதனை

நடந்த அனேக ஸ்தாபனங்களில் கைத்தொழிலைக் கைவிட நேர்ந்ததைப்போல இங்கும் கைவிட நேரும். கைத்தொழில் மூலம் கல்வி என்ற தத்துவத்தை எல்லோரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதற்கான செலவு அதிகமாக இருந்தபடியால், அம்முறை செயல்முறைக்குப் பொருத்தமில்லாதது என்று எண்ணும்படி ஆயிற்று.

மேலும், செய்யும் தொழிலுக்குப் பணமதிப்பில்லாமல் போனால், அது வாழ்க்கையிலிருந்தும் உலக விவகாரத் திலிருந்தும் தொடர்பற்று நிற்கிறது; உழைப்பு வெறும் சாதனம் என்று ஆகிறது. சாதனம் என்ற அளவில் அது அனேகமாய்த் தோல்வியுறும். காந்தியடிகளுடைய திட்ட மானது யாவும் திரண்ட பூரணத்திட்டம். இதில் ஒரு பகுதியைக் கைவிட்டு மற்றொரு பகுதியை வலியுறுத்தி வந்தால், திட்டம் முழுமையும் துண்டிக்க முடியாத ஒரே திட்டமானபடியால், முழுத்திட்டமும் கொஞ்ச நாளி லேனும் அதிகநாள் கழித்தேனும், அழிந்துபோவது நிச்சயம். காந்தியடிகளைப் பொறுத்தவரையில், பாடசாலை யில் செய்யும் கைத்தொழில் என்பது, எழுத்துப் படிப் புக்கு ஒரு கருவி மாத்திரம் அன்று; அதுவே தனி நோக்க முமாகும். கைத்தொழிலைத் தனி லக்ஷ்யம் என்று பாவிக் காவிட்டால், கொஞ்சம் கொஞ்சமாய் அதில் பொருள் மதிப்பும், திறமையும், பயனும் நீங்கிப்போகும்.

எழுத்துப் படிப்பு, அதுவே தனி லக்ஷ்யம் என்பது மாத்திரமன்று; கைத்தொழிலைச் செவ்வையாகச் செய் வதற்கு அது ஒரு சாதனம். அப்படிப்பு இன்றிக் கைத் தொழில் என்பது வெறும் யந்திரம்போல் செய்வதாகி விடும்; அதாவது, கர்நாடக முறையில், திட்டம் இல்லா மலும், விஞ்ஞான முறையில் இல்லாமலும், கைத்தொழில் நடைபெற்றுவரும். திட்டம் இல்லாமலும், விஞ்ஞான முறையில் இல்லாமலும் செய்கிற கைத்தொழிலுக்குப்

போதனு முறை என்ற அளவில் பயன் சொற்பம். அப்படி இல்லாமல், புத்திக்குத் தரும் கல்வியானது ஒரு கைத்தொழிலை மையமாக வைத்து விளைவதானால், அதுவே அத்தொழிலின் திறமையையும், பயனையும் மிகுதியாக்குகிறது. இரண்டும் ஒன்றையொன்று பாதிக்கின்றன. இரண்டும் ஒன்றுக்கொன்று லக்ஷ்யமாகவும் சாதனமாகவும் ஆகின்றன. அவை பரஸ்பரம் ஆக்கம் தந்து வளம்படுத்துகின்றன. ஒன்றைப் புறக்கணித்து மற்ருென்றை வளர்க்க முயல்வது இரண்டுக்கும் பாதகமாக முடியும்.

பெரிய பதவி வகித்த கல்வியதிகாரி யொருவர் ஆதாரக்கல்விக்கான ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை ஒன்றை ஆரம்பித்து வைத்தபோது, 'செய்கிற கைத்தொழிலுக்குப் பொருள் மதிப்பு இல்லாவிட்டாலும் குற்றமில்லை' என்று தாம் கருதியதாகத் தெரிவித்தார் என்று சிறிது காலத்துக்குமுன் ஒரு செய்தி வந்தது. ஒருவேளை அவர் காந்தியடிகளுடைய ஆராதக்கல்வித் திட்டத்தைக் கருதியிருக்கமாட்டார். தாமாக ஒரு திட்டம் வகுத்து அதில் காந்தியடிகளின் முக்கியமான தத்துவங்களை மேலெழுந்த வாரியாக ஏற்றுக்கொண்டிருக்கலாம். எப்படி இருந்தாலும், உழைப்பின்மூலம் பொருள் மதிப்பு ஏற்பட்டாலும் சரி ஏற்படாவிட்டாலும்சரி என்று எண்ணுபவர்கள், கல்விப் பயிற்சி என்ற முறையில் தொழிலானது செயலுக்கு ஒவ்வாததாகிவிடும் என்று விரைவில் காண்பார்கள். இன்று நாம் இருக்கும் நிலையையும், பணவிஷயத்திலும் அரசியல் விஷயத்திலும் நமக்குள்ள கஷ்டங்களையும் சர்வஜனக் கல்வியின் அவசியத்தையும் எண்ணிப் பார்க்கும்போது, சர்வஜனக் கல்வியாகிய நமது பெரு நோக்கம் நிறைவேறுவதற்கு ஏதேனும் வழி இருக்கிறதென்ருல், அது காந்தியடிகளின் ஆதாரக்கல்வித் திட்டத்தைப் பெயரளவில் மட்டும் இல்லாமல் அவர் கருத்துப்படியே நிறைவேற்று

வதுதான். இன்று இந்த நாட்டில் அந்த நோக்கம் நிறைவேறுவதற்கான வழி வேறெதுவும் புலப்படவில்லை.

ஆனால், இவ்விதம் உழைப்பின்மூலம் கல்வி என்று சொல்லும்போது, குழந்தைகளைக் கஷ்டப்படுத்தி வேலை வாங்குவதாகாதா என்று சமதர்மவாதிகள் கேட்கிறார்கள். இந்த ஆட்சேபம் முன்னே நாம் கூறிவந்த சொற்களின் கொடுங்கோன்மைக்கு ஒரு திட்டமான எடுத்துக்காட்டென்றுதான் சொல்லவேண்டும். குழந்தைகள் உழைப்பது என்ற மாத்திரத்தில், அதுபற்றி எந்த விவரங்களும் ஆராயாமல், அது தீமையானது என்று முடிவுகட்டுகிறார்கள். இதுபற்றி இன்றைய கம்யூனிஸ (பொதுவுடைமை) வாதத்தின் மூலகர்த்தாவாகிய கார்ல் மார்க்ஸும் அவர் எழுதிய கம்யூனிஸ வேதமும் என்ன சொல்கின்றன என்பதைப் பார்ப்பது இங்கு பொருத்தமுடையது. இச்சொற்கள் திட்டமான அபிப்பிராயம் தெரிவித்து விவாதத்தை முடிவுசெய்ய உதவும். மார்க்ஸ் சொல்லுகிறார்:

"எந்த வயதுக்குக் குறைந்து பிள்ளைகளை உழைக்கும்படி செய்யக்கூடாதென்பதை இங்குக் குறிப்பிடுவது அவசியம். பெரிய ஆலைத்தொழில்கள் இருக்கும் என்றால் சிறு பிள்ளைகள் உழைப்பைப் பொதுப்படையாகத் தடைசெய்வது பொருந்தாது. ஆதலால், அத்தடை என்பது நல்ல எண்ணம் என்ற அளவில்தான் இருக்கமுடியும்; செயலளவில் வரமுடியாது. அப்படி ஒரு தடையை விதிப்பது சாத்தியமாக இருந்தாலும்கூட, அது மிகவும் பிற்போக்கான செயலாகும். பிள்ளைகளுடைய நன்மைக்குக் கேடுவராத வகையில், அவர்கள் வயதுக்கேற்ற வேலை நேரத்தை அமைப்பதனாலும், வேறு வகையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதனாலும், உற்பத்தி தரும் தொழிலைக் கல்விபோதனையோடு எவ்வளவு விரைவில் இணைக்கிறோமோ அவ்வளவுக்கு நல்லது; இந்த இணைப்பு,

இன்றைய சமூகத்தை மாற்றிப் புத்துருவம் கொடுப்பதற்கு மிக்க வலிமை பொருந்திய கருவியாக இருக்கும்."

மேலும், பிள்ளைகள் செய்யும் உழைப்பின் மூலம் என்ன வருவாய் வரவேண்டுமென்று சொல்லுகிறோமோ, அந்த வருவாய், அதாவது உபாத்தியாயருக்காகும் செலவு, வாஸ்தவமாக வருமா என்று கேட்கிறார்கள். இது சம்பந்தமாக, ஏதேனும் ஒரு தொழில் துறையில் உழைத்து, ஏழு முதல் பதினாலு வயது வரை உள்ள பிள்ளைகள் செய்த வேலையால் வந்த வருவாயைக் கவனமாய் கணக்கிட்டவர்களுடைய அனுபவத்தை கொண்டுதான் சொல்லமுடியும். மத்திய மாகாணத்திலுள்ள வர்தா ஜில்லாவில் நால்வாடி என்ற ஆசிரமத்தில் ஆசாரிய விநோபா பாவே சில சோதனைகள் நடத்தியிருக்கிறார். இவை, சாதாரணப் பையனொருவன் தினசரி இரண்டுமணி நேரம் ராட்டையில் நூல் நூற்கும் பட்சத்தில், மாதம் ஒன்றுக்குச் சராசரி ஒரு ரூபா முதல் ஒன்றரை ரூபா வரை வருவாய் வரும் என்பதைக் காட்டுகின்றன. ஒரு பையன் ஒருநாளைக்கு எட்டுமணி நேரம் செய்யும் உழைப்புக்குக் குறைந்தபட்சக்கூலி மூன்று அணா என்ற வீதப்படி இந்த வருவாய் கணக்கிடப்பட்டுள்ளது. மூன்றணாக்கூலிதான் சர்க்கா சங்கம் கொடுக்கிற ஒரு நாளைய கூலி.

இதேபோல வர்தாவிலுள்ள மத்திய மாகாண ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த ஆதாரப்பாடசாலையில் சென்ற சில மாதங்களாய்க் கிடைத்த புள்ளி விவரங்களும், மேற்காட்டிய வருவாய் கிரமமான மதிப்பு என்பதைக் காட்டுகின்றன. தக்ளியில் மூன்று மாதம் பயின்ற பிறகு, அதாவது பிள்ளைகள் தக்ளி கற்க ஆரம்பித்த முதல் மூன்று மாதங்களில், ஒவ்வொருவரும் சுமார் பத்து அணா மதிப்புள்ள நூலைப் பிரதி மாதமும் உற்பத்தி செய்கிறார்கள். இதில் சேதாரத்துக்குரிய கழிவும் நீக்கப்

பட்டுள்ளது. மூன்று மாதத் தக்ளிப் பயிற்சியில் இந்தப் பலன் கிடைத்தாலும், பையன் இன்னும் அதிகப் பயிற்சி அடைந்து தக்ளிக்குப் பதிலாக ராட்டையில் நூற்கும் பட்சத்தில், மாதந்தோறும் ஒரு ரூபா முதல் ஒன்றரை ரூபா வரை கூலி பெறமுடியுமென்று சொல்வது மிகையாகாது. அட்டைவேலை செய்தால், இன்னும் அதிகக் கூலி கிடைக்கிறது. வர்தாவில் பயில்கிற பிள்ளைகள் அட்டை வேலையில் முதல் மூன்று மாதத்திலேயே மாதம் ஒரு ரூபா முதல் ஒன்றேகால் ரூபா வரையில் கூலி சம்பாதிக்க முடிகிறது.

இந்தியாவில் கிராமப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயருக்குச் சாதாரணமாய்க் கொடுக்கும் சம்பளம், மாதம் பத்து அல்லது பன்னிரண்டு ரூபாய்க்கு அதிகமில்லை.* ஆலோசித்துப் பார்த்தால் இந்நாட்டுக் குழந்தைகளுக்குக் கல்வி பயிற்றும் பொறுப்புடைய ஆசிரியர்களுக்கு, இச் சம்பளம் மிகவும் குறைவு என்பதில் சந்தேகமில்லை. இன்னும் அதிகமான சம்பளம் கொடுக்கவேண்டும். அவர்களுடைய வருவாயை குறைந்தபட்சம் இருபது ரூபாய் என்ற அளவுக்கு உடனடியாக உயர்த்தவேண்டும். இருபது அல்லது இருபத்தைந்து பிள்ளைகள் ஒரு வகுப்பில் இருந்து தினசரி ராட்டையில் இரண்டுமணி நேரம் உழைப்பார்களானால், மாதந்தோறும் இந்தத் தொகையை எளிதாகச் சம்பாதித்துவிடலாம். நூற்றல்போலவே, அட்டைவேலை, தச்சுத்தொழில் முதலான மற்றத் தொழில்களிலும் எளிதில் இன்னும் அதிகம் சம்பாதிக்கலாம். இதுவே ஆதாரக் கல்வித்திட்டத்தின் பொருளாதாரப் பிரசினை என்பது வெறும் கொள்கையல்ல; திட்டமாய்க் காண்கிற சங்கதி. வர்தா பாடசாலையில் துள்ளிபமான புள்ளி விவரங்கள் எப்படிக் கிடைத்தன என்று கவனிப்பவர்கள்

* இது முந்திய நிலை.

இந்த முடிவுகளை நேர்முகமாய்க் காணலாம். அங்குள்ள ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவனும் செய்த தினசரி வேலையைக் குறித்த திருத்தமான குறிப்பு வைத்திருக் கிறார்கள்.

ஆனால், நம் நாடு இனியும் கிராமக் கைத்தொழிலைப் பிடித்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை, யந்திரத் தொழில் மயமாக ஆகலாம் என்று சொல்லுகிறார்கள். ஆனால், என்ன? நம் நாடு முழுமையும் கிராமக் கைத் தொழிலை விட்டு, ஆலைத் தொழிலையே மேற்கொண்ட தென்று வைத்துக்கொள்வோம்; கொண்டாலும், கல்வி பயிற்றும் பொருட்டு, ஆலைத்தொழில்களைப் பாடசாலை களில் புகுத்தி நடத்தமுடியாது. ருஷ்யாவில், 18 வயதுக் குக் குறைந்த பிள்ளைகளைப் பெருந் தொழிற்சாலைக்கு அனுப்புவதில்லை. கைத்தொழில்களிற் பயிற்றுவதன் மூலமாகவும், ஆங்காங்கு தனித்தனியே அமைந்துள்ள பாடசாலை வேலைச்சாலை மூலமாகவும், கல்வியில் பல தொழிற் பயிற்சியைத் தருகிறார்கள். "பாடசாலையின் வேலைச்சாலைக்கு வேண்டிய மூலப்பொருள்களையும் கருவி களையும் தொழிற்சாலை தருகிறது. பாடசாலையின் தொழிற்பகுதியாகிய அவ்வேலைச்சாலைக்கு வேண்டிய கருவி தளவாடங்கள் முதலியவற்றைத் தொழிற்சாலையே அமைத்துத் தருவது வழக்கம். தொழில் ஆசிரியரையும் சில சமயம் தொழிற்சாலையே அனுப்புவதுண்டு. கார்க் கோவ் என்ற இடத்திலிருந்த பாடசாலையானது தொழிற் சாலையைச் சார்ந்திருந்தது. பாடசாலையின் பல தொழில் வேலையை மேற்பார்வையிடும் பொருட்டு, தொழிற்சாலை யானது, தன்னுடைய திறமை வாய்ந்த நிபுணரான எஞ் சினியர் ஒருவரை அனுப்பி இருந்தது. அவர் ஆசிரியராக வும் இருந்தார். பாடசாலையில் நடைபெற்ற தொழி லானது, வயிற்றுப் பிழைப்புக்கான தொழிற்பயிற்சி

என்ற முறையில் இல்லாமல், கல்வி வளர்ச்சிக்கான முறையில் நடைபெறும்படி அவர் பார்த்துவந்தார். தினந்தோறும் பாடசாலையில் அவர் பல மணிநேரம் செலவிட்டார். பாடசாலையின் தொழிற்பகுதி மிகவும் சிறப்பான முறையில் கருவி தளவாடங்களைப் பெற்றிருந்தது.'' ருஷ்யா தொழிலாளருடைய சொர்க்கம் என்றும் அங்கு நாடு முழுமையும் பெரிய ஆலைத்தொழிலை மேற்கொண்டிருக்கிறது என்றும் சொல்லுவார்கள்; அந்த நாட்டில் இவ்விதம் நடைபெறுகிறது என்பதை நாம் அறிய வேண்டும்.

இந்தியாவின் நிலைமை வேறு. அதிர்ஷ்டவசமாகவோ, துரதிர்ஷ்டவசமாகவோ, இங்குள்ள நிலைமையும் சந்தர்ப்பங்களும் சிறப்பான தனித்த இயல்புடையனவாய் இருக்கின்றன. இங்கு இருப்பது, நமக்குப்பிடித்த அபிப்பிராயத்தைப் புதிதாய் எழுதக்கூடிய, எழுத்தில்லாத சுத்தமான பலகை யல்ல; நிரந்தரமான பலவகைக் கருத்துக்கள் தன் மீது எழுதப்பெற்றுள்ள பலகை. நம் நாட்டில் சரித்திரத்தின் போக்கு என்னவோ அதையே நாம் பின்பற்றவேண்டும். நாம் நினைத்த மாத்திரத்தில் ஒரு புதிய சமுதாயத்தை உத்தரவு போட்டுச் சிருஷ்டித்துவிட முடியாது. நாடே ஒரு சமயம் பெரிய ஆலைத்தொழிலை மேற்கொள்வதென்று தீர்மானித்தபோதிலுங்கூட, இதற்கும் அனேக வருஷங்கள் பிடிக்கும். இதற்கிடையில், நாட்டில் இப்போதுள்ள கைத்தொழில்கள் நாசம் அடைவதைத் தடுத்து, அவை மேலும் வளர்வதற்குத் துணைசெய்வது மிகுந்த பயனுடையது. ஜப்பான் முதலிய நாடுகள் பெரிதும் இயந்திரமயமாகிவிட்டன; அங்குங்கூட, கைத்தொழில்களும் கிராமத்தொழில்களும் வளர்வதற்கு ஏராளமான இடம் இருக்கிறது. இப்போது மின்சாரசக்தி வந்திருக்கிறபடியால், பெரிதும் குவியல் முறையில் நடைபெறும் ஆலைத்

தொழில்களில் சிலவற்றைக்கூட அங்கங்கே பிரித்துப் பரவலாக்கவும் முடியும். முடிவாக, நாட்டுத்தொழில் முழுமையும் ஆலைத்தொழிலாகிய குவியல் முறையில் நடைபெற வேண்டும் என்று தேசம் தீர்மானிக்குமானால், அப்போதுங்கூட, கைத்தொழில்கள் ஓங்கியிருந்தால், தொழிலாளரின் திறமையும் வேலையின் வேகமும் ஓங்கியிருக்கும் என்றும், கைத்தொழில்கள் இல்லாவிட்டால் இவை ஓங்கமாட்டா என்றும் தெரியவரும். கைத்தொழிற் பயிற்சியுடையவன், கைத்தொழில் தெரியாத உழைப்பாளியைவிட, யந்திரத்தொழிலில் அதிகத் தேர்ச்சிபெற்றிருப்பான். எனினும், முன்னமே நாம் குறிப்பிட்டது போல, தேசம் முழுமையுமே பூரண ஆலைத்தொழில்களை மேற்கொண்ட பிறகுங்கூட, கல்வி பயிற்றும் பொருட்டுப் பாடசாலைகளில் தொழிற்பகுதி அல்லது வேலைச்சாலையை ஏற்படுத்தவேண்டித்தான் வரும்; இங்கு, பொதுக்கல்வியறிவு பெறும் பொருட்டு, பிள்ளைகள் சிரத்தையோடு கைத்தொழிலைப் பயில்வார்கள். ஆதலால், எந்தக் கண்ணோடு பார்த்தாலும், காந்தியடிகளுடைய கல்வித்திட்டம் நாட்டுக்குப் பயனளிக்கும் என்பது உறுதி.

ஆயிரக்கணக்கான பாடசாலைகளில் உற்பத்தி ஏராளமாக நடைபெறும்போது, உற்பத்தியான பொருள்கள் என்னவாகும் என்பது கேள்வி. இக்கேள்வியைக் கேட்பவர்கள், நாட்டில் பலவகையான உற்பத்தியும் மிகுதியாய்ப் பெருகினால்தான் இந்தியாவின் செல்வநிலை மேம்படும் என்று மறுபுறம் சொல்லுகிறார்கள். இந்தியாவில், விவசாயத்துறையிலும் தொழில்துறையிலும் தேவையான அளவு உற்பத்தியாகவில்லை. இங்கு, போதிய உணவில்லை, போதிய உடை இல்லை; வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய பொருள்களே மிகவும் குறைவாய்த்தான் கிடைக்கின்றன. தேவைக்கு ஏற்ற அளவு பொருள்களை இந்தியா

உற்பத்தி செய்யமுடியவில்லை. அப்படியிருக்க, இக் கல்வித்திட்டத்தின்படி புதியதாய்ப் பொருள் உற்பத்தியா வதைக் கண்டு சிலர் ஏன் அஞ்சவேண்டும்? பொருள் உற்பத்தி பெருகவேண்டும் என்பது நம் விருப்பம். மித மிஞ்சிய உற்பத்தியும் உற்பத்தியான பொருளின் தேக்க மும் ஏற்படாத வரையில், இந்த விருப்பம் நிறைவேறு வதற்கான வழிகளையும் சாதனங்களையும் நாம் வரவேற்க வேண்டும். இந்தக் கல்வித்திட்டத்தைக் குறைகூறுபவர் கள் இரண்டு விதமாகவும் சொல்வது பொருந்தாது. ஒரு புறம், நாட்டில் உற்பத்தி போதவில்லை என்கிறார்கள். மறுபுறம், இந்த விதமாக உற்பத்தியைப் பெருக்குவதும் தப்பு என்கிறார்கள்; ஏனென்றால், நாம் கூறுகிற இந்த வித உற்பத்தி முறையில் உற்பத்தி செய்கிற யந்திர மானது மிகவும் சிக்கலான அமைப்புடைய மனித யந்திரம்: அல்லது கையினால் இயக்கக் கூடிய எளிமையான அமைப் புள்ள கருவிதான்; இது அன்னிய நாட்டிலிருந்து வந்து இறக்குமதியாக வில்லை. இதில் நாம் முடிவாகப் பார்க்க வேண்டுவது, உற்பத்தியின் பெருக்கமே தவிர, எந்த விதமான யந்திரம் அல்லது கருவி உபயோகிக்கிறோம் என்பதன்று.

ஆயினும், இவ்விதம் உற்பத்தியாகும் பொருள்கள் விற்பனைக்கு வரும்போது, வாழ்க்கைத் துறைகளில் அனேக மாற்றங்கள் ஏற்படுமேயென்று அவர்கள் கூறு கிறார்கள். இம்மாற்றங்கள் தொழில் துறைகளைப் பாதிக்குமே! அல்லது இப்பொருள்கள் தனிப்பட்டோர் முயன்று செய்யும் பொருள்களோடு போட்டியிட மாட்டாவா? இப்படி அவசியம் நடக்க வேண்டுமா என் பதை நாம் சற்றுப் பார்ப்போம். உற்பத்திப் பெருக்கம் இந்தியாவுக்குப் பெரிதும் தேவையானது. இந்தக் கூற்றுக்கு ஏதேனும் பொருள் உண்டு என்றால், இன்று

அன்னிய நாட்டிலிருந்து ஏராளமான உணவுப் பொருள் களையும் வேறு மூலப்பொருள்களையும் உற்பத்தியான சாமான்களையும் இந்தியா வாங்கிக் கொண்டிருக்கிறது என்பது தான் பொருள். அப்படியானால், நம் நாட்டுக் குள்ளாகவே ஏற்படுகிற ஒவ்வோர் உற்பத்திப் பெருக்க மும் அன்னிய நாட்டிலிருந்து சரக்குக்கள் இறக்குமதி யாவதைத் தவிர்ப்பதாய் இருக்க வேண்டும். மற்றப்படி, இந்த நாட்டிலேயே நடைபெறும் தொழில்களோடும் பொருள் உற்பத்தியோடும் நெடுங்காலம் வரையில் போட்டி ஏற்பட வேண்டிய அவசியம் இல்லை. உற்பத்தி யைப் பெருக்குவதற்காக நம் நாட்டார் எந்தத் திட்டத்தை மேற்கொண்ட போதிலும் கூட, பொருளாதாரத் துறையில் ஏதேனும் ஒரு வகையான திட்டம் வேண்டும்; அதாவது, இத்திட்டத்தின் பயனாய் உற்பத்தியாகும் சரக் கானது விற்றுமுதல் ஆகாமல் தேங்கியிருக்கலாகாது. இதன்பொருட்டு நாம் எந்த முறையை அனுஷ்டித்தாலும், புதிய உற்பத்தியானது ஏற்கனவே நாட்டில் உற்பத்தி யாகும் பொருளுக்கு அல்லது பொருள் விற்பனைக்கு இடையூறு அல்லது முரண் இல்லாமல், அன்னிய நாட்டுச் சரக்குக்கள் இங்கு விற்பனையாவதை மட்டும் ஒழிக்கவல்ல உபாயங்களை நாம் கடைப்பிடிக்க வேண்டும். இதன் பொருட்டே, பாடசாலையில் உற்பத்தியாகும் சரக்குக் களுக்கு அரசாங்கமே பெறுப்பேற்க வேண்டும் என்று காந்தியடிகள் வற்புறுத்திச் சொல்லுகிறார். உற்பத்தி யான பொருட் செல்வத்தை அரசாங்கமானது தன் பல வகைப்பட்ட தேவைகளுக்கும் பயன் படுத்திக் கொள்ள வேண்டும், உபயோகியாமல் தேங்கியிருக்கும் சரக்குக்களுக்கு விற்பனை வசதிகளையும் அமைத்துத் தர வேண்டும். நாட்டில் ஏற்கனவேயுள்ள பொருள் உற் பத்தி முயற்சிக்குக் கேடு ஏற்படும் வகையில், இந்த வசதி களைச் செய்ய அறிவுள்ள எந்த அரசாங்கமும் முன்

வராது. அன்னிய நாட்டுச் சரக்கு இறக்குமதி யாவதை ஒழிக்கவே அது முதலில் வழிதேடும். அரசாங்கம் கொஞ்சம் அறிவுடைய தாயிருந்தாலும், நிச்சயம் இவ்விதமான சிறு திட்டம் அதன் யோசனையில் தானே உதிக்கும் சர்வ ஜனக்கல்வி என்ற தாங்கள் கல்வித் திட்டத்துக்குப் பண வருவாய் தேடும் பொருட்டு, தேவையில்லாத சரக்குக்கள் வந்து இறக்குமதியாவதற்குச் சரியான தடைகள் விதிக்க வேண்டுமென்று மத்திய இந்திய அரசாங்கத்தை மாகாண அரசாங்கங்கள், தாங்கள் ஒன்று சேர்ந்தும் அல்லது காங்கிரஸ் மாகாண அரசாங்கங்கள் தனியாகவும், நிர்ப்பந்திக்க முடியுமென்றே நம்புகிறேன். இன்னும் அவசியமானால், தேச நன்மைக்கான அப்படிப்பட்ட திட்டங்களுக்கு ஆதரவாக, சட்ட பூர்வமான முட்டுக்கட்டைகளையும் போட முடியும். இவற்றை நிச்சயம் மக்கள் ஆதரிப்பார்கள்.

இது பற்றி நம் கடமையை காந்தியடிகள் மிகவும் தெளிவுபடுத்தி யிருக்கிறார். பூரண மதுவிலக்கு ஏற்படும் பட்சத்தில், மாகாண அரசாங்கங்களுக்கு வருவாய் குறைந்து, வரவு செலவைச் சரிக்கட்ட இயலாது என்பது அனேகர் கருத்து. இந்த நிலைமை வந்தால், இந்திய அரசாங்கத்தினிடம் பணவுதவி கேட்க வேண்டும்; இந்திய அரசாங்கம் உதவி செய்யாவிட்டால், இத்தகைய உத்தம நோக்கம் கைவிடும் பொருட்டு, அரசியல் முட்டுக் கட்டைகள் ஏற்படுத்துவதும் நியாயமானதே என்று காந்தியடிகள் கூறுகிறார். பூரண மதுவிலக்கு ஏற்படுவதற்கு வேண்டிய நிர்ப்பந்தம் செய்ய முடியுமென்றால், அதே போல மிகவும் முக்கியமான திட்டமாகிய சர்வ ஜனக் கல்வி விஷயத்திலும் அந்த நிர்ப்பந்தம்செய்வது சாத்தியம். எப்படியாயினும், காந்தியடிகளின் திட்டம் கருத்தளவில் குற்றமற்றதென்றால், அதைச் செயல் முறையில் நடை

பெற வல்லதாக்குவதற்கு மாகாண அரசாங்கங்கள் முழு முயற்சியும் செய்வது கடமையாகும். எனினும், செயலளவில் சாத்தியம், கொள்கையளவில் சாத்தியம் என்னும் இரண்டுக்கும் சற்றே வேறுபாடு இருக்கத்தான் செய்யும். குற்றங்கள் நிறைந்த இவ்வுலகத்தில் இந்த வேறுபாட்டைத் தவிர்க்க முடியாது. எப்படியும் இக்கல்வித் திட்டம் நடத்திப் பார்க்கத் தகுந்தது. மனிதர் மட்டுமல்ல, மனித சமுதாயங்கள் கூட, செய்து பழகித்தான் கற்கிறார்கள்; ஒரு சமயம் தோல்வியடைந்தாலும் கூட, அதனாலும் அவர்களுக்கு அறிவு வளர்கிறது. சென்ற இருபது வருஷ காலத்தில் போல்ஷவிஸம் பரவிய ருஷ்ய நாட்டில், எத்தனைத் திட்டங்கள் சோதித்துப் பார்த்து ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளன, அல்லது கைவிடப்பட்டுள்ளன! அப்படியிருக்க, தொழில் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் கல்வித் துறையிலும் சிறந்த சந்தர்ப்பங்களை நமக்கு அளிக்கவல்ல இந்தக் கல்வித்திட்டத்தை நாமும் ஏன் கடைப்பிடித்துப் பார்க்கக்கூடாது?

ஆதாரக் கல்வியின் முக்கிய தத்துவங்கள்

முந்திய அத்தியாயங்களில், ரூஸ்ஸோ முதல் தோன்றியுள்ள கல்வி சம்பந்தமான தத்துவ சாஸ்திரிகள் சீர்திருத்தவாதிகள் ஆகியோர் சிலருடைய அபிப்பிரா யங்களைச் சுருக்கமாய்க் குறிப்பிட்டோம். இவர்கள், உழைப்பும் கைத்தொழிலும் கல்விப்பயிற்சியில் முக்கிய மான அங்கம் வகிக்க வேண்டும் என்று சொல்லிய வர்கள். சமுதாயத்துறையிலும் ஆசிரியத்துறையிலும் இருந்தே இக் கருத்துக்களை இவர்கள் சொல்லியிருக் கிறார்கள். ஆனால், கல்வித்துறையில் தொழிலுக்கு எவ்வளவு ஆற்றல் உண்டு என்பதை காந்தியடிகள் தம் மனோபாவனையால் அறிந்த மாதிரி தெளிவாக அறிந்து சொல்லியவர்கள் மிகச் சிலரே. தொழில் மூலம் கல்வி யென்று காந்தியடிகள் சொல்லியுள்ள கருத்து, மிகவும் துணிவானது, தெளிவானது; அவருக்குமுன் இதுபற்றித் திட்டமிட்டவர்கள் எண்ணியதைவிட அவருடைய கருத்து ஒரு படி முன்னேற்றமுடையது. ஆதலால், இந்தச் சந்தர்ப் பத்தில் அவருடைய புதிய திட்டத்தின் பலாபலன்கள் அனைத்தையும் அறிந்து கொள்வது அவசியம். அவர் வகுத் துள்ள வழிகளைச் சுருக்கமாய்த் தொகுத்துக் கூறினால், நிலைமையைத் தெளிவுபடுத்த இது உதவியாயிருப்பதோடு, மற்றவர்கள் முன்னே சொல்லிய கருத்துக்களையும் செய்த சோதனைகளையும் வைத்து ஒப்புநோக்கவும் இது உதவியா யிருக்கும். தற்காலத்தில் ஐரோப்பாவிலும் அமெரிக்கா விலும் தோன்றியுள்ள சீர்திருத்தவாதிகள் எவரிடமிருந் தும் அவர் ஒன்றையும் கற்கவில்லையென்பதை இங்கு வலியுறுத்த வேண்டியதில்லை. அனேகத்துறைகளில் அவர் சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறார்; தம்முடைய சீர்திருத் தங்கள் வெற்றிபெறுவதற்கு, நூதனமான, புரட்சிகர மான முறைகளை அவர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்;

ஆதலால், கல்வித்துறையில் அவர் சொல்லும் கருத்துக்கள் அவருக்கே சொந்தமானவை என்று நாம் சொல்லாவிட்டாலும்கூட, அவருடைய பெருமைக்கோ மேதைக்கோ சிறிதும் இழுக்கில்லை.

சுருக்கமாய்ச் சொன்னால், அவருடைய கல்விச் சீர்திருத்தத்தின் முக்கியமான அம்சங்கள் பின்வருவன ஆகும்.

1. குறிப்பிடக் கூடிய குறைந்த பட்சக் கல்வியானது, ஆண் பெண் என்ற வேற்றுமையில்லாமல், இந்த நாட்டுக் குடிகள் எல்லோருக்கும் உரியது. தொடக்கத்தில் இது கட்டாயமாக இல்லாவிட்டாலும், வசதிகள் கிடைக்கக் கிடைக்க, இது கட்டாயமாகும். இந்தக் குறைந்த பட்ச சர்வஜனக் கல்வியைத்தான் அவர் ஆதாரக்கல்வி யென்று சொல்லுகிறார். தற்போதுள்ள கல்விமுறை சீமையிலிருந்து இறக்குமதியானது, தேச விரோதமானது. ஆகவே, அவருடைய திட்டம் தேசியத்திட்டம்; எனவே, இதைத் தேசிய ஆதாரக்கல்வி என்று சொல்லுகிறோம்.

2. இந்தக் கல்விக்கான காலம், ஏழு வயதில் தொடங்கிப் பின் ஏழு வருஷ காலமாகும்.

3. தற்போதைக்கு இந்தத் தேசிய ஆதாரக்கல்வியானது இதற்குரிய தொடக்க வயதான ஏழுக்கு முந்திய பருவத்துக்கோ, முடிவுவயதாகிய பதினாலு வயதுக்குப் பிந்திய பருவத்துக்கோ, திட்டமிடவில்லை.

4. இக்கல்வி தாய்மொழி மூலமே நடைபெறும்.

5. போதனா முறை என்ற அளவில், இக்கல்வியானது ஏதேனுமொரு கைவினை அல்லது கைத்தொழிலை மையமாக வைத்தே போதிக்கப்பெறும். தேர்ந்து கொண்ட தொழில் மூலமாகவே மூளைக்கு வேண்டிய பயிற்சி முழுமையும் தரவேண்டும்.

6. இத்தொழிலில் மிக்க தேர்ச்சியும் உற்பத்தி அளவில் நல்ல பலனும் அடையும் நோக்கத்தோடு, இதை முறையாகவும் விஞ்ஞான ரீதியாகவும் கற்கவேண்டும். மூளையுழைப்புக்கு இது ஒரு சாதனம் என்றோ, பொருளாதாரத்துறையில் சுயதேவைப்பூர்த்திவேண்டும் என்றோ, இத்தொழிலைப் பயின்றால் போதாது. இதுவே முடிவான நோக்கமாகவும் அந்நோக்கத்தை அடைவதற்கான சாதனமாகவும் அமையவேண்டும்.

7. தொழில்மூலம் உற்பத்தியாகும் பொருள் தக்க பண மதிப்புடையதாயிருக்கவேண்டும்.

8. உற்பத்தியாகும் பொருளின் மதிப்பானது, ஏறக்குறைய ஆசிரியர் சம்பளச் செலவுக்குச் சரியாக இருக்கும்படி பார்க்கவேண்டும்.

9. கற்பிக்கும் தொழிலுக்கான மற்றச் செலவுகளாகிய கட்டிடம், தளவாடங்கள், புத்தகம், படம், உபகரணங்கள், கருவிகள் முதலியன யாவற்றுக்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும்.

10. உற்பத்தியாகும் சரக்குக்களைப் பயன்படுத்த அரசாங்கம் வகைதேட வேண்டும்; தன் தேவைகளுக்காகவும், குறித்த பாடசாலை அமைந்த பிரதேசத்தின் ஸ்தல ஆட்சிச் சபைகளின் தேவைகளுக்காகவும் அவற்றை உபயோகித்துக்கொள்ளவேண்டும். இவை போக அதிகச் சரக்கு மிஞ்சியிருந்தால், அவற்றை விற்பனை செய்வதற்கான வசதியை அரசாங்கமே அளிக்கவேண்டும்.

புதிய கல்வித்திட்டத்தின் முக்கிய தத்துவங்களின் சுருக்கம் இதுவாகும். இதை எதிர்ப்பவர்களிற் பலர் இவ்வம்சங்கள் ஒவ்வொன்றாய் எடுத்துக் குறைகூறியிருக்கிறார்கள்; இச்சீர்திருத்தத்தை ஒரு தொகையாக ஆராய்ந்து இதன் பலாபலன்கள் அனைத்தையும் அறிய அவர்கள் முயன்றதில்லை.

இடையூறுகள்

காந்தியடிகளின் புதிய கல்வித்திட்டம் எளிமையானது, இயல்பானது, விஞ்ஞான ரீதியானது, மனோதத்துவ ரீதியானது என்று இதுவரையில் கூறினோம்; இதை நிரூபித்துவிட்டதாகவும் நம்புகிறோம். எனினும், இத்திட்டத்தைத் தொடங்கிவைப்பதில் மிகுந்த கஷ்டங்கள் உள்ளன; இவற்றைத் தவிர்க்காவிட்டால் இச்சோதனையே தோல்வியுறுதலுங்கூடும். எல்லாவற்றிலும் பெரிய கஷ்டம், இத்திட்டத்தை நடத்துவதற்கான ஆசிரியர்களைத்தேடி அவர்களுக்குப் பயிற்சியளிப்பதாகும். இன்று ஆசிரியத்துறையிலுள்ளவர்களிற் பெரும்பான்மையோர், புதிய கருத்துக்களைத் தோற்றுவிக்கவோ செயலில் கொண்டுவரவோ திறமையற்றவர்கள். ஆனால், காந்தியடிகளின் திட்டத்துக்கோ, ஓயாத சலனமும் உழைப்பும் விழிப்பும் ஆர்வமும் வேண்டியிருக்கின்றன. இதில், பிள்ளைகளைவிட ஆசிரியரே அதிகம் உழைக்கவேண்டியவர். அவர் கவனத்தோடிருப்பது மட்டுமன்றி, சுறுசுறுப்பாகவும் விழிப்பாகவுமிருக்கவேண்டியவர்; ஒவ்வொரு சிறு விவரத்தையும் கருத்தாய்ப் பார்க்கவேண்டியவர்; வகுப்பில் நடைபெறும் ஒவ்வொரு சிறு வேலையையும் குறித்த திட்டமான தினசரிக் குறிப்பு எழுதிவைக்கவேண்டியவர்; நாள்தோறும் ஒவ்வொரு மாணவனும் செய்த வேலையைக் கவனமாய்ப் பதிவுசெய்ய வேண்டியவர்.

இப்படியிருந்துங்கூட, சாமர்த்தியமுள்ள ஆசிரியரொருவர் செய்வதே கிரமமான பாடசாலை வேலையாகிவிடுதலுங்கூடும். அதையே முறைப்படுத்திப் பதிவுசெய்துவிடுவார்கள்; இங்ஙனம் செய்வது, சொந்தச் சிந்தனையையும் படைப்புத்திறனையும் தூண்டிவிடுவதற்காக வல்லாமல், மற்றவர்கள் அப்படியே பின்பற்றுவதற்கான மாதிரி

யாக அமையும் பொருட்டே. ஆசிரியர்கள் கவனமாகவும் விழிப்பாகவும் இல்லாமையால்தான், முற்காலத்தில் கல்வியும் கல்விபோதனையும், பொருளற்றனவாயும், வளர்ச்சியற்றனவாயும் வெறும் சொல் அல்லது ஏட்டளவாயும் இருந்துவிட்டன. ஆசிரியர் வரிசையில் எவருக்கு அதிகச் சாமர்த்தியமிருந்ததோ அவர் வகுத்த வழியையே மற்றவர்கள் பின்பற்றினார்கள். தங்கள் சொந்தச் செயல் திறனை அவர்கள் பயன்படுத்தவில்லை. இவ்விதமாக அவர்கள், வெறும் பாண்டித்தியம் என்ற நிலைக்கு அறிவு தாழ்ந்து வரும்படி செய்துவிட்டார்கள். காந்தியடிகளின் கல்வித்திட்டம் வெற்றிபெறவேண்டுமானால், ஒவ்வோர் உபாத்தியாயரும், ஒவ்வொரு வகுப்பும், தத்தமக்கு எந்த வழி மிகவும் பொருத்தமானது என்பதை, குறித்த நிலைமையை யொட்டிய எல்லாச் சந்தர்ப்பங்களையும் கவனமாயும் பொறுமையுடனும் ஆராய்ந்தபின், தாமே கண்டறியவேண்டும். முற்காலத்தில் சிற்சில பாடசாலைகள் புதிய வழிகளை மேற்கொண்டு, கல்வி போதனையில் புதிய துறைகளையும் முறைகளையும் மிக்க சிரமத்தோடு கண்டறிந்ததுண்டு. அங்குங்கூட, காலக்கிரமத்தில் பாடசாலை வேலையானது மாமூலாகச் செய்து வருவதாக ஆகி, தனக்குரிய புதுமையையும் ஆற்றலையும் இயக்கத் தன்மையையும் இழந்துவிட்டது. ஆதலால், ஆசிரியர் இவ்விஷயத்தில் எச்சரிக்கையா யிருந்து, பாடசாலைமுறையில் சில மாதிரிகளையும் தாம் ஏற்படுத்தும்போது கூட, இவை மாணவர்களிடம் உள்ள சொந்தச் செயல்திறனை அழிக்காமல், வழியை மாத்திரம் காட்டும்படி இருக்குமாறு பார்க்கவேண்டும். நம் காலத்தில் உலகம் இருந்தபடி இருக்கவில்லை ; வேகமாய் இயங்கிக் கொண்டும் மாறிக் கொண்டும் இருக்கிறது. இன்று முன்னொரு காலத்திலும் இராதவாறு எல்லாம் ஒருவகையான கலக்கத்திலும் குழப்பத்திலும் இருகின்றன. இவற்றுக் கிடையில் மனிதன்

வளர்ந்துகொண்டும் முன்னேறிக் கொண்டும் இருக்க வேண்டியவன். சோம்பியிருத்தல் என்பது இயலாது. ஆசிரியர் ஒவ்வொருவரும் தாமாக ஒன்றைப் புதிதாய்க் காணவேண்டியவர், ஒன்றைப் புதிதாகச் சொந்த முயற்சியால் தோற்றுவிக்க வேண்டியவர். ஏதேனுமொரு முறை இயக்கமின்றி நின்றுவிடுமானால், அவர் தம் முறையை மாற்றிக் கொள்ள வேண்டியவர். அப்போது, புதியவழி அல்லது நோக்கு ஒன்றைத் தாமே அவர் தேடிக் கண்டு கொள்ள வேண்டும். எல்லாக் காலத்துக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களுக்கும் ஒரே முறை பொருந்துவதாகவோ சிறப்புடையதாகவோ இருப்பதில்லை. பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்கும், புத்தகங்கள் வெறும் தூண்டுதலாக மட்டுமே அமைய முடியும். தங்கள் கண்டிப்பான அதிகாரத்தை அவை ஆசிரியரிடமோ மாணுக்கரிடமோ செலுத்தக் கூடாது. இங்ஙனம் என்றும் புதிய முறைகளையும் வழிகளையும் உபயோகித்துக் கொண்டே வருவதால், அறிவு என்றும் புதியதாயிருப்பதோடு அவற்றிலிருந்து ஊக்கத்தையும் பெறும். இந்த விதமாகத்தான் வெறும் சொல்லென்ற மாய வலையிலிருந்து அறிவு விடுதலை பெறும். மேற்சொன்ன கேடுகள் நேராதபடி கவனமாக நாம் காத்துக் கொண்டால், கல்வி போதனையும் கல்வி கற்றலும், இன்பகரமாயும், எளிதாயும், பயனுடையதாயும் இருக்கும்.

காந்தியத்தில் ஆதாரக் கல்விக்குரிய ஸ்தானம்

க. பாடசாலையும் தனிமனிதனும் சமூகமும்

கல்வி யென்பது தனிமனிதனுக்குப் பயிற்சியும் வளர்ச்சியும் தருவதாகும். ஆனால், மனிதன் சமூகமாக வாழ்ந்துதான் தனக்குரிய தனியான குணச் சிறப்பைப் பெறுகிறான். மனிதத் தொடர்பற்ற வாழ்க்கையில் அவன் வளர்வதில்லை. சமூகம் என்ற சூழ்நிலையும் தொடர்பும் இல்லாமல் மக்களின் வளர்ச்சியென்பது இல்லை. ஒருவர் உலகத்தைத் துறந்து தவசியாகவோ துறவியாகவோ ஆனாலுங்கூட, இதுவும் ஒருவகையான சமூக அமைப்புக்கு மாறுபட்டதாகும். துறவியென்று அவர் ஒதுங்கிக்கொள்வது, மிகவும் உயர்ந்த நிலைமையைக் குறிப்பிடவேண்டுமானால், ஒருவகையில் சமூக மேம்பாட்டையே குறிப்பிட வேண்டும். எவ்விதமான சமூக மேம்பாட்டையும் நோக்கமாய்க் கொள்ளாமல் துறவியாவது என்றால், தற்போதைக்குத் துறவியாவதும், பயிற்சிக்காக ஒதுங்கியிருப்பதும், ஓரளவுக்குப் பொருந்துவன ஆகலாம். மற்றப்படி, இது சமயாசாரத்துக்கு ஏற்றதா யிருந்தபோதிலுங்கூட, வெறும் சுயநலச் செய்கை யென்றே சொல்லவேண்டும். சமூகத்தை ஏமாற்றிப் பிழைக்கும் வழிகளில் இது அமைதியான ஒன்றாகும். காட்டில் வாழும் துறவியின் வாழ்க்கைகூட, சமூகம் என்று ஒன்றிருப்பதனால் தான் சாத்தியம். சமூகம் இல்லாவிட்டால், அவன் உடலுக்கும் உள்ளத்துக்கும் உயிருக்கும் பிழைப்பு அல்லது வாழ்வு இல்லை. ஆதலால், உண்மையான எல்லாத் துறவும், தான் பூரண நிலையும் ஆன்ம தரிசனமும் அடையும் நோக்கத்தோடுகூட, தன் நடத்தையாலும் சொல்லாலும் சமூக சேவை செய்வது என்ற நோக்கத்தையும் தன் முன்னே கொண்டிருக்கிறது. இச்சேவை, தனக்காகவும் உண்டு,

சமூகத்துக்காகவும் உண்டு. புத்த பகவான் ஏசுநாதர் இராம கிருஷ்ணர் ஆகிய ஆசாரியர்களுடைய துறவு இப்படிப்பட்டதே. இது, தாங்கள் பூரண நிலையடைந்து, அதனால் மிக்க திறமையாகச் சமுதாயத்தை உருவாக்கும் ஆற்றல் பெறும் பொருட்டுத் தங்களுக்கே விதித்துக் கொள்ளும் ஒருவிதமான கட்டுப்பாடு.

இதன் பொருள் என்னவென்றால், சமூகம் என்றும் தனி மனிதனென்றும் கொள்கையளவில் தான் பிரித்துப் பேச வியலும். வாஸ்தவமான வாழ்க்கையில், இரண்டும் ஒன்றாகவும் ஒன்றோடொன்று இணைந்துமே இருக்கின்றன. இந்த இணைப்பை நாம் புறக்கணிப்பதென்றால், அதனால் தனி மனிதனுக்கும் சமூகத்துக்குமே கேடு உண்டாவது உறுதி. அளவுக்கு மிஞ்சி ஒன்றுக்கு ஆக்கந் தருவது; மற்றொன்றுக்கு அழிவு தரும். இப்படி மிதமிஞ்சிய ஆக்கந் தருவது, உண்மையான அழியாத நாகரிகத்துக்கு இன்றியமையாததாகிய சமநிலை என்ற தன்மையை அழித்து விடுகிறது. உலகத்தில் தோன்றிய கேட்டில் பெரும் பகுதிக்குக் காரணம் இந்தச் சமநிலையின் அழிவு தான். சில சமயம், அராஜகப் போக்குக் கொண்டுள்ள தனிமனிதன் சமூகத்திலேயே ஒரு பெருங்குழப்பத்தை உண்டு பண்ணுகிறான். வேறு சமயங்களில், சமூகமானது தனி மனிதனை நசுக்கி, அவனுடைய சொந்தச் செயல் திறனையும் குணச் சிறப்பையும் அழித்து, அவனை வெறும் யந்திரம் போல் ஆக்கிவிடுகிறது. தனிமனிதன் என்ற நிலைக்கும் சமூகம் என்ற நிலைக்கும் இடையில் மனிதகுலம் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. இரண்டையும் சேர்த்த தொகுப்பு நிலவியது அபூர்வம். அப்படியே அது நிலவினாலும், அதன் ஆயுள் சொற்பந்தான்.

ஆதலால், கல்வியானது திறமையாகவும் பயனுடையதாகவும் நடைபெற வேண்டுமானால், தனிமனிதனையும்

அவனுடைய நலனையும் தேவைகளையும் புறக்கணிக்காமல் சமூக அமைப்புடையதாகவும் சமூக நோக்குடையதாகவும் இருக்கவேண்டும். பண்டைச் சீனதேசத்திலிருந்த தத்துவ ஞானியும் முனிவருமாகிய கன்பூஷியஸ் என்பவர், கல்விக்கும் சமூகம் தனிமனிதன் ஆகியோர் வாழ்க்கைக்கும் உள்ள சம்பந்தத்தைப் பின்வருமாறு கூறுகிறார்: "தெய்வம் நமக்குத் தந்தது பிரகிருதி. பிரகிருதியோடு ஒத்து வாழ்வதே கடமையின் மார்க்கம். இந்த மார்க்கத்தை ஒழுங்கு படுத்துவதையே கல்வி போதனை யென்று சொல்லுகிறோம்." இனி, கடமை யென்பதற்குத் தனி மனிதனைப் பொறுத்தும் சமூகத்தைப் பொறுத்தும் பொருள் உண்டு. பழங்காலத்தை விட்டு நம்முடைய காலத்துக்கு இன்னும் நெருங்கி வந்தோமானால், அமெரிக்கக் கல்வித் தத்துவ நிபுணராக ஜான் டியூயி கல்வியைப் பின்வருமாறு கூறக் காண்கிறோம்: "கல்வியென்பது அனுபவத்தை மீண்டும் உண்டாகச் செய்கிற முறை. அது, தனி மனிதனுக்குத் தன் சக்திகளின் மீது முன்னிலும் அதிகமான ஆதிக்கத்தைத் தந்து, தனிப்பட்டவருடைய அனுபவத்தைப் பெருக்குவது மூலமாக, அனுபவத்துக்கே சமூகத்துறையில் இன்னும் அதிகமான பொருளைத் தருவதாகும்." அன்றியும், புரொபஸர் வில்லியம் ஜேம்ஸ் என்ற அமெரிக்கத் தத்துவ சாஸ்திரி சொல்லுகிறார்: "கல்வியென்பது, எந்தச் செயல் பழக்கங்களை மனிதன் கற்றிருக்கிறானோ, அவற்றை அவனுடைய இயற்கைச் சூழ்நிலைக்கும் சமூகச் சூழ்நிலைக்கும் நன்றாய்ப் பொருந்தும்படி அமைப்பதாகும்."

இந்தியாவில் இன்றுள்ள கல்வி முறையில் சமூக நோக்கம் ஒரு சிறிதும் இல்லை யென்பது நன்றாய்த் தெரிந்த விஷயம். இதனுடைய முக்கியமான நோக்கமாவது, மனிதனுடைய வயிற்றுப் பிழைப்புக்கு வழிதேடுதல்.

எனவே, இந்த நோக்கமும் கைகூடாமற் போனதில் வியப்பில்லை.

அன்றியும், கல்வி என்பது வாழ்க்கை வாழ்வதற்காக. வாழ்க்கை என்றால், ஏதோ ஒரு வகையான சமூக அமைப்பு என்று பொருளாகிறது. ஆதலால், அந்த அமைப்பில் அடங்கிய ஒவ்வொரு தரத்தாரும் தங்கள் தேவைக்கும் நோக்கத்துக்கும் ஏற்றதொரு கல்வியை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும், செய்திகளையும் அறிவையும் திரட்டிக் கொள்வது எவ்வளவுதான் பயனுடையதாயிருந்த போதிலும், கல்வி இதற்காக மட்டுமல்ல; நடத்தையை அபிவிருத்தி செய்வதே கல்விப் பயிற்சி. இந்த நடத்தையை, சமூகத்தொடர்பில்லாமல் தனித்து மனிதன் வளர்த்துக்கொள்ள முடியாது. சமூகச் சூழ்நிலையில்தான் இதுவளரும் என்பது சொல்லாமலே அமையும். நடத்தை (அல்லது குணச்சிறப்பு) என்று சொல்வதற்கு ஏதேனும் பொருள் உண்டென்றால், அந்தப் பொருள் வருவது சமூகத்தால் தான். பலவேறு சமூகங்கள் பலவேறு செயல்களையும் நோக்கங்களையும் பெற்றிருந்தனவென்று சரித்திரத்தில் நாம் காண்கிறோம். ஒவ்வொன்றும் தனக்குப் பொருத்தமான நடத்தை தன் குடிகளிடம் அமைய வேண்டுமென்று எதிர்பார்த்தது. போரிடுவதையே முதன்மையாய்க் கருதி அமைக்கப்பெற்ற சமூகங்களும் இருந்திருக்கின்றன. வேறு சில, ஆன்ம லாபத்தைப் பிரதானமாய்க் கருதின. வர்த்தகமே பிரதானமாய்க் கருதிய சமூகங்களும், தொழில்களையே பிரதானமாய்க் கருதிய சமூகங்களும் இருந்திருக்கின்றன. ஒவ்வொரு சமூகமும், தன் பிரதான காரியம் எதுவோ அதற்கேற்பத் தன் கல்வியை அமைத்துக் கொள்ளுகிறது.

மிகவும் சிக்கலான அமைப்புடைய கல்வி முறையை வகுத்துக் கொண்ட நாகரிகம் பெற்ற புராதன

மக்கள், கிராம மக்களே. சீன நாட்டில் கல்வியானது, வாழ்க்கையுடனும் சமூகக் கட்டுக்கோப்புடனும் மிகவும் நெருங்கிய தொடர்பு பெற்றிருக்கிறது. அங்கு, கல்வியின் பயனாய், மிகவும் உன்னதமான பண்பாடமைந்த மக்கள் தோன்றியிருக்கிறார்கள். இவர்கள் எத்தனையோ நூற்றாண்டுகளாகத் தங்கள் பண்பாட்டில் ஏறக்குறைய எவ்வித மாற்றமுமின்றி இருந்து வருகிறார்கள். இத்தகையதொரு பண்பாடு தோன்றி நிலவுதல் வேறெந்த நாட்டிலும் இல்லை. புராதன ஹிந்துக்களிடையிலும், இவ்விதமான வாழ்க்கையுடன் தொடர்பு கொண்ட கல்வி முறை இருந்தது; ஆனால், இது முக்கியமாய் மேல் சாதிகளுக்கென்றே ஏற்பட்டது. நான்கு வருணங்களாலும், நான்கு ஆசிரம வாழ்க்கையாலும், புருஷார்த்தங்களான அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கையும் மக்கள் அடைய வேண்டியவர்கள். அடைதல் என்பது தனி மனிதரைப் பொறுத்தது, சமூகத்தையும் பொறுத்தது. இங்ஙனமே, புராதன ஸ்பார்த்தானிய மக்கள் தங்கள் அரசின் நோக்கத்துக்கும் தத்துவத்துக்கும் ஏற்ற முறையில் கல்வியை வகுத்துக் கொண்டார்கள். அக்கல்வி ராணுவப் பயிற்சியையே பிரதானமாய்க் கொண்டது. புராதன ஏதென்ஸ் நகரமும் தனக்கென ஒரு கல்வியைக் கொண்டிருந்தது. இடைக்காலத்திலிருந்த சமூக அமைப்பும், தனியான ஒரு கல்வி முறையுடையதாயிருந்தது. இக்காலத்து ஐரோப்பாவும், தன் பிரதான நோக்கம் நிறைவேறும் பொருட்டுத் தனக்கென்று ஒரு கல்வி முறையை அமைத்துக் கொண்டிருக்கிறது. இப்போது தான் புதிதாக ஏற்பட்ட ருஷ்யக் கம்யூனிஸ அரசாங்கமும், தன் லக்ஷ்யங்களுக்கு ஏற்ற ஒரு கல்வி முறையை அமைத்துக்கொண்டிருக்கிறது.

குறித்த ஒரு கல்வி முறையினுல் தனி மனிதனையோ அல்லது சமூகத்தையோ மாற்றிப் புத்துருவம் கொடுக்க முடியுமா என்பது ஒரு கேள்வி; சில உள்ளுணர்வுகளையும் மனப்போக்குக்களையும் எந்த விதக் கல்வி முறையாலும் அடியோடு மாற்றிவிட முடியாது என்பது மற்ெருரு கருத்து. இவற்றை நாம் இப்போது ஆராய வேண்டியதில்லை. இவை யிரண்டுக்கும் இடைப்பட்ட கருத்து, தனிப்பட்ட மனிதனை உருவாக்கவும், சமூகத்தைச் சரியான வழியில் செலுத்தவும் வல்ல பெருஞ் சாதனங்களில் கல்வி மிகவும் முக்கியமானது என்ற கருத்து. விவேகத்துக்குப் பொருந்துவதான இந்தக் கருத்தை நாம் ஆராயலாம். சமூகத் தொகுதி ஒவ்வொன்றுக்கும், புத்தி பூர்வமான அல்லது அபுத்தி பூர்வமான நோக்கமொன்று இருக்கிறது. இதை யொட்டியே அதன் கல்வியும் உருவடைகிறது. உபாத்தியாயர் தம் மாணுக்கரின் நடத்தையை உருவாக்க முயலும்போது, இந்த நோக்கத்தின் அபிவிருத்தியையும் நிறைவேற்றத்தையும் திட்டமாக ஞாபகம் வைத்திருக்கவும் கடைப்பிடிக்கவும் வேண்டும். கொண்ட நோக்கமானது பல்வேறு வகைப்பட்ட கல்வி முறைகளால் கைகூடக் கூடும்; மேற்கொள்ளும் முறைக்கும் நோக்கத்துக்கும் இன்றியமையாத தொடர்பு இருக்கிறது. எனினும், நோக்கம் எதுவாயினும், மேற்கொள்ளும் முறை விஞ்ஞானரீதியாகவும் மனேதத்துவரீதியாகவும் திறமையாகவும் இருப்பது அவசியம்; அது எளிதாயும் இயல்பாயும் இருக்கவும் வேண்டும். இருப்பினும், குறித்த சமூக நோக்கம் கைகூடுவதற்கு, கல்வியில் சில முறைகளே மற்றவற்றைவிடப் பொருத்தமா யிருக்கின்றன. ஆதலால், காந்தியடிகள் இந்த நாட்டுக்கு என்ன சமூக லக்ஷயம் தருகிருரோ அதை யொட்டி அவர் காட்டுகிற புதிய கல்விமுறையை ஆராய்வது பொருத்தமாகும்.

உ. காந்தியடிகளின் வாழ்க்கைத் தத்துவம்

குறித்த ஒரு சமூகத்தின் பிரதிநிதிகள் என்னத்தக்க அங்கத்தினர்கள், தங்கள் தனிப்பட்ட வளர்ச்சிக்கும் வாழ்க்கையின் நிறைவுக்கும் என்ன லக்ஷயத்தை வைத்திருக்கிறார்களோ அதைப் பெரிதும் தழுவியே அச்சமூகத்தின் நோக்கமும் அமைகிறது. இந்தத் தனிப்பட்டவர் லக்ஷயத்தை, அவர் வந்தவாறும் போமாறும் என்னவென்று பொதுவாய் மக்கள் நம்புகிறார்களோ அது அதிகமாய்ப் பாதிக்கிறது. காந்தியடிகளைப் பொறுத்தவரையில், மனிதன் வந்தவாறும் போமாறும், தெய்வ சித்தத்தையொட்டியது. ஆதலால், அவன் வாழ்க்கை நோக்கமும், கேவலம் லௌகிக வாழ்வு என்ற அளவில் அமையாமல், ஆன்மார்த்த வாழ்வைக் கருதியதாகிறது. இந்த நோக்கம் அவனுக்குக் கைகூட வேண்டுமானால், அவன் தானே தனக்கு ஒரு லக்ஷயமாக அமையவேண்டுமேயன்றி, மற்றொன்று நிறைவேறுவதற்குத் தான் வெறும் சாதனமாகிவிடக்கூடாது. மற்ற தனி மனிதர்களோ சமூகமோ தன்னை இவ்விதம் பயன்படுத்திக்கொள்ள அவன் இடங்கொடுத்தலாகாது. தன்னளவில் வந்த தெய்வசித்தத்தை அவன் சமூகத்தில் வாழ்ந்தே நிறைவேற்றக் கடமைப்பட்டவன்; ஆனால், குறித்த ஒரு சமூக அமைப்பின்மூலம் அவனுக்கு வரவேண்டிய நன்மை முழுமையும் வரமுடியாமற் போகுமானால், அதுபற்றி அவன் புரட்சி செய்து தனக்கெனப் புதிய வழியையும் அமைத்துக்கொள்ளும் உரிமையுடையவன்; அது மட்டுமல்ல, அப்படி அமைத்துக் கொள்வது அவனது கடமையும் ஆகும். எனினும், இப்புரட்சியானது, அவனுடைய சொந்த நோக்கம் நிறைவேறுவதற்காகவன்றி, சமூக நோக்கங்கள் நிறைவேறுவதற்காகவே ஏற்படவேண்டும்.

உலக வாழ்க்கையே சதம் என்று எண்ணுகிற உலகாயதத்துக்கு, தனி மனிதன் தனக்கென்று எந்த லக்ஷ்யமும் உடையனல்லன் ; இன்று அவன் வாழ்கிற வாழ்க்கையைத் தவிர வேறு எந்த வித வாழ்வும் அவனுக்கு இல்லை. உடல் அழிந்தவுடனே தானும் செத்துஅழிவதாக அவன் எண்ணுகிறான். உயிருக்குத் தொடர்பு என்பது இல்லை; சாகாமை என்பது அவனளவில் இல்லை. சமூகமானது தொடர்பாக நிலவுவது; அதற்கு ஒருவகையில் அழியாமை என்பது உண்டு. இந்த அழியாமையே, முடிவில்லாத சாசுவத முன்னேற்றமாகும். இந்த முன்னேற்றமென்பது, பிரகிருதியின்மீது மேலும் மேலும் அதிகமாக ஆதிக்கம் செலுத்துவதும் அதன் பயனாய் மக்கள் பண்பாட்டிலும் நாகரிகத்திலும் ஏற்படுகிற செம்மையும் ஆகும் : ஆனால், இந்தச் செம்மையை இன்றைய மக்கட் சமூகத்தில் நாம் சிறிதும் காணவில்லை. தனி மனிதன் செத்துமடிகிறான் ; ஆனால், சமூகம் மறையாமல் வாழ்கிறது, முன்னேறுகிறது. முன்னிலும் மேம்பட்ட அமைப்பைப் படைத்துக் கொண்டே போகிறது. அதன் முன்னேற்றத்துக்கு முடிவில்லை, முடிவு ஏற்படவும் முடியாது. ஆதலால், சமூகத்தின் நோக்கங்கள் கைகூடுவதற்குத் தனி மனிதர்கள் கருவிகளாகவே இருக்கவேண்டியவர்கள். சமூகமின்றி அவர்களுக்குத் தனியான வாழ்வு இல்லை. சமூகம் வளர வளர, எதிர்காலத்தில் வரும் மனிதர்கள் இன்னும் வளமான, பூரணமான, மேன்மையான வாழ்வு வாழ்வார்கள் என்பது உண்மை. ஆனால், இம்மையில் தனி மனிதனுக்கு நிறைவு என்பது இல்லை ; மறுமையில் அழியாமை என்பதும் இல்லை. சமூகத்தை முன்னே செலுத்த உதவியதோடு அவன் வாழ்க்கை முடிகிறது. சமூகத்துக்கும் நிறைவு என்பது இருக்கமுடியாது. லக்ஷ்யமானது எப்போதும் முன்னே தள்ளிப் போய்க்கொண்டே இருக்கிறது. தனி மனிதனுக்கு எத்தனையோ ஆசைகளும்

அச்சங்களும், சோதனைகளும் நடுக்கங்களும் இன்பமும் துன்பமும் இருக்கின்றன. அவன் தனக்குப் புறம்பான ஒரு நோக்கத்தின் பொருட்டு உழைக்கவும் துன்பத்தை ஏற்கவும் துணிந்து, அதன் வெற்றியைத் தனி மனிதன் என்ற முறையில் தான் காணமல் இருப்பதில் அல்லது அனுபவியாமல் இருப்பதில் என்ருகிலும் திருப்தியடைவானு என்பது, நாம் இப்போது செய்யும் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டதாகும்.

காந்தியடிகளைப் பொறுத்த வரையில், ஆன்ம வாழ்க்கை வாழும் சமூகத்தில் மனிதன் தனது நிறைவை அடையவேண்டும். அப்படிப்பட்ட சமூகமானது, மனிதன் என்ன வேலையை நிறைவேற்ற உலகில் வந்திருக்கிருனே, அதை அவன் நிறைவேற்றும்படி செய்யவல்ல தத்துவங்களை ஆதாரமாய்க் கொண்டிருக்கவேண்டும். இந்தத் தத்துவங்கள், சுருக்கமாய்ச் சொன்னுல், அன்பு அஹிம்சை சத்தியம் நீதி என்பனவாகும். இவற்றின்மீது எழுந்த சமூகத்தில், எவ்வித ஏமாற்றுதலும் சுரண்டுதலும், பொருளாதாரத்துறையிலோ, சமூகத்துறையிலோ, அரசியல்துறையிலோ, சமயத்துறையிலோ இரா. சுரண்டுதலுக்கு இடம், பொருளாதாரத்துறை மட்டுமன்று. அதிகாரத்தை பல வழிகளில் பெறமுடியும்; இதைக் கொண்டு அதிர்ஷ்டமில்லாதவர்களையும் பலவீனர்களையும் அனேக வழிகளில் ஏமாற்றுவதற்கு இடம் இருக்கும். சரித்திரத்தை ஆராய்ந்தால், கொடுங்கோல் மன்னர்களும் சர்வாதிகாரிகளும், இவர்கள் போன்ற பிறரும், தங்களுடைய நாட்டாசையையும், புகழ் வெற்றி என்ற ஆசைகளையும் தணிக்கும் பொருட்டு, எண்ணற்ற ஆடவரையும் பெண்டிரையும் கருவிகளாக உபயோகித்திருக்கக் காண்போம். இவர்களெல்லோரும் மக்களைப் பிடித்த பிசாசுகள். அதனுல் இவர்கள் யாவரும் பணத்தில் பெருத்தவர்கள்

என்றோ பண ஆசை பிடித்தவர்கள் என்றோ சொல்வதற்கில்லை. இவர்களிற் பெரும்பாலோர், தங்களுக்கோ தங்கள் சந்ததியினருக்கோ, பெரும் செல்வம் வேண்டுமென்று ஆசைப்படவில்லை. இவர்களிற் சிலர் தங்கள் சொந்த வாழ்க்கையில் துறவிகள் போலவே வாழ்ந்தார்கள். ஆனால், அதிகாரம் வேண்டுமென்ற அசாதாரணமான, நீக்கமுடியாத ஆசை இவர்களிடம் இருந்தது. இன்று நம் சமூகத்தில் முதலாளிகள் தங்கள் செல்வத்தைக் கொண்டு இன்னும்பெருஞ்செல்வம் அடையும்பொருட்டுத் தங்கள் சகோதர மக்களை ஏமாற்றிப் பிழைக்கிறார்கள். ஆனால், இன்றைய சர்வாதிகாரிகள் இப்படிச் செய்யவில்லை. தங்கள் சொந்த வாழ்க்கையிலும் மனப்போக்கிலும் இவர்கள் எளிமையாகவும் புலனடக்கத்தோடும் வாழ்வது எல்லோருக்கும் தெரியும். பணத்தின் சக்தியைக் கொண்டு இவர்கள் இந்தப் பதவிக்கு வந்ததில்லை. ஆனால், அதிகாரம் தேடுவது மூலமாகவும், தந்திரமாக மனோதத்துவத்தை யுணர்ந்து சாமானிய மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டியும் பாமரமக்களிடைப் பிரசாரம் செய்தும் இந்தப் பதவிகளை அடைந்திருக்கிறார்கள்.

காந்தியடிகள் கருத்திலுள்ள சமூக அமைப்பானது, எவ்விதச் சுரண்டலுக்கும் இடமில்லாததாக இருக்க வேண்டும். பொருளாதார அதிகாரம் அல்லது வேறெவ்வித ஏமாற்றுதலும் அதில் இருத்தலாகாது. இது கைகூட வேண்டுமானால், மக்களுடைய அரசியல் வாழ்க்கை, பொருளாதார வாழ்க்கை சமூக வாழ்க்கை ஆகிய யாவும், அஹிம்சை சத்தியம் தருமம் ஆகியவற்றை வைத்தே நிருமாணிக்கப் பெறுதல்வேண்டும். இவற்றுள் எந்தத் தத்துவம் மறைந்துபோனாலும், அந்த அளவுக்கு ஏமாற்றுதல் நிலைபெறுவது நிச்சயம். ஏமாற்றுதல் இருக்கும்போதெல்லாம், மனிதனிடம் உள்ள தெய்வத்தன்மைக்கே அது

துரோகமாகிறது. அப்போது அவன் தன்னையே நோக்கமாய்க் கொள்ளாமல், தான் கேவலம் ஒரு கருவி என்ற நிலைக்கு இழிந்துவிடுகிறான். ஆதலால்தான், காந்தியடிகள், அதிகாரமோ சமூக அந்தஸ்தோ உலகப்பொருட்செல்வமோ திரண்டு குவிவது கூடாது என்று சொல்லுகிறார். அவர் கருத்திலுள்ள சமூகமானது எவ்வித வகுப்பு வேற்றுமையும் அற்ற உழைப்பாளர் சமூகம்.

இதுபற்றி அவர் சொல்லியுள்ள கருத்துக்களை அனேகர் தவறாகப் பொருள் பண்ணிக்கொண்டதனால், மிகுந்த குழப்பம் விளைந்திருக்கிறது. வருணாசிரம தருமத்தில் தமக்கு நம்பிக்கை உண்டு என அவர் பல தடவை கூறியிருக்கிறார். பழைய சொற்களையும் தொடர்களையும் புதிய பொருளில் உபயோகிப்பது அவருடைய வழக்கம் ஆனால் இந்தப் பொருளை, குறித்த ஒரு சந்தர்ப்பத்தில் அவர் சொல்லியுள்ள ஒரு கருத்தை மட்டும் தனியாக எடுத்து ஆராய்வதால், நாம் தெரிந்துகொள்ளமுடியாது ; அவருடைய சிந்தனையோடும் வாழ்க்கைத் தத்துவத்தோடும் நெருங்கிப் பிணைந்துள்ளது என்று அதைக் கருதினால்தான் அதன் உண்மையான பொருள் நமக்கு விளங்கும். இவ்விதம் அதன் பொருளை நாம் எண்ணிப் பார்த்தால், அவர் சொல்லுகிற வருணாசிரமம் என்பது, இன்றைய ஹிந்து சமூகத்தில் வழங்குகிற வருணாசிரம தருமம் அன்று என்றும், இந்தப் பெயரால் இன்றுள்ள வைதிக ஹிந்து எண்ணுகிற தருமமன்று என்றும், இவற்றுக்கு முற்றிலும் வேறான தருமம் என்றும் நமக்குப் புலப்படும். உழைப்பை எல்லோரும் பங்கிட்டுக்கொள்ள வேண்டும். தனி மனிதருடைய சுபாவத்துக்கும் பாரம் பரியத்துக்கும் கற்றுவந்த திறமைக்கும் ஏற்றபடி எல்லோரும் தொழில் செய்து தொழிலில் தேர்ச்சிபெற வேண்டும் என்பதே அவர் கருத்து. உயர்ந்தது தாழ்ந்தது

என்று தரவாரியாகச் சமூகத்தைத் தனித்தனிச் சாதிகளாகப் பிரிக்கவேண்டுமென்பது அவர் கருத்தல்ல. ஆனால், தாம் சொல்லுகிற சாதிபேதமற்ற உழைப்பாளர் சமூகமானது, ஏதேனும் ஒரு பெரிய ஆலைத்தொழிலை மையமாக வைத்துத்தான் ஏற்பட வேண்டுமென்று அவர் எண்ணவில்லை. தனிப்பட்டவர் ஆதிக்கத்தின்கீழ் நடைபெறுகிற பெரிய ஆலைத்தொழில்கள் ஏமாற்றுதலிலும் சுரண்டுதலிலும்தான் வந்து முடிகின்றன என்பதற்கு நாம் இங்கு சான்று காட்டவேண்டியதில்லை. இது தினந்தோறும் நடைபெற்றுவருகிறது. இதைத்தான் முதலாளித்துவம் என்று சொல்லுகிறோம். இதன் விளைவாக வகுப்பு வேற்றுமையும், சர்வதேசத்துறையில் கூடப் பொறாமையும் பகைமையும் ஏற்பட்டு, உள்நாட்டுக்கலகம் வெளிநாட்டுப் பூசல் முதலியவை உண்டாகியிருக்கின்றன. இவற்றை இன்று உலகமெங்கும் பார்க்கிறோம். ஆனால், பெரிய ஆலைத்தொழில்களை அனைவருக்கும் சொந்தமாகச் செய்து, அதாவது அரசாங்கத்துக்கே சொந்தமாக்கி, அரசாங்கத்தின் அல்லது பொதுமக்களின் ஆதிக்கத்துக்குட்படுத்தினால், அப்படிப்பட்ட பெரிய ஆலைகளும் வியாபாரமும் சுரண்டலில் வந்து முடியமாட்டா என்று அனேகர் எண்ணுகிறார்கள். ஆனால், இதுபற்றி நமக்குள்ள அனுபவமெல்லாம் ருஷ்ய நாட்டில் உள்ள நடைமுறைதான். அங்கும், இது சோதனை என்ற அளவில்தான் இன்னும் நடைபெற்றுவருகிறது. அந்த அனுபவத்தைக்கொண்டு நாம் பார்த்தால், முடிவில் அது சர்வாதிகாரத்திலும் அதிகாரவர்க்கத்தின் ஆட்சியிலும் போய் முடிவதையே நிரூபித்திருக்கின்றன; அதன்படி, நாட்டுக்குடிகளின் செயல் ஒவ்வொன்றும், சுயேச்சையின்றிக் கண்டிப்பான கட்டுப்பாட்டுக்கும் மேல் அதிகாரத்துக்கும் உட்பட்டே நடைபெறுவதாயிருக்கிறது. அத்தகைய சமூகத்தில், எந்த விதமான அமைப்பும் வாழ்க்கையின் தரமும்

அல்லது போக்கும் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ளதோ அதிலிருந்து எவ்விதக் கருத்துவேற்றுமையும் செயல் வேற்றுமையும் இராதவாறு கண்டிப்பாய்த் தடை செய்தாகவேண்டும். அந்தச் சமூகம் தனி மனிதனுடைய வாழ்க்கை முழுமையும் ஒழுங்குபடுத்தும். இவ்விதக் கட்டுப்பாட்டுக்கு உட்படாமல், தனி மனிதர் தம் சொந்த வாழ்க்கைக்காகவும் அராஜக நோக்கத்தோடும் வாழ்வது என்ற முறைக்கு எதிரிடையான முறை என்ற அளவில், இது கொஞ்சநாளைக்கு நடைபெற்றுவரலாம். ஆனால், முடிவில் இது தனி மனிதனுடைய சுய முயற்சியையும் செயல் சுதந்திரத்தையும் போக்கி, அவனை ஒடித்து விடுகிறது. இன்றைக்கு ஒரு புரட்சிகரமான வேகம் அதற்கு இருக்கலாம்; ஆனால், அதன் வியாபகத்துக்கு அனேக தடைகள் உள்ளன என்பதையும், அதற்குள்ளாகவே நாசத்தின் வித்துக்கள் பதுங்கிக் கிடக்கின்றன என்பதையும் நாம் அறியவேண்டும். தான் அழியாமல் காத்துக் கொள்ளும்பொருட்டு அது அனேக சலுகைகளையெல்லாம் காட்டிக்கொண்டு வருகிறது. ஆனால், இவை எல்லா மனிதரும் சகோதரர் என்ற அதன் சமத்துவக்கொள்கையோடு ஒத்து வரவில்லை. மேலும் அதன் அதிகாரமானது, தருமத்தை ஆதாரமாய்க் கொள்ளாமல், ஆள்பலத்தையே ஆதாரமாய்க் கொண்டிருக்கிறது. ஆள்பலமும் ஹிம்சையும் ஜனநாயகத்துக்கு விரோதம் என்பது மட்டுமன்றி, முடிவில் இவை ஏதேனும் ஒருவகையான சுரண்டலில் கொண்டுபோய்விடும். காந்தியடிகளின் கருத்திலுள்ள சுரண்டலில்லாத சமூகமானது, காலக்கிரமத்தில், தருமத்தின் சக்தியையும், தருமத்தின் நியதியையுமே மிகுதியாக நம்பியிருக்கும்.

ஆகவே, முதலாளித்துவ முறையின் பயனாகிய வரையறையின்றித் தனிப்பட்டவருடைய நலனையே தேடுதல்

என்பதைத் தவிர்க்கவேண்டி, காந்தியடிகள், நாட்டின் செல்வ அமைப்பையும் சமூக அமைப்பையும், குவியல் முறையில்லாத கைத்தொழில்கள், பயிர்த்தொழில் ஆகியவற்றை வைத்தே நிருமாணிக்கத் திட்டமிடுகிறார். இந்த நோக்கத்தோடு, தனிப்பட்டவருக்குச் சொத்துக் கொஞ்சமே இருக்கலாமென்ற அடிப்படையில், கிராமக் கைத்தொழில்களையும், குடிசைக் கைத்தொழில்களையும் அவர் ஆதரிக்கிறார். இதில் அவருடைய நோக்கமானது, ருஷ்யச் சீர்திருத்தக்காரரைப் பின்பற்றுவதைப் பார்க்கிலும், மக்கட் சமத்துவத்தையும் மனோதத்துவத்தையும் அதிகம் தழுவியதாயிருக்கிறது. எனினும், தனிப்பட்டவர் சொத்தின்மூலம், பொருள் செல்வமும் ஆன்மிகச் செல்வமும் அதிகம் கிடைத்தல்வேண்டும்; இதன் பொருட்டு, இச் சொத்து ஒருவருக்கே யுரிய பெருஞ் செல்வமாகத் திரளுதல் என்கிற இழிநிலைக்கு வரும்படி விடக்கூடாது; இப்படி வருவது, சொத்தில் லாபமில்லாமல் தந்தைக்குப் பின் மகன் என்ற முறையில் வாரிசுகளுக்கு மட்டுமே உரியதாயிருக்கும். பரவல் முறையில் அமைந்த கிராமக் கைத்தொழில்களும் குடிசைக் கைத்தொழில்களும், செல்வம் எங்குப் பிறக்கிறதோ அங்கேயே சிலர் கையில் செல்வம் திரண்டு பேரைசுவரியமாய்க் குவிவதைத் தடை செய்து விடுகின்றன. தொடக்கத்தில் பொருந்துகிற இந்தத் தடை போதாதென்று பட்டால், தனிப்பட்டவருக்கு அளவற்ற ஐசுவரியம் திரண்டு வருவதைத் தவிர்க்கக்கூடிய வகையில், வாரிசு பாத்தியவரி மரணவரி முதலான சட்டபூர்வமான தடைகளை ஏற்படுத்துவதற்கும் காந்தியடிகள் தயங்கமாட்டார்.

ஆனால், சிலர் கேட்கிறார்கள்: சில இயந்திரத் தொழில்களைப் பரவல் முறையில் அமைத்து விடுவது ஆகக்கூடியது தான்; எனினும், அவை இன்றைய நாகரிகத்துக்கு வேண்டி

யிருக்கின்றனவே, அவை என்ன ஆவது என்று. அப்படிப் பட்டவை பொதுமக்களின் சொத்தாயிருக்கவேண்டும், பொதுமக்களே அவற்றை நிர்வகிக்கவேண்டும் என்று அவர் அபிப்பிராயப்படுகிருர். மற்றவை சம்பந்தப்பட்ட வரையில், பயிர்த்தொழிலும் கைத்தொழிலும் ஒன்றுக் கொன்று அனுசரணையாய் இருந்து ஒன்றையொன்று பூர்த்தி செய்யவேண்டும். தொழில் சம்பந்தப்பட்ட வரையில் எப்படிப் பெருந்தொழில் நிலையங்கள் தனிப்பட்டோருக்குச் சொந்தமாயிருக்கலாகாதென்று காந்தியடிகள் அபிப்பிராயப்படுகிருரோ, அப்படியே பயிர்த்தொழில் சம்பந்தப்பட்டவரையில், பெரிய ஜமீன்கள் இருக்கலாகாதென்று அவர் கருதுகிருர். பெருந்தொழில்நிலையங்களையும் பெரிய ஜமீன்தாரி முறையையும் அவர் எதிர்த்து இப்போது வேலைசெய்வதாகத் தெரியாமலிருக்கலாம். இதற்கு நடைமுறை விவகாரங்களும், அவருடைய போராட்டத்துக்கும் சீர்திருத்தத்துக்குமுரிய தன்மைகளுமே காரணங்கள். பகைமை பலவந்தம, பலாத்காரம் முதலான எதையும் நடைமுறையில் புகுத்த அவர் விரும்பவில்லை. சத்தியாக்கிரகம் சட்டமறுப்பு ஆகிய ஆயுதங்களைக்கொண்டே அவர் தம் வேலையை நடத்துகிருர். இந்தச் சந்தர்ப்பத்தில் பெருந்தொழில் நிலையங்களையும், பெரிய ஜமீன்தாரிகளையும் எதிர்த்துச் சட்டமறுப்புச் செய்யும்படி அவர் சொல்லவில்லை என்ருல், இதற்கும் காரணம் இருக்கிறது; அன்னிய ஆதிக்கத்தால் ஏற்பட்டுள்ள கேடுகளும் தொந்தரவுகளும் இப்போது நீங்கி விடவில்லை; இவை நீங்கி நாடு சுதந்திரமாய் வாழும்போது, சாத்துவிகப் போராட்டங்கூட நடத்தாமல், பெருந்தொழில் நிலையங்களையும் பெரிய ஜமீன்தாரி முறையையும் ஒழிக்கமுடியும் என்றே அவர் நம்புகிருர். படிப்படியாக உயர்ந்துபோகிற வரி முறையும் மரணவரிகளும், காலக்கிரமத்தில் இவ்வித நோக்கம்

கைகூடச் செய்யவல்லவை. அதிகாரம் நம் கைக்கு மாறிய வுடன், வகுப்பு வேற்றுமையுணர்ச்சியையோ, வகுப்புப் பகைமையையோ அதிகம் தூண்டிவிடாமல், சட்டம் ஏற் படுத்துவதன்மூலம் இம்முறைகளை எளிதில் அமுலுக்குக் கொண்டுவர முடியும். மாகாணங்களில் சமீபகாலத்தில் ஏற்பட்ட காங்கிரஸ் மந்திரிசபைகள் சில, நிலவுரிமை சம்பந்தமாகவும் கடன் நிவாரணம் சம்பந்தமாகவும் சட்டம் செய்திருக்கிறார்கள் : இது மேற்சொன்ன வற்றை வலியுறுத்தும். மற்றப்படி, அரசியல் அதிகா ரம் நம்மிடம் வந்த பிறகுங்கூட, பெருந்தொழில் கள், ஜமீன்தாரி நிலவுரிமை ஆகியவற்றில் பாத்திய முடையவர்கள் நம் நோக்கம் நிறைவேறுவதற்குத் தடை செய்ய நேர்ந்தால், அவர்களை எதிர்ப்பதற்குச் சத்தியாக் கிரகம் என்ற ஆயுதம் இருக்கவே செய்கிறது. ஆனால், நமக்குள் ஏற்பட்டுள்ள அநீதிகளைப் பரிகரிப்பதற்கு இந்தச் சந்தர்ப்பத்தில் சட்டமறுப்பை மேற்கொள்வதென் றால், ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நாம் செய்யவேண்டிய பிரதான போராட்டத்திலிருந்து நம் கவனத்தை வேறு வழியில் திருப்புவதாயிருக்கும். ஆதிக்கத்திலிருந்து வரும் அன்னியர்கள், இப்படிப்பட்டதொரு சட்டமறுப்பை, அர சியல் சுதந்திரம் பெற நாம் மேற்கொள்ளும் முயற்சிகளைத் தோற்கடிக்கவே உபயோகித்துக்கொள்வார்கள். ஆதலால், காந்தியடிகளின் தற்போதைய கொள்கை எந்த விதமாகத் தோற்றினாலும், பயிர்த்தொழிலும் கைத்தொழில்களும் நாட்டில் பரவல் முறையில் அமையவேண்டுமென்ற அடிப் படையில் நாட்டுப்பொதுவாழ்வை அமைக்க அவர் விரும்பு கிறார் என்பதில் சந்தேகமிருக்கமுடியாது. அப்படிப் பர வல் முறையில் அமைப்பது, பயிர்த்தொழிலும் கைத் தொழில்களும் கூட்டுறவு முறையில் நடைபெறுவதற்கு விரோதமாகாது.

காந்தியடிகள், குடும்பவாழ்வு, குடும்பதர்மம் என்பவற்றில் நம்பிக்கைக் கொண்டவர். குடும்பம் என்ற மாத்திரத்தில், தனியாக சொத்துக் கொஞ்சமேனும் உண்டு என்பது ஏற்படுகிறது. ஆனல், இந்தத் தனியான சொத்துரிமையானது, பிறர் உழைப்பால் தான் உயிர் வாழ்வதாகிய சுரண்டலால் விளைவதாயிருத்தலாகாது. காந்தியடிகளின் திட்டப்படி, அனைவரும் உழைத்தாக வேண்டும். ஒருவர் மூளையுழைப்பே உடையவராயிருந்த போதிலுங்கூட, அவர் கொஞ்சமேனும் உடலுழைப்புச் செய்யவேண்டும்; தமக்காகச் செய்யாவிட்டாலும், தம் குடும்பம் அல்லது சமூகத்துக்காகவேனும் செய்ய வேண்டும்.

பரவல் முறைக் கைத்தொழில் பயிர்த்தொழில் ஆகியவைபற்றிய காந்தியடிகளின் கொள்கையானது, மனிதனுடைய உயர்ந்த ஆன்மவாழ்வில் பொருட் செல்வத்துக்கும் உலக இன்பங்களுக்கும் என்ன இடமுண்டு என்று அவர் எண்ணினரோ அவ்வெண்ணத்தின்மேல் எழுந்தது. நாகரிகமான பண்பட்ட அறவாழ்க்கை வாழ்வதற்குப் பொருட்செல்வம் ஓரளவுக்கு அவசியந்தான் என்று அவர் ஒப்புக்கொள்கிருர். "ஆன்ம வாழ்வைப் பாமரமக்களின் பால் ஏற்படுத்தவேண்டும். அவர்களுடைய சோற்றுக்கு வழிகாட்டுவதன் மூலந்தான் அதையும் ஏற்படுத்த முடியும். லௌகிகத் தேவைகளை நல்ல முறையில் பூர்த்தி செய்ய வழிகாட்டினுல் தான் இது சாத்தியம்" என்று அவர் அடிக்கடி சொல்லி வருவதுண்டு. உடலுக்கும் உயிருக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறதென்று அவர் ஒப்புக்கொண்ட போதிலுங்கூட, உடலுக்கு உதவுவதான உலகத்துப் பொருட்செல்வம் கேவலம் ஒரு சாதனமே யன்றி அதுவே ஒரு முடிவான நோக்க மன்று என்று அவர் எண்ணுகிருர். தனிமனிதன் வளர்ச்சிக்கு

அப்பொருட் செல்வங்கள் ஓர் எல்லை வரையில் வேண்டியவையே ; ஆனால், அளவுக்கு மிஞ்சி அவற்றையே தேடியுழல்வது, வளர்ச்சியைத் தடுக்கிறதே யொழிய, பெருக்கவில்லை. புலனின்பம் கருதிமட்டும் அவற்றைத் தேடி ஓடுவது தீமை விளைவிக்கும். ஒருபோதும், போதும் என்னாதபடி மேலும் மேலும் பெருகி வருகிற ஆசையையும், மோகத்தையும், அதிகார வேட்கையையும், ஆடம்பரத்தையும் அது பெருக்குகிறது. திட்டமான சில வரையறைகளுக் குட்பட்டவற்றில் உண்டாகும் ஆசையும் ஆர்வமும் தனி மனிதனை அடிமைப்படுத்துகின்றன. இந்த அடிமைத்தனம் அவன் நினைவை மறைத்து நிதானத்தைப் போக்குகிறது. ஆதலால், ஆசையும் பாசமும், ஆரோக்கியமான உலக வாழ்வினால் விளைபவை என்று சொல்லமுடியாது. இவை தாங்களே முடிவானவை என்ற உரிமையுடன் உடலை ஆளுகின்றன. இவ்விதம் மனிதனுடைய சித்தம் விகார மடைந்து, அவன் தன் குணச்சிறப்பை இழந்து போகிறான். எனவே, காந்தியடிகள், ஆசிரமப் பிரார்த்தனையில் தினந்தோறும் பாராயணம் செய்கிற பின் வரும் கீதா சுலோகத்தைப் பூரணமாக நம்புகிறார் :

> த்யாயதோ விஷயாந் பும்ஸ :
> ஸங்கஸ் தேஷூ பஜாயதே |
> ஸங்காத் ஸஞ்சாயதே காம :
> காமாத் க்ரோதோ அபிஜாயதே ||
>
> க்ரோதாத் பவதி ஸம்மோஹ :
> ஸம்மோஹாத் ஸ்ம்ருதி விப்ரம : |
> ஸ்ம்ருதி ப்ரம்சாத் புத்திநாசோ
> புத்திநாசாத் ப்ரணச்யதி ||

" மனிதன் விஷயங்களைக் கருதும்போது அவற்றில் பற்றுதலுண்டாகிறது. பற்றுதலால் விருப்ப முண்டாகிறது. விருப்பத்தால் சினம் பிறக்கிறது. சினத்தால்

மயக்கம். மயக்கத்தால் நினைவு தவறுகிறது. நினைவு தவறுதலால் புத்திநாசம். புத்திநாசத்தால் தான் அழிகிருன்."

ஆதலால், சமூக வாழ்க்கை எல்லா வகையிலும் ஆரோக்கியமாய் இருக்கும்பொருட்டும், சமூகமானது சம நிலையில் இருந்துவரும் பொருட்டும், பொருட்செல்வத்தின் மேலுள்ள பற்றுதலைக் குறைத்துக்கொள்வது மட்டுமன்றி, அச் செல்வத்தைத் தான் சேர்த்துக் கொள்வதையும் குறைக்கவேண்டும். பரவல் முறையில் வியாபாரத்தையும் கைத்தொழில்களையும் அமைப்பதன் மூலம் புறத்தே இந்த நோக்கம் கைகூடச் செய்யலாம்; மனோதத்துவ ரீதியாக, கல்வி மூலம் இது கைகூடும்; இக்கல்வியானது பொருட்செல்வத்தை வெறுத்து ஒதுக்காமல், நல்வாழ்வுக்கு எந்த எல்லை வரையில் இது தேவை என்பதை அறிந்திருக்க வேண்டும். இத்தகைய கல்வியானது, லௌகிக வாழ்வுக்கு மிதமிஞ்சிய மதிப்புத் தராது; வாழ்க்கையில் எது பிரதானம் என்பதையறிந்து, அதற்கே பிரதானம் அளிக்கும்.

இது, வாழ்க்கை பற்றிய உலகாயதக் கொள்கைக்கு எதிரிடையானது. உலகாயதத்தில், உலகத்துச் செல்வத்தை எந்த அளவுக்கு வைத்திருக்கலாம், அனுபவிக்கலாம் என்பதற்கு எல்லையில்லை. இதற்குள்ள எல்லையெல்லாம், தனிப்பட்டவருடைய உடல் முதலியன எந்த அளவுக்கு இடம் கொடுக்கும் என்பதே. சோஷலிசம், கம்யூனிசம் என்கிற சமதர்ம வாதமும் பொதுவுடைமை வாதமும், சமமான வாழ்க்கை வசதிகள் எல்லோருக்கும் கிடைக்கவேண்டும் என்ற மற்றொரு வரையறை விதிக்கின்றன. உலகவாழ்வே சதம் என்று எண்ணுகிற உலகாயதர்கள், உலக வாழ்வையோ, பொருட்செல்வத்தை வைத்திருப்பதாலும் அனுபவிப்பதாலும் வரும் இன்பங்களையோ, கண்டு அஞ்சுவதில்லை. அவர்களுடைய கூச்சல்

களெல்லாம், இன்பங்கள் எல்லோருக்கும் சமமாகக் கிட்ட வேண்டும், இத்தகைய சமநிலை வருவித்த பிறகு இன்றைய விஞ்ஞான முறைகள் மூலமாய் உலகத்துப் பொருள்களை எவ்வளவு அதிகம் பெருக்க முடியுமோ அவ்வளவு அதிகம் பெருக்கவேண்டும் என்பதாகும். நம்முடைய தேவைகளையும் பொருள்களையும் அளவில்லாமல் பெருக்கிக் கொண்டுபோவது, ஆன்ம வாழ்வுக்கு இடையூறு ஆகாது என்று உலகாயதன் எண்ணுகிறான். உண்மையில் தேவைகளின் பெருக்கமே பண்பாட்டுக்கும் நாகரிகத்துக்கும் அளவுகோலாய் இருக்கிறது.

பொருளாதார அமைப்பை அஹிம்சை, சத்தியம், தருமம் ஆகிய அடிப்படையில் நிருமாணிக்கவேண்டுவது போலவே, சமூக அமைப்பையும் இவ்வடிப்படையில் அமைக்கவேண்டும். கூட்டுறவான சேவையை ஆதாரமாய்க்கொண்ட, வர்க்கபேதமும் வகுப்பு வேற்றுமையுமற்ற ஒரு சமுகத்தையே காந்தியடிகள் லக்ஷ்யமாய்க் கொண்டிருக்கிறார். எந்த விதமான உடலுழைப்பும் இழிவானது கௌரவக்குறைவானது என்று கருதுவதில்லை. மிகவும் தாழ்ந்த வேலையானாலும், அதை ஒருவர் தம்மைப் பொறுத்த வரையில் தாமே செய்துகொள்வதோடு, அவசியமானால் பிறருக்காகவும் செய்யவேண்டும். எல்லா வித உழைப்பும் கௌரவமானது, புனிதமானது. மனப்பூர்வமாகவும் நேர்மையாகவும் உழைப்பவர்கள் எல்லோரும் உழைப்புக்குத் தகுந்த கூலி பெறத் தகுதியுடையவர்கள் ; அதனோடு, அவ்வுழைப்புக்குரிய கௌரவம் பெறவும் தகுதி யுடையவர்கள். பிறப்பையோ, பணத்தையோ, தொழிலையோ பொறுத்துச் சாதியாலும் வர்க்கத்தாலும் படிப்படியாக உயர்வு என்பதில்லை. இயற்கையாய் உள்ள திறமைகளை ஒட்டியும், கற்று வந்த திறமைகளையொட்டியும், வேலைகளில் பாகுபாடும்

கூட்டுறவும் இருக்கவேண்டும். இதுவே காந்தியடிகளின் அபிப்பிராயம். இது, அவருடைய தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தாலும், தம்மைச்சேர்ந்த நெருங்கிய தோழர்களுக்கும் தமக்கும் மிகவும் தாழ்ந்த வேலையாகிய தோட்டி வேலையை அவர் விதித்துக்கொண்டிருப்பதாலும், நன்கு விளங்கும். இந்த நோக்கத்தோடுதான், காந்தியடிகளுடைய வழியில் நடக்கிற மகாநாடுகள், கூட்டங்கள் முதலியவற்றில், பொதுவாக உயர்ந்த சாதிக்காரர்களுக்கும் அதிகம் படித்தவர்களுக்கும் தோட்டி வேலை கொடுக்கப்படுகிறது. தோட்டி வேலை கௌரவமானது என்றால், எவ்வளவு இழிந்த வேலையும் கௌரவமானதுதான்.

அரசியல் விஷயத்தில் இதே தத்துவங்கள் பொருந்தும். அரசியல் துறையில் ஏற்படும் தொடர்புகளிலும் மற்றச் சமூகத்துறையில் என்ன தர்மங்களையொட்டித் தொடர்புகள் ஏற்படுகின்றனவோ அதே தருமங்களை மேற்கொள்ளவேண்டும். நல்லொழுக்கம் அல்லது தருமம் என்பதில் சமூகத்துறைக்கு ஒன்று அரசியல் துறைக்கு ஒன்று என இருவகை இருக்கவேண்டியதில்லை. இரண்டு துறைகளிலும் கண்ணியமான நன்னடத்தை என்பது ஒன்றாகவே இருக்கவேண்டும். அரசியலில்கூட, குறித்த நோக்கம் கைகூடுவதற்காக மேற்கொள்ளும் வழிகள் விஷயத்திலும் மிகுந்த கவனம் வேண்டும். நோக்கம் உயர்ந்ததாக இருந்தாலும், அதற்காக எந்த வழியையும் மேற்கொள்ளலாம் என்பது சரியாகாது. நோக்கம் எவ்வளவு முக்கியமானதோ வழியும் அவ்வளவு முக்கியமானது. சில சமயம் நோக்கத்தைவிட வழியே அதிக முக்கியமாகிறது. காட்டு விலங்குகளின் வாழ்க்கைபோல, பலமே பெரியது என்கிற வாழ்க்கையை, உள் நாட்டிலும் சரி வெளிநாட்டிலும் சரி, நடைபெறுகிற அரசியல் விவகாரங்களில் இனிக் கைக்கொள்ளலாகாது. அரசியல் வாழ்க்கையிலிருந்து பேராசை,

பிறர் பொருளைக் கவர்தல், சுரண்டல் என்பன என்றைக்கு ஒழிகின்றனவோ, அன்றைக்கே இந்த நிலைமை உதிக்கும். இதிலும் கூட, மனிதனை வெறும் கருவியாக உபயோகித்தலாகாது. இத்தகைய சமூகத்தின் அரசியல் விவகாரங்களில் பகைமைக்கும் ஹிம்சைக்கும் காலக்கிரமத்தில் இடமிருக்காது.

௩. காந்திய வழியின் ஒருமை

எனினும், தர்க்க ரீதியாகவும் தானே பூரணமான தாகவும் உள்ளதொரு வாழ்க்கை முறைக்கான வேதாந்தம் எதையும் காந்தியடிகள் விவரிக்கவில்லை. ஆயினும், சமூகம், அரசியல்பற்றிய அவருடைய திட்டங்கள் வேலைகள் யாவும் விசேஷமான ஒருமைப்பாடும் பரஸ்பர சம்பந்தமும் உடையன. நாம் பார்த்து வந்தபடி, அவை அடிப்படையான சில தத்துவங்களின்மீது எழுந்தவை; அவற்றினுள் ஓர் ஒருமைப்பாடு குடிகொண்டிருக்கிறது. அவ்வடிப்படைத் தத்துவங்களிலிருந்து அவருடைய திட்டங்களையும் வேலைகளையும் வேறு பிரிக்க முடியாது; இவைகளில் எந்த ஒன்றையும் மற்றதிலிருந்து பிரிக்கமுடியாது. தத்துவங்கள் வேறு திட்டங்கள் வேறு என்று பிரிக்க நேர்ந்தால், திட்டங்கள் தங்கள் ஆணிவேர் அறுபட்டு, விரைவில் சிதைந்து போகும்; ஜீவனற்ற மூடப் பழக்கம் என்ற கீழ்த்தர நிலையில் இவை வந்து நின்றுவிடும். மற்றப்படி அடிப்படைத் தத்துவங்களை ஒப்புக்கொண்டு, சீர்திருத்தத்துக்கான செயல்முறைத் திட்டங்களைக் கைவிட்டு, அத் தத்துவங்களை யொட்டிய வேறு புதுத் திட்டங்களையும் கடைப்பிடிக்காவிட்டால், அத்தத்துவங்கள் பொருளற்ற வெறும் பேச்சளவிலே அல்லது ஏட்டுச் சுரைக்காயாகவே நின்றுவிடும். அன்றியும், செயல்முறைக்கான திட்டங்களைத் துண்டு துண்டாகவும் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமலும் துணையில்லாமலும் நடத்திவந்தால், அவை ஜீவசக்தியும் வளர்ச்சியும் இன்றி யிருக்கும்.

சமீபத்தில் (1938 செப்டம்பர் மாதம்) நடந்த அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டமொன்றில், காங்கிரஸின் கொள்கைக்கும் நடைமுறை வேலைக்கு மிடையில் வேற்றுமை யிருக்கத்தான் வேண்டும் என்று, புரட்சியில்

ஆர்வமிக்க ஓர் அரசியல்வாதி பேசினர். காங்கிரஸின் திட்டத்தை ஏற்று ஒருவர் நடத்துவாராளுல், அவருக்குக் காங்கிரஸின் கொள்கையில் நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்றெல்லாம் ஆராயக்கூடாது என்பது அவர் கருத்து ; இக்கருத்தின்படி, வேலைத் திட்டமானது கொள் கையினின்றும் வேருகப் பிரிந்துபோகிறது. கொள்கை யென்பது, தனிமனிதர் வாழ்க்கையிலும் சமுதாயத்தின் வாழ்க்கையிலும் வெளிப்பட்டு மலர்ச்சி பெறவேண்டிய ஜீவன் நிறைந்த ஒரு லக்ஷ்யமாயிருப்பதுபோய், வெறும் பெயரளவிலும் ஏட்டளவிலுமே நின்றுவிடுகிறது. இக் கருத்தையுடையவர்கள், சமீப காலத்தில் காங்கிரஸ் எவ் விதம் வளர்ந்து வந்தது என்பதையும், அவ்வளர்ச்சியில் காந்தியடிகளுக்கும் அவருடைய லக்ஷ்யத்துக்கும் என்ன ஸ்தானமுண்டு என்பதையும் பற்றிய சரித்திர ரீதியான அறிவு ஒரு சிறிதும் பெறவில்லை. அன்னிய ஆதிக்கத்தி லிருந்து நாட்டை விடுவிப்பதற்கான வெறும் அரசியல் ஸ்தாபனந்தான் என்றே அவர்கள் காங்கிரஸைக் கருது கிருர்கள். காங்கிரஸ் இயக்கத்தில் அடங்கியுள்ள, வாழ்க்கை முழுமையும் சீர்திருத்துகிற புரட்சிகரமான தன்மையை அவர்கள் உணரவே யில்லை. இன்றைய போராட்டத்தைக் கேவலம் ஒரு சுதந்திர யுத்தம் என்று மட்டுமே அவர்கள் மதிக்கிருர்கள்; ஆனல், இது அஹிம்சை முறையில் நடத்தும் யுத்தம். நம்முடைய லக்ஷ்யமானது புருஷார்த்தங்கள் என்ன என்பதைப் புதுமுறையில் அமைத்து, சரித்திரத்திலேயே புதியதோர் சகாப்தத்தைத் தோற்றுவிக்க வேண்டு மென்பதாகும். இதுவே நம் கொள்கையும் வேலைத்திட்டமுமாகும். இவ்வளவு பரந்த பொருளில் புரட்சி யுண்டுபண்ணத்தக்க இத்திட்டத்தை மேற்கூறிய கருத்தானது மிகவும் குறுகியதாக ஆக்கிவிடு கிறது. இதன் பொருள், இந்திய அரசியல் அடிமைத்தன மானது தனியான ஒரு நிலை, இந்திய மக்கள் வாழ்க்கையில்

வேறெதனோடும் இவ்வடிமைத்தனத்துக்குச் சம்பந்தமில்லை, அப்படி யிருந்தாலும் ஜீவாதாரமான சம்பந்தமில்லை என்பதாகும். ஆரம்பகாலத்தில் காங்கிரஸ்காரர் கொண்டிருந்த அபிப்பிராயம் இதுவே. இதனாலேயே அவர்கள், காங்கிரஸானது, ஸ்தாபனம் என்ற முறையில் சமூகச் சீர்திருத்தவேலை வைத்துக்கொள்ளவில்லை என்றே காங்கிரஸின் அமைப்பு விதிகளில் திட்டம் அமைக்கச் செய்தார்கள். அது வெறும் அரசியல் ஸ்தாபனமே; வேறெந்த நோக்கமும் அதற்கு அவர்கள் அளிக்கவில்லை. அக்காலத்தில், அரசியலில் தீவிரப் புரட்சிகரமா யிருந்தாலும், சமூகத்துறையில் முழுப் பிற்போக்காயிருப்பது சாத்தியமாயிருந்தது. அப்போதிருந்த அரசியல் தீவிரவாதிகள் என்று சொல்லப்படுவோரில் அனேகருடைய மனப்போக்கு சமூகத் துறையில் மிகவும் மிதமாயும் அல்லது பிற்போக்குடையதாயுங் கூட இருந்தது. மறுபுறம், அரசியலில் மிதவாதிகளா யிருந்தோர் அனேகர் சமூக லக்ஷ்யங்களில் மிக்க முற்போக்குடையவர்களாயும் இருந்தார்கள். இதற்குக் காரணம், வாழ்க்கையே தனித்தனியான இரண்டு பகுதிகளாகப் பிரிந்திருந்தமைதான். அன்றியும், அரசியல்துறையில் நாட்டின் நிலைமைக்குப் பரிகாரம் தேடியவர்கள், இந்த நாட்டைப் பிடித்த நோய் என்னவென்று சரியாகக் கண்டறியவில்லை என்றும் கூற வேண்டும்.

விபரீதமான நிலைமைகள் பல ஒன்று கூடுவதன் பயனாய், அறிவும் ஆரோக்கியமும் உடைய எந்தத் தேசமும் தன் அரசியல் சுதந்திரத்தைத் தற்செயலாய் இழந்துவிட நேரலாம்; இந்தியா தன் சுதந்திரத்தை இழந்தது இத்தகையதொரு தற்செயல் நிகழ்ச்சியன்று. இது இந்த நாட்டின் ஜீவனில் விளைந்த ஒரு பலவீனமாகும். இது வெறும் அரசியல் அடிமைத்தனம் மட்டுமன்று; நீதி

தருமத்திலும், ஆன்மார்த்தத் துறையிலும், மற்றெல்லாத் துறைகளிலுமே ஏற்பட்ட இழிவென்று இதைக் கூற வேண்டும். ஆதலால், இந்தத் தேசம் பிழைக்க வேண்டுமானுல், அரசியல் அதிகாரத்தை மாற்றிவிடுவது முக்கியமென்ருலும், அது மட்டும் போதாது. தேசத்தின் சுதந்திரப் போராட்டம் எதுவாயிருந்தாலும், ஹிம்சையைத் தழுவியதாயிருந்தாலும் சரி அஹிம்சையை மேற்கொண்டதாயிருந்தாலும் சரி, அதற்கு ஏதேனுமொரு லக்ஷ்யமிருக்க வேண்டும்; அதற்கான புருஷார்த்தங்களுக்குப் புதுப் பொருள் அமைதல் வேண்டும். அதற்கான இயக்கம் ஆன்ம இயக்கமாயும் லக்ஷ்யவாத இயக்கமாகவும் இருக்க வேண்டும். ஹாலந்து தேசம், அமெரிக்கா, இத்தாலி முதலான பல தேசங்களில் இக்காலத்தில் அன்னிய ஆதிக்கத்தை ஒழித்துச் சுதந்திரம் அடைவதற்கான இயக்கங்கள் அனேகம் தோன்றி வெற்றி பெற்றிருக்கின்றன. இவற்றுக்கு மாருக, பிரான்ஸ் நாட்டில் முன்னம் ஏற்பட்ட இயக்கம், மேற்குறிப்பிட்டபடி ஒரு லக்ஷ்யவாத இயக்கமாகத்தான் இருந்தது; சமீபத்தில் ருஷ்யநாட்டில் தோன்றிய போல்ஷவிக் இயக்கமும் அப்படித்தான் இருந்தது. இவை அரசியலை மட்டும் பாதித்தவையல்ல; குறித்த மக்கள் தொகுதியின் வாழ்க்கை முழுமையும் பாதித்து, வாழ்க்கையை அடியோடு மாற்றி, புதிய சகாப்தத்தை ஆரம்பித்தன.

இத்தகையதொரு ஆன்மார்த்தப் புரட்சியைக் காங்கிரசின் மூலம் தோற்றுவிக்கவே காந்தியடிகள் முயன்று வருகிருர். இந்த ஸ்தாபனத்தின் மூலம் செயல் நடத்த அவர் முயல்வதனுல், இதற்குள்ள சில வரையறைகளுக்கும் அவர் பல சமயம் கட்டுப்பட வேண்டியிருக்கிறது. காங்கிரசின் தோற்றமும் சரித்திர பூர்வமான அதன் வளர்ச்சியும் எவ்வளவு தூரம் செல்ல இடங்கொடுக்குமோ அவ்வளவு

தூரம் அதை அவர் நடத்திச் செல்கிறார். ஆயினும், மேற்குறிப்பிட்ட பூரணமான புத்துருவம் அமைவதற்குக் காங்கிரசைச் சாதனமாக ஆக்கவே அவர் எப்போதும் பாடுபடுகிறார்.

இப்படிப்பட்ட புத்துருவம் உண்மையாக வரவேண்டுமானால், தேசமானது இதற்கான வேலைத் திட்டத்தை மட்டும் ஏற்றுக் கொள்கையை விட்டுவிடுவதென்பது பொருந்தாது. திட்டமும் கொள்கையும் ஒன்றோடொன்று நெருக்கமான இரண்டற்ற தொடர்புடையன. இப்படியே, தேசமானது தன்னிஷ்டம்போல் திட்டத்தில் ஓர் அம்சத்தை மட்டும் ஏற்று மற்றொன்றை வேண்டாமென்று விட்டுவிடுவதும் சரியாகாது. திட்டத்தின் பல அம்சங்களும், பிரிக்க வியலாத பூரணமான ஒன்றின் அங்கங்களேயாகும். நம் அரசியல் தலைவர்கள் பல சமயம் காந்தியடிகளின் திட்டத்தை ஏற்றுக்கொண்டு, அவர் கொள்கையை ஏற்பதன் தாற்பரியம் என்னவோ அது முழுமையும் ஒப்புக்கொள்ளாமல் விலக்கிவிட முயன்றிருக்கிறார்கள். காங்கிரஸ் தனது அறிக்கையில் 'அமைதியான' 'நியாயமான' என்ற சொற்களைத்தான் உபயோகித்திருக்கிறதென்றும், 'அஹிம்சை' 'சத்தியம்' என்ற சொற்களை உபயோகிக்கவில்லை என்றும், அவர்கள் தங்கள் போக்குக்கு ஆதாரம் காட்டுகிறார்கள்; இது எவ்விதம் பொருந்தும்? அமைதியான முறைகள் ஹிம்சையை மேற்கொள்ள முடியுமா? பொய்யானது நியாயமாயிருக்க முடியுமா?

காந்தியடிகளின் கருத்துக்களில் எப்பகுதியைக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பது பற்றி நமக்கு இப்போது கவலையில்லை; அவருடைய தத்துவங்கள் எவை என்பதே நாம் இங்குக் கவனிக்க வேண்டியது. சமூக ரீதியாகவும், தனி மனிதர் என்ற ரீதியாகவும் அவருடைய

வாழ்க்கை வேதாந்தமே நாம் ஆராயும் பொருள். இதில், அவருடைய கொள்கையிலிருந்தே வேலைத்திட்டம் பிறந்ததாதலால், கொள்கை வேறு, திட்டம் வேறு என்ற வேறுபாட்டுணர்ச்சி இருக்கமுடியாது. புரட்சி ஏற்பட வேண்டுமென்றால், அதில் ராட்டை, கதர்த்துணி, கிராமக் கைத்தொழில், தீண்டாமையொழிப்பு முதலியவற்றுக்கு என்ன இடமுண்டு என்று பலர் கேட்கிறார்கள். இத்தகைய திட்டங்கள் எவையுமே இல்லாததேசங்கள் அன்னிய ஆதிக்கத்திலிருந்து விடுதலையடைய வில்லையா? ஐக்கிய அமெரிக்காவானது முற்காலத்தில் தன் நாட்டிலிருந்து பிரிட்டிஷாரை வெருட்டியடிக்கும் பொருட்டுத் தன்னிடமிருந்த அடிமைமுறையைக் கைவிட நேரவில்லை; அக்காலத்தைய டச்சு தேசம், ஸ்பெயின் தேசத்தின் பிடிப்பிலிருந்து தான் விடுதலையடையும் பொருட்டு, தான் கொண்டிருந்த அடிமை வர்த்தகத்தைக் கைவிட நேரவில்லை; அப்படியிருக்க, நம் நாட்டில் மட்டும் தீண்டாமை ஒழிப்பு, பெண்கள் முன்னேற்றம் முதலியன எதற்காக? முற்காலத்தில் தேச விடுதலை கிடைத்தபோதுங்கூட, பெண்கள் எத்தனையோ இடையூறு அல்லது கட்டுப்பாடுகளுக்கிடையில் வாழவில்லையா? இன்றுங் கூட ஜனநாயக முறையில் அமைந்த சுதந்திர அரசுகள் பலவற்றில் பெண்களுக்கு இன்னும் அனேக குறைகள் இல்லையா? இக்கேள்விகள் யாவும் தர்க்கரீதியான வாதங்கள் என்பது உண்மை. எனினும், ஒரு போராட்டத்தில் ராணுவ பலத்தையும் ஹிம்சையையும் அசத்தியத்தையும் ஒழித்து, அஹிம்சையையும், சத்தியத்தையும் மேற்கொள்வதென்றால், அதில் சமூக விவகாரத்துக்கு ஒரு நீதிதருமம் அரசியல் விவகாரத்துக்கு ஒரு நீதிதருமம் என இரண்டு நீதிதருமங்கள் இருக்க முடியாது. ஆதலால், அது சத்தியத்தையும் அஹிம்சையையும் ஆயுதங்களாகக்கொண்டு அன்னியருடைய அக்கிரமத்தை எதிர்த்துப் போராடுவதற்குத்

தரும முறையில் பாத்தியதை பெறுவது என்றால், அதற்கு முன்னதாக, தானே நீதியைக் கடைபிடிக்க முயல வேண்டும்.

காந்தியடிகளின் திட்டத்தில், சத்தியமும் அஹிம்சையும், வெறும் சமயக்கோட்பாடுகள் அல்ல. அவற்றைத் தேசத்தின் வாழ்க்கையிலும் செயலிலும் கோத்துப் பின்ன வேண்டும். ஆயுத பலத்தைப் போக்கி அதற்குப் பதிலாக இவை வரவேண்டுமென்றால், இவற்றை ஒன்று திரட்டி ஒழுங்காக அமைத்துக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்த வேண்டும். சத்தியாக்கிரகச் சேனைகள் பயிற்சி பெற வேண்டும். தீமையுடன் திறமையாக ஒத்துழையாமலிருக்க வேண்டுமானால், ஒத்துழைக்கும் பழக்கத்தை இவர்கள் நன்கு கற்கவேண்டும். ராணுவத் தந்திரங்களுக்கும் பயிற்சிக்கூடங்கள் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம், படையெடுப்பதற்கான யுத்தங்கள், எல்லைப் புறச் சண்டை, விமானக் குண்டுவீச்சு, ராஜதந்திர முயற்சி, ஆடம்பரப் பேச்சு முதலியன. அப்படியின்றி, சத்தியாக்கிரகிகளுக்கான பயிற்சிக் கூடங்கள், காந்தியடிகளின் நிர்மாணத் திட்டங்களும சீர்திருத்தம் என்று பிறர் சொல்லுகிற திட்டங்களுமாகும். இந்தத் திட்டங்கள் முன்னமே ஏற்பட்டிருந்து, சத்தியாக்கிரகிகளுக்குக் கட்டுப்பாடு, ஒழுங்கமைப்பு, கட்டளை, கீழ்ப்படிதல் முதலான எல்லாச் சமூகப் பண்புகளிலும் பயிற்சி அளிக்காமலிருந்தால், அஹிம்சை என்பது செடிகொடிகளின் தத்துவம் என்று அதைக் குறைகூறுபவர்கள் சொல்வதற்கு நியாயமிருக்கலாம். ஆனால், உண்மையாகப் பார்த்தால், காட்டிலும் காட்டுமிராண்டிகளிடத்திலும் வழங்குகிற பலாத்காரத் தத்துவத்தைவிட சத்தியாக்கிரகமானது அதிக சக்தியும் வேகமும் பொருந்தியது. இதனால் தான் காந்தியடிகள், அஹிம்சையானது பலவீனர்களுக்

கும் கோழைகளுக்கும் ஏற்றதல்லவென்றும், தைரியமும் பலமும் உடைய வீரர்களுக்கே ஏற்றதென்றும் எப்போதும் வற்புறுத்திச் சொல்கிறார். அதுவே அவருடைய வாழ்க்கையில் மிகவும் வலிமை பொருந்திய சக்தியாகும்.

ஆதலால், இந்த வேலைத்திட்டத்திலிருந்து இதற்கு அடிப்படையான தத்துவங்களைப் பிரிக்கலாகாது. ஒரு வேலை, சத்தியம், அஹிம்சை என்ற தத்துவங்கள் வேறு வகையான திட்டங்கள் மூலமாய் இவ்வளவு திறமையாக வேலை செய்யவும் கூடும். இவ்வகையான ஆன்மிக தத்துவங்களை ஒரே வகையான புறஸ்தாபனங்கள் வழியில் மட்டும் நிறுத்திவிட முடியாது. காந்தியடிகளைப் போன்ற அல்லது அவரைவிட உயர்ந்தவரான ஒரு பெரியார் இந்தத் தத்துவங்களைச் சீர்திருத்தத்துக்கான வெவ்வேறு வகையான ஸ்தாபனங்களிலும் திட்டங்களிலும் உபயோகித்துக் கொள்ளவும் கூடும். ஆனால், இவற்றை உபயோகிப்பதற்கான இன்னும் தகுதியான முறைகள் தெரிய வந்து, அவற்றை எடுத்துச் சொல்லி வேலை தொடங்குகிறவரையில், காந்தியடிகளின் திட்டம் நடைமுறையில் வழங்கியே ஆகவேண்டும்.

செம்மையான ஆராய்ச்சியில்லாதவர்கள் காந்தியடிகளின் கொள்கைக்கும் திட்டத்துக்கும் வேறுபாடு கற்பித்ததோடில்லாமல், திட்டங்களில் பலவற்றையும் ஒன்றைவிட்டு ஒன்றைச் செயற்கையாகப் பிரிக்க முயன்று, ஒரு திட்டத்தை ஏற்றுக்கொண்டு மற்றவற்றை விலக்கியும் வந்திருக்கிறார்கள். அது மட்டுமா! திட்டங்களில் ஒவ்வொன்றையும்கூடச் சின்னபின்னம் செய்து துண்டாக்கி ஒரு பகுதியை ஏற்றுக்கொண்டு மற்றப் பகுதிகளைக் கைவிட்டும் வந்திருக்கிறார்கள். உதாரணமாக, கதரே நம் தேசியச் சின்னம் என்பதை அனேக அரசியல் ஊழியர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். வேறு சிலர் எளிமைக்

கும் பாமர மக்களோடு ஏற்படவேண்டிய ஐக்கியப் பாட்டுக்கும் சின்னமாக அதைக் கருதுகிறார்கள். ஆனால், இவர்கள் பொருளாதாரத்துறையில், அதன் கருத்தை ஏற்றுக் கொள்வதில்லை. 'கதர்த் தத்துவத்தின் சாரம், கிராமவாசியினுடைய ஜீவாதாரத் தேவைகளில் இரண்டாகிய உணவு, உடை என்ற இரண்டிலும் சுயதேவைப் பூர்த்தி ஏற்படவேண்டுவது' என்பதே காந்தியடிகளின் அபிப்பிராயம். கதர்த்தொழிலைக் கிராமத்தில் பரப்புவதானது, ஓழிந்த நேரத்தில் கிராமவாசி செய்யக்கூடிய ஒரு துணைத்தொழிலை அவருக்குக் காட்டுவதாகும்; வருஷத்தின் பெரும்பகுதி ஒரு வேலையுமின்றி அவர் சோம்பிக் கழிக்கும் நிலைமையைப் போக்குவதாகும். இதை உணரவில்லை என்றால், இந்திய மக்கள் வாழ்க்கையில் கதர் எவ்வளவு முக்கியமானதென்பதை உணரவில்லை என்றே பொருள் படும். கதரில் உள்ள இந்தப் பொருளாதாரத் தத்துவத்தை நீக்கிவிட்டால், அதுவே நெடுங்காலம் நம் தேசியச் சின்னமாக இருந்து வராது. அதற்குப் பதிலாக, அரிவாளும் கத்தியும் சேர்ந்த ருஷ்யச் சின்னமோ, தங்கள் தங்கள் வழியில் முக்கியமான வேறு சின்னங்களோ, ஏற்பட்டு விடலாம். நம் கொடியில் ராட்டை இருப்பதும் நம் உடம்பில் கதர் அணிந்திருப்பதும் தேசியச் சின்னங்கள் என்ற அளவில், காந்தியடிகளின் கருத்திலுள்ள நம் தேசிய வாழ்க்கையில் இவற்றுக்குப் பொருள் இருக்கிறது.

இவ்வளவும் கதரைப் பற்றி. இதுபோல, தீண்டாமை ஒழிப்பும் வெறும் அரசியல் ஆயுதமாக நின்றுவிடக்கூடாது. இந்தப் பிரசினையைக் காந்தியடிகள் நோக்குவதுபோல, சத்தியம் அஹிம்சை நீதி என்ற நோக்கோடு நாம் பார்க்க வேண்டும். குறுகலான அரசியல் நோக்கைக் கொண்டு இதை நாம் சமாளிக்க எண்ணினால், இந்த நாட்டுக்கே இன்று அவமானமாயிருக்கிற பல வேறு

பிரசினைகளோடு புதிய சாதிப் பிரசினையை சேர்த்தது போலாகும். ஆதலால்தான் காந்தியடிகள், ஹரிஜனங்களுடைய செல்வ நிலையிலும் அரசியல் வாழ்க்கையிலும் ஏற்பட்டுள்ள குறைபாடுகளைப் போக்க வேண்டுமென்று எவ்வளவு வற்புறுத்திச் சொல்கிருரோ, அவ்வளவு அவர்களுடைய ஆலயப் பிரவேசத்தையும் அகச்சீர்திருத்தத்தையும் வற்புறுத்திச் சொல்லுகிருர்.

அடுத்த படியாக இந்து-முஸ்லிம் பிரசினை. அரசியல் வாதிகள், இந்து முஸ்லிம் மக்களின் ஜனத் தொகை பதவிகள் முதலியவற்றின் சத விகிதம் என்ன என்று ஆராய்கிருர்கள். காந்தியடிகள், இந்த நோக்குடன் பார்ப்பது போதாதென்கிருர். அது மட்டுமல்ல; காங்கிரஸ் அங்கத்தினர் வகையில் முஸ்லிம்கள் அதிகமாகச் சேர்வது நல்லது தான். இதைக் கொண்டு காங்கிரசுக்கும் பாமர மக்களுக்கும் எவ்வளவு தொடர்பு ஏற்பட்டிருக்கிறது என்பதைக் காணலாம். ஆனல், அவருக்கு இதுவும் போதவில்லை. காங்கிரசில் இன்று சேர்ந்துள்ள அனேக முஸ்லிம்கள் எவ்வளவு பக்திமான்களாகயும் பண்டிதர்களாயும் இருந்த போதிலும், மற்ற முஸ்லிம்கள் அவர்களைத் தங்களோடு சேர்ப்பதில்லை. காந்தியடிகள் விரும்புவது வேறு வகையான மக்கள் தொடர்பு. பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் சிறுபான்மைச் சமூகத்தினரிடத்தில் அரசியல் பேர மனப்பான்மையை விட்டு, சத்தியத்தையும், நீதியையும் அடிப்படையாக வைத்து, நாள் தோறும், நாழிகை தோறும், சேவை செய்வதன் மூலம் இத்தொடர்பை உண்டாக்க வேண்டும். பரஸ்பர அவநம்பிக்கைக்கும் சந்தேகத்துக்கும் நெடுநாளைய காரணங்கள் உள்ளன. புள்ளி விவரங்களைக் காட்டியோ, உடன்படிக்கை செய்துகொண்டோ, காங்கிரஸ் அங்கத்தினராக முஸ்லிம்களைச் சேர்த்துக்கொண்டோ, இக்காரணங்களைப்

போக்கிவிட முடியாது. முஸ்லிம்கள் மனத்திலுள்ள உறுதியான அவநம்பிக்கையைப் போக்காமல், அங்கத்தினராகும்படி அவர்களைத் தூண்டிவிட்டால், காலக்கிரமத்தில் காங்கிரசுக்குள்ளேயே அவர்களால் பெரும் சிக்கல்கள் ஏற்படும். காங்கிரசுக்கு வெளியேயிருந்து அவர்களால் விளையக்கூடிய சிக்கல்களைவிட இது அதிகக் கடினமாயிருக்கும். ஆதலால், இது விஷயத்தில் காந்தியடிகளின் நோக்கு ஒன்றுதான் இன்று சரியானதாயிருக்கிறது. அவருடைய இந்த நோக்கே சத்தியம் அஹிம்சை என்ற அடிப்படையில் பிறந்தது.

இனி, விவசாயிகள் ஆலைத் தொழிலாளிகள் முதலியோரைப் பற்றிய பிரசினைகள் இருக்கின்றன. வர்க்கப் போராட்டம் அல்லது பகைமை என்ற நோக்கோடு இவற்றை நாம் பார்க்கக் கூடாது. அன்னிய ஆதிக்கத்தை ஒழிப்பதாகிய பெரும் போரைக் கூட, சத்தியம் அஹிம்சை என்ற ஆயுதங்களைக் கொண்டே நடத்திக் கொள்ள நாம் எண்ணும்போது, மேற்குறிப்பிட்டபடி நமக்குள் இருக்கும் சண்டைகளைத் தீர்த்துக்கொள்ள வேறு ஆயுதங்களைத் தேடுவது நியாயமாகுமா? ஹிம்சையைக் கொண்டே இவற்றை நாம் தீர்க்க முயன்றோமானால், பொருளாதாரத் துறையிலும் அரசியல் துறையிலும் நாம் அன்னியர் காலில் விழுவதாக முடியும். ஸ்பெயின் தேசத்தில் நடந்த உள்நாட்டு யுத்தம் நீண்டகாலம் நடந்ததற்கு அடிப்படையான காரணம், அன்னியர் ஆதிக்கமும் தலையீடும் என்றே தெரிந்தவர்கள் கருதுகிறார்கள். (இது 1938 இல்.) ஆனால் நம்நாட்டிலோ, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் என்ற ரூபத்தில் ஸ்பெயின் தேசத்தில் இருந்ததை விட மிகவும் பலமாக அன்னிய ஆதிக்கமானது காலூன்றி அரண் செய்து கொண்டிருக்கிறது. இங்கு நமக்குள் இருக்கும் வர்க்கப் பூசல்களையும் சண்டைகளையும் அன்னியர் நன்றாகப்

பயன்படுத்தி நம்மைச் சுரண்ட முடியும். இதன் பயனாக விளையும் கேடும் குழப்பமும், ஸ்பெயின் தேசத்தில் இருந்ததைவிடப் பலமடங்கு பயங்கரமாயும் அழிவு தருவதாயும் இருக்கும். நம் நாட்டுத் தேசபக்தரோ மக்களிடம் அன்பு கொண்டவரோ எவரேனும் இன்று இந்த முறையில் பேசுவது விசித்திரம். ஆனால், நம் நாட்டில் சில லக்ஷ்யவாதிகள் இன்று இருக்கிறார்கள்; அவர்கள் தங்கள் கொள்கைகளுக்குத் தாங்களே இரையாகி மிகவும் ஆத்திரப்படுகிறார்கள். இடைக் காலத்தில் ஐரோப்பாவிலிருந்து கிறிஸ்தவ மத குருமார், மக்கள் படும் துன்பமும் இன்னல்களும் முக்கியமானவை அல்ல எனக் கருதி, எப்படி மந்திரவாதிகளையும் சமய பக்தி இல்லாதவர்களையும் சில சமயம் தங்கள் வர்க்கத்தைச் சேர்ந்த பக்தி மிகுந்த அடியார்களையும்கூடத் தீயில் உயிரோடு எரித்தார்களோ, அதேபோல் இவர்களும் எண்ணுகிறார்கள். அந்தக் குருமாரைப்போல் இப்போது இருக்கிற இந்த லக்ஷ்ய வாதிகள், சுரண்டலும் முதலாளித்துவமும் ஏகாதிபத்தியமும் மக்கட் குலத்துக்கு நாசம் விளைவிப்பன எனக் கருதி, இவற்றிலிருந்து மக்களினத்தின் ஜீவனைப் பாதுகாப்பதாக நம்புகிறார்கள். ஆதலால், தாங்கள் யாரைக் காக்க எண்ணுகிறார்களோ அவர்களுக்கே பெருந்துன்பமும்கஷ்டமும் நேரிட்ட போதிலும், அதைப் பொருட்படுத்துவது கோழைத்தன மென்று இவர்கள் நினைக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு தெய்வ கோபத்துக்கு எதிராக யார் என்ன சொல்ல முடியும்? தங்கள் நோக்கத்தைப் பொறுத்தவரையில் இவர்கள் பண்டைய கிறிஸ்தவ குருமாரைப்போல் தூய்மையும், பக்தியும் நிறைந்தவர்கள். ஆங்கிலத்தில், 'நரகத்துக்குப் போகும் வழி எல்லாம் நல்ல நோக்கம் என்ற கல்லைக் கொண்டே தளவரிசை செய்யப்பட்டிருக்கிறது' என்று ஒரு பழமொழி சொல்வதுண்டு; அதுபோல, மக்களினத்தின் நிதான புத்தியில்

நாம் சற்றே நம்பிக்கையைக் குறைத்துக் கொண்டு, அதன்பயனுய் ஹிம்சையில் மனத்தைச் செலுத்துவதை யும் குறைத்துக்கொள்வது நலமாகும். முடிவாகப் பார்த் தாலும், ஒருவர் தம்முடைய விவேகம் அல்லது முடிவு தவருகப்போய் அஹிம்சை வழியைக் கடைப்பிடித்திருந் தால் அதனுல் விளைகிற தீமை அவருக்கு மட்டுந்தான்.

ஆகவே, வாழ்க்கையையும் சீர்திருத்தத்தையும் பொறுத்த காந்தியடிகளின் திட்டம் சம்பந்தப்பட்டவரை யில், அஹிம்சை, சத்தியம், நீதி என்ற அடிப்படைத் தத் துவங்களிலிருந்து எழுந்த முறைகளைக் கொண்டுதான் விவசாயிகள் பிரசினையையும் தொழிலாளர் பிரசினையை யும் சமாளிக்க வேண்டும். இன்றைக்கு இந்தியா உள்ள நிலையில், இந்த வழிதான் செயல் முறைக்கு ஏற்றது. யதார்த்தத்துக்கு ஒத்தது.

இவ்விதமாக காந்தியடிகளின் கொள்கையும் திட்ட மும் எப்படி நெருக்கமாய் ஒன்றை யொன்று பற்றியிருக் கின்றன என்றும், அத்திட்டங்கள் தமக்குள் எப்படி நெருக்கமாய்ச் சம்பந்தப் பட்டிருக்கின்றன வென்றும் காட்டினேம். அன்றியும், திட்டத்தின் பலவேறு அம்சங் களும் தமக்குள்ளே ஐக்கியப் பாடுடையன. அவற்றைத் தனித்தனியாக அல்லது துண்டித்துப் பாகுபாடு செய்து ஒன்றை ஏற்று மற்றதை விலக்குவது என்பது கூடாது. திட்டங்களை அவற்றுக்குள்ள பரஸ்பர சம்பந்தத்தோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். கொள்கை பற்றிய இந்த அடிப்படையான தத்துவங்களில் இவை வேர்விட்டிருக் கின்றன ; இந்த அடிப்படையான வேரை அறுத்து விடக் கூடாது.

கொள்கையிலுள்ள இந்த ஒருமைப்பாடும், காந்தியடி களின் வேலைத்திட்டங்கள் அனைத்திலும் ஊடுருவி நிற்கிற

ஐக்கியப்பாடும் சேர்ந்து, அவருடைய திட்டத்தைப் பூரண மான ஒரே ஐக்கியத்திட்டமாக ஆக்குகின்றன. தனியான லக்ஷ்யம் உடைய பூரணமான ஒரு தனி வேதாந்தமாக இது ஆகிறது. இந்த லக்ஷ்யத்தின் தன்மை புரட்சி கரமானது. மேற்போக்காக இதைப் பார்த்து அபிப்பிராய பேதங்கொண்டு இதைக் கண்டிப்பவர்கள், இதன் வேகத் தையும் புரட்சிகரமான தன்மையையும் அனேகம் தடவை மறந்துவிடுகிறார்கள். இதிலுள்ள அஹிம்சை என்ற கொள்கையைக் கண்டு அவர்கள் ஏமாந்து போகிறார்கள். புரட்சியின் சாரம் ஹிம்சை அல்ல; சாரம் எதுவென்றால், வாழ்க்கையில் சில தத்துவங்களை ஆதாரமாக வைத்து வாழ்க்கைக்கே புதிய பொருள் கொடுப்பதுதான். ஆன்ம வாதியாயுள்ளவர் இதை வாழ்க்கையில் அழியாத அம்சங்க ளென்று சொல்வார். அழியாத அல்லது நித்தியமான என்ற சொல் விஞ்ஞான ஆராய்ச்சிக்குப் புறம்பான தென்று தற்கால மக்கள் எண்ணலாம். ஆனால் விஞ்ஞான சமதர்மவாதிகளான மார்க்ஸிய வாதிகளும், போல்ஷவிஸ வாதிகளும் அஹிம்சையே சாசுவதமானது என்பதை மறுத்தபோதிலும் கூட, சத்தியமும் நீதியும் ஆகிய தத்து வங்களை எவ்வளவோ மாறிவருகிற ரூபத்திலும் ஸ்தாப னங்களிலும் புதைத்து வைத்திருந்தபோதிலும், அவை நித்தியமானதத்துவங்கள் என்பதையும் இந்தப் பூலோகத் தில் மனிதகுலத்தில் நடக்கும் சகல சமூக விவகாரங் களுக்கும் அவைகளே அடிப்படை என்பதையும் மறுக்க மாட்டார்கள்.

இனி, கொள்கைகளும் வேலைத்திட்டமும் அமைந்த பிறகு வெற்றிகரமான புரட்சி ஏற்பட வேண்டுமானால், இந்தக் கொள்கைகளின் உருவம் என்று சொல்லத்தக்க எழுச்சியும் வேகமும் வாய்ந்தவரொருவர் உதிப்பது அவசியம். ஓட்டு எடுப்பதனால் புரட்சிகள் ஏற்படுவதில்லை;

பொதுமக்கள் அனைவரும் விரும்புவதனாலும் ஏற்படுவதில்லை. ஆனால், லக்ஷ்யத்தின் சேவையில் எதையும் தியாகம் செய்யத் தயங்காமல் நடத்திச் செல்லும் உறுதி வாய்ந்த தலைவர் ஆணையின்படி முன்னேறிச் செல்வதனால்தான் புரட்சி ஏற்படமுடியும். அடிப்படையான தத்துவங்களும், அவற்றுக்கான வேலைத்திட்டமும் தலைவரும் அமையும் பட்சத்தில், புரட்சி கொள்கையளவில் வெற்றிகரமாக நடக்குமென்று உறுதியாகச் சொல்லலாம். ஆனால், செயல் முறையில் வெற்றி என்பது, நூற்றுக் கணக்கான சந்தர்ப்பங்கள் ஒன்று கூடுவதைப் பொறுத்தது. சில சமயம் தற்செயல் நிகழ்ச்சிகளும் இதற்கு உதவலாம். சந்தர்ப்பங்கள் ஒரு வேளை கை நழுவினால் பிறகு கிட்டமாட்டா; வெற்றியானது இவற்றைத் தகுந்தபடி உபயோகித்துக் கொள்வதையும் பொறுத்தது.

காந்தியடிகளின் வாழ்க்கைத் திட்டத்தில், அடிப்படையான தத்துவங்களிலோ, வேலைத்திட்டத்திலோ, ஜீவ சக்தியும் எழுச்சியும் வேகமும் உடைய தலைவர் என்ற அளவிலோ, குறைவில்லை. இதனால்தான் அவருடைய திட்டங்களில் சில செயல்முறைக்கு ஒவ்வாதனவாயும் காலத்துக்கு ஒத்திராதனவாயும் தோற்றிய போதிலும், அவற்றில் ஆச்சரியகரமான ஜீவசக்தி பொருந்தியிருக்கிறது. முடிவாகப் பார்த்தால், புரட்சிகள் யதார்த்த விஷயங்களையும் ஸ்தூலமான வாஸ்தவச்செய்திகளையும் மட்டும் பொறுத்து ஏற்படுவதில்லை. புரட்சிகளுக்குக் காரணமாயுள்ள ஸ்தூலமான வாஸ்தவ விஷயம் என்பது புறவிஷயம் மாத்திரமல்ல; அது உண்மையாகவே வாஸ்தவமாய் இருக்க வேண்டுமானால் அதில் கற்பனையும் உற்சாகமும் நம்பிக்கையும் தீர்க்க திருஷ்டியும் வேறு பல உளப் பண்புகளும் ஒழுக்கப் பண்புகளும் பொருந்தியிருக்க வேண்டும். உதாரணமாக, லெனினும் அவருடைய

தோழர்களும் திட்டமிட்ட கற்பனைத்திட்டத்தில், கற்பனையும்ஆர்வமும் நம்பிக்கையும் ஊக்கமும் தீர்க்க திருஷ்டியும் இல்லாமலிருந்தால், போல்ஷவிக் புரட்சியின் பலன் என்னதான் ஏற்படமுடியும்?

ஆகவே, காந்தியடிகளுடைய வேதாந்தம் என்பது யதார்த்த நிலைமையைத் தழுவி வந்த பூரணமான புரட்சிகரமான வேதாந்தமாகும். இதில் எந்தப் பாகமும் தனியானதன்று. இது காரணமாகத்தான் அவருடைய திட்டமானது கொள்கையளவில் விளக்கமான ஒரு தனி முறையாக இல்லாத போதிலும்கூட, சேவையில் ஆர்வமும் ஊக்கமும் நிறைந்தவர்களையும் எதார்த்த உணர்வோடு தீவிரமான ஜீவன் நிறைந்த நம்பிக்கையும் தளராத மன உறுதியும் உடையவர்களையும் தன்பால் அது வசீகரிக்கிறது. இந்த அம்சத்தை இந்திய மிதவாதிகளும் சமதர்மவாதிகளும் புரிந்துகொள்வதில்லை. காந்தியடிகளின் வேதாந்தத்தில் காணப்படும் ஜீவசக்தியையும் பாமரமக்களுக்கு அதனிடத்திலுள்ள ஈடுபாட்டையும் கண்டு சமதர்மவாதிகள் ஆச்சரியமடைகிறார்கள். அவருடைய காரியங்கள் தர்க்கரீதியாக இல்லாதிருப்பதுகூட அவருக்கு வெற்றி தருகிறது. ஏன்? கிரமமான முறைப்படி உள்ள தர்க்கத்தை விட்டு எழுச்சியும் புரட்சியும் நிறைந்த தர்க்கத்தைக் கைக்கொள்ள அவர் எப்போதும் தயாராயிருக்கிறார். ஒரு காலத்தில் காங்கிரஸ்காரர் சட்ட சபைக்குப் போவது மகாபாபம் என்று சொன்ன காந்தியடிகள், மற்றொரு சமயம் சட்டசபைகளுக்குப் போவது மட்டுமல்ல, போய் மந்திரி பதவி ஏற்கவும் வேண்டும் என்று கூறுகிறார்! முன்னுக்குப்பின் எவ்வளவு விசித்திரமான முரண்! ஆனால், யதார்த்தத்தையும் நிலைமையையும் எவ்வளவு முன்கூட்டியே எவ்வளவு திட்டமாக அவர் அறிந்திருக்கிறார்! எவ்வளவு விரைவாக

அவர் காரியங்களை நடத்துகிறார்! மந்திரிகள் தங்கள் பதவிகளில் அமர்ந்த மாத்திரத்தில், மூன்று வருஷத்தில் மதுவிலக்கு வேண்டும், முற்றிலும் புதியதொரு கல்வித் திட்டத்தை நடத்த வேண்டும் என்றெல்லாம் அவர் தம் புதிய வேலைத்திட்டங்களைத் தயாராக எடுத்துக் கொடுக்கிறார். புரட்சிக்காரர் என்று கூறிக்கொண்டவர்களோ எந்தத் திட்டமும் தயாராக வைத்திருக்கவில்லை! ஆகவே, அவர்கள் தங்கள் சொந்த அபிப்பிராயம் எப்படி இருந்த போதிலும்கூட, மதுவிலக்கும் கல்வியும் பொறுத்த வரையில், காந்தியடிகளின் வழியில் செல்ல வேண்டியவர்களானார்கள்.

ஆதலால், புரட்சிக்காரர்களும் சமதர்மவாதிகளும் ஒரு விஷயத்தை நன்றாக உணர வேண்டும். அவர்கள் எதிர்த்துச் சமாளிக்க வேண்டியது கர்நாடகமான வழக்கொழிந்த அறிவு முறையன்று; சமூகத்துறையிலும் அரசியலிலும் பிற்போக்கு முறையன்று. மிதவாத ஆடம்பரமோ வீழ்ச்சியோ அன்று. அவர்கள் எதிர்க்க வேண்டியது ஒரு புரட்சி, நடைமுறையிலுள்ள ஜீவன் நிறைந்த ஒரு பக்தி. இவற்றின் உருவே காந்தியடிகள். அன்றியும், அவர்கள் அவருடைய வேலைத்திட்டத்தில் தங்கள் மனம் போல் சிலவற்றை விலக்கி அவற்றை வேறு சில கொள்கைகளோடு ஒட்டிக் கொள்ளுவது என்பது கூடாது. ஒரு பலம் அஹிம்சையை ஓர் அண்டா போல்ஷவிசத்தில் கரைத்துக் கொள்ள முடியாது. இது நடவாது; தோற்று விடும். உதாரணமாக, ஒருபுறம் அஹிம்சை என்றும் மறுபுறம் விவசாயிகள் கிளர்ச்சியும் தொழிலாளர் கிளர்ச்சியும் ஏற்கனவேயுள்ளன, நாங்கள் இவற்றை உண்டாக்கவில்லை என்றும் சொல்லிக்கொண்டு, மேலைநாட்டு முறையில் இக்கிளர்ச்சிகளை ஆதரிக்க முடியாது. அஹிம்சையில் அவர்களுக்கு உண்மையான நம்பிக்கை இருக்குமானால்,

அல்லது இன்றைய நடைமுறைக்கு அதுவே ஏற்றது என்றேனும் அவர்கள் எண்ணுவார்களானால், அவர்கள் அஹிம்சைக்குப் பொருந்தாத மற்றக் கொள்கைகளால் பாதிக்கப்படாமல், அதை விசுவாசத்தோடு நடத்திவர வேண்டும். முதலாளிக்கும் தொழிலாளிக்கும், நிலமுடையவனுக்கும் உழுபவனுக்கும் இடையில் ஒற்றுமை ஏற்படுவதற்கான அம்சங்களைக் கண்டறிந்து, சமாதானமாக அவர்கள் சச்சரவைத் தீர்க்க எல்லா வழிகளையும் அலசிப் பார்க்க வேண்டும். இதன் பிறகுதான் அவர்கள் ஓர் அஹிம்சைப் போராட்டத்தைத் தொடங்குமாறு பேசலாம். காந்தியடிகளின் தத்துவங்களை வைத்துக்கொண்டு அவற்றை மார்க்ஸியத்தோடு ஒட்டுவது என்பது முடியாது. சமதர்மவாதிகள் அஹிம்சையைப் பற்றிப் பேசுவது செளகரியத்துக்காகப் பேசுவதுபோல வெற்றுப் பேச்சாகத் தொனிக்கிறது. ஒரு வேளை இது அவர்களுக்கே தெரியாமலிருக்கலாம். முடிவாகப் பார்த்தால், இன்றைக்கு இந்தியா பலாத்காரத்தை மேற்கொள்ளலாமா என்பது சொல்லளவில் ஆராயக்கூடிய ஒரு வாதம்தான் என்று அறிவுடைய எல்லா அரசியல்வாதிகளும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆகவே, ஏன் அது அவர்களுடைய பொதுப் பிரசங்கங்களிலும் தனிப் பேச்சிலும் அடிக்கடி தலைகாட்டுகிறது? ஏனென்றால், அவர்களுடைய மற்றக் கொள்கைகளோடு அஹிம்சை ஒத்து வரவில்லை. அரசியலில் கௌரவமான தோற்றம் வேண்டுமென்று அவர்கள் கதர் அணிகிறார்கள். ஆனால், கதர் அவர்களோடு ஒட்டவில்லை. கிராமக் கைத்தொழில்களைப்பற்றி அவர்கள் பேசவேமாட்டார்கள். இவற்றில் அவர்கள் ஊக்கம் கொள்ள முடியாது. தங்களுக்கென்று ஒரு திட்டம் இல்லாதபடியால் ஆதாரக் கல்வியை அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால், அது வெற்றி பெறாத முறையில் அதைச் சின்னபின்னப்படுத்திவிடுகிறார்கள். அவர்கள்

ஒன்றை உணர வேண்டும். இப்படிச் சந்தர்ப்பத்தை யொட்டி காந்தியடிகளின் திட்டத்தை ஒப்புக் கொள்வ தெல்லாம் அவர்கள் நோக்கத்தையோ திட்டத்தையோ பலப்படுத்தாது. இச் செய்கை அவர்களுடைய தலைவர் கள் மனத்தைக் கெடுக்காவிட்டாலும், பாமர மக்கள் மனத்தைக் கெடுப்பது நிச்சயம். இன்றைய உலகத்தில் இருவகையான போக்குக்களும் இருவகையான புரட்சித் தத்துவங்களும் இருக்கின்றன. ஒன்று காந்தியடிகள் காட்டுவது. மற்றொன்று கார்ல் மார்க்ஸிடமிருந்து உதித்து ருஷ்யாவில் போல்ஷவிசவாதிகள் நடத்திவருவது. இந்த இரண்டு லக்ஷ்யங்களுக்குமிடையே கடக்கமுடியாத பெரிய பாதாளம் இருக்கிறது. இவை இரண்டுக்கும் அடிப்படையான ஒழுக்கமும் வாழ்க்கை வேதாந்தமும் ஒன்றுக்கொன்று நேர்முரணானவை. ஒன்றுக்கு நன்மை யானது மற்றொன்றுக்குத் தீமையாகிறது. ஒன்றில் பாராட்டுக்குரியது, மற்றொன்றில் பழிப்புக் கிடமாகிறது. ஒரு கருத்துப்படி, காந்தியடிகள் முன்னேற்றத்துக்கும் உலக சமாதானத்துக்குமுரிய பெரும் சக்தியாவார். மற் றொரு கருத்துப்படி, தெரிந்தோ தெரியாமலோ பிற் போக் குக்கும் தாழ்த்தப்பட்டவர்களைச் சுரண்டுவதற்கும் அவர் இடமாயிருப்பவர் ; பணக்காரர்களுக்கும் முதலாளி களுக்கும் ஜமீன்தாரர்களுக்கும் சுதேச மன்னர்களுக்கும் அவர் தோழர். இந்த இரண்டு நிலைமைகளுக்குமிடையி லுள்ள வேற்றுமையை நாம் மறப்பதில் பயனில்லை. ஒரு வர் மற்றொருவருடைய வேதாந்தத்தின் முழுப்பொருளை யும் தவறாக உணர்ந்துகொள்வது இருவருக்கும் நல்லதல்ல. ஒற்றுமை வேண்டும், மக்கள் அனைவரும் ஒன்று திரள வேண்டுமென்று பேசுவது நியாயமே. ஆனால், எழுச்சியும் ஜீவ சக்தியும் நிறைந்த ஒரு வேலைத் திட்டத்தை, ஏதே னும் ஒருவகையான புரட்சியை, நடத்தியாக வேண்டு மென்றால், மாறுபட்ட ஆலோசனைகளும் வெவ்வேறான

ஆ. 12

லக்ஷ்யங்களும் முரணான பக்தியும் கட்டுப்பாடில்லாத அமைப்பும் அதற்குப் பயன்படா.

ஆகவே, ஒவ்வொருவரும் தாம் எதனிடத்தில் விசுவாசம் வைக்கிறாரோ அதற்கொப்ப வாழ்வாராக. ஒவ்வொரு கட்சியும் அதனதன் வேலைத்திட்டத்தை நடத்தட்டும். முரண் ஏற்படுகிறதென்றால் முரண் நிச்சயம் வந்தேதீரும்; அதைத் தவிர்க்கமுடியாது. அன்றியும், ஒருகட்சியானது அஹிம்சையைக் கடைப்பிடிக்குமானால், கொஞ்ச நாளைக்குமுன் சீனாவில் நடந்ததுபோலவும் இன்றைக்கும் ஸ்பெயின்தேசத்தில் நடப்பது போலவுமுள்ள கொடிய உள்நாட்டுச் சண்டை நடப்பதற்கில்லை. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களைச் சமாளிப்பதற்கு அஹிம்சை முறையானது தனியான ஒரு யுக்தியைக் கண்டிருக்கிறது. முற்காலத்தில் இச்சண்டைகளை அது வெற்றிகரமாகச் சமாளித்து விட்டது. அது போல இன்றும் சண்டை ஏற்படாமலே இவற்றைச் சமாளிக்க முடியும். ஆதலால், ஒரு வகையான லக்ஷ்யமுடையவர்கள் இந்நாட்டுக்குப் புத்துயிர் தருவதற்கான காரியங்களைத் தங்கு தடையில்லாமல் செய்து பார்க்க விடுவதில் அபாயமொன்றுமில்லை. எப்படியிருப்பினும், காந்தியடிகளின் முடிவான நோக்கமும் மார்க்ஸிய வாதிகளின் நோக்கமும் ஒன்றே. அதாவது, எவ்விதச் சுரண்டலுமில்லாத வாழ்க்கையைத் தோற்றுவிப்பது. இவர்களிடையே வேற்றுமை வருவது இருவரும் வாழ்க்கையில் மேற்கொள்ளும் தத்துவங்களையும் இவற்றுக்கான வழிகளையும் பொறுத்திருக்கிறதென்றால், அது நட்பு முறையில் எழுந்த போட்டியாயிருக்கட்டும். ஆனால் அந்தப் போட்டி சத்தியத்தையும் அஹிம்சையையும் ஆதாரமாய்க் கொள்ள முடியும். மார்க்ஸியவாதிகள் இதற்கான மாற்றத்தைத் தங்கள் கொள்கையில் செய்து கொள்வார்களானால், தங்களுக்கும் காந்தியடிகளுக்கும் இடையே

அதிக வேற்றுமை இல்லை என்பதை அவர்கள் காண்பார்கள். அப்போது அவருடைய வேலைத்திட்டத்தை அவர்கள் இன்னும் நன்ருக உணர்ந்து போற்றுவதோடு, தாங்களும் அந்த வழியில் கலந்து கொண்டு இந்தியாவில் புதிதான ஒரு சமதர்மம் தோற்றுவிக்க உதவுவார்கள் ; அது சத்திய வழியிலும் அஹிம்சை வழியிலும் செல்லும் ; இந்திய மக்களுடைய பண்புக்குச் சண்டை போராட்டம் ஹிம்சை என்பவற்றை விட, சத்தியமும் அஹிம்சையுமே ஒத்தனவாய் இருக்கின்றன. அன்றியும், இன்று மக்கட் சமூகத்துக்கு வேண்டிய பண்புகள் இந்த இரண்டுமே ஆகும்.

இது வரையில், காந்தியடிகளின் வேதாந்தமானது சில தத்துவங்களை ஆதாரமாய்க் கொண்டிருக்கிறது என்று பார்த்தோம். இந்தத் தத்துவங்களை ஒட்டித் தனிப்பட்டவருக்கும் நாட்டுக்கும் வழி காட்டும் முறையில், போராட்டத்துக்கும் நிர்மாண வேலைக்கும் ஏற்ற விரிவான தொடர்ந்த திட்டத்தை அவர் வகுத்திருக்கிருர். அந்தத் தத்துவங்களும் திட்டங்களும் வேறில்லாத தொடர்புடையன. அவை சேர்ந்து பூரணமான ஒன்று ஆகும். தனிப்பட்டவரிடத்திலும் நாட்டு மக்களிடத்திலும் குறித்த ஓர் இயல்பை அவை வேண்டுகின்றன. அந்த இயல்பை ஒட்டியே புதிய கல்விமுறை வகுக்கப்பெற்றிருக்கிறது. அரசியல் வாழ்க்கையில் சத்தியத்திலும் அஹிம்சையிலும் தொடங்கி, காந்தியடிகள், ராட்டையில் நூற்றலாகிய கதர்த்தொழில், தீண்டாமை ஒழிப்பு, ஹிந்துமுஸ்லிம் ஒற்றுமை, பெண்கள் விடுதலை, கிராமக் கைத்தொழில்களுக்கு புத்துயிரளித்துப் புதியவற்றைக் கண்டறிந்து பரப்புதல்முதலான அனேகதிட்டங்களை வகுத்திருக்கிருர். (பெண்கள் விடுதலை அல்லது பெண்ணுரிமை என்பது மேலை நாட்டில் உள்ளபடி உலக வாழ்க்கையை அனுபவிப்பதற்கான சமமான சந்தர்ப்பங்கள் என்ற அடிப்படையில்

இல்லாமல் சமூகசேவைக்கும் அதன்மூலம் தனிப்பட்டவர் அபிவிருத்திக்கும் சந்தர்ப்ப மளிப்பது என்றே பொருளாகும்.) இந்தத் திட்டங்களிலிருந்து அவர் புதிதாகத் தம்முடைய கல்வித் திட்டத்தை வகுத்திருக்கிறார். கடைசியான திட்டமாகக் கல்வி வந்திருக்கிறது. இது இயற்கை அனுபவத்தை ஒட்டியே கல்வி வரவேண்டும். ஆனால் கல்வி கடைசியில் இருப்பது, அதற்குமுன் உள்ள எல்லாவற்றுக்காகவும், வாழ்க்கையின் முழுத் திட்டத்துக்காகவுமே. கல்வியானது, வளர்கிற குழந்தையானவன் எவ்விதச் சுரண்டலுமில்லாத, நீதியும் ஒழுக்கமும் நிரம்பிய சமூகத்தில் எதிர்காலத்தில் பெற விருக்கும் ஸ்தானத்துக்கு அவனைத் தயார் செய்யும் பொருட்டே. கல்வியானது அத்தகைய சமூகத்தின் தேவைகளை ஒட்டி அவனுடைய நடத்தையை - குணச்சிறப்பை - உருவாக்குவதற்காக. இதுவே காந்தியடிகளுடைய சமூக - அரசியல் கட்டிடத்தின் சிகரக்கல்.

அனுபந்தம்

1937ஆம் வருஷம் அக்டோபர் மாதம் 22, 23 தேதிகளில் வர்தாவில் கூடிய தேசியக் கல்வி மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் :

1. இந்த நாடெங்கும் பரவக் கூடிய ஒரு திட்டப்படி *ஏழு வருஷகாலம் எல்லோருக்கும் இலவசமான கட்டாயக் கல்வி போதிக்க வேண்டும்.

2. தாய்மொழி மூலமே கல்வி போதிக்க வேண்டும்.

3. இந்த ஏழு வருஷகாலக் கல்வியானது, பயனுள்ள ஏதேனுமொரு கைத்தொழிலை மையமாய் வைத்துப் போதிக்கப் பெறுதல் வேண்டும்; குழந்தையினிடம் வளர்க்க எண்ணுகிற எல்லாச் செயல்திறனும், குழந்தைக்கு அளிக்கிற எல்லாப் பயிற்சியும், கூடியவரையில் இந்தக் கைத்தொழிலுடன் ஒன்றிய தொடர்பு கொண்டதாய் இருக்க வேணடும்; இக் கைத்தொழிலைக் குழந்தை வாழ்கிற சூழ்நிலைக்குப் பொருத்தமாய்த் தேர்ந்துகொள்ள வேண்டும் என்ற காந்தியடிகளின் யோசனையை இந்த மகாநாடு ஏற்கிறது.

4. இக் கல்வித் திட்டமானது உபாத்தியாயர்களுக்காக ஏற்படும் செலவைப் பள்ளிக்கூடத்தின் தொழில் வருவாய் மூலம் சரிக்கட்டிக் கொள்ளும் என்று இந்த மகாநாடு எதிர்பார்க்கிறது.

---

* ஏழு வருஷம் என்பது இப்போது எட்டாகியிருக்கிறது.

பொருள் அகராதி

ஆதாரக் கல்விக்கான நூல்கள்

ரூ. அ.

1. ஆதாரக்கல்வி என்றால் என்ன? 0 6

இப் புதுமுறைக் கல்வியின் எல்லா அம்சங்களையும் விளக்கமாயும் சுருக்கமாயும் எல்லோரும் அறிந்துகொள்வதற்கென்றே எழுதப்பெற்ற சிறு புத்தகம். 54 பக்கம்.

2. சிறுவர்க்கான பாடல்கள் 0 6

ஆதாரப் பாடசாலையில் சிறுவரும் ஆசிரியரும் உபயோகிக்கத்தக்க பாடல் தொகுதி. பிரார்த்தனை, கொடி வணக்கம், நாட்டுப்பாடல், நாமாவளி, நீதிப்பாடல், ஆட்டப் பாடல், வழிநடைப்பாடல், இயற்கைப்பாடல், தொழிற் பாடல், கதைப்பாடல், வாழ்த்து என்ற தலைப்புக்களில் உள்ளன. பக்கம் 48.

3. நிர்மாணத் திட்டம் 0 14

மகாத்மா காந்தியும் ராஜேன் பாபுவும் எழுதிய இருபுத்தகங்களின் மொழிபெயர்ப்பு. நிர்மாணவேதம் என்று எல்லோரும் சொல்வது. சர்க்கார் வெளியீடு. பக்கம் 120.

4. வாழ்க்கைக்கான கல்வி 0 5

அமெரிக்கா ஜெனரல் ஆர்ம்ஸ்ட்ராங் எழுதியது. உறுப்புக்களின் பயிற்சி, புத்தியின் பயிற்சி, ஒழுக்கப் பயிற்சி என்ற மூன்று தலைப்பிலுள்ள கருத்துக்கள். பக்கம் 44.

5. இன்றையபேச்சு—ஆதாரக்கல்வி 2 0

ஆசாரிய கிருபலானி எழுதியது. முதன்முதல் இப்போதுதான் தமிழில் வெளியாகிறது. ஆதாரக்கல்வியை எதிர்ப்பவர்களுக்கு எல்லாத் துறைகளிலும் தர்க்க ரீதியாகவும் சரித்திர பூர்வமாகவும் ஆதார பூர்வமாகவும் ஆசிரியர் பதில் கூறுகிறார். இதை ஆழ்ந்த சிந்தனையுடன் படித்தவர்கள் மனத்தில் பின் சலனம் இராது. பக்கம் 200.

மு. அருணசலம்

எழுதிய நூல்கள்

தோட்டவேலை வரிசை

1. பழத் தோட்டம் ... ரூ. 10 0

[தோட்டக் கலை, பழத்தோட்டம், கன்று, ஒட்டு முறைகள், எருவிடுதல் ; வாழை, மா, தென்னை, நாரத்தை, மற்றப் பழமரங் கள், திராட்சை ; நோய், விற்பனை முறை, வற்றல் முறைகள், உணவுச் சத்து, கலைச்சொற்கள் முதலான விஷயங்கள் கொண்டது. 648 பக்கம். 75 படங்கள்.]

இந்திய கவர்னர் ஜெனரலான சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியர் அவர்கள் இப்புத்தகத்தைப் பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார்: "மகிழ்ச்சியுடன் படித்தேன். நல்ல புஸ்தகம். தமிழ் மக்கள் படித்துப் பயன்பெற வேண்டும்."

2. வாழைத் தோட்டம் ... ரூ. 1 12

கலிக்கா 2 4

[மண் சாரம், கன்று, எருவிடுதல், காய்ப்பு, 25 வாழை வகை கள், உணவுச் சத்து, வாழைநார்த் தொழில் முதலியன விரிவாய்க் கூறும் நூல். 116 பக்கம், கையால் செய்த காகிதம்.]

"வாழையின் என்ஸைக்ளோபீடியா என்று கூறலாம் பள்ளிக்கூடங்களில் பாடமாக வைத்தால் பொது அறிவு வளர உபகாரமாயிருக்கும். ஒவ்வொரு விவசாயியும் கட்டாயம் படித்தல் வேண்டும்"—அகில இந்திய ரேடியோ, திரிசிராப்பள்ளி.

3. காய்கறித் தோட்டம் ... ரூ. 5 0

[தோட்ட அமைப்பு, விதைப்பு, நீர்ப்பாசனம், எரு, களை பல இனக் காய்கறிப் பயிர்கள், கொடி, கிழங்கு, கீரை, சீமைக் காய்கறி, நோய், உணவுச் சத்து, கலைச் சொற்கள் முதலிய பகுதி கள் அடங்கியது. 2-ஆம் பதிப்பு, 244 பக்கம், 50 படங்கள்.]

"இதில் ஒரு தாவர சாஸ்திரியின் விஸ்தரிப்பும், ரசாயன சாஸ்திரியின் பாகுபாடும், வியாபாரியின் லாப நஷ்ட நிதானமும், விவசாயியின் முதிர்ந்த அனுபவமும், உணவுச் சத்து நிபுணரின் சிபாரிசும், வைத்தியனின் சிகிச்சை முறையும் காணப்படுகின்றன.

" * சித்திர விளக்கங்களுடன் சோபிக்கும் இப்புத்தகத்தை இக் கலையில் சிரத்தை கொண்ட ஒவ்வொருவரும் படித்துப் பயன்பெற முடியும். சிரத்தையில்லாதவர்களும் இதைப் படித்த பின்பாவது தோட்ட வேலையை இழிவாகக் கருதாமல் அதை ஒரு கலையாகப் பயின்று வளர்க்கக்கூடும் "—தினமணி 3-8-1945.

"This excellent book on vegetable gardening supplies a long felt want. It is written in simple style and tells an amateur in some detail all about vegetable culture * * * " - K. S. Gopalaswamiengar in the *Hindu*, 27-1-1946.

விஞ்ஞானம்

4. உலோகங்களும் நாமும் ... ரூ. 5 0

[உலோகக் கலையும் தொழிலும் பற்றித் தமிழில் வெளிவந்துள்ள ஒரே விஞ்ஞான நூல், 40 உலோகங்களைப் பற்றிய விளக்கமான செய்திகள், உலோகம் எடுக்கும் விதம், உபயோகம், தொழில் நுட்பம், எஃகுத் தொழில் பற்றிய விரிவான விளக்கம், கலப்பு லோகம், வார்ப்பு இணைப்பு முறைகள், பொடிவேலை, இந்தியச் சுரங்கச் செல்வம், கலைச் சொற்கள் முதலியன விரிவாய்க் கூறுவது. 292 பக்கம். அனேக படங்கள்.]

" சாதாரணமாய்ப் படிக்கத் தெரிந்தோருக்குக் கூட நன்றாக விளங்கும்படி ஆசிரியர் தெளிவாய் எழுதி யிருக்கிறார். பொது அறிவை விருத்தி செய்துகொள்வதற்காகத் தமிழர் படிக்க வேண்டிய புத்தகங்களில் ஒன்று "—தினமணி 11-10-1947.

"This maiden attempt in Tamil on metals and their utilisation is to be welcomed in these days when the lay public of India have begun to take a keen interest in the mineral resources of the land, their proper utilisation and devolopment. It has helped to fill a longfelt want for a book on this subject for the particular use of the Tamil knowing industrialists and financiers. The author and the publishers have to be congratulated on their pioneer effort in bringing out this useful compilation. * * * " - *Triveni* for November 1948.

5. இரசாயனமும் நாமும் ... (அச்சில்)

[இரசாயனமும் மக்கள் வாழ்க்கையின் வெவ்வேறு துறைகளும் பற்றி எழுதிய கட்டுரைகளின் தொகுதி.]

மொழி பெயர்ப்பு

6. உழைப்பின் தத்துவம் ... ரூ. 1 4

[ஜே. ஸி. குமரப்பா எழுதியது; உழைப்பின் தத்துவம், முன்னேற்றத்தின் தத்துவம், காந்தியப் பொருளாதாரம் என்ற மூன்று அரிய கட்டுரைகள் கொண்டது.]

7. கிராம நிர்மாணத் திட்டம் ரூ. 0 8

[ஜே. ஸி. குமரப்பா எழுதியது. தமிழில் சென்னை அரசாங்கத்தார் வெளியிட்டது.]

8. சுயராஜ்ய சாஸ்திரம் .... ரூ. 2 0

[விநோபா பாவே எழுதியது. புதுமைப் பதிப்பக வெளியீடு.]

சமூகம்

9. உணவுப் பஞ்சம் ... ரூ. 1 8

[1945 இல் தமிழ் நாட்டில் உணவுப் பஞ்சம் வருமென்றிருந்த அச்சத்தை வைத்தெழுதிய சிறுபுத்தகம். பஞ்சத்தின் காரணங்கள், உணவுப்பொருள் நாசம், அரசியலும் உணவும், அட்வைசர் ராஜ்யம், நெல்விலை, நீர்வசதி, சாகுபடிச்செலவு, உழவு மாட்டுப் பாதுகாப்பு, கைக்குத்தல் அரிசி, உற்பத்திப் பெருக்கம், நம் கடமை, ஆடு மாடுகளின் தீனிப் பஞ்சம், பசு பாலனமும் பால் பெருக்கமும் என்ற பொருள்களை நுணுகி ஆராய்வது. கருத்து நிறைந்த நூல். 120 பக்கம்.]

10. ஆதாரக்கல்வி என்றால் என்ன ? ரூ. 0 6

[வர்தாக் கல்வி என்றும் காந்தியக் கல்வி என்றும் சொல்கிற கல்வி முறையின் தத்துவத்தைச் சுருக்கிக் கூறுவது.]

11. வய்து வந்தோர் கல்வி .... (அச்சில்)

[எழுத்துப் படிப்புக் கல்வியாகாது என்று காந்தியடிகள் சொல்வார். முதியோர் கல்வி என்று சொல்கிற இக் கல்வியின் தத்துவம் கல்வி வேலை முறை முதலியவற்றைச் சமூக சாஸ்திர ரீதியாக விளக்குவது.]

இலக்கியப் பதிப்பு

12. அம்பிகாபதி கோவை .... ரூ. 4 0

[569 செய்யுட்களுடைய பழந்தமிழ் நூல். மிக விரிந்த ஆராய்ச்சி முன்னுரை முதலியவற்றுடன். 336 பக்கம்.]

13. முக்கூடற் பள்ளு ... ரூ. 2 4

கலிக்கா 3 0

[2ஆம் பதிப்பு. திருகோட்டியூர்ப் பள்ளு, மன்னர் மோகனப் பள்ளு, திருநீலகண்டன் பள்ளு முதலியனவும் சேர்ந்தது. 200 பக்கம்.]

முன்னுரை, பள்ளுப் பிரபந்தத்தைப் பற்றி அனேக விஷயங்களை மிச்சமே இல்லை என்று சொல்லும்படி விளக்குகிறது * * * அனேக பாடல்கள் வாய்ப்பாய் அமைந்திருக்கின்றன. நாம் நன்றாய் அனுபவிக்க வேண்டிய பாடல்கள்''–டி. கே. சிதம்பரநாத முதலியார்.

14. திருமலை முருகன் பள்ளு ... ரூ. 2 0

[அழகான 182 பாடல் கொண்ட பழந்தமிழ் நூல். குறிப்புரையுடன், 152 பக்கம்.]

15. திரு ஆனைக்காவுலா ... ரூ. 2 8

[காளமேகப் புலவர் பாடியது. விரிவான ஆராய்ச்சி முன்னுரை முதலியவற்றுடன்.]

16. சிதம்பரக் குறவஞ்சி (அச்சில்) ரூ. 0 12

[3, 4, 9, 14 எண்ணுள்ளவை சக்தி வெளியீடு.]

கிடைக்குமிடம் :

ஆசிரியர்,
கீழுங்கிலடி
சிதம்பரம்

தமிழ் நூலகம்
3, சாம்பசிவம் தெரு
தியாகராயநகர்
சென்னை 17.

சாது அச்சுக்கூடம், சென்னை